# தொண்டை நாட்டுத் திருப்பதிகள்



பேராசிரியர்
டாக்டர். ந. சுப்புரெட்டியார்

# தொண்டை நாட்டுத் திருப்பதிகள்


'ஸ்ரீ சடகோபன் பொன்னடி'
'வைணவ இலக்கியமாமணி'
'தமிழ் வாகைச் செம்மல்'

*பேராசிரியர். டாக்டர்.* **ந. சுப்புரெட்டியார்**
எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., பிஎச்.டி., டி.லிட்.,

வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்
தமிழ் இலக்கியத்துறை (செ.ப.க)



## அவ்வை

எண்.1, புதூர் 13-ஆவது தெரு,
அசோக் நகர், சென்னை - 600 083.
☎ 55688527

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | தொண்டை நாட்டுத் திருப்பதிகள் |
| நூலாசிரியர் | : | *பேராசிரியர் டாக்டர்.* ந. சுப்புரெட்டியார் |
| பதிப்பு | : | திருத்திய செவ்விய முதற்பதிப்பு |
| ஆண்டு | : | மே, 2006 |
| நூல் வகை | : | கட்டுரைகள் |
| பக்கங்கள் | : | XVI + 208 = 224 |
| நூல் அளவு | : | டெம்மி |
| அட்டைப்படம் ஒளி அச்சு | : | கிளாசிக் டிசைன்ஸ், சென்னை - 17 |
| அச்சிட்டோர் | : | தேவா ஆப்செட், சென்னை - 5 |
| விலை | : | ரூ. 100/- |

வெளியீடு

**அவ்வை**

எண்.1, புதூர் 13-ஆவது தெரு,
அசோக் நகர், சென்னை - 600 083.
☎ 55688527



டாக்டர் மு. வரதராசன்

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

**டாக்டர் மு.வ. அவர்கட்கு**

நீண்டநாள் நட்பின் நினைவாக

## அன்புப் படையல்

மங்கலப் புதினப் படைப்பினால் இளைஞர்
மனத்தினைக் திருத்திய கலைஞன் ;
சங்கநூற் பொருளை யாவரும் உணரத்
தகவொடு விளக்கிய செம்மல் ;
துங்கமார் மதுரைப் பல்கலைக் கழகம்
துலக்குறும் தனித்துணை வேந்தன் ;
பங்கமில் உளத்தன் ; தூயநன் மு. வ.
பண்பினுக் குரியதிந் நூலே.

## திருந்திய செவ்விய முதற்பதிப்பு

மிக்க கவனத்துடனும் பொறுப்புடனும் திருத்தம் பெற்ற இச்செவ்விய பதிப்பு 'அவ்வை' பதிப்பகம் மூலம் வெளிவருகின்றது. வெளியிட ஒப்புப் கொண்ட பதிப்பக உரிமையாளர் திருமதி. தேவகி அம்மையாருக்கு என்இதயம் கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன். இப்பதிப்பின் அட்டை முகப்பை காஞ்சிப் பேரருளாளன் பெருந்தேவித்தாயார் அணி செய்து படிப்போருக்கு ஆசிவழங்குகின்றனர்.


ந. சுப்புரெட்டியார்
தொ.பே. 26211583

'வேங்கடம்'
AD-13-14, அண்ணா நகர்,
சென்னை - 600 040.

செப்டம்பர் - 2005

# உள்ளுறை


அன்புப்படையல் iii

அணிந்துரை v

நூல்முகம் viii

1. கச்சிக் கார்மேனி அருளாளர் 1

2. சொன்னவண்ணம் செய்த பெருமாள் 13

3. திருஅட்டபுயகரத்து எம்மான் 25

4. உலகளந்தபெருமாள் 40

5. வைகுண்டப் பெருமாள் 52

6. காஞ்சியில் ஆறும் புறத்தில் ஒன்றும் 64

7. திருக்கடிகை அக்காரக் கனி 82

8. எவ்வுள் கிடக்கும் பெருமலை 95

9. நின்றவூர் நித்திலம் 108

10. அல்லிக்கேணி அச்சுதன் 117

11. நீர்மலை நீர்வண்ணன் 133

12. திருஇடஎந்தை எம்பெருமான் 146

13. கடல்மல்லைக் கிடக்கும் கரும்பு 159

14. திருவயிந்திரபுரத்துத் தெய்வ நாயகன் 177

15. திருக்கோவலூர்த் தீங்கரும்பு 190

# அணிந்துரை

(ஜஸ்டிஸ் என். கிருஷ்ணசாமி ரெட்டி)

மண்ணில் அரங்கமுதல் வைகுந்த நாடளவும்
எண்ணு திருப்பதிநூற் றெட்டினையும்-நண்ணுவார்
கற்பார் துதிப்பார் கருதுவோர் கேட்டிருப்பார்
பொற்பாதம் என்தலைமேல் பூ.[1]

ஞானானந்த சொரூபனாய், ஞான சக்தியாதி கல்யாண குணங்களையுடையவனாய், தேசகால வஸ்து பரிச்சேத மில்லாதவனாய், தேஜோமயமான திவ்விய மங்கள விக்கிரகமுடையவனாய், எல்லாவுலகங்களையும் படைத்தல், காத்தல், அழித்தல் செய்யும் கர்த்தாவாய், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பயன்களை அளிப்பவனாய், இலட்சுமி பூமி நீளா நாயகனாய் இருக்கும் நாராயணன் சேதநருக்கு உவப்பான பொன், வெள்ளி, தாமிரம், சிலை, மரம், மண் முதலிய திரவியங்களையே திருமேனியாகவும், அவரிட்டதுவே பெயராகவும் கொண்டு, தேசகால அதிகார பேதமின்றி எல்லோராலும் கண்டு பற்றுதற்குச் சௌலப்பியம் சௌசீல்யம் கருணம் முதலிய நிறைய குணங்களுடைய அர்ச்சாவதாரமாக, இருந்த கோலம், நின்ற கோலம், கிடந்த கோலமாக, 'சொன்ன வண்ணம் செய்த பெருமாளாக', உலகோர் உய்யும் பொருட்டு இம்மண்ணுலகில் திருக்கோயில் கொண்டு சேவை சாதித்துக் கொண்டிருக்கின்றான்.

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற இத்திருக்கோயில்களை நூற்றெட்டுத் திருப்பதிகளாகக் கொள்வது வைணவ மரபு. இத்திருப்பதிகள் பூர்வாசார்யர்களாலும், ஏனைய பெரியோர் களாலும் போற்றப்பட்டவை தியானிக்கப்பெற்றவை. இவ்வளவு சிறப்புப்பெற்ற திவ்விய தேசங்களை தரிசிப்பவர்களும்,

1. நூற்.திருப்.அந்.

இவைகளைப் பற்றிப் பெரியோர் அருளிய வாக்குகளைக் கற்பவர்களும், சிறப்பித்துப் பேசுகிறவர்களும், சிரவணம் செய்து கொண்டிருப்பவர்களுமாகிய திருமாலடியார்களின் பொற் பாதங்கள் 'என் தலைமேற் சூடும் மலராகும்' என்று பணிவுடன் போற்றுவர் அழகிய மணவாளதாசர்.

இந்நூலாசிரியர் டாக்டர் **என். சுப்பு ரெட்டியார்** அவர்கள் பழுதறவோதிப் பகவானின் கருணை வெள்ளம் கோக்கப் பெற்றவர்கள். இத்திருப்பதிகளை நேரில் கண்டும் அவற்றின் மீதுள்ள திருப்பாசுரங்களைக் கற்றும் கேட்டும் துதித்தும் தாம் இயற்றியுள்ள 'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்' என்னும் இந்நூலின் வாயிலாக இத்திருப்பதிகளின் சிறப்பைச் சொல்லிக் கொண்டே மானசீகமான திவ்வியதேச யாத்திரைக்கு நம்மைப் இருப்பூர்திகளிலும் பேருந்துகளிலும் அழைத்துச் செல்லு கின்றார். திருக்கோயில்களிலுள்ள மதில்கள் மண்டபங்கள் மூர்த்திகள் தீர்த்தங்கள் இவற்றையெல்லாம் சுற்றிக் காட்டுகின்றார், சுட்டியும் உரைக்கின்றார்; திருத்தலங்களின் வரலாறுகளையும் கூறுகின்றார். அத்துடன் நில்லாது ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் செய்து எம்பெருமான்களை அநுபவித்த நெஞ்சு நெக்குருகும் சில பாசுரங்களையும் பாடி நம்மையும் அவ்எம்பெருமான்கள் எம்பெருமாட்டிகள் இவர்கள் எதிரே கொண்டு நிறுத்தி ஆனந்தக் கடலில் ஆழ்த்துகின்றார். இவற்றிற்கிடையே வைணவ சமயக்கருத்துகள் பலவற்றை நம் சிந்தையில் தூவி சிந்தனையையும் கிளறுகின்றார்.

இந்த நூலினைப் பயிலும் நாமும், இந்த நூலாசிரியரின் துணையின்றியே, தனியாக நம் குடும்பத்துடன் திவ்விய தேச யாத்திரையை **உண்மையிலேயே** உடனே மேற்கொள்ளலாமா என்கின்ற எண்ணத்தை நம்மிடையே எழுமாறு தூண்டிவிட்டுக் கொண்டே நம்மையும் தம்முடன் அழைத்துச் செல்கின்றார். இந்நூலின் வாயிலாக நாமும் மானசீகமான நம்முடைய திவ்வியதேச யாத்திரையை நிறைவு செய்து கொண்டோம் என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கின்றோம். அத்தகைய நூல் நிலைத்து வாழ்க.

டாக்டர் ரெட்டியார் அவர்கள் சைவக் குடும்பத்தில் தோன்றியவராயினும் வைணவத்தில் பற்றும் ஈடுபாடும் உடையவர்; ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் ஆழங்கால் பட்டவர்; கண்ணன் கழல் இணைகள் நண்ணும் மனமுடையவர்.

தற்சமயம் திருப்பதியில் வாழ்பவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை ஆராய்ச்சி செய்து நம்மாழ்வார் தத்துவத்தை ஆங்கில ஆராய்ச்சி நூலாக வடித்துத் தந்து 'டாக்டர்' (Ph.D.) பட்டம் பெற்றவர். குடும்பத்துடன் திவ்விய தேச யாத்திரை செய்து தாம் அநுபவித்த இன்பப் பேற்றைப் பிறரும் பெற்று அநுபவிக்கவேண்டும் என்னும் எண்ணத்தின் விளைவாக இந்நூலையும் இதற்கு முன்னர் வெளிவந்த **'மலைநாட்டுத் திருப்பதிகள்'** என்னும் நூலையும் ஆக்கித் தந்திருக்கிறார்கள். மேலும், தாம் சென்று வந்த ஏனைய திவ்விய தேசங்கட்கும் இதுபோலவே தாம் படைக்கும் நூலின் வாயிலாக நம்மையும் மானசீக யாத்திரையில் உட்படுத்தித் தம்முடன் அழைத்துச் செல்வார் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் மலிவான நல்ல அச்சில் வெளியிடப் பெற்றுள்ளது. இதனை மனமுவந்து ஏற்று வெளியிட்டவர்கட்கும் என் பாராட்டு. இதனை எல்லோரும் வாங்கிக் கற்று, மற்றவர்கட்கும் கற்பித்து எம்பெருமான் திருவருள்பெற்று, இன்புற வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன். வாழ்க 'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்' வளர்க இந்நூலாசிரியரின் சமயம் கலந்த தமிழ்த் தொண்டு!!

- **கிருஷ்ணசாமி ரெட்டி**

# நூல் முகம்

"குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்,
அன்று ஞாலம் அளந்தபிரான், பரண்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே."[1]

எம்பெருமானைப் பல்வேறு விதமாக அநுபவிக்கலாம். அவற்றுள் ஒன்று அவன் உகந்தருளின திவ்விய தேசங்கட்கு யாத்திரை செய்வதாகும். 1969-ஆம் ஆண்டு சூன் திங்கள் குடும்பத்துடன் தொடங்கிய மலைநாட்டுத் திவ்விய தேச யாத்திரையின் அநுபவம் "மலை நாட்டுத் திருப்பதிகள்" என்ற நூல் வடிவம் பெற்றது 1971-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில். அஃது ஒரே மூச்சில் தொடங்கி நினைவு பெற்ற யாத்திரையாகும். தொண்டை நாடு, நடு நாடு இவற்றிலுள்ள 24 திவ்விய தேசங்களையும் இரண்டு மூச்சில் சேவித்து நிறைவு செய்தேன். 1966-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் நடு நாட்டிலுள்ள திரு அயிந்திரபுரத்துத் தெய்வ நாயகனையும், அதே ஆண்டு பிப்ரவரித் திங்களில் திருக்கோவலூர் திரிவிக்கிரமனையும் தனியாகச் சேவித்தேன். அதே ஆண்டு சனவரித் திங்களில் என் நண்பர் வடமொழிப் புலவர் திரு. கி. சீநிவாச வரதன் (திருவேங்கடவன் பல்கலைக் கழகக் கீழ்த்திசை ஆராய்ச்சித் துறையில் பணியாற்றுபவர்) அவர்களின் துணைக்கொண்டு காஞ்சியிலுள்ள 14 திவ்விய தேசங்கள், அந்நகரின் அருகிலுள்ள திருப்புட்குழி, மாமல்லைத் தலசயனம், திருவிட எந்தை, திருநீர்மலை ஆகிய 18 திவ்விய தேசங்களைச் சேவித்தேன். பின்னர் 1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் என் மூத்த மகன்

1. *திருவாய்மொழி 3.3:8*

திரு. எஸ். இராமலிங்கத்துடன் திருக்கடிகை, திரு எவ்வுளூர் திருநின்றவூர், திருவல்லிக்கேணி ஆகிய நான்கு திவ்விய தேசங்களையும் சேவிக்கும் பேறு பெற்றேன்.

இந்தத் திவ்விய தேச யாத்திரையில் யான் பெற்ற அநுபவம் 15 கட்டுரைகள் கொண்ட "தொண்டை நாட்டுத் திருப்பதிகள்" என்ற பெயருடன் இப்போது நூல் வடிவாக வெளிவருகின்றது. 'தொண்டை நாடு சான்றோருடைத்து' என்பார்கள் அந்த நாட்டைச் சார்ந்த சான்றோர் ஒருவருடைய அணிந்துரையுடன் மற்றொரு சான்றோருக்கு அன்புப் படையலாக்கப் பெற்று நூல் 'பீடு நடையுடன்' தமிழ் கூறு நல்லுலகில் உலா வருகின்றது. 'மலை நாட்டுத் திருப்பதிகள்' என்ற நூலைப் படித்த அன்பர்கள் இதனையும் வரவேற்பர் என்ற நம்பிக்கை என்றும் என்பால் உண்டு.

நடு நாட்டுத் திருப்பதிகளாகிய திருக்கோவலூர், திரு அயிந்திரபுரம் ஆகிய இரண்டு திருப்பதிகளையும் தொண்டை நாட்டுத் திருப்பதிகளுடன் சேர்த்துக் கூறும் மரபினை 'நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை' 'நூற்றெட்டுத் திருப்பதிப் பெருமாள் கோவை', 'நாலாயிரப் பாசுரப்படி நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை' ஆகிய மூன்று நூல்களிலும் காணலாம். அந்த மரபினைப் பின்பற்றி நடு நாட்டுத் திருப்பதிகள் பற்றிய கட்டுரைகள் (14, 15) இரண்டும் இந்த நூலில் இடம் பெறுகின்றன.

இந்த நூலிலுள்ள பதினைந்து கட்டுரைகளிலும் ஆழ்வார் களின் பக்தியுணர்ச்சி, பாசுரங்களின் சொல்வளம், அவற்றில் அகப்பொருள் துறைகள் அமைந்துள்ள அருமைப்பாடு முதலியவற்றைக் காணலாம். என் சிறிய உள்ளம் ஆழ்வார்களின் திருப்பாசுரங்களில் ஆழங்கால் பட்ட முறையைக் கட்டுரைகள் ஒருவாறு விளக்கும். இந்நூலைப் படிப்போரின் உள்ளங் களையும் அவை அத்திருப்பாசுரங்களை அநுபவிக்கத் தூண்டும் கருவிகளாக அமையக் கூடுமாயின் அதனை யான் பெற்ற பெரும் பேறாகக் கருதுவேன்.

இந்நூலிலுள்ள 11 எண்ணுள்ள கட்டுரை 'சிவத்திரு ஞானியாரடிகள் நூற்றாண்டு விழா மலரிலும்', 14 எண்ணுள்ள கட்டுரை 'திருப்பாதிரிப் புலியூர் பாடலே சுவரர் குடமுழுக்கு விழா மலரிலும்', 15 எண்ணுள்ள கட்டுரை திருமலை-திருப்பதி தேவஸ்தானத்தார் வெளியிடும் 'சப்தகிரி' என்ற திங்கள்

இதழிலும் வெளிவந்தவை. இவற்றை வெளியிட்ட மலராசிரியர் கட்கும் இதழாசிரியருக்கும் என் நன்றி என்றும் உரியது.

இந்நூலை யான் எழுதி வெளியிடுவதற்கு இசைவு தந்த பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினருக்கும் (Syndicate) சிறப்பாகப் பல்கலைக் கழகத்தைத் திறம்பட இயக்கிவரும் அதன் துணைவேந்தர் டாக்டர் **டி. ஜகந்நாத ரெட்டி** அவர்கட்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

காலத்திற்கேற்ற நூல்களை, சிறப்பாகப் பக்தி நூல்களை, வெளியிட்டுச் சிறந்த முறையில் தமிழ்ப் பணியாற்றி வருபவர்கள் **எஸ். ஆர். சுப்பிரமணியபிள்ளை** பதிப்பகத்தார். 'மலை நாட்டுத் திருப்பதிகள்' என்ற நூலை வெளியிட்டதைத் தொடர்ந்து இந்த நூலையும் மனமுவந்து ஏற்று வெளியிட்ட மைக்கு அவர்கட்கும், அவர்களது சென்னைக் கிளையைச் சிறந்த முறையில் திறம்படச் செயற்படச் செய்து வரும் அதன் பொறுப்பாளர் கந்தன் அடிமை **திரு. எஸ். பி. சண்முகம் பிள்ளை** அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றியைப் புலப்படுத்துகின்றேன்.

சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதி **திரு. என். கிருஷ்ணசாமி** ரெட்டி அவர்களின் அரிய நட்பினைப் பெறச் செய்தது இறைவனது திருவருள். பழுதற ஓதிப் பாங்குடன் நடந்துவரும் அன்னாரைத் தமிழுலகம், சிறப்பாக வைணவ உலகம், நன்கு அறியும். 'தீதில் நன்னெறி'யுடன் வாழும் அவர்கள் தம்முடைய பக்திச் சுவை நிறைந்த பேச்சால் தமிழ்ப் பெருமக்களின் உள்ளங்களைக் கவர்ந்து அங்கு நிரந்தர இடம் பெற்றவர்கள். இவருடைய ஆணித்தரமான பேச்சில் இவருடைய உயிர் நாடி பேசும். "நாடு நகரமும் நன்கறிய மோ நாராயணாவென்று பாடும் மனமுடைய பக்தர்"[2] இவர்; சீலம் நிறைந்த பண்புடைச் செல்வர். "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே"[3] என்ற தொல்காப்பியக் கருத்திற்கு எடுத்துக்

2. திருப்பல்லாண்டு - 4 (பெரியாழ்வார்)
3. தொல், சொல், நூற்பா - 1

காட்டாகத் திகழும் உயர் குணச் செம்மல். இறையன்பிலும் மெய்ப்பொருட் கருத்துகளிலும் ஆழங்கால்பட்டு நிற்கும் இப்பெரியாரின் அணிந்துரை இந்நூலின் பெருமையை உயர்த்துகின்றது என்பது என் நம்பிக்கை. அணிந்துரை அருளிய பெரியாருக்கு என் இதயம் நிறைந்த நன்றி என்றும் உரியது.

தமிழ் கூறு நல்லுலகில் டாக்டர் மு. வரதராசனை அறியாதார் இல்லை. தமிழ்ப் பெரியார் திரு.வி.க வைப் போலவே 'மு.வ.' என்ற இரண்டு எழுத்துப் பெயருடன் தமிழ் நெஞ்சங்களில் நிலையான இடம் பெற்று வாழும் பெரியார் இவர். கடந்த முப்பதாண்டுகளாக இவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கள் பெற்றவன் யான். அவர் ஒரு நிறைகுடம்; நல்லவர்; வல்லவர்; இறையன்பினர். பல்வேறு வகை இலக்கியங்களின் ஆசிரியர். உயர்ந்த குறிக்கோள் நெறியுடன் வாழும் சீலம் நிறைந்த நெஞ்சத்தினர். இத்தகைய பெரியார் "தன் புகழ் சேட்டார்போல் தலை சாய்த்து நிற்கும்"[4] சான்றோராகத் திகழ்வதை அவருடன் நெருங்கிப்பழகும் ஒரு சிலரே நன்கு அறிவர். எல்லோருக்கும் இனியராகத் திகழும் இவருக்கு என் நீண்ட கால நட்பின் நினைவாக இந்நூலை அவருக்கு அன்புப் படையலாக்கி மகிழும் பேறு பெறுகின்றேன். இவர் ஆசியால் இந்நூல் தமிழ் கூறு நல்லுலகத்தில் பெருமிதத்துடன் உலவும் என்பது என் திடமான நம்பிக்கை.

இந்த நூலை யான் எழுதி வெளியிடுவதற்கு என்னுளே தோன்றாத் துணையாக நின்று எனக்கு எல்லா நலன்களையும் ஈந்து என்னை இயக்கி நன்னெறிப்படுத்தும் திருவேங்கடமுடையானை மனம் மொழி மெய்களால் இறைஞ்சி வாழ்த்தி வணங்குகின்றேன்.

> "கண்ணன் கழல்இணைகள்
> நண்ணும் மனம்உடையீர்
> எண்ணும் திருநாமம்
> திண்ணம் நாரணமே."[5]

*திருப்பதி* **ந. சுப்பு ரெட்டியார்.**

*1.8.1973*

4. நெய்தல் கலி - 2.

5. திருவாய். 10.5 : 1.

# பதிப்புரை


'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்' என்ற இந்த நூலில் தொண்டை நாட்டுத் திருப்பதிகள் 22-ஆம், நடு நாட்டுத் திருப்பதிகள் 2-ஆம் அடங்கியுள்ளன. இவற்றை ஆசிரியர் அவர்கள் நேரில் சென்று எம்பெருமானின் அவதாரப் பெருமையையும் மகிமையையும் நெஞ்சுருகி அநுபவித்து எழுதியுள்ளார்கள். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நேராக் கோடு படிப்பவர் அனைவருக்கும் அந்தந்த திருப்பதிகளில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை நேரில் சேவித்த பரவசத்தை ஏற்படுத்தும் பான்மையில் நூல் அமைந்துள்ளது. இப்பரவசம் நூலைப் படிப்போர் சிந்தையிலும் ஏற்படுத்தும் என்பது என் நம்பிக்கை.

ஆழ்வார் பாசுரங்களில் உள்ளம் உருகி உருகி அநுபவித்து ஆனந்த பரவசம் அடைந்த ஆசிரியர் ஒவ்வொரு திருப்பதியின் பெருமாளின் அவதாரப் பெருமையைக் கூறுவதோடு அடியார்களை தரிசிக்க ஏதுவாக வழித்தடங்களையும் சொல்லிக் கொண்டே செல்வது நாமும் அவருடன் செல்லும் ஓர் உன்னத உணர்வை அடையச் செய்கின்றது. ஆசிரியர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் இந்நூலை எங்கள் பதிப்பகம் மூலம் வெளியிட எம்பெருமான் அருள்பாலித்துள்ள மையை எண்ணி எண்ணி மகிழ்வுறுகின்றோம்.

**ஆர். தேவகி.**



காஞ்சி வரதராசர்



பெருந்தேவி தாயார்

# 1. கச்சிக் கார்மேனி அருளாளர்

முத்தித் தரும் ஏழு நகர்களுள் 'காஞ்சி' என்று வழங்கப் பெறும் காஞ்சிபுரம் முக்கியமானது.[1] இதனை வேதாந்த தேசிகர்,

"காசிமுத லாகிய நன் னகரி யெல்லாம்
கார்மேனி அருளாளர் கச்சிக் கொவ்வா"[2]

*(நகரி-பட்டணம்; கார்மேனி - நீலகிற உடல்; கச்சி-காஞ்சிபுரம்.)*

என்று புகழ்வர். திருக்கோயில்கள் நிறைந்த ஊர்; வரலாற்றுப் புகழ் பெற்றது. இந்த ஊரைத் தலைநகராகக் கொண்டே பல்லவர்கள் பல்லாண்டுகள் ஆட்சி புரிந்து வந்தனர். 'அருளாளர் கச்சி' என்று அன்பாக ஆண்டவனின் பெயரைச் சேர்ந்தே தேசிகர் புகழ்வதைப் போலவே, ஏழை ஏதலர்களின் தூய மனத்தில் 'கஞ்சி வரதப்பன்' நிலைத்து வாழ்கின்றான், வரதப்பனுடன் ஊரும் சேர்ந்து வாழ்கின்றது. 'கஞ்சி வரதப்பா!' என்றால், 'எங்கு வருதப்பா?' என்று கேட்கும் சொற்றொடர்கள் நாம் கேட்டுப் பழகியவை அன்றோ? காசி நகர் சந்துகளுக்குப் பெயர்போனது! காஞ்சியோ அகன்ற தெருக்களைக் கொண்டது; அக்காலத்தில் நகர் அமைப்புப் பொறிஞர் மிக அழகாகத் திட்டமிட்டு அமைத்துள்ளார். **மாதவச் சிவஞான யோகிகள்** இந்த ஊரின் அழகினைச் சமத்காரமாகப் போற்றியுள்ளார்.

"கச்சிமா நகர் ஓர் தட்டும்
கடவுளர் உலகோல் தட்டும்
வைச்சுமுன் அயனார் தூக்க
மற்றது மீது செல்ல
நிச்சயம் முறுகிக் தாழ்த்து
நிலமிசை விழும் இவ் வூரை
இச்சகத் தூர்களோடு
எண்ணுதல் மடமைப் பாற்றே"[3]

*1. தேசி.பிரபந்-237.* *2. தேசி.பிரபந்-122.*

*3. காஞ்சிபுரா-திருநக படலம்: செய். 1.*

(கச்சி-காஞ்சிபுரம்; பிரமனால் பூசிக்கப்பெற்ற தலம் என்பது பொருள். கா-பிரமன்; அஞ்சி-பூசிக்கப்பெற்ற; புரம்-இடம்; அயனார்-நான்முகன்; சகம்-பூமி)

என்பது அடிகளாரின் திருவாக்கு. நான்முகன் படைப்பில் உம்பர் உலகாகிய அமராவதிப் பட்டணமும் காஞ்சி மாநகரும் மிக அழகாக அமைந்தனவாம். இரண்டின் தராதரத்தை மதிப்பிட்டறிய விழைந்த நான்முகன் இரண்டையும் ஒரு தராசுத் தட்டுகளில் இருபுறமும் வைத்துத் தூக்கினானாம். அழகுமிக்க காஞ்சி நகரைக் கொண்ட தட்டு கீழே வந்தது; சற்று அழகு குறைந்த அமராவதியையுடைய தட்டு மேலே போய் விட்டது. காஞ்சியம்பதியும் உம்பர் உலகமும் இயல்பாகக் கீழும் மேலுமாக நிற்பதற்குக் கவிஞர் கூறும் கற்பனை எண்ணி மகிழத்தக்கதாக உள்ளது. இத்தகைய அழகான ஊரில்தான் பேரருளாளனாகிய வரதராசன் திருக்கோயில் கொண்டு சேவை சாதித்து வருகின்றான். நம்முடைய காஞ்சி யாத்திரையில் முதலில் அவனைக் காண விழைகின்றோம். காஞ்சிப் பேருந்து நிலையத்திலிருந்து அவன் திருக்கோயிலை நோக்கிச் செல்லும் நகரப் பேருந்து ஒன்றில் ஏறி அவனது திருக்கோயிலை அடைகின்றோம்.

இத்தலத்தைப்பற்றிய புராண வரலாறு நம் சிந்தையில் எழுகின்றது. வரலாறு இதுதான்: எம்பெருமான் நாராயணனின் திருவருளால் நான்முகன் பதினான்கு உலகங்களுக்கும் தலைவனானான். பிறந்த குலச்செருக்கு, அடைந்த கல்விச் செருக்கு, பெற்ற அதிகாரச் செருக்கு முதலியவை அவன் ஞானக் கண்களை மறைத்தன. இங்ஙனம் அகந்தைத் திரைகளால் கவரப்பெற்ற நான்முகன் கறந்த பாலில் மறைந்து நிற்கும் நெய்யே போல் எல்லாப் பொருள்களிலும் உள்ளே உறைந்து நிற்கும் எம்பெருமானைத் தனது திறமையினால், செய்யக் கூடிய யோகத்தினால், காண முயன்றான். ஆனால், அங்ஙனம் காண்பதற்கு விரோதியாகவுள்ள மாளாத ஒரு வலிய கர்மம் இவனை அந்த யோகத்தினின்றும் விலக்கிவிட்டது; அறிவும் மழுங்கிவிட்டது. இங்ஙனம் தடைசெய்த தன் கர்மம் கழிவதற்கு ஒரே வழி ஆயிரம் அசுவமேதயாகங்கள் புரிவதே என்பதை அசரீரியால் அறிந்தான். **சத்திய விரதம்**[4] (மெய்விரதம்) என்னும் திருத்தலத்தில் செய்யப்பெறும் ஓர் அசுவமேத யாகம் ஆயிரம் அசுவமேத யாகங்களுக்கு நிகரானது என்பதையும் தெரிந்து

4. இது காஞ்சிபுரம். அத்திகிரி பெருமாள் கோயில் எனவும் வழங்கப்பெறும்.

கொண்டான். உடனே அத்திகிரியை யாகவேதியாகவும், யாகத்திற்கு வரும் தேவர் முதலியோர் நெருக்கமின்றி வசிப்பதற்கு ஏற்ற நகர் ஒன்றையும் விரைவில் நிறுவுமாறு கட்டளையிட்டான். அங்ஙனமே விரைவில் அமைக்கப் பெற்ற அழகிய நகரைக் கண்டு நான்முகன் மகிழ்ந்தான். அசுவமேத யாகத்தையும் விரைவில் முற்றுவித்தான். அந்த யாக குண்டத்தினின்னும் எழுந்த பொன்னாலாகிய மலைபோன்ற புண்ணியகோடி விமானத்தில் நித்திய சூரிகளின் தலைவனான வரதராசன் தோன்றி நான்முகனுக்குக் காட்சி அளித்தான். அந்த எம்பெருமானின் திவ்விய மங்கள விக்கிரகத்தை அநுபவித்த நான்முகன்.

"திருமகள்மண் மகள்நீளை முதலா வெல்லாத்
தேவியரும் தன்னுடனே திகழ்ந்து நிற்கத்
தருமமிகு மூன்றுமுதல் அனைத்தும் தோன்றத்
தன்னனைய சூரியர்தன் அடிக்கீழ் வாழ
அருமறைசேர் அளவில்லா அவனி யின்கண்
அரவணைமேல் வீற்றிருப்பால் அனைத்தும் காக்கும்
கருமணியைக் கரிகிரிமேல் கண்டேன் என்றன்
கடுவினைகள் அனைத்தும்நான் கண்டிலேனே.[5]

(தருமம்-குணங்கள்; இருமூன்று-ஆறு (ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ்); சூரியர்-நித்திய சூரியர்; அவனி-பூமி (நித்திய விபூதி); அரவு அணை-பாம்புப் படுக்கை; கருமணி-நீல இரத்தினம்; கரிகிரி-அத்திகிரி)

என்று அநுபவித்துப் பேசி இனியனாகின்றான். தன் கர்மங்கள் யாவும் 'தீயினில் தூசாயினதைக்' கண்டு வியந்து போற்று கின்றான். அதன் பிறகு அவனுடைய திருக்குணங்களில் ஈடுபாடு,

"வேர் ஒப்பார் விண்முதலாம் காவுக் கெல்லாம்;
விழியொப்பார் வேதம் எனும் கண்த னக்கு;
கார் ஒப்பார் கருணை மழை பொழியும் நீரால்;
கடல் ஒப்பார் கண்டிடினுங்க காணாக் கூத்தால்;
நீர்ஒப்பார் நிலம் அளிக்கும் தன்மை தன்னால்;
நிலம் ஒப்பார் நெடும்பிழைகள் பொறுக்கும் நேரால்;
ஆர்ஒப்பார் இவர்குணங்கள் அனைத்தும் கண்டால்;
அருளாளர் தாம்எனினும் தமக்குஒவ் வாரே"[6]

5. தேசி. பிரபந்-227 6. தேசி. பிரபந்-229

(விண்-ஆகாயம்; கா-சோலை; நீரால்-தன்மையினால்; கூத்து-அதிசயம்; அளிக்கும்-காக்கும்; நெடும்பிழைகள்-பெரிய குற்றங்கள்; நிலம்-பூமி; பொறுக்கும் நேரால்-பொறுத்துக் கொள்ளும் தன்மையினால்)

என்று போற்றி மகிழ்கின்றான். பிறகு நான்முகன் வேண்டுகோட் கிணங்கி அவனுக்குக் காட்சி கொடுத்த கோலத்திலேயே அங்கையே தங்கி விடுகின்றான் பேரருளாளன். இன்னும் நம்போன்ற சம்சாரிகளின் விபரீத ஞானத்தையும், அதனால் வரும் விபரீதாசாரத்தையும் அடையாதபடி காத்து வருகின்றான். வேண்டுவார்க்கு வேண்டிய வரங்களை ஈந்து வாழ்வித்தருள் கின்றான்.

இதனை எண்ணியவண்ணம் திருக்கோயிலினுள் நுழைகின் றோம். மேலைக் கோபுரவாயில்தான் பக்தர்கள் இவனைக் காணும் முக்கிய நுழைவாயிலாக அமைந்துள்ளது. திருக்கோயில் 1200 அடி நீளமும் 800 அடி அகலமும் உடைய மாபெரும் மதில் சூழ்ந்த இடத்தினுள் அமைந்துள்ளது. கோபுரத்தினுள் நுழைந்து பரந்த மைதானத்தைக் கடந்து செல்லுங்கால் நல்ல உயரமான தூண்களும் எழிலுடன் கூடிய கோபுரமும் உடைய நாலு கால் மண்டபம் நம் கண்ணில் படுகின்றது. அதனைக் கண்டு களித்துக்கொண்டே கோபுரத்துடன் கூடிய மகா மரியாதை வாயிலையும் கடந்து திருமஞ்சன மண்டபத்திற்கு வருகின்றோம். வடபக்கமாகத் திரும்பிப் பன்னிரண்டு படிக்கட்டுகளில் ஏறிக் கடந்து ஒரு மகாமண்டபத்தை அடைகின்றோம். இந்த மகா மண்டபத்தையும் அதற்கு மேற்குப் புறமாயுள்ள முகமண்டபத் தையும் கடந்து **பெருந்தேவித்தாயார்** சந்நிதியை அடைகின்றோம். அவளைச் சேவித்து அவளுடைய திருவருளுக்குப் பாத்திரமாகின் றோம். தாயார் உடுத்தியிருக்கும் ஆடையும் அணிந்திருக்கும் நகைகளுமே அவள் பெரிய இடத்துத் தேவி என்பதைப் புலப்படுத்தி நிற்கும். செப்புச் சிலையாகவும் கற்சிலையாகவும் திகழ்கின்ற அவளுடைய திருமுகத்தைத் தவிர அவள் திருமேனி முழுவதும் நவரத்தின மயமாகவே காட்சியளிக்கும். அவளுடைய அருள் பெற்று அவளிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்புகின் றோம்.

திரும்பவும் படிகள் இறங்கி பெரிய திருவடிகளின் சந்நிதிப்படிகளைக் கடந்து அவரை எதிர்நோக்கி யோக நிலையில் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் காட்சி தரும் குகை நரசிம்மரைச் சேவிக்கின்றோம். இவர் ஒரு குகை விமானத்தின் கீழ் இருந்து

கொண்டு சேவை சாதிக்கின்றார். இவரே இத்திருக்கோயிலில் முதன் முதலாக எழுந்தருளச் செய்யப்பெற்றவர் என்பது புராண வரலாறு. இவரே பூதத்தாழ்வாரால்,

"என்நெஞ்சு மேயான்என்
　　சென்னியான் தானவனை
வன் நெஞ்சம் கீண்ட
　　மணிவண்ணன்" [7]

(மேயான்-பொருந்தியிருப்பவன்; சென்னி யான்-தலையில் இருப்பவன்; தானவன்-அசுரனாகிய இரணியன்; வல்நெஞ்சும்-வலியமார்பு; கீண்ட - கிழித்த.)

என்று போற்றப் பெற்ற எம்பெருமான் என்பது பலரது கொள்கை. விசிட்டாத்வைத தத்துவக் கருத்து அடங்கிய இச்சொற்றொடரைக் கொண்டே இவரைச் சேவித்து வலம் வந்து கீழ்ப் பிராகாரத்திற்கு வருகின்றோம். அங்கிருந்து சில படிகள் ஏறி ஒரு சிறு மண்டபத்தை அடைகின்றோம்.

இந்தச் சிறு மண்டபத்திலிருந்து இருபத்து நான்கு படிகளை ஏறிக் கடந்து அத்திகிரியை அடைகின்றோம். இந்தப் படிகளில் ஏறிச் செல்லுங்கால் எம்பெருமான் இவ்வுலகைப் படைத்த இருபத்து நான்கு தத்துவங்கள் நம் சிந்தையில் எழுகின்றன. அவற்றைச் சிந்திக்கின்றோம்.[8] 'அத்திகிரி' என்ற பெயர் ஏற்பட்ட புராண வரலாறுகள் நம் சிந்தையில் குமிழியிட்டு எழுகின்றன. பண்டு இந்தத் தலத்தில் திக்கு யானைகள் வந்து எம்பெருமானை ஆராதித்தமையினால் அதுபற்றி 'ஹஸ்திகிரி'[9] (அத்திகிரி) என்று திருநாமம் ஏற்பட்டதாகக் கூறுவர் ஒரு சாரார். இந்திரனது யானையாகிய ஐராவதம் நெடுநாள் தவம் செய்து மலைவடிவம் கொண்டு எம்பெருமானைத் தாங்கிக் கொண்டிருப்பதால் இப்பெயர் ஏற்பட்டதாகப் பிறிதொரு சாரார் மொழிவர். கஜேந்திராழ்வான் பூசித்துப் பேறு பெற்ற தலமாதலால்

7. இரண். திருவந்-95.
8. தன் மாத்திரைகள் 5 ; ஞானேந்திரியங்கள் 5 ; கருமேந்திரியங்கள் 5 ; பூதங்கள் 5 ; ஆக இவை 20. இவற்றுடன் பிரகிருதி 1, மகான் 1, அகங்காரம் 1, மன்ஸ் 1, ஆக நான்கும் சேர 24 தத்துவங்களாகின்றன. இவற்றுடன் புருடன் (சீவான்மா) 1மகாபுருடன் (பரமான்மா) 1 சேர்ந்து வைணவதத்துவம் 26 ஆகின்றது.
9. ஹஸ்தி-யானை; கிரி-மலை. 'ஹஸ்தி கிரி' தமிழில் 'அத்திகிரி' என்றாயிற்று.

இப்பெயர் ஏற்பட்டதாகக் கூறுவதுமுண்டு. எது எப்படியாயினும் யானை போன்று உயர்ந்த கட்டு மலையில் எம்பெருமான் எழுந்தருளியிருப்பது மட்டிலும் உண்மை என்பதை நேரில் பார்த்தவர்கள் நன்கு அறிவர்.

அத்திகிரியை அடைந்த நாம் மேலும் ஆறுபடிகளை ஏறிக் கடந்து அத்திகிரி அருளாளனின் கருவறைக்கு வருகின்றோம். நீண்டு உயர்ந்து நின்ற திருக்கோலத்தில் தங்கக் கிரீடமும் தங்கக் கவசமும் அணிந்த நிலையில் பக்தர்கட்குச் சேவை சாதிப்பதைக் காண்கின்றோம். எழில் வாய்ந்த இந்த வரதராசர் அருள் கொழிக்கும் திருமுக விலாசம் உடையவர். இவருடைய அழகில் சொக்கி நிற்கும் **வேதாந்த தேசிகர்,**

'ஐயுறவும் ஆர்இருளும்
அல்வழியும் அடைந்தவர்க்கு
மெய்யருள்செய் திடுந்திருமால்
வேழமலை மேயவனே'' [10]

*(ஐயுறவு-சந்தேகம்; ஆர் இருள்- பூர்ண அஞ்ஞானம்; அல்வழி-தகாதவழி)*

என்று மெய்யுருகி நிற்பதைக் காண்கின்றோம். திருவத்தியூரான் மீது 'அருத்த பஞ்சகம்', 'மெய்விரதமான்மியம்', 'திருச்சின்ன மாலை', 'அடைக்கலப் பத்து' ஆகிய சிறிய பிரபந்தங்களையும் அருளிச் செய்துள்ளார் இவர். இந்த அத்திகிரி அருள்முகிலைப் பூதத்தாழ்வார்.

என்னெஞ்சம் மேயான்என் சென்னியான் தானவனை
வன்னெஞ்சம் கீண்ட மணிவண்ணன் - முன்னம்சேய்
ஊழியான் ஊழி பெயர்ந்தான் உலகேத்தும்
ஆழியான் அத்தியூ ரான்'' [11]

*(ஆழியான் - கடலில் வாழ்பவன்)*

என்றும்,

''அத்தியூரான் புள்ளை ஊர்வான் அணிமணியின்
துத்திசேர் நாகத்தின் மேல் துயிலவான்-முத்தீ
மறையாவான் மாகடல் நஞ்சுண்டான் தனக்கும்
இறையாவான் எங்கள் பிரான்''[12]

*10. தேசி.பிரபந்-252* *11. இரண்டாம் திருவந்-95*
*12. இரண். திருவந்-96*

*(புள்-கருடன்; துத்தி-படங்களிலுள்ள பொறி; இறை-தலைவன்)*

என்றும் மங்களாசாசனம் செய்து இனியராகின்றார். திருமங்கையாழ்வார் இந்த அத்திகிரித் திருமாலை,

**''வரந்தரு மாமணிவண்ணன்''** [13]

என்று போற்றிப் புகழ்கின்றார். பெருந்தேவனார் என்ற புலவரும்,

**''நீலமே! காரின் முகிலே! நெடுங்கடலின்**
**கோலமே! அத்திகிரிக் கோமானே! -மூலமென**
**மாத்தா மரைமடுசில் மால்யானை ஓலமிட**
**காத்தாய்! கடைபோகக் கா''**

என்று பாடிப் பரவசப்படுகின்றார். இத்தகைய எம்பெருமானை - வரதராசனை - நாமும் மனமாரச் சேவிக்கின்றோம்.

மூலவரை வணங்கிய நம்முடைய கவனம் உற்சவர்மீது செல்லுகின்றது. இவர் பேரழகு வாய்ந்தவர். இவருடைய முகத்திலுள்ள வடுக்கள் யாவும் போரில் ஏற்பட்டதாகக் கூறுவர். சற்றுப் பின்சாய்ந்து மிடுக்காகக் காட்சி அளிக்கும் இவரைப் பல கோலங்களில் அணி செய்துப் பார்க்க விரும்புகின்றவர்கள் உற்சவ காலங்களில் சென்று சேவிக்க வேண்டும். வாகனங்களில் உலாவரும் காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக இருக்கும். முகம்மதியப் படையெடுப்பின் காரணமாக இந்த மூர்த்தி கி.பி. 1690 இல் திருக்கோயிலினின்றும் எடுத்துச் செல்லப்பெற்று உடையார் பாளையத்தில் பத்திரப்படுத்தி வைக்கப் பெற்றது என்றும், மீண்டும் கி.பி. 1710 இல் **தோடர்மால்** என்பவர் மூலம் திருக்கோயிலுக்குக் கொண்டுவரப் பெற்றது என்றும் அறிகின்றோம். இதனை நினைவுபடுத்தும் விழா ஒன்று இன்றும் நடைபெற்று வருகின்றது.

திருக்கோயிலை விட்டு வெளியே வருமுன் திருக்கோயிலின் திருமுற்றத்திலுள்ள நாலுகால் மண்டபத்தில் சற்று அமர்ந்து வரதராசரின் பெருமையைச் சிந்திக்கின்றோம். சுவாமி தேசிகனின் திருப்பாசுரம் நம் நினைவிற்கு வருகின்றது.

13. பெரி. திரு -2. 9:3.

"புருடன்மணி வரமாகப் பொன்றா மூலப்
பிரகிருதி மறுவாக மான்தண் டாகத்
தெருள் மருள்வாள் உறையாக ஆங்கா ரங்கள்
சார்ங்கம்சங் காகமனம் திகிரி யாக
இருடிகங்கள் ஈரைந்தும் சரங்க ளாக
இருபூத மாலைவன மாலை யாகக்
கருடன்உரு வாம்மறையின் பொருளாம் கண்ணன்
கரிகிரிமேல் நின்று அனைத்தும் காக்கின் றானே.[14]

*(புருடன்-சீவான்மா; மணி-கௌத்துவம்; மறு-ஸ்ரீவத்ஸம்; மான் - மகான் தத்துவம்; தண்டு-கௌமோதகி; தெருள்-ஞானம், வாள்-நந்தகம்; மருள் - அஞ்ஞானம், உறை-கத்தியின் உறை; ஆங்காரங்கள்-தாமஸம், இராஜஸம், சாத்துவிகம்; சார்ங்கம் சங்கு-முறையே வில், பாஞ்சன்யம்; இருடிகங்கள் ஈரைந்து - ஞானேந்திரியங்கள் ஐந்து; கர்மேந்திரியங்கள் ஐந்து; இருபூதம்-தன்மாத்ரங்கள் ஐந்து, பூதங்கள் ஐந்து; மாலை-வரிசை; கரிகிரி-அத்திகிரி)*

என்ற பாசுரத்தைச் சிந்திக்கின்றோம். பேரருளாளன் சேதநம் அசேதநம் என்னும் தத்துவங்கள் அனைத்தையும் தனக்கு அணிகளாகவும் ஆயுதங்களாகவும் கொண்டு 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்று கூறும்வகையில் அத்திகிரியின்மேல்அனைவரும் கண்டுகளிக்குமாறு நின்று உலகத்தைக் காத்தருள்கின்றான் என்பதை அறிகின்றோம்.

திருக்கோயிலின் சூழ்நிலையையும் ஆராயவேண்டும் என்று நம் உள்ளம் விழைகின்றது. முதலில் நூற்றுக்கால் மண்டபத்தைக் காண்கின்றோம். குதிரைகள், யாளிகள், அவற்றின்மீது இவர்ந்து செல்லும் வீரர்கள் ஆகிய சிற்பங்களை யுடைய கற்றூண்கள் நிறைந்தது இம்மண்டபம். மன்மதன், இரதி தேவி முதலிய சிற்ப வடிவங்களையும், கல் சங்கிலி முதலிய திறன் மிக்க நுட்ப வேலைப்பாடுகளையும் அவண் கண்டு களிக்கலாம். இவை வேலூர் முதலிய தலங்களில் உள்ள நாய்க்கர் காலத்துச் சிற்ப வடிவங்களுடன் ஒப்பிடத் தக்கவை அல்லவென்றும், காலத்திலும் கலை அழகிலும் பிற்பட்டனவாகத் தெரிகின்றன என்றும் என் அரிய நண்பர் அமரர் **திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்** கருதுகின்றார்கள்.

நூற்றுக்கால் மண்டபத்திற்கு வடக்கே இருப்பது **'அனந்த புஷ்கரணி'; 'சேஷ தீர்த்தம்'** என்றும் இது வழங்கப்படுகின்றது. இது

14. தேசி. பிரபந்-80

ஆதிசேடன் தவம் செய்த இடமாகும். இதன் நடுவில் ஒரு நீராழி மண்டபத்தைக் காண்கின்றோம். அந்த மண்டபத்தின் அடித்தலத்தில் உள்ள மாடம் ஒன்றில் அத்திவரதர் கோயில் கொண்டுள்ளார். அத்திரமரத்தில் உருவானவர் இவர்; அந்தத் தண்ணீருக்குள் மூழ்கிச் சயனத்திருக்கோலத்தில் இருக்கின்றார். பாலாழியில் அறிதுயில் கொள்ளும் பரமனைப் போலன்றி இவர் நீருக்குள்ளே ஆழ்ந்த துயில் கொண்டு விடுகின்றார். நாற்பது ஆண்டுகட்கு ஒருமுறை திருக்குளத்திலுள்ள நீரைக் காலி செய்து இந்த எம்பெருமானை வெளியில் கொண்டு வருகின்றனர். ஒரு மண்டல காலம் பூசை, புனஸ்காரம் முதலிய மரியாதைகள் யாவும் அவருக்கு நடக்கும். அதன் பிறகு அவர் அந்த நீருக்குள்ளே தன் சொந்த இடத்திற்குச் சென்று ஆழ்ந்த உறக்கத்தை மேற்கொண்டு விடுவார். இந்த அத்திவரதரே ஆதி வரதர் என்பது செவி வழிச் செய்தியாகும். இதன் பிறகு நந்தவனம் கீழைக் கோபுரம் முதலானவற்றையும் கண்டுகளிக்கின்றோம்.

வரதராசரின் திருக்கோயிலைவிட அவருக்கு நடைபெறும் விழாக்கள் பெரும் புகழ் பெற்றவை. வரதரது பெருவிழா (பிரமோத்சவம்) வைகாசித் திங்களில் நடைபெறும். இதைவிடப் பெரும் புகழ் பெற்றது வைகாசி பௌர்ணமியில் நடக்கும் **கருடசேவை.** அதிகாலையிலேயே வரதராசர் பெரிய திருவடியின் மீது ஏறிக் கொண்டு திருக்கோயிலை விட்டுப் புறப்படுவார். அப்பொழுது ஆயிரக்கணக்காகத் திரண்டு இருக்கும் மக்கட் கடல்,

''பறவை ஏறு பரமபுருடா!
நீஎன்னைக் கைக்கொண்டபின்
பிறவி என்னும் கடலும்வற்றிப்
பெரும்பதம் ஆகின்றதால்;
இறவு செய்யும் பாவக்காடு
தீக்கொளீஇ வேகின்றதால்;
அறிவை என்னும் அமுதஆறு
தலைப்பற்றி வாய்க்கொண்டதே''[15]

*(பறவை-கருடன்; கைக்கொண்டபின்-ஆட்படுத்திக் கொண்டபிறகு; பெரும்பதம் -பெரிய தரம்; இறவு-சாக்காடு; பாவக்காடு-பாவ சமுதாயம்; தீக்கொளீஇ -நெருப்புப்பட்டு; அறிவை-ஞானம் (இதில் ஐ-சாரியை); தலைப்பற்றி வாய்க்கொள்ளுதல்-மேன்மேல் வளர்ந்து பெருகிச் செல்லுதல்)*

15. பெரியாழ்.திரு-5.4:2

என்று பாசுரத்தை முழக்கி ஒலி செய்வதாகக் கற்பனை செய்து கொள்ளுகின்றோம். இந்தக் கருட சேவையைக் காண்பதற்காக வீதிகளில் காத்துக்கிடக்கும் மக்கட் கடலை நோக்கி 'அஞ்சேல்' என்று அருள்புரிகின்றான் அத்திகிரி அருளாளன். திருவாழி திருச் சங்குகளுடன் அவன் கருடன்மீது கம்பீரமாக எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அத்திகிரி அண்ணலின் திருவருளுக்குப் பாத்திரமானவர்கள் எண்ணற்றவர்கள். அவர்களுள் சிலரைப் பற்றி நினைக்கிறோம். அவர்களுள் 'நல்லார் பரவும் **இராமாநுசர்**' முதலாவதாகக் குறிப்பிடத் தக்கவர். இவர் காஞ்சி வரதராசரையே திருவாராதனப் பெருமாளாகக் கொண்டிருந்தவர். துணைவியுடன் காஞ்சியில் இல்லறத்தை மேற்கொண்டு வாழ்ந்து பின்னர் துறவறத்தை நாடிப் பெற்ற உயர்குணச் செம்மல். இவர் காஞ்சியில் வாழ்ந்தபொழுது பேரருளாளன் திருமஞ்சனத்திற்கு இரண்டு கல் தொலைவிலுள்ள சாலைக் கிணற்றிலிருந்து தீர்த்தம் கொணரும் கைங்கரியத்தைச் செய்து வந்தார். இராமாநுசருக்குப் பின் வைணவக் கோட்டையைக் கட்டிப் பாதுகாத்தவர் பேரறிவாளர் வேதாந்த தேசிகர் என்பவர். இவரும் அத்திகிரி அருளாளனிடம் அளவற்ற பக்தியுடையவர். இவர் துளவமுடி அருள்வரதர்மீது சில பிரபந்தங்களை இயற்றியமையை மேலே குறிப்பிட்டோம். அந்த எம்பெருமானிடம் சரணம் புகுந்தமையை,

''முத்திதரு நகரேழின்
முக்கியமாம் கச்சிதனில்
அத்திகிரி அருளாளர்க்(கு)
அடைக்கலம்நான் புகுந்தேனே''[16]

(ஏழு நகர்-காஞ்சி, அயோத்தி, மதுரை, மாயை, காசி, அவந்தி, துவாரகை).

என்ற 'அடைக்கலப் பத்தின்' பாசுரப் பகுதியால் அறிகின்றோம்.

இராமாநுசருடைய ஆசான் என்று சொல்லத்தக்க பெருமையையுடைய **திருக்கச்சி நம்பியும்** அத்திகிரி அண்ணலின் திருவருளுக்கு ஆளானவர்; அவருக்கு ஆல வட்டம் வீசும் கைங்கரியத்தை மேற்கொண்டிருந்தவர். இதனால் ''பெரு மாளோடு நேர்முகமாய் பேசும் பேறு பெற்றிருப்பவர்'' என்று மக்களால் ஒரு முகமாய்க் கொண்டாடப்பெற்றிருந்த பெருமை

16. தேசி. பிரபந்-237

வாய்ந்தவர் இவர். இவர் இராமாநுசருக்குப் பேரருளாளன் திருவுள்ளமாக வெளியிட்ட 'ஆறு வார்த்தைகளும்' இராமாநுசர் தம் உள்ளத்தில் உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பிய அடிப்படைக் கொள்கைகளைத் தழுவியனவாகும். அந்த ஆறு வார்த்தைகளைப்பற்றியும் சிந்திக்கின்றோம்: முதலாவது, திருமாலே பரம்பொருள் என்பது. இரண்டாவது, சீவான் மாவுக்கும் பரமான்மாவுக்கும் உள்ள வேற்றுமையைக் குறிப்பிடுவது. மூன்றாவது, பிரபத்தியே (சரணாகதியே) சிறந்த முத்திநெறி என்பது. நான்காவது, யாக்கையின் முடிவில் உள்ளத்தை இறைவனிடம் ஒருமைப்படுத்த வேண்டும் என்பது கூட அவசியம் இல்லை. ஐந்தாவது, யாக்கை முடிவில் பாகவதர்கட்கு வீடுபேறு உறுதி. ஆறாவது, பெரிய நம்பியை ஆசாரியனாகக் கொள்ள வேண்டும் என்பது. இதனால் இவரையும் இராமநுசர் தம் ஆசாரியர் **அறுவருள்** ஒருவராகக் கருதலாயினர் என்பதையும் நினைக்கின்றோம்.

இராமாநுசருடைய சீடர் **கூரத்தாழ்வான்** என்பவர்; திருவரங்கத்தமுதனாரால்,

''வஞ்ச முக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நம்கூரத்தாழ்வான்''[17]

(வஞ்ச முக்குறும்பு-கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு, குலச்செருக்கு)

என்று பாராட்டப் பெறும் அருங்குணச் செம்மல். இவர் வரதர்மீது **'வரதராஜஸ்தவம்'** என்ற தோத்திரம் பாடியது பற்றிய நிகழ்ச்சி நம் நினைவுக்கு வருகின்றது. இராமாநுசர் திருவரங்கத்தில் வாழ்ந்த போது தம் இருகண்களையும் இழந்த ஆழ்வான்மீது ஆரா அன்பு கொண்ட கருணைக் கடலான இராமாநுசர் ஒருநாள் ஆழ்வானை அழைத்துக் காஞ்சி வரதராசர்மீது தமக்குக் கண்தரவேண்டும் என்று ஒரு தோத்திரத்தைப் பாடி விண்ணப்பிக்குமாறு கூறினார். 'வரதரைத் தோத்திரம் செய்வேன்; ஆனால், எனக்குக் கண்தரவேண்டும் என்று கேட்க என் உள்ளம் இசைய வில்லையே' என்றார். எனினும், தன் குருநாதர் வற்புறுத்தலுக்கு இணங்க தோத்திரத்தை முற்றுப்பெறச் செய்தார். அதில், 'எப்போதும் காண்பதற்குத் தகுதியான, உலக இயற்கைக்கு அப்பாற்பட்ட, திவ்வியமான கண்களை அடியேனுக்கு அருளவேண்டும்' என்று விண்ணப்பித்தார்.

*17. இராமா.நூற்-7.*

குருவும் சீடரும் காஞ்சி சென்று வரதர் சந்நிதியில் அதனை அரங்கேற்றினர். பெருமாள் அர்ச்சகர் மூலம் உமக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டாராம். ஆவேசமுற்ற அர்ச்சகரை நோக்கி ஆழ்வானும், 'நான் பெற்ற பேறு **நாலூரானும்**[18] பெறவேண்டும்' என்று வரம் கேட்டார். அருகிலிருந்த இராமாநுசர் வியப்புக் கடலில் ஆழ்ந்தார். 'தாம் கண் இழப்பதற்குக் காரணமாக இருந்த பரம விரோதியிடம் காட்டுகிற இந்தப் பரிவை, இந்தக் கருணையை, என்னென்பது? இவரை அறிய அறிய நான் என் அறியாமையைத்தான் காண்கின்றேன்!' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார். குணம் என்னும் குன்றேறி நின்ற தம் சீடரை மெச்சிப் புகழ்ந்தார் இராமாநுசர். இங்ஙனம் வரதரின் கைங்கரியபரர்களை எண்ணிக் கொண்டிருக்கும்பொழுது திவ்வியகவி **பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்** அவர்களின் பாசுரம் நம் சிந்தையில் எழுகின்றது.

> ''பொருளாசை மண்ணாசை பூங்குழலார் போகத்(து)
> இருளாசை சிந்தித்(து) இராதே-அருளாளன்
> கச்சித் திருப்பதியாம் அத்தியூர்க் கண்ணன்தாள்
> இச்சித்து இருப்பதுயாம் என்று'' [19]

(பொருள்-செல்வம்; பூங்குழலார்-மகளிர்; இராதே-இராமல்; தாள் - திருவடிகள்; இச்சித்து-விரும்பி)

என்ற பாசுரத்தை மிடற்றொலி செய்து ஓதி உளங்கரைகின்றோம். திருவரங்கத்து அழகிய மணவாளன் இராமாவதாரக் கூறுடையவன் என்றும், திருவேங்கடத்துத் திருவாழ்மார்பன் கண்ணன் அவதாரச் கூறுடையவன் என்றும், அத்திகிரி அருளாளன் இந்த இரண்டு அவதாரக் கூறுகளையுடையவன் என்றும் வைணவர்களிடையே வழங்கி வரும் கருத்தினைச் சிந்தித்தவண்ணம்[20] 'சொன்ன வண்ணம் செய்த பெருமான்' சந்நிதியை நோக்கிப் புறப்படுகின்றோம்.

❖ ❖ ❖

18. நாலூரான் - சோழன் அவையிலிருந்த ஒருவன்; கூரத்தாழ்வான் கண்களை இழக்கக் காரணமாக இருந்தவன்.
19. நூற்.திருப்.அந்-74
20. தேசி.பிரபந்-81,82,83.

## 2. சொன்னவண்ணம் செய்த பெருமாள்

எம்பெருமானுக்குப் பரமபதம் திருப்பாற்கடல், திருவரங்கம், திருமலை, காஞ்சி முதலான உகந்தருளின இடங்களில் இருப்பதைவிட மெய்யடியாருடைய இதய கமலத்தில் வாழ்வதே பெருவிருப்பாக இருக்கும் என்பதும், செவ்வியறிந்து அன்பர்களுடைய நெஞ்சில் குடியேறுவதற்காகவே மற்ற திவ்விய தேசங்களில் எம்பெருமான் வந்து தங்குகின்றான் என்பதும் வைணவர்களின் நம்பிக்கையாக இருந்துவரும் கருத்துகளாகும். அதாவது எம்பெருமான் பரமபுருஷார்த்தமாகக் கொள்ளும் பக்தருடைய இதயவாசத்தை அடைவதற்குத் திவ்விய தேச வாசத்தை ஒரு வழியாகக் (உபாயமாகக்) கொள்ளுகின்றான் என்பது தாற்பரியம். இதனையே ***பிள்ளை உலக ஆசிரியர்,***

"அங்குத்தை வாசம் சாதனம்;
இங்குத்தை வாசம் சாத்தியம்"[1]

*(சாதனம்-பயனை அடைவதற்குத் துணையாக இருப்பது; சாத்தியம்- அதனால் அடையும் பயன்)*

என்று அருளிச் செய்துள்ளார். 'அங்குத்தை' என்றது, அவ்விடத்தில் என்றபடி. அஃது ஈண்டுத் திவ்விய தேசங்களைக் குறிக்கின்றது. 'இங்குத்தை' என்பது இவ்விடம். இது, இங்கு ஞானியருடைய திருவுள்ளங்களைக் குறிக்கின்றது. இங்ஙனம் நம் சிந்தையில் சில தத்துவக் கருத்துகள் குமிழியிட்ட வண்ணம் வரதராசர் சந்நிதியிலிருந்து பேருந்தில் வந்து கொண்டிருக்கின்றோம். இந்த நிலையில் பூதத்தாழ்வாரின்,

"நாகத் தணைக் குடந்தை வெஃகாத் திருஎவ்வுள்
நாகத்தணை யரங்கம் பேரன்பில்-நாகத்(து)
அணைப்பாற் கடல்கிடக்கும் ஆதி நெடுமால்
அணைப்பார் கருத்தன் ஆவான்"[2]

*1. ஸ்ரீவச பூஷ. - 176 (புருடோத்தமநாயுடு அவர்களின் பதிப்பு)*
*2. நான். திருவந் - 36*

(நாகத்து அணை-பாம்புப் படுக்கை; குடந்தை-கும்பகோணம்; வெஃகா -திருவெஃகா; திருஎவ்வுள் - திருவள்ளூர்; அரங்கம் - திருவரங்கம்; பேர் - திருப்பேர் நகர்; அன்பில்-அன்பில் என்னும் திருப்பதி.)

என்ற திருப்பாசுரம் நம் நெஞ்சில் எழுகின்றது. அன்பருடைய நெஞ்சில் புகுவதற்காகவே எம்பெருமான் திருக்குடந்தை, திருவெஃகா, திருஎவ்வுளூர், திருவரங்கம், திருப்பேர் நகர், அன்பில் ஆகிய திவ்விய தேசங்களில் எழுந்தருளியுள்ளான் என்ற கருத்துடைய இப்பாசுரமே மேற்குறிப்பிட்ட ஸ்ரீவசன பூஷண சூத்திரத்திற்கு மூலம் என்பதை எண்ணி மகிழ்கின்றோம். இத்திருக்கோயில் காஞ்சியில் ஆடிசன் பேட்டைக்கு அருகில் வரதராசப் பெருமாள் சந்நிதியை நோக்கிச் செல்லும் கீழ்மேல் சாலைக்கு வடபுறமாகச் சற்று உள்ளே தள்ளி உள்ளது என்பதை அறிந்து அக்கோயிலுக்கு அருகிலுள்ள பேருந்து நிற்கும் இடத்தில் இறங்குகின்றோம். திருவெஃகா மிகப்பழமையான திருக் கோயில். பெரும்பாணாற்றுப் படையில் இத்திருக்கோயில் பற்றிய குறிப்பு காணப் பெறுகின்றது.[3] இத்திருக்கோயில் எம்பெருமானைப் பொய்கையாழ்வார்[4] 'பேயாழ்வார்'[5] திருமழிசையாழ்வார்[6] திருமங்கையாழ்வார்[7] நம்மாழ்வார்[8] என்ற ஐந்து ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர். கணி கண்ணன் பொருட்டுத் திருமழிசையார் சொன்ன வண்ணம் செய்தப் பெருமாளைச் சேவிக்க வேண்டும் என்ற பேரவா எவர் மனத்திலும் எழுதல் இயல்பேயன்றோ? பெருமாள் அன்பர்களின் தமிழுக்கு வசமாகிப் பின்சென்ற வரலாறு தமிழகத்தின் இதயத்தையே கொள்ளை கொண்ட வியப்பை எண்ணி உள்ளம் பூரிக்கின்றோம். இந்த வரலாறு சிவநேசச் செல்வரான **குமரகுருபரரின்** வாக்கிலும் இடம் பெற்றுப் பசுமை மாறாத தன்மை எய்தியதையும் சிந்திக்கின்றோம்.

"பழமறைகள் முறையிடப்
பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டலே"[9]

3. பெரும்பாண் -அடி (290-91)
4. முத.திருவந்-77 5. மூன். திருவந்- 26,34,62,64,76
6. திருச்.விருத்-63, 64; நான். திருவந்-36
7. பெரி.திரு 2.6:4; 10.1:7 சிறிய திருமடல்-கண்ணி-70; பெரிய திருமடல் கண்ணி-(126-7) திருநெடுந்-8,9,13,14.
8. திருவிருத்-26; திருவாய் 5.10:6.
9. மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் : காப்பு-1.
(மறைகள்-வேதங்கள்; கொண்டல்-மேகம்; ஈண்டு திருமாலைக் குறித்தது).

என்பது அப்பெரியாரின் திருவாக்கு.

அந்த வரலாறு இதுதான்: திருமழிசையாழ்வார் காஞ்சியில் வாழ்ந்த காலத்தில் **கணி கண்ணன்** என்ற புலவன் ஒருவன் இவருக்குப் பரமசீடனாகவும் இணைபிரியாத நண்பனாகவும் இருந்தான். ஒரு கிழக்தாசியும் ஆழ்வாரிடம் பக்தி பூண்டு அவர் இருந்த இடத்தைத் தூய்மை செய்து மெழுகிக் கோலமிட்டு வந்தாள். அவள் ஆழ்வாரின் திருவருளால் எழில் மிகுந்த இளநங்கையானாள். அக்காலத்தில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த பல்லவ மன்னன் அவளது பேரழகில் ஈடுபட்டு அவளைத் திருமணம் புரிந்து பட்டத்தரசியாகவும் ஆக்கிக் கொண்டான். அவள் மூலமாக அவ்வரசன் கணிகண்ணனைக் குறித்தும் திருமழிசை யாழ்வாரைக் குறித்தும் வெகுவாகக் கேள்வியுற்றான். ஒருநாள் கணிகண்ணனை அழைத்து, 'புலவரே, உம் ஆசாரியரை நம் அரண்மனைக்கு அழைத்து வாரும். அவர் என்னை வாழ்த்திப் பாடியருள வேண்டும்' என்று வேண்டினான். கணிகண்ணன் 'எம் குருதேவர் அரசர்களை மதித்துப் பாடார்; அவருடைய தமிழ் வைகுந்தச் செல்வனார் ஒருவருக்கே உரியது' என்று மறுமொழி பகர்ந்தான். அரசன் கணிகண்ணன் முன் பொன்னும் நவஇரத்தினங்களையும் குவிக்கச் செய்து 'நீராவது என் மீது கவிபாட வேண்டும்' என்று வற்புறுத்தி வேண்டினான். 'ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும்' பாகவத சிரோ மணியாகிய கணிகண்ணன்,

**''நாக் கொண்டு மானிடம் பாடேன்''**[10]

என்ற தன் குருநாதரின் கொள்கையே தன் கொள்கையுமாகும் என்று கூறி அரசன் வேண்டுகோளுக்கு ஒருப்படவில்லை. அரசன் சினமுற்று அவனை ஊரை விட்டு அகலும்படி ஆணையிட்டான்.

கணிகண்ணன் தன் குருநாதரை அடைந்து அரண் மனையில் நடந்தவற்றை விண்ணப்பம் செய்து தனக்கு விடையருளுமாறு வேண்டினான். திருமழிசை ஆழ்வார் புன்முறுவலுடன் சீடனை நோக்கி, 'அன்புச் சீடனாகிய நீ

10. நான்.திருவந்-75; ''வாய் கொண்டு மானிடம் பாட வந்த கவியேன் அல்லேன்'' (திருவாய் 3.9:9) என்ற நம்மாழ்வார் வாக்கு ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

ஏகுவாயாயின், யானும் இவண் இருக்கப் போவதில்லை' என்று மறுமொழி கூறினார். பிறகு திருவெஃகாவிற்குச் சென்று அங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானை நோக்கி,

> **''கணிகண்ணன் போகின்றன்; காமருபூங் கச்சி**
> **மணிவண்ணா! நீகிடக்க வேண்டா!-துணிவுடைய**
> **செந்நாப் புலவனும் செல்கின்றேன்; நீயும்உன்தன்**
> **பைந்தநாகப் பாய்சுருட்டிக் கொள்''.**

*(காமருபூங் கச்சி-அழகு மிக்க காஞ்சி; பைந்நாகம்-படத்தையுடைய பாம்பு)*

என்று பாசுரமிட்டு விட்டுச் சீடனைப் பின் தொடர்ந்தார்.

பக்தரின் வேண்டுகோளுக்கிரங்கி'உறங்குவான் போல் யோகு செய்யும் பெருமானும்' உடனே படுக்கையைச் சுருட்டிக் கொண்டு பெரிய பிராட்டியாருடன் ஆழ்வாரைப் பின் தொடர்ந்து பயணமானாராம். முன்னே சீடன், பின்னே குருநாதர், இறுதியாகப் பெருமாள் இப்படி இவர்கள் மூவரும் போவதைக் கண்டு பக்த கோடிகளும் சாது சனங்களும் இவர்களைத் தொடர்ந்து சென்றனர். இராமனைப் பிரிந்த அயோத்தி போலாகிவிட்டது காஞ்சிமா நகரம்! இதனைக் கண்ட பல்லவவேந்தன் தன் மதியீனத்திற்குக் கழிவிரக்கம் கொண்டு, கணிகண்ணனைத் தேடி சென்று நகர் திரும்புமாறு வேண்டினான். கணிகண்ணனும் ஆழ்வாரின் இசைவினை நாடினான். ஆழ்வாரும் பெருமாளை நோக்கி,

> **''கணிகண்ணன் போக்கொழிந்தான்; காமருபூங் கச்சி**
> **மணிவண்ணா! நீகிடக்க வேண்டும்;-துணிவுடைய**
> **செந்நாப் புலவனும் செலவொழிந்தேன்; நீயும்உன்தன்**
> **பைந்தநாகப் பாய்படுத்துக் கொள்''**

என்று முன்பு பாடிய பாசுரத்தையே மாற்றிப் பாடினார். எம்பெருமானும், பக்த கோடிகளும், பிறரும் ஊர் திரும்பினர். பொலிவிழந்த நகரமும் முன்போல் 'நிறைந்தசீர் நீள்கச்சி'யாகப் பொலிவுற்றது. தாம் சொன்னவாறு செய்த எம்பெருமானுக்கு ஆழ்வார் **'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்'** என்று புதிய திருநாமம் சூட்டினார். இந்த வரலாறு 'குரு பரம்பராப் பிரபாவம்' என்ற நூலில் உள்ளது. இந்த வரலாற்றைச் சிந்தித்த வண்ணம் பேருந்தை விட்டு இறங்கிக் திருக்கோயிலை நோக்கி வருகின்றோம்.

மே மாதத்தில் காலைக் கதிரவன் கனன்று எழுகின்றான். இக் கதிரவனின் தோற்றம் முதல் நாள் மாமல்லபுரம், திருவிடஎந்தை முதலான இடங்கட்குச் சென்றபோது கடு வெயிலில் துன்பப் பட்டதை நினைவிற்குக் கொணர்கின்றது. இந்த நினைவு நம்மாழ்வாரின் பாசுரத்தை நினைக்கத் தூண்டுகின்றது.

''நானிலம் வாய்க் கொண்டு நல்நீர்
அறமென்று கோதுகொண்ட
வேனில்அம் செல்வன் சுவைத்துஉமிழ்
பாலைகடந்த பொன்னே!
கால் நிலம் தோய்ந்து, விண்ணோர்தொழும்
கண்ணன் வெஃகா உது; அம்பூந்
தேன் இளஞ் சோலைஅப் பாலது;
எப்பாலைக்கும் சேமத்ததே''.[11]

(நால் நிலம்-முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்; வாய் கொண்டு-(தன் கதிர் முகத்தால்) வாயில் பெய்து கொண்டு; அற-நீங்கும்படி; கோது-சத்தற்ற பகுதி; வேனில் அம் செல்வன்-கதிரவன்; சுவைத்து-உருசி பார்த்து; உமிழ் - வெறுத்துக் கழித்த; பொன்-இலக்குமி போன்றவள்; உது-அடுத்துள்ளது; அப்பாலது-அவ்விடத்தில் உள்ளது; பாலை-துன்பம்; சேமத்தது-இன்பம் தரும் இடம்.)

என்பது ஆழ்வார் பாசுரம். *'நகர் காட்டுதல்'* என்பது இப் பாசுரத்தின் துறை. தலைவன் தலைவியை உடன் கொண்டு இடைவெளியிலுள்ள பாலை நிலத்தைக் கடந்து தன் ஊருக்கு ஏகுகின்றான். அப்பொழுது அவளுக்கு வழிநடை இளைப்புத் துன்பம் தோன்றாதிருக்கும் பொருட்டு அவளை நோக்கி, 'அதோ தெரிகின்றதே நகர், அதுதான் நாம் அடைய வேண்டிய இடம்' என்று கூறுதல் இத்துறையின் இலக்கணம்.

தொல்காப்பியம், சிலப்பதிகாரம் முதலியவை கற்ற நாம் பாலை நிலத்தின் தன்மையை அறிவோம். இங்கே நாம் ''நிலந்தான் நாலென்பாரும் அஞ்சென்பாருமாயிருக்கும்; ஐந்தென்கின்றவர்கள் பாலை நிலத்தையும் தன்னிலே ஒன்றாக்கிச் சொல்லுவார்கள்; நாலென்றவர்கள் இப் பாலைநிலந்தான் மற்றை நாலிலும் உண்டென்கிறார்கள்; அதாகிறது - நீரும் நிழலும் இல்லாத இடம் பாலையாம் அத்தனையிறே'' என்ற **நம்பிள்ளையின் ஈட்டையும்** நினைக்கின்றோம். பகலவன் தனது

11. திருவிருத்-26

வெப்பக் கதிர்களால் பூமியிலுள்ள நீரைக் கவர்கின்றான் என்பது ‘நால் நிலம் வாய்க் கொண்டு நன்னீர் அற மென்று’’ என்ற சொற்றொடரால் அறியப்பெறும் செய்தி. நால்வகை நிலத்துள்ளும் பாலை சத்தற்ற நிலம் என்பதும், இன்பத்திற்கன்றிப் பிரிதல் துன்பத்திற்கு உரியதாகின்ற இதன் கொடுமை ‘கோதுகொண்ட’, ‘மென்று சுவைத்து உமிழ்’ என்ற தொடர்களால் குறிக்கப் பெற்றுள்ள நயத்தை நினைக்கின்றோம். பாலை நிலத்திற்கு உரிய பெரும்பொழுது இளவேனில், முதுவேனில் என்பதையும், சிறுபொழுது நண்பகல் என்பதையும் நாம் அறிவோம். பாலைக்குத் தெய்வம் கொற்றவை என்று இலக்கண நூல் கூறினும் ஈண்டு ஆழ்வார் அதன் தெய்வம் சூரியன் என்பதாகவே (‘வேனில் அம் செல்வன்’) காட்டுகின்றார். இயல்பாகவே வெப்பக் கதிர்களையுடைய பகலவனும் வெறுத்தொதுக்கும்படியாக உள்ளது பாலையின் கொடுமை என்பது தோன்ற ‘வேனிலம் செல்வன் சுவைத்து உமிழ் பாலை’ என்று கூறப் பெற்றுள்ள நயத்தினைச் சுவைக்கின்றோம். ‘நன்னீர் அறமென்று’, ‘கோது கொண்ட’ என்று கூறிய பின்னையும் ‘சுவைத்து’ என்றது, சிறிதும் நீரில்லாதபடி பசையறப் பருகினமை தோன்றுவதற்காகும்.

இப்படிப்பட்ட கொடிய அந்த நிலத்தைக் காலால் நடந்து கடந்து வந்து மிக வருந்த வேண்டிய நிலையிலும் தலைவனைப் பிரியாது அவனுடன் வருதலையே ஓர் இன்பமாகக் கருதி வருகின்ற தலைவியை ‘பாலை கடந்த பொன்னே!’ என்று குறிப்பிடுகின்றான் தலைவன். பொற் கொல்லன் எரிகின்ற நெருப்பில் உருக்கின பொன்னை ஓட விடுங்கால் அது ஒளிவிடுவது போல, துன்பத்திலும் இன்பத்தைக் காணும் இவளது முகமலர்ச்சியை காட்டும் பொருள் பொதிந்த இச் சொற்றொடரினை எண்ணி எண்ணி மகிழ்கின்றோம். இங்ஙனம் பாட்டின் பொருளில் ஈடுபட்ட வண்ணம் ‘கால் நிலம் தோய்ந்து விண்ணோர் தொழும் கண்ணன் வெஃகாவை’ நோக்கி நடந்து வந்து கொண்டிருக்கின்றோம். தேவர்கட்கு இந்நில உலகில் கால் தோயாமை இயல்பு. உம்பர் உலகினும் பெருமையையுடைய இத்திவ்விய தேசத்தில் அவர்களும் அந்த இயல்பு மாறிக் கால் நிலம் தோய்ந்து நடப்பர். நிலத்தில் கால் தோய்பவரான மண்ணுலகத்தோரும் கால் பொருந்துவதற்கு அரிய பாலையின் வெப்பத்தைத் தணிக்க வல்லது திருவெஃகா. அத்திவ்வியதேசம் விண்ணுள்ளோரையும் கால் நிலம் தோய்ந்து நடக்கும்படியாகச்

செய்து விடுகின்றதென்றால், அதன் பெருமையை யார்தான் அளவிடமுடியும்?

இத்தலம் தாகம் தணிக்கும் சிறந்த இடம் என்பதைக் காட்டவே பாசுரத்தில் 'அம்பூ தேன் இளஞ்சோலை' எனக் குறிப்பிடப்பெற்றது. 'எப்பாலைக்கும்' என்பதில் 'பாலை' என்பது இலக்கணையாய் துன்பத்தை குறித்தது. அன்றியும், 'பான்மை' என்னும் பண்புப் பெயர் 'மை' விகுதியை இழந்து 'ஐ' விகுதி பெற்றுப் 'பாலை' என நின்று 'எந்த நிலைமைக்கும்' என்று பொருள்படுவதாகவும் உரைக்கலாம். 'எப்பாலைக்கும் சேமத்ததே' என்ற விடத்து **நம்பிள்ளை ஈடு**: 'எல்லாப் பாலை நிலங்களால் வந்த வெம்மையையும் போக்கி நமக்கு இரட்சக முகமான தேசங்காண் அது (வெஃகா); இந்தப் பாலை நிலமே யன்றிக்கே இன்னமும் சில பாலைவனமும் கடக்கலாங்காண் இந்நில முண்டாக''.

இப்பாசுரத்திற்கு உள்ளுறைப் பொருளும் உண்டு. ஆழ்வார் கொடிய சம்சாரத்தைக் கழித்த தன்மையையும், எம்பெருமான் உகந்தருளின நிலத்தின் பரம போக்கிய தையையும் அவர்களுக்குப் பாகவதர்கள் எடுத்துக்கூறி அவரது ஆற்றாமையைத் தவிர்த்தலே இதன் உள்ளுறை. முதல் இரண்டடிகள் ஒளிவடிவான எம்பெருமானின் பலவகை நிலங்களையும் திருவுள்ளத்திற் கொண்டு ஆய்ந்து அவற்றில் சத்தற்றது என்று கழித்ததும் பசையற்றதும் வெப்பம் மிக்கதுமான சம்சாரத்தைக் கடந்து மிக்க ஒளிபெற்றவரே! என்று பாகவதர்கள் ஆழ்வாரை விளிக்கின்றதைக் காட்டுகின்றன. பின்னிரண்டடிகள், மீளா உலகத்தவரான நித்தியசூரிகளும் மீண்டுவந்து வசிக்கும் படியான பெருமையுள்ள அர்ச்சாவதாரத் தலம் மிக அண்மை யிலுள்ளதாய், மிகவும் இனிமை தருவதாய், எவ்வகைத் துன்பங்களையும் தவிர்ப்பதாய், நன்மைகட்கெல்லாம் புகலிடமாய் உள்ளது என்பதைக் காட்டி நிற்கின்றன. இந்த எண்ணங்கள் நம் மனத்தில் அலைபாய்ந்த வண்ணம் ''யதோக்தகாரீ''[12] என்றும், 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்றும் வழங்கப்பெறும் எம்பெருமான் கோயில் கொண்டிருக்கும் திருவெஃகாவினை அடைகின்றோம்.

12. யதோக்த-சொன்ன வண்ணம்; காரீ-செய்பவர்.

இந்நிலையில் புராணக்கண் திறக்கின்றது; பல காட்சிகள் நம் மனக்கண் முன் தோன்றுகின்றன. ஒரு காலத்தில் நான்முகன் மனக்கண் முன் தோன்றுகின்றன. ஒரு காலத்தில் நான்முகன் சபையில் தேவர்களும், முனிவர்களும் நிறைந்திருக்கும்பொழுது நாமகள், பூமகள் இவர்களுள் யார் சிறந்தவர் என்ற வினா எழுந்தது. அப்பொழுது நான்முகன் எம்பெருமானுடைய திருமார்பை இடமாகக் கொண்ட பெரியபிராட்டியாரே சிறந்தவள் எனக் கூறினான். அதனைக் கேட்டு மிகவும் வருந்திய நாமகள் தன்னுடைய கூறாகப் பூமியில் பெருகிவரும் சரசுவதி நதியையேனும் நதிகளில் சிறந்ததாகக் கொள்ள வேண்டு மென்றாள். அதற்கு நான்முகன் 'எம்பெருமானுடைய திருவடி யினின்றும் தோன்றிய கங்கையை விடச் சிறந்த நதி இல்லை' என்றான். இதைக் கேட்டு நாமகள் சரசுவதி நதிக்கரையில் தவம் புரிந்தாள்.

இந்த நிலையில் நான்முகன் எம்பெருமானைச் சேவிப் பதற்காகக் காஞ்சியில் அசுவமேத யாகம் தொடங்கினான். மனைவி இல்லாமல் யாகம் செய்யக் கூடாது என்ற சாத்திர விதியை யறிந்த நான்முகன் தன் துணைவியை அழைத்து வருமாறு தன் உத்தம புத்திரனான வசிட்டனை அனுப்பினான். அங்ஙனமே வசிட்டன் தவம் புரியும் நாமகளை நாடி அவளை வருமாறு வேண்ட, அவள் ஊடல் நீங்காததால் வர மறுத்து விட்டாள். நான்முகன் சாவித்திரி முதலிய மற்ற மனைவியரை வைத்துக் கொண்டு யாகத்தைத் தொடங்கினான். யாகத்தில் தேவர்கள் மரியாதை செய்யப் பெறுவதைக்கண்ட அசுரர்கள் சினமுற்று இந்த யாகத்தைக் கலைக்க எண்ணினர். அவர்கள் தவம் புரியும் சரசுவதி தேவியிடம் சென்று கலகம் மூட்டினர். அவளும் கடுஞ்சினம் கொண்டு சரசுவதி நதிக்குத் தென் திசையில் 'வேகவதி' என்னும் வேறொரு நதியாகப் பெருகி நான்முகனின் யாகசாலையை அழிக்க முற்பட்டாள்.

இந்நிலையில் பக்தர்களைக் கைவிடாத எம்பெருமான் நான்முகன்மீது கருணை கொண்டு அந்த வெள்ளத்தின் நடுவில் பாம்பணையோடு தானும் ஓர் அணையாகக் குறுக்கே பள்ளி கொண்டான். இதனை,

"அன்று நயந்த அயமேத மாவேள்வி
பொன்ற உரை அணங்கு பூம்புனலாய்க்-கன்றிவர

**ஆதி அயனுக் கருள்செய் தணையானான்**
**தாதை அரவணையான் தான்''**[13]

(அயமேதம்-அசுவமேதம்; உரை அணங்கு-வாக்கின் தேவதை நாமகள்; புனல் -நதி; கன்றி-சினந்து; தாதை-தந்தை; அணை ஆனான் - அணையாகப் பள்ளி கொண்டான்; அரவு அணையான்-பாம்பைப் படுக்கையாகக் கொண்ட பரமபதநாதன்)

என்று கூறுவர் **வேதாந்த தேசிகர்.** அந்தக் கோலத்தில் இன்னும் அப்பெருமான் சேவை சாதித்து வருகின்றான் என்பது வைணவர்களின் நம்பிக்கை. அணையாகப்படுத்த அப்பெருமான் **'வேகா சேது'** என்ற வடமொழித் திருநாமத்தாலும் வழங்கப்பெறுகின்றான். 'வேகா சேது' என்ற சொற்றொடர் தமிழில் 'வேகவணை' என்று மொழி பெயர்ந்தது. பின்னர் அது, 'நாகவணை' என்பது 'நாகணை' என்று விகாரப்படுவதுபோல 'வேகணை' என்று விகாரப்பட்டது. நாளடைவில் 'வெஃகணை' எனத் திரிந்து தானியாகு பெயராகத் தலத்தைக் குறித்தது.[14] அது பின்னர் 'வெஃகா' என்று மருவி வழங்கி வருகின்றது என்பதாகக் கூறுவர். ஆழ்வார்களுள் சிறந்தவரான நம்மாழ்வார் தமது முதல் பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் திருவரங்கம், திருவேங்கடம், திருவெஃகா என்ற மூன்று திருப்பதிகளை மட்டிலுமே மங்களா சாசனம் செய்தமைபற்றி அம்மூன்றும் முறையே கோயில், திருமலை, பெருமாள்கோயில் என்று வழங்குவதாகப் பெரியோர் பணிப்பர்.

இந்த எண்ணங்களுடன் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். மேற்கு நோக்கிய திருமுக மண்டலங் கொண்டு புயங்கசயனமாகப் பள்ளி கொண்டிருக்கும் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாளையும்', தாயார் கோமளவள்ளி நாச்சியாரையும் சேவிக்கின்றோம். இத்தலத் திருக்குளத்தில் அவதரித்தவராகக் கருதப்பெறும் பொய்கையாழ்வாரின்,

13. தேசி பிரபந்-220

14. தனியாகு பெயர் (விளக்கம்): எ.டு. மாம்பழத்தைக் கூப்பிடு. மாம்பழத்தின் பெயர் மாம்பழத்தைச் சுமப்பவனைக் குறிக்கின்றது. மாம்பழம் சுமப்பவன் தானம் (ஸ்தானம்). தானத்திலுள்ளது தானி. தானியின் பெயர் தானத்திற்கு ஆனதால் தானியாகு பெயர். ஈண்டு 'வெஃகணை' என்ற அணையின் பெயர் அஃது உள்ள தானத்திற்கு ஆனதால் தானியாகு பெயர் என்பது அறியப்படும்.

"வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும்-நான் கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர்."[15]

*(வேங்கடம்-திருமலை; விண்ணகர்-பரமபதம்; அஃகாத -மாறாத; கிடங்கு-நீர் நிலை; கோவல்-திருக்கோவலூர்; என்றால்-அநுசந்தித்தால்; இடர்-துக்கங்கள்)*

என்ற பாசுரம் நினைவிற்குவர, அதனையும் அநுசந்திக்கின்றோம். எம்பெருமான் திவ்விய தேசங்களில் நிற்பதும், இருப்பதும், கிடப்பதும், நடப்பதுமான நிலைகளை நாம் சிந்தித்தால் நாம் நின்றும், இருந்தும், கிடந்தும் நடந்தும் செய்த பாவங்கள் யாவும் 'தீயினுள் தூசாகும்' என்ற உணர்ச்சி வயத்தராகின்றோம். இந்நிலையில் திருமழிசைப் பிரானின் திருப்பாசுரமும் நம் சிந்தையில் எழுகின்றது.

"நின்ற தெந்தை ஊரகத்து
இருந்த தெந்தை பாடகத்து
அன்று வெஃக ணைக்கிடந்தது
என்னி லாத முன்னெலாம்
அன்று நான்பி றந்திலேன்
பிறந்தபின் மறந்தி லேன்
நின்றதும் இருந் ததும்கி
டந்த தும்என் நெஞ்சுளே".[16]

*(ஊரகம்-உலகளந்த பெருமாள் சந்நிதி; பாடகம்- பாண்டவதூதர் சந்நிதி; என் இலாத-நான் பிறவாத முன்பு)*

என்ற அப்பாசுரத்தையும் அநுசந்திக்கின்றோம். இத்தலத்து உற்சவமூர்த்தி அழகெல்லாம் திரண்டு அமைந்த பேரழகு மிக்கது. ஐம்பொன் கலப்பில் பொன் சற்று அதிகமாக இருப்பதால் பேரொளியுடன் திகழ்வதாகக் கருதப்பெறுகின்றது.

15. முத.திருவந்-77
16. திருச். விருத்-64.

அடுத்து, ''வெஃகாவில் உன்னிய யோகத்து உறக்கத்தைப்''[17] பாதாதி கேசமாகச் சேவிக்கின்றோம். இப்போது பேயாழ்வாரின் பாசுரங்கள் நினைவிற்கு வருகின்றன.

''அன்றிவ் உலகம் அளந்த அசவேகொல்
நின்றிருந்து வேளுக்கை நீள்நகர்வாய்-அன்று
கிடந்தானைக் கேடில்சீ ரானை முன்கஞ்சைக்
கடந்தானை நெஞ்சமே காண்''[18]

(அசவு-சிரமம்; அயர்வு என்பதன் விகாரம்; வேளுக்கை-காஞ்சியிலுள்ள திவ்விய தேசம்; நீள் நகர்-வெஃகா; கஞ்சை-கம்சனை; கடந்தானை - கொன்றவனை)

என்ற பாசுரத்தை அநுசந்தித்து 'உறங்கும் எம்பெருமானை நன்றாகக் காண்பாயாக' என்று நெஞ்சினை வேண்டுகின்றோம். நின்று இருந்த வண்ணம் இவ்வுலகங்களையெல்லாம் அளந்ததனால் பெருமானுக்கு உண்டான அயர்வு தீர இத்திருப்பதியில் உறங்குவதாக ஆழ்வாரின் திருவுள்ளம் எண்ணி மகிழ்கின்றது.

எம்பெருமானின் இன்னொரு வெற்றிச் செயலையும் அநுசந்தித்துப் பேயாழ்வார் மங்களாசாசனம் செய்த இன்னொரு பாடலும் நம் நினைவுக்கு வருகின்றது.

''இசைந்த அரவமும் வெற்பும் கடலும்
பசைந்தங் கமுது படுப்ப-அசைந்து
கடந்த வருத்தமோ? கச்சி வெஃகாவில்
கிடந்துஇருந்து நின்றதும் அங்கு''[19]

(இசைந்த-தகுதியான; அரவம்-பாம்பு; வெற்பு-மலை; பசைந்து - தொடர்பு படுத்தி; படுப்ப -உண்டாகும்படி; அசைந்து-அலைச்சல் பட்டு; அங்கு-அந்தக் காஞ்சியில்)

என்ற அந்தப் பாசுரத்தையும் ஓதி உளங்கரைகின்றோம். ''மலைகளின் நடுவில் நின்றும், நீர் நிலைகளில் முழுகியும், ஐந்து நெருப்பிடையே நின்றும் தவம் செய்ய வேண்டா; திருவெஃகாவில் திருக்கண் வளர்ந்தருளும் செங்கண் மாலை

17. பெரிய திருமடல்-கண்ணி-127-8.
18. மூன். திருவந்-34
19. மூன்.திருவந்-64

மலர்களைக் கொண்டு வணங்கினால் நம் தீவினைகள் அகன்றோடிப் போய்விடும்''[20] என்று கூறும் அவர் கொள்கையில் ஆழங்கால் பட்டு நிற்கின்றோம்.

அர்ச்சகரிடம் தீர்த்தம் துளபம் பெற்று, சடகோபம் சாத்தப்பெற்று இறையநுபவம் நிறைந்து வழியும் நிலையுடன் கருவறையை விட்டு வெளி வருகின்றோம். பிராகாரத்தின் ஓர் அமைதியான இடத்தில் அமர்கின்றோம். அப்பொழுது திவ்விய கவி ***பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்*** அவர்களின்,

''உரைகலந்த நூலெல்லாம் ஓதி உணர்ந்தாலும்
பிரைகலந்த பால்போல் பிறிதாம்-தரையில்
திருவெஃகா மாயனுக்கே சீர்உறவாம் தங்கள்
உருவெஃகா உள்ளத்தி னோர்க்கு''[21]

*(ஓதி-கற்று; பிறிது ஆம்-திரியும் தன்மையாதாய் விடும்; மாயன்-ஆச்சரிய சக்தியையுடையவன்; சீர்-சிறந்த; தங்கள் உரு-தமது சொரூபம்; வெஃகா - விரும்பியறியாத)*

என்ற பாசுரம் நினைவுக்கு வர அதனையும் ஓதி பக்தியின் கொடுமுடியை எட்டிய உணர்ச்சி வயத்தராகின்றோம். சிறிது நேரம் கழித்து அட்டபுயகரத்தானைச் சேவிக்கும் விருப்பால் அவன் வீற்றிருக்கும் திருக்கோயிலை நோக்கி நடைகட்டு கின்றோம்.

❖ ❖ ❖

20. மூன்.திருவந்-76
21. நூற். திருப். அந்-52.

## 3. திருவட்டபுயகரத்து எம்மான்

**வை**ணவ தத்துவப்படி எம்பெருமானுக்கு உருவம் உண்டு. அது திவ்விய மங்கள விக்கிரகம் என்று வழங்கப்பெறும். இத்திருமேனியின் அவயவசோபையுடன் அவ்வவயவங்களில் அணியப்பெற்றுள்ள திவ்விய ஆபரணங்களும் திவ்விய ஆயுதங்களும் சேர்ந்து அதன் அழகினைப் பன்மடங்கு உயர்த்துகின்றன. இந்தத் திருமேனியின் அழகு அடியார்களின் மனத்தைக் கவர்ந்து பிச்சேற்றி அவர்களைப் படுத்தும்பாடு சொல்லும் தரமன்று. ஆழ்வார்கள் ஞான நிலையிலிருந்து தாமான தன்மையிலும் பிரேம நிலையில் பெண்தன்மையை அடைந்து பெண் பேச்சாகப் பேசும் நிலையிலும் அருளியுள்ள பாசுரங்களி லிருந்து இதனை நன்கு அறியலாம்.

எம்பெருமானின் திருவடிகளில் அணியப்பெறும் நூபுரம் முதல் திருமுடியில் அணியப்பெறும் திருவபிடேகம் வரையிலும் உள்ள ஆபரணங்கள் எண்ணிறந்தவை. நாம் உலகில் காணும் ஆபரணங்களுக்குள்ள தோற்றம், அழிவு போன்ற குற்றங்களும், அவயவங்களுக்குப் பொருந்தாத தன்மையும் போன்று இத்திவ்வியாபரணங்கட்கு இல்லை. ஆயினும், உலகிலுள்ள மற்ற ஆபரணங்கட்கு இல்லாத மென்மை, அழகு, ஒளி முதலியன இவ்வாபரணங்களுக்கு உண்டு. தவிர, பரமபதத் திலுள்ள நித்திய சூரிகளே எம்பெருமானின் விருப்பத்திற்கேற்பப் பிரகிருதி சம்பந்தமே இல்லாத ஒவ்வோர் ஆபரண வடிவத்தை மேற்கொண்டு அவனுடைய திவ்விய அவயவங்களில் அமைந்து அவனை உவப்பிக்கின்றனர் என்பது வைணவர்களின் நம்பிக்கை. இந்த முறையைப்பற்றியே பகவானுடைய ஆபர ணங்களுக்குத் ''திவ்வியாபரண ஆழ்வார்கள்'' என்னும் திருநாமமும் வழங்கிவருகின்றது.

எம்பெருமானுடைய திவ்வியாயுதங்களும் எண்ணிறந் தவை. எம்பெருமானுக்கு எண்ணிறந்த கல்யாண குணங்களிருப்

பினும் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜசு ஆகிய ஆறுகுணங்கள் மட்டிலுமே சிறப்பாய்க் கூறப்பெறுகின்றன. அங்ஙனமே, ஆயுதங்கள் பலவாயினும், சங்கு, சக்கரம், கதை, வாள், வில் ஆகிய ஐந்து ஆயுதங்கள் மட்டிலுமே சிறப்பாய்ப் புகலப் பெறுகின்றன. எம்பெருமானை வெறுத்து நிற்கும் பிரதிகூலருக்கு இவை ஆயுதங்களாகத் தோன்றும். அவனை விரும்பி நிற்கும் அனுகூலருக்கே அவை அழகிய ஆபரணங்களாகக் காட்சி அளிக்கும். அதனாற்றான் ஆழ்வார்,

''கூர்ஆர் ஆழி வெண்சங்
கேந்திக் கொடியேன்பால்
வாராய், ஒருநாள் மண்ணும்
விண்ணும் மகிழவே''[1]

(கூர்ஆர்-கூர்மை பொருந்திய)

என்று இறைஞ்சுவதைக் காண்கின்றோம். நித்திய சூரிகளே ''திவ்வியாயுதாழ்வார்கள்'' எனப் பெயர் பெற்றுள்ளனர். அவை எம்பெருமானுடைய ஆயுதங்கள் என்னும் நிலைக்கேற்ப ஞானம் சக்தி முதலிய குணங்களையும் பெற்றுள்ளன.

எம்பெருமானைக் காட்டிலும் அவனுடைய திவ்வியாயுதங் கட்குக் கருணை அதிகம். காக்கை வடிவமாக வந்த அசுரனைத் துரத்திச் சென்ற இராமபாணம் அவனை அப்பொழுதே அழிக்க வில்லை. இதற்கு, ''இவன் எம்பெருமானைச் சரண்புக்கு உய்யட்டும்'' என்னும் அதனுடைய கருணையே காரணம் என்று சொல்லப் பெறுகின்றது. இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் அலைபாய்ந்தெழுந்த வண்ணம் காஞ்சியில் கீழ்-மேல் சாலைக்குத் தென்திசையில் உள்ள அட்டபுயகரம் என்ற திருக் கோயிலை நோக்கிப் புறப்படுகின்றோம். அஷ்டபுய+க்ருஹம் என்பன அட்டபுயகரம் என்றாயிற்று. 'க்ருஹம்' என்ற வடசொல் 'கரம்' எனத் திரியும். ஆகவே, அஷ்டபுஜனுடைய க்ருஹம் அட்டபுயகரம் என்பது. 'அட்டபுயவகரம்' என்பது அட்டபுய கரம் என மருவிற்று என்றும் கொள்ளலாம். அகரமாவது, அக்ரஹாரம். திவ்விய தேசத்தைமுன்னிட்டே எம்பெருமானைப்

1. திருவாய் 6.9:1

பேசவேண்டும் என்பது ஆழ்வார்களின் திருவுள்ளமாதலின் 'அட்டபுயன்' என்று எம்பெருமானை வழங்காமல் 'அட்டபுயகரத்தான்' என்று வழங்கினர் என்பது ஆன்றோர் கொண்ட கருத்து. இந்த சொல்லாராய்ச்சியில் ஈடுபட்ட வண்ணம் திருக்கோயிலின் வாயிலை அடைகின்றோம். 'அட்டபுயகரத் தான் திருவடிகளே சரணம்' என்ற எண்ணத்துடன் வருவதால் பேயாழ்வாரின் பாசுரம் நம் சிந்தையில் குமிழியிட்டு எழுகின்றது.

> "தொட்ட படையெட்டும் தோலாத வென்றியான்
> அட்ட புயகரத்தான் அந்நான்று-குட்டத்துக்
> கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்
> தாள்முதலே தங்கட்குச் சார்வு"[2]

(தொட்ட-ஏந்தின; தோலாத-தோல்வியடையாத; வென்றியான்-சயசீலன்; குட்டத்து-நீர்ப பொய்கையில்; துஞ்ச-இறக்க; குறித்து எறிந்த-இலக்குத் தப்பாமல் விட்ட; தாள்முதல்-பாத முதல்; சார்வு-அடையத்தக்க பொருள்)

என்பது பாசுரம் இப்படைகளைத் தரிக்குமிடத்துச் சிறிதும் சிரமமின்றி பூவேந்தினாற்போல் ஏந்தியிருப்பது தோன்ற 'தொட்ட' என்று குறிப்பிட்டுள்ளதைப் போற்றுகின்றோம். எட்டுப் படை என்பது வாளி, வில், கதை, திருச்சங்கு, வாள், திருவாழி, கேடயம், மலர் ஆகிய எட்டுத் திவ்வியாயுதங்களைக் குறித்தது. ஐம்பொறிகளாகின்ற பல முதலைகளின் வாயிலே அகப்பட்டுத் துடிக்கின்ற நம்மைக் காத்தருள்வதற்காகவே எம்பெருமான் திருவட்டபுயகரத்தில் எழுந்தருளியுள்ளான் என்பது குறிப்பு. ஆழ்வார் கூறும் தஞ்சவுணர்வு நம்மையும் பற்றுகின்றது; அந்த எம்பெருமானைச் சரண் அடையச் சித்தமாகின்றோம். இந்த உணர்வுடன் திருக்கோயிலுக்குள் நுழைகின்றோம்.

அட்டபுயகரத்து எம்மானைப் பேயாழ்வார், திருமங்கை யாழ்வார் ஆகிய இருவரும் மங்களாசாசனம் செய்துள்ளனர். "எண் கையான்"[3] என்று திருமங்கையாழ்வார் குறிப்பிடும் எம்பெருமான் அட்டபுயகரத்தில் சேவை சாதிக்கும் எம்பெருமானே என்பது ஆன்றோர் கொள்கை. பெரிய திருமடலிலும் இந்த ஆழ்வார் இந்த எம்பெருமானை

2. மூன்.திருவந்-99.
3. பெரி. திரு.1. 8: 5

''அட்டபுயகரத்து எம்மான் ஏற்றை''[4] என்று குறிப்பிடுவர். அன்றியும், ஒரு தனிப்பதிகத்திலும் அட்டபுயகரத்து எம்மான் இந்த ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெறுகின்றார். இப்பதிகத்தில் ஆழ்வார் தாமான தன்மையைவிட்டுப் பிராட்டிமாருடைய தன்மையை ஏறிட்டுக்கொண்டு வேற்றுவாயாலே பேசி அநுபவிக்கின்றார். இப்பதிகம் 'மகள் பாசுரங்களாகச்' செல்லுகின்றது. நாமும் தலைவியின் நிலையை அடைந்து ஆழ்வார் பாசுரங்களை ஓதுகின்றோம்.

❖ ❖ ❖ ❖

**கா**தல் வெறி எத்தனையோ விதமாக உருவெடுக்கும். காரணமின்றி மகிழ்ச்சியும் எக்களிப்பும் உண்டாகும்; துயரமும் துன்பமும் தலைக்காட்டும்; ஆறுதலும் ஆதரவும் தோன்றும். இன்னும், என்னென்னமோ செய்யும். கள் வெறியைவிடக் காதல் வெறி உறைப்புடையது; ஆற்றலுடையது. காதல் வெறி இராவணனையும் சூர்ப்பணகையையும் படுத்தியபாட்டைக் கம்பராமாயணம் படித்தோர் நன்கு அறிவர். இருவரும் முறையே ஒரு தூணைச் சீதையாகவும் இராமனாகவும் காணும் காட்சியை மிகவும் அற்புதமாக, நகைச்சுவை தோன்றும் பாணியில், சித்திரித்துள்ள கம்பனின் கவித்திறமையை எவரும் மறத்தல் முடியாது.[5] காதல் வெறியைப் போன்றதே பக்தி வெறியும். பக்தியுணர்ச்சி முற்றிய நிலையில் அதன் விளைவு தனிச்சிறப்புடையது. அந்நிலையில் உருவெளித்தோற்றமாக அது செயல் புரிவதை ஆழ்வார்கள் அற்புதமாகக் காட்டியுள்ளனர். உருவெளித்தோற்றம் (Hallucination) என்பது என்ன? ஒரு பொருளைப்பற்றி இடைவிடாது நினைக்கின்ற முதிர்ச்சியில், நினைக்கப்பெற்ற பொருளின் உருவம் போலியாகக் கண்ணுக்கெதிரில் தோன்றுவதே உருவெளித் தோற்றம் என்பது. இந்த உருவெளித்தோற்றம் உண்டாதல் அன்பினாலும் நிகழும்; அச்சத்தினாலும் உண்டாகும். சூர்ப்பணகையினால் சீதாப்பிராட்டியின் அழகை விரிவாகக் கேட்டறிந்த இராவணன் அச்சீதையை இடைவிடாது நினைத்த காரணத்தால் ஒரு பெண்ணுருவம் அவனுக்கு உருவெளித்

4. பெரி. திருமடல்-பகண்ணி-128
5. கம்பரா. ஆரணிய. மாரீசன்வதை-148, 149.

தோற்றமாகக் காணப்பட்டது. அங்ஙனமே இராமனது அழகினில் ஈடுபட்டு அவனை அணையவேண்டும் என்று எண்ணிய சூர்ப்பணகைக்கும் ஓர் ஆணுருவம் உருவெளித்தோற்றமாகக் காணப்பட்டது. இவை இரண்டும் அன்பினால் நிகழ்ந்தவை. இராவணன், தான் சீதையைக் கவரும் பொருட்டுத் தனக்கு உதவியாக, மாரீசனைப் பொன் மானாகச் செல்லுமாறு ஏவியபோது, மாரீசன் இருமுறை இராமனால் ‘சூடுகண்டு பூனை’யாதலின், பார்த்தவிடமெங்கும் தனக்கு இராமனுருவம் தோன்றுவதாகக் கூறியது அச்சத்தால் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். இத்தகைய உருவெளித்தோற்றத்தைத் தொல்காப்பியரும் ‘நோக்குவன எல்லாம் அவையே போறல்’[6] என்ற ஒரு காதலி துறையாக வகுத்துக் காட்டுவர்.

❈ ❈ ❈ ❈

**நா**ம் இத்தலத்து எம்பெருமானைச் சேவிக்கச் சென்ற பொழுது ‘பகல் பத்து - இராப்பத்து’ உற்சவம் நடைபெற்ற காலமாக இருந்தது. முதலில் மகாமண்டபத்தில் எழுந்தருளி யிருந்த ஆழ்வார்களைச் சேவித்து விட்டுக் கருவறையை நோக்கி விரைகின்றோம். எம்பெருமான் நல்ல முறையில் அலங்கரிக்கப் பெற்றிருந்தான். இயற்கை எழில் கொண்ட திருமேனி ஆடை அணிகளின் சேர்க்கையால் பேரழகுடன் பொலிந்தது. நம்மை மறந்து மூர்த்தியின் என்றைக்கும் எங்கும் கண்டறியாத திருக்கோல அழகில் நம்மையே பறிகொடுக்கின்றோம். நாமும் பரகால நாயகியின் நிலையிலிருந்துகொண்டு எம்பெருமானுடைய திருமேனியின் அழகில் ஈடுபட்டு நிற்கின்றோம். ஆனால், நாம் சிந்தனை உலகில் சஞ்சரித்த வண்ணம் இருக்கின்றோம்.

இங்ஙனம் சிந்திக்கின்றோம்: திருவிட எந்தையைச் சேவிக்க வந்தபொழுது முகங்காட்டாமல் ஆழ்வார் நாயகியைத் துடிக்கவிட்ட நிலையை எண்ணுகின்றோம். அவள் பட்டபாடு களைத் திருவுள்ளம் பற்றின எம்பெருமான் இந்தத் திருப்பதியில் ஆழ்வார் நாயகிக்கும் பரம போக்கியமாகச் சேவை சாதித்த நிலையையும் சிந்திக்கின்றோம். பரகாலநாயகி உறக்கம் வராமல் எம்பெருமானை நினைத்த வண்ணம் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கின்றாள். அவள் ஊனக்கண் முன்னே,

6.தொல் - பொருள் - களவியல் - நூற்பா-18.

''மின்இலங்கு திருவுருவும், பெரிய தோளும்,
கரிமுனிந்த கைத்தலமும், கண்ணும், வாயும்,
தன்அலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்துஇலங்கு மகரம்சேர் குழையும் காட்டி''[7]

(கரி-குவலயாபீடம் என்ற யானை)

நிற்கும் எம்பெருமானை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அறிந்துகொள்ளாமல் இருக்கவும் மனம் வரவில்லை. சொந்த அறிவு அவளது ஆராய்ச்சிக்குத் துணை செய்யவில்லை. யார் என்று வினவவும் வாய் செயற்படவில்லை. அவர் திருமுகத்தை நேரே பார்த்துப் பேச முடியாதபடி சோதி வெள்ளம் அலையெறிந்து தள்ளுகின்றது. அதனால் முகம் நோக்கி வாய் எழும்ப முடியாத நிலை ஏற்பட்டுவிடுகின்றது அவளுக்கு. 'இவர் நம் தலைவராகவே இருத்தல் கூடும்' என்று நெஞ்சிலே ஓர் எண்ணமும் தோன்றினமையால் வினவமுடியாத நாணம் இவளை ஆட்கொண்டு விடுகின்றது. இன்னாரெனத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அவாவோ அதிகரித்துவிடுகின்றது. இந்நிலையில் அருகிலிருக்கும் வேறொருவரை நோக்கி 'இப்பெரியார் யார்?' என்று வினவுகின்றாள். அதற்கு எம்பெருமானே 'நான் அட்டபுயகரத்தேன்' என்று மறுமொழி கூறுகின்றான். எம்பெருமானே வினாடிக்கு வினாடி தன் திருக்கோலத்தை மாற்றி மாற்றிக் காட்சி அருள்கின்றான். அதனால் இவளுடைய வினாவும் மாறி மாறித் தொடுக்கப் பெறுகின்றது. எல்லா வினாக்கட்கும் எம்பெருமானே 'நான் அட்டபுயகரத்தேன்' என்றே விடைதருகின்றான்.

படுக்கையறையில் இங்ஙனம் பேச்சுக்கள் நடந்து கொண்டிருப்பது தாய்மார் தோழிமார் செவியில் படுகின்றது. உடனே அவர்கள் பரகால நாயகியின் பள்ளியறைக்கு விரைந்து வந்து ''நங்காய், ஏதாவது மன மயக்கம் ஏற்பட்டதா? இவை என்ன பேச்சுக்கள்?'' என்று வினவுகின்றனர். ''ஒன்றும் மனமயக்கம் இல்லை. ஒரு பேரருளாளரைச் சேவிக்கப் பெற்றேன்; 'இவர் யார்?' என்று வினவினேன். அட்டபுயகரத்து எம்மான் 'நான் தான்; அட்டபுயகரத்தேன்' என்று மறுமொழி

7. திருநெடுந்-25.
8. பெரி.திரு - 2.8 :1

தருகின்றான். இதனை நீங்களே காணுங்கள்'' என்று கூறுகின்றாள் ஆழ்வார் நாயகி. இங்ஙனம் பரகாலநாயகி தன் தோழிமார்க்கும் அன்னைமார்க்கும் நடந்த வரலாறு கூறுவதாக இந்த எம்பெருமான்மீது மங்களாசாசனம் செய்யப்பெற்றுள்ள திருமொழியில் அடங்கிய காட்சிகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நம் மனத்திரையில் அமைகின்றன.

***அரியுருவக் காட்சி:*** அன்று பிரகலாதன் பொருட்டு 'பேழ்வாய் வாள்எயிற்றுக் கோளரியாயத்' தோன்றிய பொழுது திரிபுரம் எரித்த சிவபெருமானும் மலர்மிசை மேல் வீற்றிருக்கும் நான்முகனும் அந்தப் பயங்கர உருவத்தைக்கண்டு வியந்தனர். மூன்று உலகத்திலுள்ளவர்களும் கடல் ஒலிபோல் வழிபாட்டு ஒலிகளை முழக்கிக்கொண்டு அப்பேருருவத்தை வணங்கினர். நெருப்புப் போன்ற உளைமயிர்களோடும் கூரியவாள் போன்ற கோரப்பற்களோடும் தோன்றிய நரசிங்கம் இரணியனது மார்பினைப் பிளந்த காட்சியைக் கண்டு வியந்தனர். அந்த நரசிங்க உருவத்தில் எம்பெருமான் ஆழ்வார் நாயகிக்குக் காட்சி தருகின்றான். இவள் 'ஆர்கொல்' என்று அயலில் நின்ற ஒருவரை வினவ, எம்பெருமானே 'நான் அட்ட புயகரத்தேன்' என்று மறுமொழி பகர்கின்றான். இந்தக் காட்சியில் ஈடுபட்டு மகிழ்வுற்ற நிலையில் திடீரென்று காட்சி மாறுகின்றது.

***அடுத்த காட்சிகள் :*** அமரர்கள் அருமறைகளை ஓதி வணங்கக் காட்சி தருகின்றான் எம்பெருமான். அவரது மேன்மையை நோக்க 'வெந்திறல் வீரராகவன் போல்' தோற்றம் அளிக்கின்றான். தாழநின்று பரிமாறும் சீலகுணத்தை நோக்கினால் திருவேங்கடமுடையானின் சேவைபோல் தோன்று கின்றது. இங்ஙனம் சேவை சாதிப்பவரை இன்னார் என்று இனங்கண்டுகொள்ளுவதற்குமுன் காட்சி மாறுகின்றது. நீர்மையும் மேன்மையும் ஒரே ஆதாரத்தில் விளங்கும் நிலையில், வாமன-திரிவிக்கிரம வடிவத்துடன், காட்சி தருகின்றான் எம்பெருமான். இதனை,

''வந்து குறளுருவாய், நிமிர்ந்து,
மாவலி வேள்வியில் மண்ணளந்த
அந்தணர் போன்றிவர் ஆர்கொல்? என்ன,
அட்டபுயகரத் தேன்என் றாரே''[9]

9. பெரி.திரு - 2.8:2

என்று ஆழ்வார் நாயகி கூறுகின்றாள். ஈண்டும் எம்பெருமானே பதில் தருகின்றான். இதற்கு இன்சுவை மிக்க **பெரியவாச்சான் பிள்ளையின்** உரை அறியத்தக்கது. "கழஞ்சுமண் இரந்து வந்தவனல்லேன்; உன்னை இரந்து வந்தவன் நானென்கிறார்: பிறர்க்காக இரந்தவனல்லேன்; எனக்காக இரந்தவன் என்கின்றார்' என்ற உரைப்பகுதி பன்முறை படித்து அநுபவித்து உளங்கொள்ளத் தக்கது.

***கண்ணனாகச் சேவை :*** மேற்கண்ட காட்சி மறைந்து வேறொரு முறையில் காட்சி தருகின்றான் எம்பெருமான். கண்ணபிரானுடைய சிறுக்சேவகமும் திருமேனியழகும் தோன்றுமாறு எட்டுப்புயங்களிலும் எட்டுவித ஆயுதங்களைத் தாங்கிய நிலையில் சேவை பாலிக்கின்றான். இக்காட்சியைக் காட்டும் ஆழ்வாரின் சொல்லோவியம்:

"செம்பொன் இலங்கு வலங்கைவாளி,
திண்சிலை, தண்டொடு சங்கம்,ஒள்வாள்,
உம்பர் இருசுடர் ஆழியோடு
கேடகம் ஒண்மலர் பற்றி,எற்றே!
வெம்பு சினத்(து)அடல் வேழம் வீழ,
வெண்மருப் பொன்றுபறித்(து), இருண்ட
அம்புதம் போன்றிவர் ஆர்கொல்?என்ன,
அட்டபுயகரத் தேன்என் றாரே.[10]

(வாளி-அம்பு ; சிலை-வில்; தண்டு-கதை ; சங்கம்-திருச்சங்கு ; வாள்-கத்தி ; உம்பர்-மேற்பட்டு ; ஆழி-சக்கரம்; கேடகம்-கேடயம்; ஒண்-அழகிய; பற்றி - தரித்துக்கொண்டு; வெம்பு சினம்-மிக்க கோபம்; அடல்-மிடுக்கு; மருப்பு - கொம்பு; அம்புதம்-மேகம் (நீரைக் கொடுப்பது என்ற காரணப் பெயர்)

இங்குக் குறிப்பிட்ட எட்டுத் திவ்வியாயுதங்களையும் திருவுள்ளம் பற்றியே பேயாழ்வார் "தொட்ட படையெட்டும் தோலாத வென்றியான்" என்று குறிப்பிட்டனரோ என்று எண்ணுகின் றோம். மலர் மன்மதனுக்கு ஆயுதமாதலால், ஈண்டு மலரும் ஆயுத வரிசையில் கொள்ளப்பட்டதை எண்ணுகின்றோம். எதிரிகளை வெல்வதற்கு ஆயுதங்களும் தன்னைப்போன்ற சிறுமிகளை வசப்படுத்துவதற்கு மலரும் கொண்டு சேவை சாதிக்கின்றான் எம்பெருமான் என்பது ஆழ்வார் நாயகியின் நினைப்பு.

10. மேலது - 2.8:3

கண்ணன் சேவையில் ஆழங்கால் பட்டுக் கொண்டுள்ளாள். கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தும் பெருமழையினின்றும் ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்த அற்புதச் செயலைச் சிந்திக்கின்றாள். மாய யானையின் கொம்புகளை முள்ளங்கியைப் பிடுங்குவதுபோலப் பிடுங்கிய அற்புதச் செயலை அவன் கையிலுள்ள மருப்பு நினைக்கச் செய்கின்றது. 'இவன் கண்ணனே' என்று அறுதியிடுவதற்கு முன்பு காட்சி மாறுகிறது. பேரொளி மிக்க திருவாழியும் திருச்சங்கும் கைகளில் இலங்க, வேதம் ஓதுபவர்கள் முன்நிற்க, பரமபத நாதன்போல் சேவை சாதிக்கின்றான். இங்ஙனம் ஒன்றன்பின் ஒன்றாக மாறிய காட்சிகளால் ஐயுற்ற ஆழ்வார் நாயகி 'இவர் அட்டபுயகரத்தேன்' என்று எம்பெருமானே விடை பகர்கின்றான்.[11]

மீண்டும் காட்சி மாறுகின்றது. முன்னை உருவம் மாறி நீலமேக சாமள வண்ணனாய்க் காட்சி அளிக்கின்றான் எம்பெருமான். இவன் வியூகநிலையிலுள்ள ஐயனோ என்று ஐயுறுகின்றாள் பரகாலநாயகி.

''கலைகளும் வேதமும் நீதிநூலும்
கற்பமும் சொற்பொருள் தானும், மற்றை
நிலைகளும் வானவர்க் கும்பிறர்க்கும்
நீர்மையி னால்அருள் செய்து,நீண்ட
மலைகளும் மாமணி யும்,மலர்மேல்
மங்கையும் சங்கமும் தங்குகின்ற
அலைகடல் போன்றிவர் ஆர்கொல்?என்ன,
அட்டபுயகரத் தேன்என் றாரே''[12]

(கலை-உபநிடதம்; வேதம்-நான்மறை; நீதிநூல்-இதிகாசம்; கல்பம்-கல்ப சூத்திரம்; சொல்-இலக்கணம்; பொருள்-மீமாம்சை; நீர்மை-கருணை; மணி-கௌத்துபம்; மங்கை-பெரிய பிராட்டியார்)

இப்பாசுரத்தில் ''சாத்திரங்களாகிய கடல்களைத் தந்தருளிய கருங்கடலோ இவர்?'' என்று விடுக்கும் வினாவிற்கு ''அட்டபுயகரத்தேன், நான்'' என்று எம்பெருமான் விடையளிப்பதைக் காண்கின்றோம்.

'கலைகள்' என்ற சொல் பொதுவாகச் சாத்திரங்களையெல்லாம் குறிக்குமாயினும், ஈண்டு சந்தர்ப்பத்தால் வேதாந்த

11. பெரி. திரு- 2.8:4 12. பெரி. திரு-2.8:5.

பாகமாகிய உபநிடதங்களையே குறிக்கின்றது. 'வேதம்' என்னும் சொல் வேதத்தின் இரண்டு பாகங்களையும் குறிப்பதாக இருப்பினும், 'கலைகள்' என்பதற்கு ஒரு பாகத்தைப் பொருளாகக் கொண்டு விட்டதனால், ஈண்டுக் கர்மகாண்டத்தை மட்டிலும் குறிப்பதாகக் கொள்ளப்பெற்றது. இதிகாசங்கள் யாவும் நீதியை உயர்த்தும் நூல்களாகும். வேதங்களில் விதிக்கப்பெற்ற கருமங்களை அநுட்டிக்கும் முறைகளை உணர்த்தும் நூல் 'கல்ப சூத்திரம்' ஆகும். 'சொல்' என்பது, சொற்களின் உண்மைப் பொருளை ஆராய்ந்து உரைப்பது 'மீமாம்சை' சாத்திரமாகும். இத்தகைய சாத்திரங்களையெல்லாம் எம்பெருமான் தானான தன்மையினாலும், முனிவர்களிடம் அந்தர்யாமியாக இருந்தும் வெளியிட்டருளினான் என்பது வைணவர்களின் நம்பிக்கை. மேற்குறிப்பிட்ட சாத்திரங்களில் விதிக்கப்பெற்ற கருமங்களை முறை தவறாது அநுட்டிப்பவர் கட்கு அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு ஒவ்வொரு நிலை வருவதாகச் சொல்லப் பெற்றுள்ளனவற்றையும் எம்பெருமானே ஏற்படுத்தி வைத்தான் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

எம்பெருமான் கடல்போல் இருப்பவன் என்று சொல்லுவ துண்டு. நிறம்பற்றி வந்த உவமையாகச் சொல்லுவது இது. 'முகில் வண்ணன்', 'மைவண்ணன்' 'கடல் வண்ணன்' என்ற பெயர்களினால் இதனை அறியலாம். ஈண்டுச் சொல்லப் பெறுவது: கடலிலுள்ள பொருள்கள் யாவும் எம்பெரு மானிடத்திலும் உள்ளன என்பதாகும். கடலிலுள்ள மைநாகம் போன்ற மலைகளை நினைந்தும், எம்பெருமானிடத்திலும் திருத்தோள்களை நினைந்தும் 'கடலும் மலைகளையு டையது,எம்பெருமானும் மலைகளையுடைவன்' என்று கூறப் பெறுகின்றது. கடலிலும் மாமணிகள் உள்ளன; எம்பெருமானும் "குருமாமணிப்பூண்" என்று கௌத்துவ மணியையுடையவன். மலர்மங்கை தங்கப்பெற்றது கடல்; எம்பெருமானும் " 'அகலகில்லேன் இறையும்' என்ற அலர்மேல்மங்கை உறை மார்பன்."[13] சங்குகட்கு உறைவிடம் கடல்; எம்பெருமானும் இடக்கையில் திருவாழியைத் தரித்திருப்பவன்.

எம்பெருமானின் கோலநிறத்திலே ஊன்றி விடுகின்றது ஆழ்வார் நாயகியின் நெஞ்சு. "இவருடைய தன்மைகளை எந்த

13. திருவாய் - 6.10:10.

விதமாக அறியப் பார்த்தாலும் ஒன்றும் அறியக்கூட வில்லையே.ஆய்ந்தெடுத்த அணிகளையுடைய மகளிருடைய வளைகள், நெஞ்சு, நிறை முதலிய அனைத்தையும் தம்முடை யனவாக ஆக்கிக் கொள்ளுவதற்காகவே இங்கு வந்து சேர்ந்தனர் போலும்!'' என்று நினைக்கத் தோன்றுகின்றது அவளுக்கு.

''எங்ஙனும் நாம்இவர் வண்ணம்எண்ணில்
ஏதும் அறிகிலம் ஏந்திழையார்
சங்கும் மனமும் நிறைவும்எல்லாம்
தம்மன வாகப் புகுந்து''[14]

(வண்ணம்-தன்மைகள்; ஏந்திழையார்-மகளிர்; சங்கு-(இங்கு)வளைகள்; நிறைவு - அடக்கம்; தம்மனவாக-தம்முடையவனவாகும்படி; புகுந்து-வந்து சேர்ந்து)

என்று எண்ணுகின்றாள் பரகாலநாயகி. இவருடைய திருமேனி யோ பூவையும் காயாவும் நீலமும் மேகமும் போன்றுள்ளது. அவற்றில்,

''பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவிமலர் என்றும் காண்தோறும், பாவியேன்
மெல்ஆவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
எல்லாம் பிரான்உருவே என்று.''[15]

(பூவை, காயா, நீலம், காவி-இவை யாவும் நீல நிறமுள்ள பூக்கள்; நீலம் - கருநெய்தல்; காவி-செங்கழுநீர்ப்பூ. 'பூக்கின்ற' என்ற அடைமொழியை எல்லாவற்றிலும் சேர்க்க)

என்று நம்மாழ்வார் போலிகண்டு மேல்விழும்படியான அளவுக்கு அளவிறந்த அன்பினால் அத்திருமேனியில் ஈடுபடு கின்றாள் பரகாலநாயகி.

''தாமும்
பொங்கு கருங்கடல் பூவைகாயாப்
போதவிழ் நீலம் புனைந்தமேகம்,
அங்ஙனம் போன்றிவர் ஆர்கொல்? என்ன
அட்டபுயகரத் தேன்என் றாரே.''[16]

('போதவிழ்' என்ற அடைமொழியைப் பூவை, காயாவுக்கும் கூட்டிப் பொருள் கொள்க)

14. பெரி. திரு- 2.8:6. 15. பெரி. திருவந் - 73.
16. பெரி. திரு-2.8:6.

என்ற பாசுரப்பகுதி திருமேனியின்பால் அவளுடைய ஈடுபாட்டினைக் காட்டுகின்றது. "கால் ஆழும், நெஞ்சு அழியும், கண்சுழலும்"[17] என்ற அவளுடைய நிலையைக் காண்கின்றோம்.

எம்பெருமானுடைய திருமேனியின் இயற்கையழகிலும் செயற்கை அழகிலும் தன்னுடைய உள்ளத்தைப் பறிகொடுத்து விடுகின்றாள் பரகாலநாயகி.

"முழுசிவண்(டு) ஆடிய தண்துழாயின்
மொய்ம்மலர்க் கண்ணியும் மேனிஅம்சாந்(து)
இழுசிய கோலம் இருந்த வாறும்
எங்ஙனம் சொல்லுகேன்! ஓவிநல்லார்,
எழுதிய தாமரை அன்னகண்ணும்
ஏந்தெழில் ஆகமும் தோளும்வாயும்,
அழகியதாம்"[18]

(முழுசி-(தேனில்) மூழ்கி; மொய்ம்மலர் கண்ணி-நெருங்கத் தொடுக்கப்பெற்ற மாலை; சாந்து-சந்தனம்; ஓவிநல்லார்-ஓவியர்; ஏந்து எழில்-மிக்க அழகு; ஆகம் - மார்பு)

என்று அவள் பேசுகின்ற பேச்சினால் இதனை அறிகின்றோம். 'தேன் ஒழுகும் திருத்துழாய் மாலையைச் சாத்திக்கொண்டிருந்த அழகும், சந்தனக் காப்பால் பொலிந்த அழகும் என்னே! அன்றியும், அவருடைய திருக்கண்களும், திருமார்பும், திருத்தோள்களும், திருப்பவளமும் (உதடுகள்) ஓவியவல்லாரால் எழுதப் பெற்றவை போன்று யாதொரு குறையும் கூறவொண்ணாதபடி அழகு விஞ்சி இருந்தன" என்று ஈடுபட்டுப் பேசுகின்றாள் ஆழ்வார் நாயகி.

"என் அரங்கத்து இன்னமுதர்
குழல்அழகர் வாய்அழகர்
கண்அழகர் கொப்பூழில்
எழுகமலப் பூஅழகர்"[19]

(குழல்-கூந்தல்; கொப்பூ-நாபி)

17. பெரி. திருவந்-34. 18. பெரி. திரு-2.8:7.
19. நாச். திரு-11:2.

என்று திருவரங்கப் பெருமானின் திருமேனி அழகில் ஆண்டாள் ஈடுபட்டதைப்போல் பரகாலநாயகியும் ஈடுபட்டதைக் காண்கின் றோம்.

மேலும் கூறுகின்றாள் பரகாலநாயகி: ''என்முன்னே தோன்றியருளின பெரியவர் தனியராய் வந்திலர், அவரைச் சுற்றிலும் நித்தியசூரிகள் சூழ்ந்து வணங்கிச் கொண்டிருந்தனர். அவர் வாயினின்றும் வேத ஒலிகள் வந்துகொண்டிருந்தன. அருகில் பெரிய பிராட்டியார் பட்ட மகிஷிபோல் திகழ்ந்தாள். இடக்கையில் திருச்சங்கும் வலக்கையில் திருவாழியும் பொலிந்தன. கருநெய்தல் பூவோ? அன்றி, கடல்தானோ? என்னும்படியான வடிவழகு தோன்றியது. அந்த வடிவழகுக்கும் கண்ணழகுக்கும் எல்லை காணமுடியாதபடி இருந்தது. என்னுடைய உயிர்தான் இங்ஙனம் உருவெடுத்துத் தோன்று கின்றதோ என்று எண்ணக்கூடியவாறு அவ்வடிவம் பேரன்புக்கு இலக்காக இருந்தது. இத்தகையவரை இன்னார் என்று அறுதியிட முடியாத நிலையில் இருந்த நான் 'இவர் ஆர் கொல்?' என்றேன். அவரோ 'நான் தான் அட்டபுயகரத்தேன்' என்றார்''[20] என்பதாக.

அவளுடைய பேச்சு மேலும் தொடர்கின்றது; அந்தத் தெய்வத் திருவுருவைக் கண்டதும், என் வளைகள் நழுவி விட்டன; என்னுடைய நெஞ்சமும் அவர் வயத்தாகிவிட்டது. இப்படி என்னுடைய அனைத்தையும் கவர்ந்து கொண்ட பிறகும் 'இவ்விடத்தில் இன்னமும் ஏதாவது இருப்பின், அவற்றையும் கொள்வோம்' என்ற திருவிருப்பால் என் இடை துவளும்படியாக உற்றுநோக்கித் தன் திருப்பவளத்தைத் திறந்து ஏதோ ஒன்று பணித்தார். இவர் நோக்கும் நோக்கில் நஞ்சு கலந்ததாகவே காணப்பட்டது. 'இவர் யார்?' என்று கேட்கவும் அச்சமாக வுள்ளதே என்று சொல்லும் போதே 'நான்தான் அட்டபுயகரத் தேன்' என்றார்''[21] என்பதாக.

திருவட்டபுயகரத்து எம்பெருமான் முன்பு அவனுடைய வடிவழகில் ஈடுபட்டு நிற்கும் நாம் நாயகி பாவனையிலுள்ள பாசுரங்களை ஓதி உளங் கரைகின்றோம். ''கலிகன்றி இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலையை ஏத்த

20. பெரி. திரு- 2.8:8 21. மேலது 2.8:9

வல்லார்க்கு இடம் வைகுந்தம்''[22] என்ற பல சுருதிப் பாசுரப் பகுதியை நினைந்த வண்ணடம் மனஅமைதி பெறுகின்றோம். அர்ச்சகரிடம் தீர்த்தமும் திருத்துழாயும் பெற்றுச் சடகோபம் சாதிக்கப்பெற்றுக் கருவறையினின்றும் வெளியே வருகின்றோம். இத்தலத்து எம்பெருமானின் திருநாமம் **ஆதிகேசவப் பெருமாள்** என்பது. நின்ற திருக்கோலத்தில் மேற்கே திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றான் எம்பெருமான்.

எம்பெருமானைச் சேவித்த நாம் தாயார் சந்நிதிக்கு வருகின்றோம். ***அலர்மேல் மங்கை*** என்பது தாயாரின் திருநாமம். அவரையும் வணங்கிப் பிரசாதம் பெற்றுத் திரும்புகின்றோம்.

காஞ்சியிலுள்ள திவ்விய தேசங்களை அறிமுகப்படுத்து வதற்காகவே என்னுடன் திருப்பதியினின்றும் வந்த என் அரிய நண்பர் திரு. **கே. சீனிவாசவரதன்** மீண்டும் எங்களை ஆழ்வார்கள் எழுந்தருளியிருக்கும் மகாமண்டபத்திற்கு இட்டுச்செல்லு கின்றார். மீண்டும் ஆழ்வார்களைச் சேவிக்கின்றோம். திருமொழி - திருவாய்மொழித் திருநாளை (பகல் பத்து - இராப்பத்து) ஏற்படுத்தின **நாதமுனிகளின்** பரந்த நோக்கத்தையும் திவ்விய பிரபந்தத்தின்பால் அவர் கொண்டுள்ள பக்தியையும் நினைந்து போற்றுகின்றோம்.

திருக்கோயிலின் வெளிப்பிராகாரத்தில் ஓர் அமைதியான இடத்தில் அமர்கின்றோம். திவ்வியகவி **பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்** அவர்களின் இத்திருத்தலம் பற்றிய,

> **''என்றும் துயருழக்கும் ஏழைகாள்! நீங்கள்இளம்**
> **கன்றுபோல் துள்ளிக் களித்திரீர் - அன்றுநடம்**
> **இட்ட புயங்கத்து இருசரண மேசரண்என்(று)**
> **அட்ட புயங்கத்தற்கு ஆள்ஆய்.''[23]**

(என்றும்: எப்பொழுதும்; துயர்-துன்பம்; இரீர்-இருங்கள்; அன்று - முற் காலத்தில்; நடம் இட்ட-நடனம் ஆடிய; புயங்கம்-பாம்பு (காளியன்); இருசரணம் - இரண்டு திருவடிகள்; திருவட்டபுயங்கம்-திருப்பதியின் பெயர்; ஆள் ஆய - அடிமையாக)

என்ற பாசுரம் நினைவிற்கு வர அதனையும் ஓதி உளங்கரைகின்றோம். காளியன்மீது களித்துக் கூத்தாடிய கண்ணனே அட்டபுயகரத்து ஆதியாக எழுந்தருளியுள்ளான்

22. பெரி. திரு- 2.9 :10. 23. நூற். திருப் அந்-75

என்பதை அறிகின்றோம். அவதாரத்துக் கண்ணனும் அர்ச்சாவதார மூர்த்தியும் ஒரே பரம்பொருள் என்று விசிட்டாத்வைத பேருண்மையையும் உணர்கின்றோம்.

இந்தத் திருக்கோயிலை நிறுவியவன் '**வயிரமேகன்**' என்ற சிறப்புப் பெயர் பெற்ற **தொண்டைமான் சக்கரவர்த்தி**. "மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீண்முடிமாலை வயிரமேகன். தன்வலிதன் புகழ் சூழ்ந்த கச்சி அட்டபுயகரத்து ஆதி"[24] என்ற பாசுரப் பகுதியினால் இதனை ஒருவாறு அறியலாம். இந்த வரலாற்றுக் குறிப்பினை நினைந்த வண்ணம் அமைதியான மன நிலையில் திருக்கோயிலைவிட்டு நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

❖ ❖ ❖

24. பெரி. திரு. 2.8:10.

# 4. உலகளந்த பெருமாள்

எம்பெருமான் திருவடிகளையே சரணமாகக் கொண்டவர்கள் ஆழ்வார் பெருமக்கள். ஆழ்வார்களில் தலை சிறந்தவரான நம்மாழ்வார் ''பேய்ச்சி முலையூடு அவளை உயிர் உண்டான், கழல்கள் அவையே சரண் ஆகக் கொண்ட குருகூர்ச் சடகோபன்''[1] என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதைக் காண்கின்றோம். இவரே பிறிதோர் இடத்தில் 'கோலமாம் என் சென்னிக்கு உன் கமலம் அன்ன குரை கழலே''[2] என்று அத்திருவடிகளைத் தலையணியாகக் கொண்டதாகக் கூறுகின்றார். உலகளந்த காலத்தில் நல்லார் - பொல்லார், பாவிகள் - உத்தமர் என்று வேறுபாடு காட்டாமல் எல்லார் தலையிலும் பொருந்தி அவர்கட்கு வீடுபேறு அளித்த திருவடிகளன்றோ இவைகள்? உலக சாரங்க முனிவரின் திருத்தோள்களில் வீற்றிருந்த வண்ணம் அழகிய மணவாளனைச் சேவித்தபொழுது இத்திருவடிகளன்றோ முதன் முதலாகத் திருப்பாணாழ்வாரின் கண்ணில் பட்டவை? ''நீள்மதிள் அரங்கத்து அம்மான் திருக்கமலபாதம் வந்து என் கண்ணிலுள்ளன ஒக்கின்றதே''[3] என்பதால் பெரிய பெருமாளின் திருவடிகளின் அழகு அவர்மேல் விழுந்து அவர்தம்மைப் பரவசமாக்கியதைக் காண்கின்றோம். காஞ்சி **ஞானப்பிரகாசர்** திருமடத்திலிருந்த வண்ணம் இங்ஙனம் சிந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில்,

''அடிமூன்றில் இவ்வுலகம் அன்றுஅளந்தாய் போலும்
அடிமூன்று இரந்து அவனிகொண்டாய்; படிநின்ற
நீர்ஓத மேனி நெடுமாலே நின்அடியை
யார்ஓத வல்லார் அறிந்து''[4]

(அடி-திருவடி; அளந்தாய் போலும்-அளந்து கொள்பவன்போல; அவனி - பூமி ; இரந்து-யாசித்து; அறிந்து-நன்கு தெரிந்து; ஓதவல்லார்-பேசவல்லவர்கள்)

1. திருவாய். 5.8:11
2. மேலது-4.3:6
3. அமலனாதி - 1
4. இரண். திருவந்-5

என்ற பாசுரம் நினைவிற்கு வருகின்றது. ஆம்; உண்மையே. அத்திருவடிகளின் பெருமையைப் பேசுவதற்கு உலகிலுள்ள மொழிகளின் வளம் போதாது; நமக்கும்-ஏன்? வழிவழி வரும் மானிடவர்க்கத்திற்கும்- ஆயுள் போதாது. இந்தத் திருப் பாசுரத்தை நினைத்த வண்ணம் காஞ்சிப் பேருந்துநிலையத்திற்கு அருகிலுள்ள உலகளந்த பெருமாள் திருக்கோயிலை[5] நோக்கி வருகின்றோம்.

இந்த உலகளந்த பெருமாள் கோயில் பெரிய காஞ்சியில் (சிவகாஞ்சி) நான்கு இராஜவீதிகள் சூழ ஊரின் நடுவே அமைந்துள்ளது. இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் நான்கு ஃபர்லாங் தொலைவில் உள்ளது இத் திருக்கோயில். இதன் கீழ்த்திசையில் வைகுண்டப் பெருமாள் திருக்கோயிலும் மேற்குப் புறமாகப் காமாட்சி அம்மன் திருக்கோயிலும் அமைந்துள்ளன. உலகளந்த பெருமாள் கோயிலின் வெளிப் பிராகாரத்தில் மூன்று சந்நிதிகள் உள்ளன. இவையும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்றவை. முதலில் பிராகாரத்திலுள்ள எம்பெருமான்களைச் சேவிக்க முற்படுகின்றோம்.

***திருநீரகம்:*** வடக்குப் பிராகாரத்திலுள்ள நீரகத்தான் சந்நிதிக்கு வருகின்றோம்; நீரின் தன்மையுடையவனான எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலமாதல் பற்றி 'நீரகம்' என்ற திருநாமம் பெற்றதாகப் பெரியோர் பணிப்பர். நீருக்கும் எம்பெருமானுக் கும் பலபடிகளில் ஒற்றுமை உண்டு. ஒரு சிலவற்றை மட்டிலும் ஈண்டுச் சிந்திக்கின்றோம்.

1. நீர் பள்ளத்தை நோக்கித் தானே இயல்பாகப் பாயும்; மேட்டில் ஏறுவது அருமை. எம்பெருமான் சாதி முதலியவற்றால் குறைந்த நிலையையுடையாரிடத்தில் எளிதாகச் செல்லுவன்; உயர்ந்தோம் என்று மார்பு நெறித்திருப்பாரிடத்துச் செல்ல விரும்பாதவன். எம்பெருமான் பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூது சென்றபொழுது 'ஞானத்தால் சிறந்தோம்' என்றிருந்த வீட்டுமனின் இருப்பிடம் செல்ல விரும்பவில்லை. 'குலத்தால் சிறந்தோம்' என்று கருதியிருந்த துரோணரின்

5. இதற்கு 'ஊரகம்' என்ற மற்றொரு திருநாமமும் உண்டு. இத்தலத்தில் எம்பெருமான் உரகவடிவமாகவும் சேவை சாதிப்பதால் இப்பெயர் ஏற்பட்டது என்பர். உரகம்-பாம்பு.

இல்லத்திற்குப் போக நினைக்கவில்லை. செல்வச் செருக்குடன் திகழ்ந்த துரியோதனனையும் ஒரு பொருளாக மதித்து அவனுடைய மாளிகைக்கும் செல்ல ஒருப்படவில்லை. எல்லாவற்றிலும் தாழ்ந்தவராக நினைத்திருந்த விதுரனுடைய திருமாளிகைக்குத் தானாகவே சென்று "என்ன மாதவம் செய்ததோ இச்சிறு குடில்?" என்று அவன் போற்றும் வண்ணம் திருவமுது செய்தருளினான்.

2. நீருக்குத் தண்மை இயல்பாக உள்ளது; வெப்பம் வந்தேறி. எம்பெருமானுக்கும் தண்ணளி இயற்கையாய்ச் சீற்றம் வந்தேறியாக இருக்கும். "நீரிலே நெருப்புக் கிளருமாப்போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம் பிறந்தால்"[6] என்ற முமுட்சுப்படியின் வாசகம் காண்க.

3. நீர் சுட்டாலும் அதனை ஆற்றுவதற்கு நீரே தேவை. எம்பெருமான் சீறினாலும் அவனால்தான் அச்சீற்றம் தணிதல்வேண்டும் "தருதுயரம் தடாயேல் உன் சரண் அல்லால் சரண் இல்லை"[7] என்று குலசேகரப் பெருமாள் அருளியுள்ளதைக் காண்க.

4. நீர் இன்றி அமையாது உலகம்; அப்படியே எம்பெருமான் இல்லாமல் ஒரு செயலும் நடவாது. ஒருவன் விரும்பியதை மற்றொருவன் விரும்பாவண்ணம் உலகம் வெவ்வேறு விருப்பத்தையுடையதாக இருப்பினும் எல்லோரும் நீரை விரும்பியே ஆகவேண்டும். அதுபோலவே, எம்பெருமானையும் யாவரும் பற்றியேயாக வேண்டும்.

5. நீர் சிறிது துவாரம் இருப்பினும் உள்புகுந்து விடும். எம்பெருமானும் ஏதாவது ஒரு சிறு காரணத்தைப் பற்றாசாகக் கொண்டு நம்மை ஆட்கொள்ளுவான். "திருமாலிருஞ்சோலை மலை என்றேன்; என்னத் திருமால் வந்து என் நெஞ்சு நிறையப் புகுந்தான்"[8]

6. யாதொரு வேற்றுமையுமின்றி எல்லோரும் ஒரு துறையிலே படித்து குடைந்தாடலாம்படி இருப்பது நீர். எம்பெருமானும் பெரியார் சிறியார் என்னும் வேற்றுமையின்றி எல்லோரும் அடையத்தக்கவனாக இருப்பவன்.

*6. முமுட்சு-127.* *7. பெரு. திரு-5:1*
*8. திருவாய் - 10.8:1*

இங்ஙனம் பல உவமைப் பொருத்தங்களைக் காணலாம்.[9] இத்தலத்து எம்பெருமானையும் திருமங்கையாழ்வார் மட்டிலுமே "*நீரகத்தாய்*"[10] என்று ஒரே சொல்லால் மங்காளாசாசனம் செய்துள்ளார். கிழக்கே திருமுக மண்டலங்கொண்டு நின்ற திருக்கோலத்தில் **நிலமங்கைவல்லித்** தாயாருடன் காட்சிதரும் **ஜகதீசப் பெருமானைச்** சேவிக்கின்றோம்.

"ஆலத் திலைசேர்ந்(து) அழிஉலகை உட்புகுந்த
காலத்தில் எவ்வகைநீ காட்டினாய் - ஞாலத்துள்
நீர்அகத்தாய்! நின்னடியேன் நெஞ்சகத்தாய் நீள்மறையின்
வேர்அகத்தாய்! வேதியற்கு மீண்டு';[11]

(ஆலத்து இலை-ஆல் இலை; அழி உலகு-அழித்து போன உலகம்; உட்புகுந்த காலத்தில் - உன் திருவயிற்றில் புகுந்த காலத்தில்; ஞாலம்-உலகம்; நீள் மறை - நீண்ட வேதம்; வேதியற்கு-மார்க்கண்டேய முனிவனுக்கு)

என்ற திவ்வியகவியின் பாசுரத்தையும் ஓதி உள்ளம் நெகிழ்கின்றோம். என்றும் பதினாறாக நீண்ட ஆயுள் பெற்ற மார்க்கண்டேய முனிவன் பத்திர நதிக்கரையில் தவம் புரிந்துப் பிரளயக் காட்சியைக் காணுமாறு நர நாராயணர்களால் அநுக்கிரகிக்கப் பெற்றான். மாயவன் மாயையால் பிரளயம் தோன்றியது. அப்பிரளயப் பெருங்கடலில் பலவாறு வருந்திய அம் முனிவனுக்கு அவ்வெள்ளத்தில் ஆலிலையின்மீது ஒரு குழந்தை வடிவமாய் அறிதுயிலில் அமர்ந்த நிலையில் காட்சியளித்தான் எம்பெருமான். இந்த வரலாற்றை நினைவிற் கொண்டு அய்யங்கார் அவர்கள் "நீ முன்பே அழிந்த உலகங்களையும் நிலைத்திணை இயங்குதிணைகளையும் உன் திருவயிற்றிற் காட்டியது என்ன ஆச்சரியம்?" என்று எம்பெருமானின் திவ்விய குணத்தில் ஆழங்கால் படுகின்றோம். இந்த நிலையில் அடுத்த சந்நிதியாகிய திருக்காரகத்திற்கு வருகின்றோம்.

***திருக்காரகம்:*** இது தாயார் சந்நிதிக்கு எதிரில் உள்ளது. மேகத்தின் தன்மைகள் போன்றவற்றைக் கொண்ட திருக்குணங்கள் நிறைந்த எம்பெருமான் கோயில் கொண்ட தல

9. மேலும் அறிய விரும்புவோர் *திவ்யார்த்த தீபிகை-திருநெடுந் -8* (உரை காண்க.)
10. *திருநெடுந் - 8*    11. *நூற் . திருப். அந்-79.*

மாதல்பற்றி இதற்குக் *'காரகம்'* என்ற திருநாமம் பெற்றதாகக் கூறுவர் பெரியோர். ஆகவே, மேகத்திற்கும் எம்பெருமானுக்கும் உள்ள சில பொதுத் தன்மைகளைச் சிந்திக்கின்றோம்.

1. மின்னலுள்ள பொழுது மேகத்தில் நீர் நிரம்பியிருக்கும்; எம்பெருமானுக்கும் பிராட்டியுடன் கூடியிருக்கும் காலத்தில் கருணைவெள்ளம் விஞ்சியிருக்கும். "இவன் சந்நிதியாலே காகம் தலை பெற்றது; அது இல்லாமையால் இராவணன் முடிந்தான்"[12] என்ற முமுட்சுப்படி வாசகம் காண்க.

2. பெய்யாத காலத்தில் வறப்பது மேகம்; எம்பெருமானும் திரௌபதிக்கு ஆபத்தில் அருகேயிருந்து உதவப்பெறாமைக்காக நெஞ்சுலர்ந்து பேசினான்.

3. "எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்"[13] என்றவாறு பயிர்கள் வேறு புகலற்று எதிர்பார்க்கப் பெற்றிருப்பது மேகம். அங்ஙனமே எம்பெருமானும் "களைவாய் துன்பம்; களையாது"[14] என்று வேறு புகலிடம் இல்லாதவர்களால் எதிர்பார்க்கப் பெறுபவனாக இருப்பான்.

4. மேகம் பெய்யும் காலத்தை அறுதியிடவல்லார் எவரும் இலர். பெய்யவேண்டிய காலத்தில் பெய்யா தொழியும்; பெய்வதற்குச் சந்தர்ப்பம் இல்லாத காலத்தில் பெய்யவும் கூடும். எம்பெருமானும் அப்படியே "வந்தாய் போல வாராதாய்; வாராதாய்போல் வருவானே."[15] திரௌபதிக்கு ஆபத்திலே வந்து முகங்காட்டா தொழிந்தான். எதிர்பாராத நிலையில் "தாவியன்று லகம் எல்லாம் தலைவிளாக் கொண்டான்."

5. மேகம் தூதுவிடப்பெறும் பொருளாக அமையும். எம்பெருமானும் "இன்னார் தூதன் என நின்றான்."[16]

6. மேகம் மாரிகாலத்தில் இடி முழக்கிப் பெய்யாதும் போய்விடும்; பெய்யுங்காலத்தில் ஆடம்பரமின்றிப் பெய்யும். எம்பெருமானும் குசேலனுக்கு அருள்புரிந்தது இங்ஙனமே அன்றோ?

*12. முமுட்சு- 135.* *13. பெரு. திரு.5:7*
*14. திருவாய் 5.8:8* *15. மேலது - 6.10:9*
*16. பெரி. திரு- 2.2:3*

இங்ஙனம் பல ஒற்றுமைகளைக் கண்டு மகிழலாம்.[17] இச்சந்நிதி எம்பெருமானைத் திருமங்கை மன்னன் மட்டிலுமே "உலகம் ஏத்தும் காரகத்தாய்!"[18] என்று மூன்று சொற்கள் கொண்ட ஒரே தொடரால் மங்களா சாசனம் செய்துள்ளார். தெற்கு நோக்கிய திருமுக மண்டலங் கொண்டு நின்ற திருக்கோலத்தில் ***பத்மா மணி நாச்சியாருடன்*** சேவை சாதிக்கும் ***கருணாகரப் பெருமாளை*** வணங்குகின்றோம். இந்த நிலையில் திவ்விய கவியின் பாசுரம் நம் சிந்தையில் எழுகின்றது.

"ஓராதார் 'கல்வி உடையேம்; குலம்உடையேம்;
ஆரா தனமுடையேம்; யாம் என்று-சீர்ஆயன்
பூங்கா ரகம்காணப் போதுவார் தாள்தலைமேல்
தாங்கார் அகங்காரத் தால்"[19]

*(ஓராதார்-ஆராயாதவர்; ஆராதனம்-இறைவனுக்குப் படைத்தல்; ஆயன் - கண்ணன்; பூ காரகம்-அழகிய காரகம்; போதுவார்-வருவார்; தாள்-திருவடி)*

என்ற பாசுரத்தை ஓதுகின்றோம். இங்ஙனம் ஓதுங்கால் "வஞ்ச முக்கறும்புகள்" 'நம்மேல் என்றும் தலைக்காட்டலாகாது' என்று எண்ணியவண்ணம் எம்பெருமானை வழிபடுகின்றோம். அடுத்து, அடுத்த சந்நிதியை நாடி வருகின்றோம்.

**திருக்கார்வானம்:** இந்தச் சந்நிதி உலகளந்த பெருமாள் திருக்கோயிலின் நுழைவாயிலைக் கடந்தவுடன் வலப்புறமாக வெளிப் பிராகாரத்தில் அமைந்துள்ளது. மேகத்தின் தன்மைகள் யாவும் இத்தலத்து எம்பெருமானிடத்தும் அநுசந்திக்கத் தக்கவையாக இருக்கும். இந்த எம்பெருமானைத் திருமங்கை யாழ்வார் மட்டிலும் "கார்வானத்து உள்ளாய்!"[20] என்ற சொற்றொடரால் மங்களாசாசனம் செய்துள்ளார். நின்ற திருக்கோலத்தில் மேற்கே திருமுக மண்டலங்கொண்டு ***கமலவல்லி நாச்சியாருடன்*** சேவை சாதிக்கும் ***கள்வன்*** எம்பெருமானை வணங்குகின்றோம்.

" 'தாலேலோ' என்று ஆய்ச்சி தாலாட்டித் தன்முலைப்பா
லாலே எவ்வாறு பசியாற்றினாள்?-மாலே! பூங்
கார்வானத்து உள்ளாய்! கடலோடும் வெற்போடும்
பார்வானம் உண்டாய்நீ பண்டு."[21]

*17. விரிவினை 'திவ்வியார்த் தீபிகை'-திருநெடுந்-8 (உரை காண்க.)*
*18. திருநெடுந்-8.* *19. நூற். திருப். அந்-83.*
*20. திருநெடுந்-8.* *21. நூற். திருப். அந்-84.*

(பசி ஆற்றுதல்-பசி தணித்தல்; வெற்பு-மலை; பார்-பூமி; வானம்-ஆகாயம்; பண்டு -முற்காலத்தில் (பிரளய காலத்தில்)

என்ற திவ்விய கவியின் பாசுரத்தையும் ஓதி உளங்கரை கின்றோம். உலகம் உண்ட பெருவயிற்றுக்கு ஆய்ச்சியின் முலைப்பால் எங்ஙனம் பசி தணித்ததோ? என்று கவிஞருடன் சேர்ந்து நாமும் வியப்புக் கடலில் ஆழ்கின்றோம். "உன்னுடைய மாயை இருந்தவாறு என்? 'கள்வன்' என்ற பெயர் உனக்குத்தான் தகும்!" என்று எண்ணுகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் பாசுரத்திற்கு மூலம்போல் தோன்றும் பொய்கையாழ் வாரின் பரசுரமும் நம் உள்ளத்தில் குமிழியிடத் தொடங்குகின்றது.

"வான்ஆகித் தீஆய் மறிகடல்ஆய் மாருதம்ஆய்
தேன்ஆகிப் பால்ஆம் திருமாலே! - ஆன் ஆய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே முன்னொருநாள்
மண்ணை உமிழ்ந்த வயிறு"[22]

(மறிகடல்-அலையெறிகின்ற கடல்; மாருதம்-காற்று; ஆன் ஆய்ச்சி - யசோதை)

என்ற பாசுரத்தையும் அநுசந்திக்கின்றோம். " 'ஞானக்கனி' போன்ற பரம போக்கியனான உன்னை ஞானியர் உட்கொள்ளக் கருதா நிற்க. நீ வேறொரு பொருளை போக்கியமாக நினைத்து உட்கொள்ளுவது என்னோ?" என்ற ஆழ்வாரின் குறிப் பினையும் சிந்திக்கின்றோம். "அவ்வச் சாதிகளிலே அவதரித்து அதிலுள்ளாருடைய தாரகமே தனக்குத் தாரகமாயிரக்கிறபடி. ஸ்ரீ வராகம் ஆனான் ஆகில் கோரைக்கிழங்கு தாரகமாம்; இடை யனாகில் வெண்ணெய் தாரகமாயிருக்கிறபடி," "பிரளயம் கொள்ளாதபடி வயிற்றிலே வைத்து வெளிநாடு காணப் புறம்பே யுமிழ்ந்து ரட்சித்த வயிறு இத்தனை வெண்ணெயாலே நிறைக்க வேண்டியிருந்ததோ?" என்ற இப்பாசுரத்தின் வியாக்கியான வாக்கியங்களும் நம் சிந்தையில் எழுகின்றன. இவற்றை அநுபவித்தவண்ணம் அடுத்த சந்நிதிக்குச் செல்லுகின்றோம்.

**திருஊரகம்:** ஒரு பெரிய திருமாளிகையின் சுற்றுப்புறத்தில் உள்ள சிறிய இல்லங்களில் வாடகைக்குக் குடியிருப்பவர்களைப் போல் திருக்கோயில் கொண்டு இருக்கும் மூன்று எம்பெருமான்களைச் சேவித்த நாம் திருமாளிகைக்கு

22. முதல். திருவந்-92

உரியவரான பெருமானைச் சேவிக்க வருகின்றோம். இந்த எம்பெருமானைப் பேயாழ்வார்.[23] திருமழிசையாழ்வார்,[24] நம்மாழ்வார்,[25] திருமங்கையாழ்வார்[26] ஆகிய நான்கு ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர். எம்பெருமான் இங்கு உரக வடிவத்திலும் (உரகம்-பாம்பு) சேவை சாதிப்பதால் இத்தலத்திற்கு 'ஊரகம்' என்ற திருநாமம் ஏற்பட்டதோ என்று சிந்தித்த வண்ணம் சந்நிதியில் நுழைகின்றோம். கருவறைக்கு முன்பதாக இடப் புறத்தில் சுவரில் உரக வடிவாகவுள்ள மூர்த்தியை முதலில் சேவிக்கின்றோம். இவரைத்தான் திருமங்கையாழ்வார் "நிறைந்த கச்சி ஊரகத்தாய்"[27] என்றும், "காமருபூம் கட்சி ஊரகத்தாய்'[28] என்றும், "ஊரான்"[29] என்றும் மங்களாசாசனம் செய்தருளி யுள்ளனரோ என்று சிந்திக்கின்றோம். இந்த மூர்த்தியின் திருவபிடேகம் மிகவும் முக்கியமானது. "ஊரகத்தான் திருமஞ்சனப் பிரார்த்தனை" பக்த கோடிகள் நன்கு அறிந்த நிகழ்ச்சி. இந்த எம்பெருமான் 'வரந்தரு வள்ளல்' என்பதை அவர்கள் நன்கு அறிவர். இவருக்கு இனிப்புப் பண்டங்களை நிவேதனம் செய்தல் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

அடுத்து, கருவறையில் திரிவிக்கிரம் வடிவில் காட்சி தரும் உலகளந்த பெருமாளைச் சேவிக்கின்றோம். இவர் மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். இவர் அருளும் சேவை மிகவும் அற்புதமானது. இவ்வளவு உயரமான திருமேனி எந்தத் திவ்விய தேசத்திலும் இல்லை. தீவட்டி வைத்துக்கொண்டுதான் திருமார்பு, திருமுகம், திருஅபிடேகம் முதலியவற்றைக் காண்டல் வேண்டும். இந்தத் திருமேனியை நினைந்தே நம்மாழ்வார்,

> "நின்றஆறும் இருந்தஆறும்
> கிடந்தஆறும் நினைப்புஅரியன்"[30]

என்று மங்களாசாசனம் செய்திருத்தல் வேண்டும். 'நின்ற ஆறு' அவரை பிரம்மிக்கச் செய்திருத்தல் வேண்டும். அல்லது

*23. மூன். திருவந்-64. 24. திருச். விருத்-63. 25. திருவாய் - 5.10:6.*
*26. பெரி.திரு -1.5:4; திருநெடுந்- 8,13; சிறிய திருமடல் -கண்ணி 70; பெரிய திருமடல் கண்ணி 128.*
*27. திருநெடுந் - 8. 28. மேலது - 13. 29. பெரி. திரு.-1.5:4.*
*30. திருவாய் - 5-10:6.*

மாவலியை அடக்குவதற்கு எம்பெருமான் திரிவிக்கிரமனாக வளர்ந்த நிலையை மனக்கண்ணால் கண்டு இங்ஙனம் கூறியதாகவும் கொள்ளலாம். திருமழிசையாழ்வாரின்,

"நன்றி ருந்து யோகநீதி
நண்ணு வார்கள் சிந்தையுள்
சென்றி ருந்து தீவினைகள்
தீர்த்த தேவ தேவனே
குன்றி ருந்த மாடநீடு
பாடகத்தும் ஊரகத்தும்
நின்றி ருந்து வெஃகணைக்
கிடந்த தென்ன நீர்மையே."[31]

*(நன்று இருந்து-யோகப் பயிற்சிக்கு உரிய ஆசனத்தில் அமர்ந்து; சென்று இருந்து - நுழைந்து இருந்து; குன்று இருந்த-மிக உயர்ந்த; நீடுமாடம்-உயர்ந்த மாளிகைகள்; நீர்மை - தன்மை)*

என்ற பாசுரத்தை ஓதி எம்பெருமானைச் சேவிக்கின்றோம்.

திரவிக்கிரம் சேவை கற்பனையில் நம்மை அந்த அவதாரம் எடுத்த காலத்திற்கே கொண்டு செலுத்தி விடுகின்றது. நம்மை மறந்த நிலையில் அந்த மூர்த்தியின் திருமேனி அழகில் ஈடுபடுகின்றோம். அந்த அவதாரத் திருமேனி அழகில் திருமங்கையாழ்வார் ஆழங்கால் பட்டுப் பாடியருளிய பாசுரம் நம் சிந்தையில் குமிழியிட்டெழுகின்றது.

"ஒண்மிதியில் புனல்உருவி ஒருகால் நிற்ப
ஒருகாலும் காமருசீர் அவுணன் உள்ளத்து
எண்மதியும் கடந்துஅண்டம் மீது போகி
இருவிசும்பி னூடுபோய் எழுந்து மேலைத்
தண்மதியும் கதிரவனும் தவிர ஓடி
தாரகையின் புறந்தடவி அப்பால் மிக்கு
மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை
மலர்புரையும் திருவடியே வணங்கி னேனே."[32]

*(ஒண்மிதி-ஓரடியில்; புனல்-ஆவரணநீர்; கால்-திருவடி; ஒருகாலும்-மற்றொரு திருவடி; அவுணன்-மாவலி; விசும்பு-ஆகாயம்; தவிர ஓடி-கடந்து சென்று; தாரகை - நட்சத்திர மண்டலம்; மலர்புரையும்-தாமரை மலரை ஒத்த)*

31. திருச். விருத்-63.
32. திருநெடுந் -5.

என்ற பாசுரத்தை மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரை கின்றோம்.

பாசுரத்தின் சில சொற்களின் நயந்தில் நம் அறிவு ஈடுபடுகின்றது. எம்பெருமானின் திருப்பாதங்களைத் 'திருவடி' என்று பெருமையாகச் சிறப்பித்துப் பேசாது பாசுரத்தின் முதல் அடியில் அவற்றைக் 'கால்' என்று குறிப்பிட்டதற்குக் காரணமென்ன என்று ஆராய்கின்றது. இதற்குப் பிரதிவாதி பயங்கரத்தின் உரை கைகொடுத்து உதவுகின்றது. ''ஆழ்வார் இங்குக் 'கால்' என்றது வெறுமனன்று; ஒரு கருத்துத் தோன்றவே இப்படி அருளிச் செய்தது; அதாவது சம்சாரிகளின் அபிப்பிராயத்தாலே சொல்லுகிறபடி; உலகளந்த காலத்தில் திருவடி எல்லார் தலையிலும் பட்டபோது சம்சாரிகள் 'ஒருவருடைய கால் நம் தலையில் பட்டதே' என்று வெறுத்திருந்த தத்தனையொழிய 'கோலமாம் என் சொன்னிக்கு உன் கமலம் அன்ன குரைகழலே' (திருவாய் மொழி 4.3:6) என்றாற்போலே உகந்து கொண்டார்களில்லையே; அன்னவரது கருத்தாலே 'கால்' என்றது,''[33] என்ற விளக்கம் நம் உள்ளத்தைக் கவர்கின்றது.

''காமருசீர் அவுணன் உள்ளத்து எண் மதியும் கடந்து'' என்ற சொற்றொடரின் நயத்தினையும் சிந்திக்கின்றோம். அழகெலாம் திரண்டுருண்ட வாமனன் 'மூவடி நிலம் தா' என்று கேட்டான். மாவலியோ, 'மூவடி நிலந்தானே இவன் கேட்பது? அதைக்கொடுப்போம்; அது தவிர மற்ற நிலம் எல்லாம் நம்முடையது தானே' என்று நினைத்துக் கொண்டிருந்தான். மூவடி மண்ணை இரந்து பெற்ற வாமனன் நிலவுலகம் முழுவதையும் ஒரே அடியால் அளந்து தள்ளிவிட்டான். ஆயினும் சலியாத மாவலி 'பூமி போயினும் மேலுலகம் நம்முடையது தானே' என்று எண்ணிக் கொண்டிருந்தான். மேலுலகத்தையும் மற்றொரு திருவடியால் அளந்து தள்ளிய வுடன், 'எண் திசையும் கீழும் மேலும் முற்றவும் இழந்தோமே!' என்று வருந்தினான். இதுவே 'அவுணன் உள்ளத்து எண் மதியும் கடந்து' என்ற தொடரின் கருத்தாகும்.

அறிஞர்கள் யாவரும் மாவலியை அகங்காரி என்றும் பகவத் விபூதியைக் கொள்ளை கொண்டவன் என்றும் கடிந்து கூற

33. திவ்வியார்த்த தீபிகை- திருநெடுந். 5 (உரை காண்க.)

ஆழ்வார் 'காமருசீர் அவுணன்' என்று புகழ்ந்து கூறியதன் கருத்துதான் யாது என்பதைச் சிந்திக்கின்றோம். வாமன-திரிவிக்கிரம அவதாரங்கட்குப் பிற்பட்டு வாழ்ந்த, வாழும் நம்மைப் போன்றவன் அல்லன் மாவலி. வாமன வடிவத்தின் பேரழகையும் சீலத்தையும் ஊனக்கண்ணாலே காணப்பெற்ற பெரும் பேறு உடையவன் அவன். ஆகவே, அப்பேற்றினைத் திருவுளங்கொண்டு அருளிச் செய்தது இது. ஆழ்வார் கருத்தினைச் சிறிதும் குறையாது அறிந்த வியாக்கியாதா கூறுவதைக் காண்போம்: "நானும் அடியேன் என்கிறதை விட்டு பகவத் விபூதியை அபஹரித்து ஔதார்யத்தை ஏறிட்டுக்கொண்டு யஜ்ஞத்திலே இழியப்பெற்றிலேனே என்கிறார்," என்பதில் அவ்வமானத் திருவுருவத்தைக்காணும் பேறு பெறாத ஆழ்வாரின் ஏக்கத்தைக் காண்கின்றோம்.

இப்பாசுரத்தில் "இருவிசும்பினூடுபோய்" என்பதே போதுமாயிருக்க, "அண்டமீது போகி.....எழுந்து" என்று விதந்து கூறியன் கருத்தையும் சிந்திக்கின்றோம். அதற்கு உரையாசிரிய மன்னன் **பெரிய வாச்சான்பிள்ளை** கூறும் விளக்கம் இது: "ஸ்ரீ வாமனனுடைய விஜயத்தில் தமக்குண்டான ஆதராதிசயத்தாலே (மிக்க அன்பாலே) அளக்கும் பிரதேசத்துக்குக் கொண்டைக்கோல்[34] நாட்டுகிறார்". 'பாம்பின் கால் பாம்பறியும்' என்ற உண்மையை இவ்வுரையில் கண்டு மகிழ்கின்றோம்.

கதிரவ மண்டலம் கடந்தபின் சந்திர மண்டலம் என்ற நியதி (புராணநியதி?) இருக்க இங்குத் "தண்மதியும் கதிரவனும்" என்று சந்திர மண்டலத்தை முந்துறப் பகர்ந்ததன் காரணத்தையும் விளக்குகின்றார் அந்த உரையாசிரியர்: "அஹங்காரிகளாய் மிகவும் விமுகராய்(பராமுகர்களாய்) இருக்கும் சம்சாரிகளின் தலையிலே ஸௌகுமாரமான (மென்மையான) திருவடியை வைக்கையாலே அத்திருவடிக்குண்டான வெப்பந்தீர சைத்தியோபசாரம் (குளிர்ச்சி அளிக்கும் பணிவிடை) பண்ணவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி முந்துறச் சந்திர மண்டலத்தைப் பேசுகின்றர்" என்று சுவைபடக் கூறுவது நம் உள்ளத்தைக் கவருகின்றது.

34. கொண்டைக் கோல்-பெரு வெள்ளத்தில் நிலம் அறிவதற்கு நிலவர்கள் நாட்டும் கோலுக்கு இப்பெயர். இச்சொல் 'ஈட்டிலும்' பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானங்களிலும் அதிகமாகப் பயின்று வருவது.

திருமங்கையாழ்வார் வாமன-திரிவிக்கிரம அவதாரத்தை மிக அழகாகக் கூறும் பெரிய திருமடல் பகுதியையும் நன்குச் சிந்திக்கின்றோம்.

''தன்உருவம் ஆரும் அறியாமல் தான்அங்குஓர்
மன்னும் குறள் உருவில் மாணியாய்-மாவலிதன்
பொன் இயலும் வேள்விக்கண் புக்கிருந்து போர் வேந்தர்
மன்னை மனங்கொள்ள வஞ்சித்து-நெஞ்சுருக்கி
'என்னுடைய பாதத்தால் யான் அளப்ப மூவடிமண்
மன்னா! தருக' என்று வாய்திறப்ப-மற்றவனும்
'என்னால் தரப்பட்டது' என்றலுமே அத்துணைக்கண்
மின்னார் மணிமுடிபோய் விண்தடவ-மேல்எடுத்த
பொன்னார் கனைகழல்கால் ஏழுலகும் போய்க்கடந்தங்கு
ஒன்றா அசுரர் துளங்க-செலநீட்டி
மன்னிவ் அகலிடத்தை மாவலியை வஞ்சித்துத்
தன்னுலகம் ஆக்குவித்த தாளானை''[35]

(குறன் உரு-வாமனன்; மாணி-பிரமச்சாரி; பொன் இயலும்-தங்க தானம் செய்யும்படியான; போர் வேந்தர் மன்னன்-மாவலி; வஞ்சித்து-மயக்கி; வாய்திறப்ப - வாய் திறந்து கேட்க; அத்துணைக் கண்-அந்தக் கணத்தில்; விண்தடவ -ஆகாயத்தை அளாவ; கனைகழல்கால்-வீரத்தண்டை அணிந்த திருவடி; துளங்க-துன்பப்படும் படி; மன்னும்-நிலை பெற்ற; தாளானை - திருவடிகளையுடையவனாய்)

என்ற பாடற்பகுதியிலுள்ள வருணனையை நினைந்து வியப்பும் வெகுட்சியும் ஒருங்கே தோன்ற அதில் பெரிதும் ஈடுபட்டு நிற்கின்றோம். திரைப்படத்தில் ஊனக் கண்ணால் காணும் காட்சியில் மனம் ஈடுபடுவதுபோல் மனக்கண்ணால் காணும் இக்காட்சியில் மனம் ஆழங்கால் பட்டு நிற்கின்றது.

இந்தச் சந்நிதியில் தீர்த்தமும் திருத்துழாயும் பெற்று, சடகோபம் சாதிக்கப்பெற்றுத் தெளிவுபெற்ற நிலையில் திவ்வியகவி ***பிள்ளைப்பெருமாள் அய்யங்காரின்*** பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

''நேசத்தால் அன்றுஉலகை நீர்வார்க்க வைத்துஅளந்த
வாசத்தாள் என்தலைமேல் வைத்திலையேல்-நாசத்தால்
பாரகத்துள் அன்றியான் பாழ்நரகில் வீழ்ந்துஎன்கொல்?
ஊரகத்துள் நின்றாய் உரை.''[36]

35. பெரி. திருமடல் - கண்ணி (107-113)
36. நூற். திருப். அந்.- 81.

(நேசத்தால்-கருணையினால்; அன்று-முன்னாளில்; வாசத்தாள் - நறுமண முடைய திருவடி (மெய்யாடியார் அருச்சித்த திருத்துழாய் முதலியவற்றின் சம்பந்தத்தால் மணம் வீசும்); நாசத்தால்-நாசமடைந்து; வீழ்ந்து என் கொல்-வீழ்ந்தால்தான் என்ன; உரை - கூறுவாய்)

என்ற பாசுரத்தை ஓதி உளங்கரைகின்றோம். அய்யங்கார் நிலையில் நாமே இருந்து எம்பெருமானை வினவுவது போன்ற உணர்ச்சியுடன் திருக்கோயிலினின்றும் வெளிவருகின்றோம்.

பிராகாரத்தில் ஓரிடத்தில் மனஅமைதியுடன் அமருகின்றோம். திருக்கோயில் அலுவலர் ஒருவருடன் உரையாடுகின்றோம்; சில செய்திகளையும் அறிகின்றோம். ஆண்டுதோறும் பெரிய திருவிழா தைத் தினங்களில் (சனவரி-பிப்பிரவரி) நடைபெறுகின்றது. வைகுண்ட ஏகாதசியன்று முற்பகல் திருப்பாடகம், திருப்பவள வண்ணம், பச்சை வண்ணம், ஊரகம், பரமேச்சுர விண்ணகரம், திருத்தண்கா ஆகிய தலத்து எம்பெருமான்கள் யாவரும் பெரியதிருவடியின்மீது இவர்ந்து நான்கு இராஜவீதிகளிலும் உலாவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஆயிரக்கணக்கான மெய்யடியார்களும் ஊர்ப்பெருமக்களும் வேற்றூர் வாசிகளும் கங்கைகொண்டான் மண்டபத்தருகே கருடசேவைக்காகக் காத்திருக்கும் காட்சி அற்புதமாக இருக்கும்.

உலகளந்த பெருமாள் கோயில் மிகப்பழமையானது. பெருமையுடையது. ஆயினும், கவர்ச்சிகரமான சித்திர வேலைப்பாடுகளும் அற்புதமான சிற்பக்கலை நுட்பங்களும் அமைந்த திருக்கோயில் அன்று இது. என்றாலும், கருவறைக்கு மேலுள்ள விமானம் மிகவும் கவர்ச்சிகரமானது என்றே சொல்ல வேண்டும். இந்தச்செய்திகளை அறிந்தவண்ணம் மனநிறைவு பெற்ற நிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

❖ ❖ ❖

# 5. வைகுண்டப் பெருமாள்

ஈசுவரன் உயிர்களைக் காக்குங்கால் கருணையே வடிவாகவுடைய பெரிய பிராட்டியாரின் கூட்டுறவு மிகவும் இன்றியமையாதது என்பது வைணவ தத்துவம்.

"(ஈசுவரன்) ரட்சிக்கும்போது பிராட்டி
சந்நிதி வேண்டுகையாலே, இதிலே
ஸ்ரீ சம்பந்தமும் அ... சந்தேயம்"[1]

என்ற முமுட்சுப்படி வாக்கியத்தால் இதனை அறியலாம். ஆகவே, பிராட்டியுடன் இருக்கும் ஸ்ரீமந்நாராயணனையே சரணம் அடையவேண்டும் என்பது வைணவ சம்பிரதாயமாக வழங்கிவருகின்றது. ஆழ்வார்களுள் சிறந்தவரான நம்மாழ்வார் இதனைக் கருதிதான் " 'அகல கில்லேன் இறையும்' என்று அலர்மேல்மங்கை உறைமார் பன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தார்"[2] என்று அறிகின்றோம். ஈசுவரன் சேதநரைக் காக்குங்கால் சேதநரின் அளவற்ற குற்றங்களைக் கண்டோ, அல்லது தனது சுவாதந்தரியத்தாலோ அவர்களைப் புறக்கணிக்கவும் கூடும். அவ்வமயம் ஈசுவரனுக்குச் சேதநரிடம் கருணை பிறக்குமாறு வேண்டியதை வேண்டியாங்குச் சொல்லிப் 'புருஷகாரம்'[3] செய்யும் பிராட்டியார் அருகில் இருந்தே ஆகவேண்டும். அப்போதுதான் எம்பெருமான் தடையின்றிக் காத்தல் தொழிலை மேற்கொள்வான்.

கணவருக்குத் தொண்டு பூண்டொழுகும் தம் இயல்பிற் கேற்ப, அவரை மகிழ்வித்தற் பொருட்டு அவர் படுக்கையையும், குழந்தையைக் காக்கும் தம் இயல்பிற்கேற்ப அம்மகவின் தொட்டிலையும் விடாது பற்றி நிற்கும் தாயாரைப் போன்று இருப்பது பெரிய பிராட்டியாரின் நிலை.

1. முமுட்சு - 40. 2. திருவாய் - 6.10:10.
3. புருஷகாரம் - தகவுரை; ஒருவரை மற்றொருவர் ஏற்றுக்கொள்ளுமாறு செய்யும் செயல்.

"ஸ்ரீ நந்தகோபரையும் கிருஷ்ணனையும்
விடாத யசோதரைப் பிராட்டியைப் போலே."[4]

என்பது முமுட்சுப்படி வாக்கியம். யசோதைப் பிராட்டியார், மனைவியார் என்னும் தம் நிலைக்கேற்ப, கணவன் இன்புறுத்தற்கு நந்தகோபரையும், தாயார் என்னும் தம் நிலைக்கேற்ப புதல்வனைக் காத்தற்குக் கண்ணனையும் விடாமல் எங்ஙனம் தக்கமுறையில் பரிபாலித்து வந்தனரோ, அங்ஙனமே பிராட்டியாரும் ஈசுவரனையும் சேதநரையும் பற்றிக்கொண்டு செயலாற்றுவர் என்பதனை நாம் அறிதல் வேண்டும். சீவகோடிகளின் அன்னை அன்றோ எம்பிராட்டி?

இங்ஙனம் ஒருபக்கம் சேதநரையும், மற்றொருபக்கம் எம்பெருமானையும் திருத்துவதில் எந்த முறையை மேற்கொள்வார் பிராட்டி?

"இருவரையும் திருத்துவது
உபதேசத்தாலே"[5]

என்று கூறுகின்றது ஸ்ரீவசனபூஷணம்.

முதலில் இறைவனை இவள் திருத்தும் முறையினைச் சிந்திக்கின்றோம். "பிரானே, சேதநனுடைய குற்றங்களைக் கணக்கிட்டு அவனை ஆட்கொள்ளாமல் நீர் இப்படித் தள்ளிக் கதவு அடைத்தால் இவனுக்கு வேறு பற்றுக்கோடு எங்குள்ளது? உங்கட்கும் இவனுக்கும் உண்டான உறவுமுறையைப் பார்த்தால் 'உன்தன்னோடு, உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது'[6] என்று ஆண்டாள் கூறியபடியே குடநீர் வழித்தாலும் போகாதது ஒன்றல்லவா? உடைமையாக இருக்கின்ற இவனை அடைதல் 'சுவாமியான'[7] உம்முடைய பேறாக அன்றோ இருக்கவேண்டும்? 'எதிர் சூழல்புக்கு'த் திரிகின்ற உமக்கு நான் சொல்லவேண்டும் என்று உம்மிடம் விரும்பிவந்த இவனைக் காக்காவிடில் 'எல்லாப் பொருள்களையும் காப்பவர்' என்று மாலையிட்டுத் திரியும் உம்முடைய தன்மைக்கு இழுக்கு ஏற்படும் அல்லவா? 'அநாதிகாலமாக நம்முடைய ஆணையை மீறி

4. முமுட்சு - 43.
5. ஸ்ரீவச. பூஷ - 12 (புருடோத்தம நாயுடு பதிப்பு)
6. திருப் - 28
7. சுவாமி -சொம்மையுடையவன் சுவாமி; சொம் - சொத்து.
8. திருவாய் - 2.7:6

நம்முடைய சீற்றத்திற்கு இலக்கான இவனைக் குற்றங்கட்குத் தகுந்தவாறு தண்டிக்காமல் அவற்றைப் பொறுத்து அங்கீகரித்தால் சாத்திரங்களின் மரியாதை குலையாதோ?' என்றன்றோ உம்முடைய திருவுள்ளத்தில் ஓடுகின்றது? அங்ஙனமாயின், அவற்றைக் காப்பாற்றாமல் இவனுடைய குற்றங்களுக்குத் தகுதியாகத் தண்டனை விதித்தால் உம்முடைய கருணை முதலான குணங்கள் ஒளிபெறுவது யாங்ஙனம்? அத்திருக்குணங்கள் ஒளிபெறுவது இவனைக் காப்பாற்றிய பொழுதன்றோ? 'இவனைத் தண்டியாதபோது சாத்திரமரியாதை குலையும்; காப்பாற்றாதபோது கருணை முதலான குணங்கள் ஒளிபெறா; என் செய்வோம்?' என்று நீவிர் அச்சங்கொள்ள வேண்டியதில்லை. சாத்திரத்தை உம்மிடத்தில் பற்று இல்லாதவர்களிடம் பிரயோகித்து, கருணை முதலான குணங்களை உம்மீது பற்றுள்ளவர்களிடம் காட்டினால் இரண்டும் தலையெடுக்கும். எனவே, இவனைக் காத்தல் உம் கடன்'' என்று உபதேசிப்பாள்.

இரண்டாவதாகச் சேதநனை இவள் திருத்தும் முறையினைச் சிந்திக்கின்றோம். ''பிள்ளாய், உன் குற்றங்களின் மிகுதியைப் பார்த்தால், உனக்கு ஓரிடத்திலும் காலூன்ற இடம் இல்லை. ஈசுவரன் யாதொன்றாலும் தடைசெய்யப்பெறாத சுவாதந்திரியத்தை உடையவனாகையால், குற்றங்களைச் சரியாகக் கணக்கிட்டு உன்னை நுகர்விப்பவனாக்குவான் என்பது ஒருதலை. இக்கேட்டினின்றும் தப்பவேண்டும் என்று நீ விழைந்தால், அவன் திருவடியைப் பற்றுவதைத் தவிர வேறு வழி இல்லை. 'குற்றங்கள் மலிந்த என்னை அவன் அங்கீகரிப்பானோ, அல்லது தண்டிப்பானோ?' என்று அஞ்சவேண்டியதில்லை. அவன்மீது நீ பற்றுடையவனாக ஆனவுடனேயே உன்னுடைய குற்றங்கள் அனைத்தும் பொறுத்தருளும் குணங்களால் நிறைந்தவன் என்று உலகம் புகழும் ஒப்பற்ற பெருமான் அவன். எனவே, நீ உய்யவேண்டுமாகில் அவனை அடையப் பாராய்'' என்று மேலான நல்லுபதேசம் செய்வாள் எம்பிராட்டி.

பெரிய பிராட்டியாரின் இத்தன்மையை நினைந்தே ''ஈசுவர சுவாதந்தர்யத்தையும் சேதநனுடைய அபராதத்தையும் கண்டு அகலமாட்டாள்''[9] என்று குறிப்பிடுகின்றது முமுட்சுப்படி.

*9. முமுட்சு - 132*

கண்டிப்பு என்ற குணத்தையுடைய நாயகனையும் குறும்பு நிறைந்த மக்களையும் பெற்ற ஓர் இல்லத் தலைவி எங்ஙனம் அவர்களை விட்டுத் தான் தாய்வீடு செல்லமாட்டா ளோ, அங்ஙனம் குற்றத்திற்கேற்ற தண்டனை அளிப்பதில் ஊன்றி நிற்கும் கணவனையும் குற்றங்களையே செய்து கொண்டுபோகும் மக்களையும் பெற்ற பிராட்டியாரும் 'அகலகில்லேன் இறையும்' என்று எம்பெருமான் திருமார்பில் என்றும் உறைகின்றவளாக இருக்கின்றாள்.

பெண்மைக்கு இயல்பாக அமைந்த குணங்கள் அன்பும் அருளும். அன்பினால் பிராட்டியார் உலகத்தைத் தம்வசப்படுத்தி உயிர்களைத் திருத்தி அமைக்கின்றார். மற்றொரு குணமாகிய அருளால் உயிர்களை இறையிடம் கொண்டுபோய்ச் சேர்க்கின்றார். இவ்விரு பண்புகளாலும் பிராட்டியாருக்கு ஒரு தனி அழகு உண்டாகின்றது. அவ்வழகால் ஆண்மைத்தன்மை வாய்ந்த இறையைத் தம் வசப்படுத்துகின்றார். அவ்வழகில் ஈடுபட்ட இறைவன் இவர் சொற்படி நடக்க உடன்படுகின்றான். 'சீரிய குணங்கள் வாய்ந்த இப்பெண்மை நமக்கு நன்மையேயன்றித் தீமையைப் புரியாது' என்றும் நம்பிக்கை ஆண்மைக்கு உண்டாகின்றது. இதனால் ஆண்மை வாய்ந்த இறைவன் பெண்மை வாய்ந்த பிராட்டியாரின் கருத்தின்படிச் செயலாற்றுகின்றான். இவர், தம் அருளினால் இறைவனிடம் கொண்டுசெல்லும் சேதநர் (உயிர்கள்) யாவரும் பெறாப்பேறு பெற்று இன்பந்துய்க்கின்றனர். இவ்விடத்தில்,

> "உபதேசத்தாலே மீளாதபோது சேதநனை
> அருளாலே திருத்தும்; ஈசுவரனை அழகாலே திருத்தும்"[10]

என்னம் ஸ்ரீவசனபூஷண வாக்கியங்கள் நம் நினைவுக்கு வருகின்றன; அவற்றையும் சிந்திக்கின்றோம். இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் அலைபாய்ந்தவண்ணம் வைகுண்டப் பெருமாள் சந்நிதியை நோக்கி வருகின்றோம்.

வைகுண்டப் பெருமாளைத் திருமங்கையாழ்வார் மட்டிலு மே ஒரு பதிகத்தால்[11] மங்களாசாசனம் செய்துள்ளார். கோயிலின் எல்லையை நெருங்க நெருங்க ஆழ்வார் பாசுரங்கள் நம் சிந்தையில் குமிழியிட்டெழுகின்றன.

10. ஸ்ரீவச. பூஷ. - 14. 11. பெரி. திரு-2.9.

"சொல்லுவன் சொற்பொருள் தானவையாய்ச்
சுவைஊறுஒலி நாற்றமும் தோற்றமுமாய்
நல்லரன் நாரணன் நான்முகனுக்(கு)
இடம்தான் தடஞ்சூழ்ந் தழகாயகச்சி
பல்லவன் வில்லவன் என்றுலகில்
பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற்
பல்லவன் மல்லையர் கோன்பணிந்த
பரமேச்சுர விண்ணக ரமதுவே"[12]

(வன்சொல்-வேதம்; பணிந்த-அடிமை செய்த; பல்லவன், வில்லவன் என்போர் அரசர்கள்; மல்லையர் கோன்-கடல் மல்லையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன்)

என்பது முதற்பாசுரம். சாதாரண சொற்கள் கூட அச்சொற்கள் குறிக்கும் பொருள்களுள் அந்தராத்மாவாய் உறையும் எம்பெருமான் அளவும் சொல்லி நிற்கும் என்பது வேதாந்திகளின் கொள்கை. வேதங்கள் எம்பெருமானைப்பற்றி பேசுகின்றன என்பதை நாம் அறிவோம். ஞானேந்திரியங்களால் அநுபவிக்கப் பெறுபவன் எம்பெருமான். முத்தொழில்களையும் மூன்றுருக் கொண்டு நிர்வகிக்கின்றவன் இவன். இத்தகைய பெருமான் பல்லவமன்னனின் கையங்கரியம் பெற்று பரமேச்சுர விண்ண கரத்தில் எழுந்தருளியுள்ளான்.

அடுத்துவரும் பாசுரங்கள் ஒவ்வொன்றிலும் எம் பெருமானின் வீரச் செயல்களையும் வெற்றிச் செயல்களையும், அவன் அவதாரத்தில் மேற்கொண்ட அருஞ்செயல்களையும் சொல்லிச் சொல்லி அநுசந்திக்கின்றார். ஆழ்வார் "புவனங்கள் அனைத்தையும் நான்முகனைக் கொண்டு படைத்தவன் எம்பெருமான்" என்று வியஷ்டி சிருஷ்டியைப் பற்றிப் பேசுகின்றார்[13] இரண்டாம் பாசுரத்தில். இந்த எம்பெருமானே வைகுண்டப் பெருமாள் சந்நிதியில் எழுந்தருளியுள்ளான் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.

12. மேலது - 2.9:1

13. தத்துவத்திரயம் - ஈசுவரப் பிரகரணம் - சூத்திரம்-12 இல் கூறியுள்ள கருத்து இது. சிருஷ்டி இருவகைப்படும் : சமஷ்ட்டி சிருஷ்டி, வியஷ்டி சிருஷ்டி என. சமஷ்டி சிருஷ்டி - மூலப்படைப்பு (Primary creation) ; நான்முகனை நாராயணன் படைப்பது இது. வியஷ்டி சிருஷ்டி - முற்றிலுமான படைப்பு (Secondary creation); நான்முகன் தொடக்கமானவர்களைக் கொண்டு எல்லாவற்றையும் படைப்பித்தலாகிய செயல் இது. இவற்றின் விரிவான செய்திகள் வைணவ ஆகமங்களில் கூறப்பெறும்.

திருப்பாற்கடலில் அழகெல்லாம் திரண்ட கோலத்துடன் திருவனந்தாழ்வான்மீது பள்ளிகொண்டு திருக்கண் வளர்ந்த வனும் திருவத்திமாமலையில் வரந்தருமா மணிவண்ணனாய் - வரதராசனாய் - எழுந்தருளியிருப்பவனுமான எம்பெருமானே பரமேச்சுர விண்ணகரத்தில் வைகுண்ட நாதனாகக் காட்சி தருகின்றான் என்று கூறுவதில் எம்பெருமானின் வியூக அர்ச்சைத் திருமேனிகள் பேசப்பெறுகின்றன.[14] இப்பாசுரத்தில் ''வரந்தரு மாமணி வண்ணன்'' என்ற சொற்றொடர் அத்திகிரி அருளாளனைக் குறிப்பதாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள். ஆகவே, இப்பாசுரம் கச்சித்திருப்பதியாரால் இரட்டித்து ஓதப் பெறுகின்றது.

அடுத்த பாசுரத்தில் எம்பெருமான்,

'அண்டமும், எண்திசையும், நிலனும்,
அலைநீரொடு வான்எரி கால்முதலா
உண்டவன் எந்தை பிரான்[15]

என்று குறிக்கப்பெறுகின்றான். பிரளயப் பெருங்கடலில் சிக்கித் தத்தளிக்கும் இந்த உலகங்களையெல்லாம் பாலனாக இருந்து திருவமுதுசெய்து ஆலிலையில் அறிதுயில் கொள்ளும் அண்ண லின் அகடிதகடநா சாமர்த்தியம்[16] பேசப்பெறுகின்றது. இங்ஙனம் ஆபத்துக் காலத்தில் அனைத்தையும் தம் திருவயிற்றில் வைத்து நோக்கிய பெருமான் சம்சாரப் பெருங்கடலில் தவிக்கும் நம்மை நோக்குவான் வேண்டி பரமேச்சுர விண்ணகரத்தில் எழுந்தருளி யுள்ளான் என்பது ஆழ்வார் பெறவைத்த குறிப்பாகும். ஈண்டு எம்பெருமானின் காத்தல் தொழில் பேசப்பெறுகின்றது என்பது தெளிவு.

ஆனையின் துயர்தீர்த்த அருஞ்செயலும், காளியன் நாகத்தின் கொழுப்பை அடக்கிய தீரச்செயலும் அடுத்து அநுசந்திக்கப்பெறுகின்றன.

*14. பெரி. திரு. 2.9:3.* *15. பெரி. திரு - 2.9:4.*

*16. அகடி தகடநா சாமர்த்தியம் - சாதிக்க முடியாதவற்றையும் சாதிக்கும் திறமை (அகடித-சேர்க்க முடியாதவற்றை ; கடநா-சேர்த்து வைக்கின்ற ; சாமர்த்தியம் - திறமை).*

''தூம்புடைத் திண்மை வன்தான் களிற்றின்
துயர் தீர்த்து அரவம்வெருவ முனநாள்
பூம்புனல் பொய்கை புக்கான்''[17]

(தூம்பு-துளை; கை-துதிக்கை; வன்தாள்-வரியகால்; களிறு-யானை; அரவம் - காளிய நாகம்; வெருவ-அஞ்சும் படியாக; பூம்புனல்-அழகிய நீர்; பொய்கை - குளம்)

என்பது இந்நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் பாசுரப் பகுதி. மீனமர் பொய்கை நாள்மலர் கொய்யுங்கால் முதலையினால் அடர்ப் புண்ட கான்அமர் வேழத்தின் இடரைத் தீர்த்தருளின பெருமான் இந்திரியங்களாகிய பல முதலைகளின் வாயில் அகப்பட்டுத் தவிக்கும் நம்மையும் காத்தருள்வான் என்பது குறிப்பு. காளியன் அப்பொய்கையில் வந்து சேர்வதற்கு முன்னரே கசேந்திரன் இருந்த நிலையைக் கூறுவதால் 'பூம்புனல்' எனப்பட்டது என்பதாகக் கருதுகின்றோம்.

அடுத்த நான்கு பாசுரங்களிலும் எம்பெருமானின் நரசிம்மாவதாரம், வாமன-திரிவிக்கிரமாவதாரம், இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் ஆகிய நான்கு அவதாரங்களின் வீரச் செயல்கள் அநுசந்திக்கப்பெறுகின்றன.

''திண்படைக் கோளரி யின்உருவாயத்
திறலோன்அக லம்செருவில் முனநாள்
புண்படப் போழ்ந்த பிரான்''[18]

(திண்படை-கூரிய ஆயுதம் (நகம்); கோள்-வலிமிக்க; அரி-சிங்கம்; திறலோன் - மகா பலசாலி; அகலம்-மார்பு; செரு-போர்; போழ்ந்த-கிழித்தெறிந்த; பிரான் - எம்பெருமான்)

என்பது நரசிம்மமூர்த்தியின் அநுசந்தானம். பிரகலாதன் பொருட்டுக் கூரிய நகரங்களையும் கோரப் பற்களையும் கொண்ட நரசிங்க மூர்த்தியாகத் தோன்றி இரணியனது மார்பினைப் பிளந்தெறிந்த எம்பெருமானின் வீரச்செயலைக் காட்டி நிற்பது இச்சொல்லோவியம். இரணியன் தன்னைப் பலவாறு இழிவாகப் பேசிய போதெல்லாம் எம்பெருமான் சினங்கொண்டு யாதும் செய்யவில்லை. ஆனால், பாகவ தோத்தமனான பிரகலாதனைத் துன்புறுத்தியதை அவனால்

17. பெரி. திரு- 2.9:5.
18. பெரி. திரு - 2.9:6

பொறுக்கமுடியவில்லை. இரணியனை முடிப்பதற்கே திட்டம் வகுக்க வேண்டியதாயிற்று. இவ்விடத்தில்,

"ஈசுவரன் அவதரித்துப் பண்ணின ஆனைத்
தொழில்களெல்லாம், பாகவத அபசாரம்
பொறாமை என்று ஜீயர் அருளிச் செய்வர்"[19]

*(ஆனைத்தொழில்-மனிதர்களுடைய செயல்கட்கு அப்பாற்பட்ட செயல்கள்; ஜீயர் - நஞ்சீயர்; இவர் பட்டருடைய சீடர்; நம்பிள்ளையின் ஆசாரியர்)*

என்ற ஸ்ரீவசன பூஷணத்தின் வாக்கியதைச் சிந்திக்கின்றோம். பிரகலாதன், மகரிஷிகள் முதலான அந்தந்த பாகவதர்கள் திறத்தில் அவரவர்கள் செய்த அபசாரம் பொறாமையாலே எம்பெருமான் செய்றகரியனவற்றை மேற்கொண்டான் என்று நஞ்சீயர் கூறுவதை நினைக்கின்றோம்.

*அடுத்தபாசுரத்தில் வாமன - திரிவிக்கிரமாவதார சேவை,*

"இலகிய நீள்முடி மாவலிதன்
பெருவேள்வியில் மாணுருவாய் முனநாள்
சலமொடு மாநிலம் கொண்டவன்"[20]

*(இலகிய-விளங்கா நின்ற; மாண்உரு-(வாமன) பிரமச்சாரி உரு; சலமொடு - கபடத்துடன்; மாநிலம்-பெரிய நிலம்)*

என்பது ஆழ்வார்காட்டும் சொல்லோவியம். எம்பெருமான் 'பொன் இலங்கு புரிநூலும் தோளும் தாளப் பொல்லாத குறள்' பிரமச்சாரியாய் மாவலியின் வேள்வி பூமியில் எழுந்தருளி, 'கொள்வன் நான், மாவலி! மூவடிதா' என்று வஞ்சித்து மூவடி மண் நீரேற்று மூவுலகத்தையும் திருவடிக்கீழ்க் கொண்ட பெருமான் வந்து தங்கியுள்ள இடம் பரமேச்சுர விண்ணகரம். நம் போன்ற அகங்காரிகளையும் தன் திருவடிக்கீழ்க் கொள்வதற் காகவே அங்கு வந்திருக்கின்றார் என்பது ஆழ்வார் பெறவைக்கும் குறிப்பு அர்ச்சாவதார மூர்த்தியில் அவதார மூர்த்தியைக் காணும்படிச் செய்யும் ஆழ்வாரின் ஆர்வத்தை நினைக்கின் றோம்.

'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' என்ற வாசகத்தின் தத்துவத்தை நிலைநிறுத்துவதற்காகப் பதினான்கு ஆண்டுகள்

*19. ஸ்ரீவச. பூஷ - 196.*
*20. பெரி. திரு. 2.9:7*

வனவாசம் செய்தவன் சக்கரவர்த்தி திருமகன். அக்காலத்தில் இராவணனால் கவர்ந்து செல்லப்பெற்ற சீதாப்பிராட்டியை இலங்கையினின்றும் மீட்டுக் கொள்வதற்காக தென்கடலைக் கடக்க வேண்டியிருந்தது. வானர வீரர்களின் துணைக்கொண்டு நீரில் அமிழ்ந்து போகவேண்டிய மலைகளால் திருவணை அமைத்த பெருமான் இராமன். அவனே பரமேச்சுர விண்ணகரத்தில் எழுந்தருளியுள்ளான் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.

''குடைத்திறல் மன்னவன் ஆய்,ஒருகால்
குரங்கைப் படையா மலையால்கடலை
அடைத்தவன் எந்தைபிரா னதுஇடம்''[21]

(குடை-வெண்கொற்றக்குடை; திறல்-பெருமிடுக்கு; மன்னவன்-இராமன்; படையா -சேனையாக்கொண்டு)

என்பது ஆழ்வாரின் சொல்லோவியம்.

அடுத்து, 'பஞ்சிய மெல்லடி பின்னை திறத்து முன்நாள் பாய்விடைகள் ஏழ் அடர்த்திய கண்ணனை' அநுசந்திக்கின்றார். அழகிற் சிறந்த நப்பின்னைப் பிராட்டியை மணந்து கொள்வதற் காக அவளது தந்தை கும்பன் யாவர்க்கும் அடங்காத அசுர ஆவேசம் கொண்ட ஏழு காளைகளைக் கன்யா சுல்கமாக வைத்தான். கண்ணன் ஏழு திருவுருக்கொண்டு சென்று அவற்றை வென்று வலியடக்கி நப்பின்னையை மணந்துகொண்டான் என்பதை நாம் அறிவோம். இந்த வரலாற்றைத் திருவுள்ளங் கொண்டு,

''பிறைஉடை வாள்நுதல் பின்னைதிறத்து
முன்னே ஒருகால் செருவில் உருமின்
மறைஉடை மால்விடை ஏழ்அடர்த்தாற்கு
இடம்தான் தடம்சூழ்ந்து அழகாயகச்சி.''[22]

(பிறை-சந்திரகலை; வாள்நுதல் - ஒளியையுடைய நெற்றி; பின்னை திறந்து - நப்பின்னைக்காக; செரு-போர்; உருமின் - இடிபோன்ற; மறை உடை- எதிர்த்துவரும்; மால் - பெரிய; விடை - காளை; அடர்த்தல் - வலி அடக்குதல்)

என்ற பாசுரப் பகுதியில் காட்டுவர்.

இங்ஙனம் ஆழ்வார் கூறும் நான்கு அவதாரங்களும் நம்மை அவதார இரகசியத்தை நினைக்கச் செய்கின்றன. எம்பெரு

21. பெரி. திரு. 2.9:8. 22. பெரி. திரு - 2.9:9

மானுடைய அவதாரங்கள் யாவும் மெய்யானவை; இந்திரசாலம் போல் மயக்குபவை அல்ல. எம்பெருமான் தனக்கேயுரிய இயல்புகளனைத்தையும் அவதார காலத்திலும் கொண்டிருக் கின்றான். அவதார காலத்திலும் அவனுடைய திருமேனி இராஜஸதாமஸ குணங்களின் சம்பந்தமே இல்லாது சுத்த சத்துவமாக இருக்கின்றது. எம்பெருமான் இக்கர்ம பூமியில் அவதரிப்பதற்கு அவனது சங்கல்பமேயன்றிக் கர்மம் காரணம் அன்று. பூமியில் தர்மம் குன்றி அதர்மம் தலையெடுக்கும் பொழுது எம்பெருமான் அவ்வக்காலத் தேவைக்கேற்றவாறு அவதாரங்களை மேற்கொள்ளுகின்றான். சாதுக்களை இரட்சிப் பதே அவதாரத்தின் முக்கிய பலனாக அமைகின்றது.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் இப்பதிகத்தின் பல சுருதிப் பாசுரத்தைச் சிந்திக்கின்றோம்.

**''கலிகன்றி குன்றாது உரைத்த**
**சீர்மன்னு செந்தமிழ் மாலைவல்லார்**
**திருமாமகள் தன்னருளால் உலகில்**
**தேர்மன்ன ராய்ஒலி மாகடல்சூழ்**
**செழுநீர் உலகாண்டுளே திகழ்வர்களே''**[23]

*(கலிகன்றி-திருமங்கையாழ்வார்; குன்றாது-இலக்கண வழுவின்றி; சீர்மன்னு - அழகு பொருந்திய; திருமாமகள்-பெரிய பிராட்டியார்; அருள்-கிருபை; ஒலி மாகடல் - ஆரவாரிக்கும் பெரிய கடல்; நீர்-நீர்மை.)*

என்ற பாசுரப் பகுதியால் பெரிய பிராட்டியாரின் திருவருளுக்கு இலக்காகி இவ்வுலகினை அரசாளவல்ல மன்னர் மன்னர்களாகி விளங்குவார்கள் என்பதனை அறிகின்றோம். இலக்குமியின் திருவருள் இன்னது என்பதை மேலே விளக்கிக் கூறியுள்ள தனையும் சிந்திக்கின்றோம்.

பக்தி உணர்வு கிளர்ந்தெழுந்த வண்ணம் பரமபதத்தில் வீற்றிருப்பது போன்ற திருக்கோலத்தில் மேற்கே திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கும் **பரமபத நாதனையும் வைகுந்தவல்லித் தாயாரையும்** வணங்குகின்றோம். திருமங்கை யாழ்வார் அருளியுள்ள பத்துப் பாசுரங்களையும் அவன் சந்நிதியில் மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம். இந்நிலையில் திவ்வியகவி **பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்** பாசுரம் நினைவுக்கு வருகின்றது.

23. பெரி. திரு - 2.9:10.

''பதத்தமிழால் தன்னையே பாடுவித்து என்னைத்தன்
பதத்து அடியார்கதே ஆட்படுத்தான்-இதத்த
பரமேச் சுரவிண் ணகரான் பலஆன்
வரமேச்சு உரல்அணைந்த மால்''[24]

(பதத் தமிழ்-பக்குவமான தமிழ்; பதத்து அடியார்- திருவடிகளில் தொண்டு பூண்டவர்; ஆட்படுத்தல் - அடிமையாக்குதல்; இதத்த-நன்மை செய்கின்ற; ஆன்-பசு; மேச்சு-மேய்த்து (மரூஉ); உரல் அணைந்த-உரலில் பிணிப் புண்டிருந்த; மால் - திருமால்)

என்ற பாசுரத்தையும் ஓதுகின்றோம். ''எனக்கு யாதொரு தகுதியில்லாதிருக்கவும், எம்பெருமான் தன்னுடைய கருணை யால் எனக்கு அத்தகுதியை நல்கி வேதங்களாலும் அளவிட்டுக் கூறமுடியாத தன்னைப்பற்றிக் கவிபாடித் துதிக்கும்படி செய்து என்னைத் தன் அடியார்க்கு ஆட்படவும் செய்தான்'' என்று கூறும் கவிஞரின் அடக்கப் பண்பைப் போற்றுகின்றோம். ''என்னால் தன்னை இன் கவி பாடிய ஈசனை''[25] ''என்னால் தன்னை வன்கவி பாடும் வைகுந்த நாதனே''[26] என்பன போன்ற நம்மாழ்வார் பாசுரங்களே திவ்வியகவி தன் பாசுரத்தை அமைக்கத் துணை செய்திருத்தல் கூடும் என்றும் சிந்திக்கின் றோம்.

இத்திருக்கோயிலின் விமானம் 'முகுந்த விமானம்' என்று வழங்கப்பெறுகின்றது. விமானத்தில் இரண்டு சந்நிதிகள் உள்ளன. மேல் தளத்திலுள்ள (First floor) சந்நிதியில் எம்பெருமான் அனந்தாழ்வான்மீது சயனத்திருக்கோலத்தில் காட்சி அளிக்கின்றான். அதற்கு அடுத்துள்ள மேல்தளத்தில் (Second floor) அவன் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். கீழ்ச்சந்நிதியில் (Ground floor) இருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் எம்பெருமான் பரத்துவ நிலையைக் காட்டுவதாகும். இடைத்தளத்திலுள்ள அவன் வியூக நிலையைக் காட்டுவதாகவும் கொள்ளலாம்.

இந்தச் சந்நிதியைத் திவ்வியப்பிரபந்தம் 'பரமேச்சுர விண்ணகரம்' என்று குறிப்பிடும். பரமேச்சுரன் (பரமபத நாதன்-தேவாதி தேவன்) எழுந்தருளியிருக்கும் திவ்விய நகரமாதல்பற்றிப் 'பரமேச்சுர விண்ணகரம்' என்று வழங்கி

24. நூற். திருப். அந் - 87. 25. திருவாய் - 7.9:1.
26. மேலது - 7.9:6.

வருகின்றது. இதனைக் கட்டுவித்தவன் பல்லவ மன்னன் **பரமேசுவர வர்மன்** என்பவன். இவனுடைய தந்தை **இராஜசிம்மன்** என்பவனே காஞ்சிக் கைலாசநாதர் கோயிலை நிறுவியவன். இரண்டு கோயில்களும் சிற்பக்கலைக்குப் பெயர் போனவை. பல்லவமன்னர்களின் வரலாற்றுப் பரம்பரையை ஆராய விரும்புபவர் இரண்டு கோயில்களிலும் கல்லிலே உருவாகியிருக்கும் வரலாற்றினை எளிதாக அறிந்துகொள்ளலாம். தீப்பேற்றின் காரணமாக இந்த இரண்டு கோயில்களும் மைய அரசின் ஆதரவில் "நீலப் பலகையின் பாதுகாப்பில்" உள்ளதை எண்ணி வருந்துகின்றோம். தந்தை சிவபக்தன்; மகன் திருமால் அடியான். இங்ஙனம் தந்தையிடமும் மகனிடமும் நிலைத்து நின்ற சமரச மனநிலையை மெச்சுகின்றோம். வயிரமேகனின் இந்த உயர்ந்த திருமால்பக்தியைப் போற்றும் முறையில் திருமங்கையாழ்வார் பாசுரந்தோறும் ஒருமுறைக்குப் பன்முறை அம்மன்னனின் பெயரையும் புனைந்து பேசுவதைக் காண்கின் றோம். மன்னனின் பக்தியை உவந்து அவனை ஆழ்வார் புகழ்ந்த தாகக் கொள்ளவேண்டுமேயன்றி ஆழ்வார் 'நாக்கொண்டு மானிடம் பாடும்'[27] கொள்கையுடையவர் அல்லர் என்பதையும் உணர்கின்றோம். இந்த எண்ணங்களுடன் மன அமைதியுடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

❉ ❉ ❉

27. நான். திருவந் - 75.

# 6. காஞ்சியில் ஆறும் புறத்தில் ஒன்றும்

தென்னகத்தில் திருக்கோயில்கள் நிரம்பிய நகரங்கள் இரண்டு. ஒன்று காஞ்சிபுரம்; மற்றொன்று திருக்குடந்தை; குடமூக்கு என வழங்கப்பெறும் கும்பகோணம். எங்குப் பார்த்தாலும் பூங்காக்கள் மலிந்து காணப்படும் பெங்களூரையும் மைசூரையும் ''பூங்கா நகரங்கள்'' (Garden cities) என்று வழங்குவதைப் போலவே, இந்த இரண்டு நகரங்களையும் ''கோயில் நகரங்கள்'' (Temple cities) என்று வழங்கலாம். இவற்றுள் காஞ்சி மிகப் பழம்பெரும் பெருமை வாய்ந்தது. இயேசு பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே இதன் வரலாறு தொடங்குகின்றது பதஞ்சலியின் மாபாடியத்திலும், பெரும்பாணாற்றுப்படையிலும்,[1] மணிமேகலையிலும் இந் நகரத்தைப்பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றன. பண்டைய தமிழ் இலக்கியங்களில் இந்நகரம் காஞ்சி, காஞ்சிபுரம், காஞ்சிபுரி, கச்சி முதலிய பெயர்களால் வழங்கப் பெறுகின்றன. பழைய கல்வெட்டுக்களில் 'கச்சிப்பேடு' என்று வழங்கப்பெறுவதையே 'காஞ்சி' என்று கருதுகின்றனர் வரலாற்று அறிஞர்கள். தமிழகத்து ஞானச் செல்வர்கள் இந்நகரைத் தம் நூல்களில் 'கச்சி' என்றே வழங்குகின்றனர். எனினும், இன்று எங்ஙனும் பெருவழக்காக இருப்பது 'காஞ்சிபுரம்' என்ற பெயரேயாகும். 'காஞ்சிபுரம் பட்டு' இந்நகரத்தின் பெயரைப் பாமரமக்கள் உள்ளத்திலும் நிலைக்கச் செய்துவிட்டது.

சுமார் ஐந்து மைலுக்கு மேல் நீண்டிருப்பது இந்நகரம். இதனை இரண்டு கூறுகளாக்கிச் சிவகாஞ்சி (பெரிய காஞ்சி), விஷ்ணு காஞ்சி (சின்ன காஞ்சி)[2] என்று பெயரிட்டுள்ளனர். பெரிய காஞ்சியில் உள்ள பெரிய கோயில் ஏகாம்பரநாதர் கோவில்; சின்ன காஞ்சியில் உள்ள பெரியகோயில் வரதராசர் திருக்கோயில். இந்த இரண்டு பகுதிகளிலும் திருமால் ஆலயங்கள்

1. 'யதோக்த காரீ' என்ற திருமால் ஆலயத்தை 'வெஃகா' என்று குறிப்பிடுகின்றது - வரி - (290-91).

2. 'ஜைன காஞ்சி' தான் 'சின்ன காஞ்சி' ஆயிற்று என்பர் ஆய்வாளர்கள்.

உள்ளன. ஆயினும், பெரிய காஞ்சியில்தான் அதிகமான சிவாலயங்கள் இருக்கின்றன. சுமார் முப்பதுக்கு மேற்பட்ட சிவாலயங்களும், இருபதுக்கும் மேற்பட்ட திருமால் திருக்கோயில்களும் இந்த இரு பகுதிகளிலும் இருப்பனவாகத் தெரிகின்றது.

காஞ்சியில் பதினெட்டு திவ்விய தேசங்கள் உள்ளனவாக வைணவர்களிடையே வழங்கும் பேச்சு ஒன்று உண்டு. ஆயினும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற திவ்விய தேசங்கள் பதினான்கே காஞ்சியில் உள்ளன. இவற்றைத் தவிர, காஞ்சிமா நகருக்குப் புறம்பே சுமார் ஏழுகல் தொலைவில் உள்ள 'திருப்புட்குழி' என்ற திவ்விய தேசமும் ஆழ்வாரால் மங்களாசாசனம் பெற்றது. இன்று நாம் காஞ்சி நகரில் சிறியனவும் பெரியனவுமாகவுள்ள திவ்விய தேசங்களில் திருப்பாடகம், திருநிலாத்திங்கள் துண்டம், திருக்கள்வனூர், திருவேளுக்கை, திருத்தண்கா, திருப்பவளவண்ணம் ஆகிய ஆறு திவ்விய தேசங்களையும், நகருக்குப் புறம்பேயுள்ள திருப்புட்குழியையும் சேவிக்கப் போகின்றோம்.

**திருப்பாடகம் :** நாம் தங்கியிருக்கும் ஞானப் பிரகாசர் திருமடத்திற்கு அருகிலுள்ளது இந்தச் சந்நிதி. இது 'பாண்டவ தூதர் சந்நிதி' என்று வழங்கப்பெறுகின்றது. பாடு+அகம், பாடகம் ஆயிற்று. பெருமை தோற்ற எழுந்தருளியிருக்கும் தலம் என்பது இதன் பொருள். கண்ணன் கழுத்தில் ஓலை கட்டிக்கொண்டு பாண்டவத் தூதனாய் துரியோதனனிடம் சென்றபொழுது அக்கோமகன் இரகசியமாகத் தன் சபாமண்டபத்தில் மிகப்பெரிய நிலவறை யொன்றை நிறுவி அதன் உள்ளே அநேக மல்லர்களை ஆயுதபாணிகளாய் நிறுத்தினான். அப்படுகுழியைப் பிறர் அறியாவண்ணம் மூங்கிற் பிளப்புக்களால் மேலே மூடச் செய்தான். அதன்மீது நவரத்தினங்கள் இழைக்கப்பெற்ற சிறந்த ஆசனம் ஒன்றை அமைத்து அதன்மீது கண்ணனை வீற்றிருக்கச் செய்தான். கண்ணனைக் கொல்வதற்காகத் துரியோதணன் செய்த சதித் திட்டம் இது. கண்ணன் அதன்மீது ஏறியதும் மூங்கிற் பிளப்புகள் முறிபட்டு ஆசனம் உள்ளிறங்கிப் பிலவறையில் செல்லுங்கால், அப்பெருமான் மிகப்பெரிதான உருவம் எடுத்துப் பல கைகளையும் கால்களையும் கொண்டு மல்லர்களை எதிர்த்து அவர்களைக் கொன்றொழித்தார். இந்தப் பெரிய திருமேனியை,

"அரவநீள் கொடியோன் அவையுள்ஆ சனத்தை
அஞ்சிடாதேஇட அதற்கு

பெரியமா மேனி அண்டம்ஊ டுருவ
பெருந்திசை அடங்கிட நிமிர்ந்தோன்.''[3]

(அரவம்-பாம்பு; அவை-சபை; அஞ்சிடாதே-பயப்படாமல்; இட-அமைக்க; மேனி - உடம்பு; நிமிர்ந்தோன்-வளர்ந்த பெருமான்)

என்று திருமங்கையாழ்வார் அநுசந்திக்கின்றார். அப்போது கொண்ட விசுவரூபத் திருக்கோலத்தின் நினைவுச் சின்னமாகப் பெரிய திருமேனியுடன் சேவை சாதிக்கும் இடம் பாடகம் ஆகும்.

இந்த இதிகாச நிகழ்ச்சியை நினைந்த வண்ணம் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் **பாண்டவ தூதனையும்**, அருகில் உள்ள **உருக்குமிணி, சத்தியபாமை** என்ற இரண்டு தாய்மார்களையும் சேவிக்கின்றோம். திருமங்கையாழ்வார்,

''கல்ஆர் மதிள்சூழ் கச்சி நகருள்
நச்சி பாடகத்துள்
எல்லா உலகும் வணங்க இருந்த
அம்மான்.''[4]

என்று இப்பெருமானை அநுசந்திக்கின்றார். இவர் திருநெடுந் தாண்டகத்தில்,

''கல்உயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சிமேய களிறு![5]

(மேய-எழுந்தருளியிருக்கும்)

என்று அநுசந்தித்த எம்பெருமான் திருப்பாடகத்து நாயனார் என்பவரே என்பது **பெரியவாச்சான் பிள்ளையின்** திருவுள்ளம். இந்த ஆழ்வாரும், பூதத்தாழ்வார்,[6] பேயாழ்வார்,[7] திருமழிசை யாழ்வார்,[8] நம்மாழ்வார்[9] ஆகிய ஆழ்வார்களும் இந்த எம்பெரு மானை மங்களாசாசனம் செய்துள்ளனர். ''பூம்பாடகத்துள், இருந்தானை ஏத்தும்என் நெஞ்சு''[10] என்று தன் நெஞ்சினை ஆற்றுப்படுத்துகின்றார் பூதத்தாழ்வார். ''இருந்த தெந்தை பாடகத்து''[11] என்று போற்றியுரைக்கின்றார் திருமழிசைப்பிரான்.

3. பெரி. திரு - 9.1:8.
4. பெரி. திரு - 6.10:4.
5. திருநெடுந் - 15.
6. இரண். திருவந் - 94.
7. மூன். திருவந் - 30, 64.
8. திருச். விருத் - 63, 64.
9. திருவாய் - 5.10:6.
10. இரண். திருவந் - 94.
11. திருச். விருத் 64.

இங்ஙனம் ஆழ்வார்கள் பாசுரங்களில் ஆழங்கால் பட்டிருக்கும்பொழுது திவ்விய கவியின் திருப்பாசுரமும் நம் நினைவிற்கு வருகின்றது.

"தவம்புரிந்த சேதநரை சந்திரன் ஆதித்தன்
சிவன்பிரமன் இந்திர னாச்செய்கை-உவந்து
திருப்பா டகம்மருவும் செங்கண்மால் தன்மார்பு
இருப்பாள் தகவுரை யாலே."[12]

(சேதநர்-ஆன்மாக்கள்; செய்கை-செய்வது; ஆ-ஆக; உவந்து-மகிழ்ந்து; மருவும்-பொருந்தியிருக்கும்; மார்பு இருப்பாள்-பெரிய பிராட்டியார்)

என்ற பாசுரத்தையும் ஓதிப் பெரிய பிராட்டியாரின் புருஷகார தத்துவத்தைச் [13] சிந்திக்கின்றோம். இங்ஙனம் சிந்திக்குங்கால்,

"இவள் தாயாய், இவர்கள் கிலேசம்
பொறுக்கமாட்டாதே அவனுக்குப் பத்தினியாய்,
இனிய விஷயமாயிருக்கையாலே கண்ணழிவற்ற
புருஷகாரம்."[14]

என்ற முமுட்சுப்படியின் வாக்கியம் நம் மனத்தில் குமிழியிட் டெழுகின்றது. இந்நிலையில்,

"சம்ஸலேஷ தசையில் ஈஸ்வரனைத் திருத்
த்தும்; விஸ்லேஷ தசையில் சேதநனைத்
திருத்தும்."

"இருவரையும் திருத்துவது உபதேசத்தாலே"

"உபதேசத்தாலே மீளாதபோது சேதநனை
அருளாலே திருத்தும்; ஈஸ்வரனை
அழகாலே திருத்தும்."[15]

(சம்ஸ்லேஷம்-சேர்க்கை; விஸ்லேஷம்-பிரிவு)

என்ற ஸ்ரீவசன பூஷணத்தின் வாக்கியங்களையும் நினைக்கின்றோம். இங்ஙனம் தத்துவத்தில் ஆழங்கால்பட்ட வண்ணம் தீர்த்தம் திருத்துழாய் பெற்றுத் திருக்கோயிலை விட்டு வெளிவருகின்றோம்.

12. நூற். திருப். அந்-78
13. புருஷகாரம் - சேர்ப்பிக்கும் தன்மை; பரிந்துரை.
14. முமுட்சு - 128. 15. ஸ்ரீவச. பூஷ-11,12,14

***திருநிலாத்திங்கள் துண்டம் :*** இந்தத் திவ்விய தேசம் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலின் முதல் பிராகாரத்தில் உள்ளது.

> "நீரூரும் செஞ்சடையாய் நெற்றிக் கண்ணாய்!
> நிலாத்திங்கள் துண்டத்தாய் நின்னைத் தேடி
> ஓரூரும் ஒழியாமே ஒற்றித் தெங்கும்
> உலகமெலாம் திரிதந்து நின்னைக் காண்பான்
> தேரூரும் நெடுவீதி பற்றி நின்றேன்."[16]

என்ற ***அப்பர் பெருமானின்*** திருப்பாடலை ஓதுவார் 'நிலாத் திங்கள் துண்டத்தான்' சிவபெருமானே என்று நினைப்பது இயல்பு. ஆனால், அவர்கள் ஏகாம்பரநாதர் கோயிலுக்கு வந்தபின்னர் தம் எண்ணத்தைக் கட்டாயம் மாற்றிக்கொள்வர். இந்த எம்பெருமான் - ***நிலாத்திங்கள் துண்டத்தான்*** என்ற திருநாமத்தைக் கொண்டவர் - ஏழுதலை நாகத்தைக் குடையாகக் கொண்டு மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். இந்த எம்பெருமானைத் ***திருமங்கையாழ்வார்*** மட்டிலும் மூன்று சொற்கள் அடங்கிய "நிலாத்திங்கள் துண்டத் தாய்!"[17] என்ற ஒரே தொடரால் மங்களாசாசனம் செய்துள்ளார். இந்த எம்பெருமானையும் அவர் அருகில் உள்ள ***நேரொருவரில்லா வல்லித் தாயாரையும்*** சேவித்து விடைபெறும் நிலையில்,

> "மீண்டும் தெளியார்கள் மேதினியோர் நின்அடிப்பூப்
> பாண்டரங்க மாடி படர்சடைமேல்-தீண்டி
> கலாத்திங்கள் துண்டத்தின் மீதிருப்பக் கண்டும்;
> நிலாத்திங்கள் துண்டத் தானே!"[18]

*(மீண்டும்-மறுபடியும்; மேதினியோர்-பூமியிலுள்ளோர்; பாண்டரங்கமாடி - சிவபெருமான் (பாண்டரங்கச் கூத்தாடியவன்); தீண்டி-பொருந்தி; கல்ாத்திங்கள் துண்டம் - இளம்பிறைச் சந்திரன்)*

என்ற ***திவ்யகவியின்*** பாசுரம் நினைவிற்கு வர அதனையும் அவன் சந்நிதியிலேயே ஓதி உளம் நெகிழ்கின்றோம்.

16. அப்பர் தேவாரம் - 6.25 :9.
17. திருநெடுந் - 3. எம்பெருமானின் திருவபிடேகத்தில் ஒரு பிறைச் சந்திர வடிவம் உள்ளது.
18 .நூற். திருப். அந்-80.

இதில் பார்த்தன் பரந்தாமனது திருவடிகளிலிட்டு அருச்சித்த மலர்கள் சிவபிரானது திருமுடிமேல் இருத்தலைக் கண்டபிறகும் திருமாலே பரம்பொருள் என்ற உறுதியான உணர்ச்சியைக் கொள்ளாது தடுமாறும் உலகோரின் பேதைமையைக்கண்டு இரங்கிக் கூறுகின்றார் கவிஞர். இப்பாசுரத்திற்கு மூலமாகவுள்ள நம்மாழ்வாரின் பாசுரமும் 'பளீச்சென' நம் நினைவிற்கு வர அதனையும் ஓதுகின்றோம்.

"தீர்த்தன் உலகுஅளந்த
 சேவடிமேல் பூந்தாமம்
சேர்த்தி அவையே
 சிவன்முடிமேல் தான்கண்டு
பார்த்தன் தெளிந்தொழிந்த
 பைந்துழா யான்பெருமை
பேர்த்தும் ஒருவரால்
 பேசக் கிடந்ததே?"[19]

*(தீர்த்தன்-பரிசுத்தனான இறைவன்; சேவடி-சிவந்த திருவடி; பூந்தாழம்-பூமாலை; பார்த்தான் - அருச்சுனன்; பைந்துழாயான்-திருமால்; பேர்த்தும் - மீண்டும்)*

என்ற பாசுரத்தில் கண்டவாறு இவ்வரலாற்றில் நம்மாழ்வார் ஈடுபட்டவாறு நாமும் ஈடுபடுகின்றோம். இந்த எண்ணத்துடன் மனநிறைவு பெற்றுத் திரும்புகின்றோம்.

இந்த எம்பெருமானுக்கு ஒரு சைவரே கைங்கரியம் செய்து வருகின்றார்.

**திருக்கள்வனூர் :** இந்தத் திவ்வியதேசம் காஞ்சி காமாட்சி அம்மன் திருக்கோயிலினுள் உள்ளது. பலரை வினவியும் ஒருவருக்கும் இந்த எம்பெருமான் - **கள்வன்** - எழுந்தருளி யிருக்கும் இடம் சரியாகத் தெரியவில்லை. காமாட்சி அம்மன் கோயிலினுள் இருக்கும் உட்கோயில்களும் சந்நிதிகளும் திக்குத் தெரியாதபடி அமைந்து கிடப்பதால் தேடிக் காண்பதில் மேலும் சங்கடம் அதிகமாகின்றது. குற்ற விசாரணைத்துறை (C.I.D.) அலுவலர்போல் ஒருவாறு விசாரித்துக் கொண்டு தேடியதில் இவர் திருக்கோயிலினுள் அர்த்தமண்டபத்தின் நுழைவாயிலின் இடப்புறச் சுவரிலுள்ள மாடம் ஒன்றில் எங்கோ திருடிவிட்டு

*19. திருவாய் - 2.8:6*

ஒளிந்து கொண்டிருக்கும் கள்வனைப்போல் ஒளிந்து கொண்டிருப்பதைக் காண்கின்றோம். இது கருதியே இவரைத் திருமங்கையாழ்வாரும் "**கள்வா!**"[20] என்ற ஒரே தொடரில் மங்களாசாசனம் செய்தனர் போலும்! குமுதவல்லித் தாயாரை மணந்துகொள்ளும் பொருட்டு அவர் விதித்த நிபந்தனையாகிய நாள்தோறும் 1008 பாகவதர்கட்குத் திருவமுது செய்வித்தல் என்ற பணியைச் செவ்வனே நிறைவேற்றும் பொருட்டுக் கள்வர் கூட்டத் தலைவனாக நின்று கொள்ளையடித்த பெருமானன்றோ இவர்? வேறு ஆழ்வார்கட்கும் இந்த எம்பெருமான் கிட்டவில்லை. திருநகரியில் திருப்புளியாழ்வாரின் கீழிருந்து கொண்டு மானசீகமாக மங்களாசாசனம் செய்த நம்மாழ்வாரையும் அவர் பாசுரங்களில் அகப்படாது ஏமாற்றிவிட்ட 'கள்வன்' இந்த எம்பெருமான்.

திருக்கள்வனூர் எம்பெருமானின் திருநாமம் **ஆதிவராகப் பெருமாள்** என்பது. நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கும் இந்த எம்பெருமானையும், அருகில் பக்கத்துச் சுவரில் இன்னொரு மாடத்தில் காட்சி அளிக்கும் **அஞ்சிலைவல்லி நாச்சியாரையும்** வணங்குகின்றோம்.

பிறர் அறியாதபடி காரியஞ்செய்பவனைக் கள்வன் என்று கூறுவது உலகவழக்கு என்பதை நாம் அறிவோம். எம்பெருமானும் "இராமட மூட்டுவாரைப் போலே[21] உள்ளே பதிந்து கிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக் கொண்டு போருமவனாகையாலே"[22] கள்வன் எனப்படுகின்றான் என்று எண்ணுகின்றோம். உண்மையில் அப்பெயர் அவனுக்கே தகும் என்றும் உடன்படுகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

20. திருநெடுந் - 3.

21. மகன் ஒருவன் தன் தாயிடம் நேராகத் தனக்கு வேண்டுவன பெற்று இன்புறாமல் அகந்தையினால் துன்புற்று உழல்கின்றான். அன்புள்ளம் கொண்ட தாய் அவனைக் கைவிடுவதற்கு மனமின்றி, பிறர் அறியாமல், இரவில் அன்னமிடும் சத்திரங்கட்குச் சென்று, தன் முகத்தைக் காட்டாமல் மறைந்திருந்து, அவனுக்கு அன்னம் இட்டு அவன் பசிப் பிணியை ஆற்றி அவனை உயிர் வாழச் செய்தலே 'இராமட மூட்டுதல்' என்பது.

22. முமுட்சு - 104.

"பண்டேஉன் தொண்டுஆம்
பழஉயிரை என்னதுஎன்று
கொண்டேனைக் கள்வன்என்று
கூறாதே- மண்தலத்தோர்
புள்வாய் பிறந்த
புயலே! உனைக்கச்சிக்
கள்வா!' என்(று) ஓதுவதுஎன்
கண்டு?"[23]

(தொண்டுஆம்-அடிமைப் பட்டிருக்கும்; பழஉயிர்-அநாதியாகவுள்ள ஆன்மா; கொண்டேனை -கருதியிருந்த என்னை; மண் தலத்தோர்-பூமியில் உள்ளவர்கள் புள் - கொக்கு (பகாசுரன்); புயலே-நீர் கொண்ட மேகம் போன்றவனே; ஓதுவது - சொல்லுவது; என் கண்டு-என்ன காரணம் கண்டு)

என்ற பாசுரத்தை ஓதி அதன் தத்துவக் கருத்தில் ஆழங்கால் படுகின்றோம். கள்ளம் என்பது திருடுதல்; ஒருவர்க்குரிய பொருளைத் தன்னுடையதாக்கிக் கொள்வது. 'அநாதிகாலம் தொட்டு உனக்கே அடிமையாகக் கிடந்த ஆன்மாவை நான் என்னுடையதென்று கொள்வதனால் என்னைக் கள்வன் என்றல் தகும்; உலகிலுள்ள பொருள்கள் யாவும் நின்னுடையன வேயாதலால், வெண்ணெய் கொள்ளுதல் முதலிய தொழில் களைச் செய்யினும் உன்னைக் கள்வன் என்று கூறுதல் தகாது. இங்ஙனம் உண்மை இருக்க, உலகோர் இதனை ஆராயாது என்னை யானே திருடிக்கொண்ட பெருந்திருடனாகிய என்னைக் கள்வன் என்று கூறாமல் எல்லாவற்றிற்கும் இறைவனான உன்னைக் கள்வன் என்கின்றனரே. இஃது என்ன பேதைமை!" என்று திவ்வியகவி சமத்காரம் தோன்றக் கூறியதைச் சிந்திக்கின் றோம்.

இதிலுள்ள தத்துவக் கருத்து நம் சிந்தையில் குமிழியிடத் தொடங்குகின்றது. சேஷத்துவம் (எம்பெருமானுக்கு அடிமையா யிருத்தல்) ஆன்மாவின் சொரூபமாகையால் அதற்கு மாறாக ஆன்மா தனக்கு உரியது என்று கருதுவது ஆன்மாபஹாரம் (ஈசுவரனுக்கு வசப்பட்டிருக்கும் ஆன்மாவைச் சுதந்திரர் என்று நினைத்தல்) ஆதலைக் காண்கின்றோம். நித்தியனான ஆன்மா அநாதியாகவே எம்பெருமானுக்கு அடியவனாதலால் 'பண்டே உன் தொண்டாம் பழ உயிர்' என்று கூறியுள்ளார் கவிஞர் என்பதனையும் அறிகின்றோம். இந்த எண்ணங்கொண்ட மனநிறைவுடன் சந்நிதியை விட்டு வெளிவருகின்றோம்.

23. நூற். திருப். அந் - 85

சைவரே இந்தப் பெருமாளுக்கும் கைங்கரியம் செய்து வருகின்றார்.

**திருவேளுக்கை** : இந்தத் திவ்விய தேசம் சின்ன காஞ்சிபுரத்தில் உள்ளது. 'வேளிருக்கை' என்பது 'வேளுக்கை' எனமருவி வழங்கி வருகின்றது. இது வடமொழியில் வேதாந்த தேசிகர் பணித்த துதியொன்றில் 'காமாஸிகா'[24] என்று வழங்கப் பெறுகின்றது. நாம் தங்குமிடத்திலிருந்து குதிரைவண்டியில் இத்திருத்தலத்திற்கு வருகின்றோம். திருக்கோயில் மிகச் சிறியது. மிகுந்த சிரமத்துடன் இதன் இருப்பிடத்தைக் கண்டறிகின்றோம். இந்த எம்பெருமானுக்குக் கைங்கரியம் சரியாக நடைபெற வில்லை. திருவிளக்கு போடுவதற்குக் கூட சரியான ஆள் இல்லை என்றால் இதர கைங்கரியத்தைப் பற்றிச் சொல்ல வேண்டிய தில்லையல்லவா? இந்த எம்பெருமானைப் பேயாழ்வார்[25] திருமங்கையாழ்வார் ஆகிய இரண்டு ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

> "மன்னும் மதிள்கச்சி
> வேளுக்கை ஆளரியை"[26]
>
> (ஆள்அரி-நரசிம்மம்)

என்பது திருமங்கையாழ்வாரின் திருவாக்கு. பேயாழ்வார் இத்திருப்பதியோடு வேறு சில திருப்பதிகளையும் சேர்த்துப்பேசி இனியராகின்றார்.

> "விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்
> மண்ணகரம் மாமாட வேளுக்கை-மண்ணகத்த
> தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி
> தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு"[27]
>
> (விண்ணகரம்-ஒப்பிலியப்பன் சந்நிதி; திருவெஃகா-சொன்ன வண்ணம் செய்த பெருமாள் இருப்பிடம்; மண்நகரம் - பூமியிலுண்டான வைகுந்த மாநகர் போன்ற; மா மாடம் பெரிய மாளிகை; தன் கோட்டி-திருக்கோட்டியூர்)

'மண்ணகரம் மாமாடம் வேளுக்கை' என்ற இந்த ஆழ்வாரின் திருவாக்கையொட்டியே திருமங்கையாழ்வார் 'மன்னு மதிள்கச்சி வேளுக்கை' என்றனர் போலும். இங்குக்

24. காமாஸிகா = காம+ஆஸிகா-விருப்பம் பற்றி நிற்கும் இடம்.
25. மூன். திருவந் - 26,34,62. 26. பெரி. திருமடல் - கண்ணி - 127.
27. மூன். திருவந் - 62.

கூறிய ஏழு திருப்பதிகளிலும் எம்பெருமான் எளிமையும் சீலமும் தோன்ற எழுந்தருளியிருப்பதாகக் கூறுகின்றார் ஆழ்வார். பிரபத்தி செய்வதற்கு வேண்டுபவையான வாத்ஸல்யம்,[28] சுவாமித்துவம்,[29] சௌசீல்யம்,[30] சௌலப்பியம்[31] போன்ற திருக்குணங்கள் நிறைந்த இடம் அர்ச்சாவதாரமே என்ற சாத்திர உண்மையை வற்புறுத்தவே இவர் இங்ஙனம் கூறியிருப்பதாகக் கருதுகின்றோம்.

இங்ஙனம் சிந்தித்துக்கொண்டே திருக்கோயிலினுள் நுழைகின்றோம். கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் **ஆள் அழகிய சிங்கரையும்** (முகுந்த நாயகன்) **வேளுக்கை வல்லித் தாயாரையும்** சேவிக்கின்றோம். இந்த நிலையில்,

> "தனக்குரிய னாய்அமைந்த தானவர்கோன் கெட்டான்;
> உனக்குரிய னாயமைந்தன் உய்ந்தான்-நினைக்குங்கால்
> வேளுக்கை ஆளரியே! வேறுதவி உண்டோஉன்
> தாளுக்கு ஆள்ஆகா தவர்க்கு,"[32]

*(தனக்கு உரியனாய்-சுவாதந்திரன் என்று இருந்த; தானவர்கோன்-இரணியன்; கெட்டான் - அழிந்தான்; உனக்கு உரியன் ஆய மைந்தன்-பிரகலாதன்; உய்ந்தான் - நல்வாழ்வு பெற்றான்; தாள்-திருவடி; ஆள் ஆகாதவர்-அடிமை ஆகாதவர்)*

என்ற திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர அதனையும் ஓதுகின்றோம். எம்பெருமானது திருவடிகளில் ஆட்படாதவர்கள் ஆபத்துக் காலத்தில் ஒரு துணையுமின்றி அழிய வேண்டிவரும் என்ற பேருண்மையை உணர்கின்றோம். இந்த உணர்வுடன் திருக்கோயிலை விட்டு வெளிவருகின்றோம்.

28. வாத்ஸல்யம் : வத்ஸ -பசுங்கன்று. வாத்ஸல்யம் - கன்றினிடம் பசு கொள்ளும் அன்பு.
29. சுவாமித்துவம் : சொம் -உடமை, சொத்து : சுவாமி-உடையவன் ; சுவாமித்துவம் - உடையவனாக இருத்தல், வல்லமை, பெருமை.
30. சௌசீல்யம்-சு+சீலம் - நற்பண்புடைமை; அதாவது சீல குணம்; தன்னிலும் தாழ்நதோரிடம் புரையறப் பழகுந் தன்மை.
31. சௌலப்பியம் = சு-லப=எளிதில் கிடைத்தல்; யாருக்கும் எளிதில் அணுகும்படியிருத்தல்; எளியனாம் தன்மை.
32. நூற். திருப். அந் - 77.

*திருத்தண்கா :* இந்தத் திவ்விய தேசம் சின்ன காஞ்சிபுரத்தில் **தூப்புல்** என்ற பகுதியில் உள்ளது. இந்தத் தலத்து எம்பெருமானைத் திருமங்கையாழ்வார்[33] மட்டிலுமே மங்களாசாசனம் செய்துள்ளார். **வேதாந்த தேசிகர்** அவதரித்த இடமும் இதுவே. குளிர்ந்த சோலைகளையுடையதால் இத்தலம் ***'தண்கா'*** என்று பெயர் பெற்றது போலும். வேளுக்கை ஆளரியை சேவித்த நாம் நேரே இத்திவ்விய தேசத்திற்கு வருகின்றோம்.

திருக்கோயில் சற்றுப் பெரிய கோயிலே. வாகனமண்டபம் தனியாக உண்டு. திருவிழாக் காலங்களில் ததியாராதனை முதலிய செயல்களை மேற்கொள்ளுவதற்கு விசாலமான இடம் உள்ளது. இதையெல்லாம் சுற்றிப்பார்த்துக் கொண்டு திருக்கோயிலுக்கு வருகின்றோம். மேற்கே திருமுகமண்டலங்கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் ***தீபப் பிரகாசரையும்*** *(விளக்கொளிப் பெருமாள்)* ***மரகதவல்லித் தாயாரையும்*** வணங்குகின்றோம்.[34] இப்பெருமான்மீது திருமங்கையாழ்வார் பாடிய பாசுரம் தாய்ப் பாசுரமாக அமைந்துள்ளது.

> ''முளைக்கதிரை, குறுங்குடியுள் முகிலை, மூவா,
> மூவுலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற
> அளப்பரிய ஆரமுதை, அரங்கம் மேய
> அந்தணனை, அந்தணர்தம் சிந்தை யானை
> விளக்கொளியை, மரகதத்தை, திருத்தண் காவில்,
> வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு,
> 'வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக!' என்று
> மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னாளே.''[35]

(முளைக்கதிர்-இளஞ்சூரியன்; மூவா-நித்தியமான; அந்தணர்-வைதிகர்; பாடக்கேட்டு -(கிளி) பாடக்கேட்டு; மட கிளி-அழகிய கிளி)

என்ற பாசுரத்தைச் சிந்திக்கின்றோம். 'விளக்கொளியை' என்ற தொடர் இந்தத் தலத்து எம்பெருமானைக் குறிக்கின்றது. விளக்கின் ஒளி எங்ஙனம் பொருள்களை விளங்கச் செய்யுமோ,

33. பெரி. திரு. 10.1:2; திருநெடுந் - 14இ
34. இத்தலத்து எம்பெருமான் பண்டைக் காலத்தில் சயனத்திருக் கோலமாக எழுந்தருளியிருந்ததாகப் பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானத்தாலும், அரும்பத உரையினாலும், மற்றும் சில குறிப்புகளாலும் அறியக் கிடக்கின்றது.
35. திருநெடுந் - 14

அங்ஙனமே இந்த எம்பெருமானும் ஆன்மாவின் இயல்பு, ஈசுவரனது இயல்பு, ஆன்மா அடையும் பயன், அப்பயனை அடைதற்கு உபாயம், அப்பயனை அடைதற்குப் பகையாய் உள்ளவைகள் ஆகிய 'அர்த்த பஞ்சகத்தையும்' தனக்கு விளங்கச்செய்வான் என்பது இப்பெருமானின் பெயர் குறிக்கின்றது. இங்ஙனம் சிந்தித்த நிலையில் திவ்விய கவியின் பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

> "ஆட்பட்டேன்; ஐம்பொறியால் ஆசைப்பட் டேன்; அறிவும்
> கோட்பட்டு நாணும் குறைபட்டேன்-சேண்பட்ட
> வண்காவை வண்துவரை வைத்த விளக்கொளிக்குத்
> தண்காவைச் சேர்ந்தான் தனக்கு"[36]

(ஆள்பட்டேன்-அடிமைப் பட்டேன்; கோள்பட்டு-கவரப்பெற்று; நாணும் - நாணமும்; குறை பட்டேன்- குறைந்துவிடப் பெற்றேன்; சேண்பட்ட - தொலைவிலுள்ள (தேவலோகத்திலுள்ள); வள் கா-வளப்பமுள்ள சோலை போல் தழைத்த பாரிசாத மரத்தை; வண்துவரை-வளப்பமான துவாரகை)

என்ற திருப்பாசுரத்தையும் ஓதுகின்றோம். இதுவும் அகப் பொருள் துறையில் அமைந்த பாடலாகும். தலைவனைப் பிரிந்து ஆற்றாளாகிய தலைவி அவன்மாட்டுத் தனக்குள்ள அன்புறுதியைத் தோழிக்குக் கூறுவதாக அமைந்த பாடல் இது. தோழிமூலம் செவிலிக்கும், அவள் மூலம் நற்றாய்க்கும், அவள் மூலம் தந்தைக்கும் ஏனைய பெரியோர்க்கும் தெரிவித்து விரைவில் தன்னை அவனுக்கு மணம் செய்து வைக்குமாறு செய்து கொள்ள விரும்புவதே இதன் நோக்கமாகும். நெஞ்சென்னும் உட்கண்ணால் எம்பெருமானைச் சேவித்த திவ்விய கவி அவன் பக்கல் தமக்குண்டான கழிபெருங் காதலைத் தமக்குப் புருஷகாரராக நிற்கும் ஆசாரியனிடத்து உரைக்க வேண்டி, தம்மோடொத்த ஞானிகளாக நண்பர்க்கு எடுத்துரைத்தல் இதன் உள்ளுறைப் பொருளாகும். "உண்ணும்சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்"[37] என்றபடி எல்லாம் அவனேயாம்படிக் கிளர்ந்தெழும் கவிஞரின் உணர்வும் நம்மையும் வந்து பற்றுவதை உணர்கின்றோம்.

நான்முகன் நாராயணனை நோக்கி வேள்வி செய்த இடம் காஞ்சி என்ற புராண வரலாற்றை அறிவோம் அன்றோ?

36. நூற். திருப். அந் - 77. 37. திருவாய்.

கணவன்மீது வெகுண்டெழுந்த நாமகள் அவ்வேள்வி நடை பெறாதிருக்கப் பல இடையூறுகளை விளைவித்தாள். ஆயினும், எம்பெருமான் பல்வேறு வடிவங்களுடன் தோன்றி அவற்றைப் போக்கினான். ஒருசமயம் யாகம் செய்த இடம் முழுவதும் பேரிருள் சூழுமாறு செய்தது அங்ஙனம் விளைவித்த தடைகளுள் ஒன்று. அத்தடையை நீக்கப் பரஞ்சோதியாகிய எம்பெருமான் விளக்கொளியாய்த் தோன்றி அவ்விருளைப் போக்கினான். பரஞ்சோதிக்கு முன்னர் எந்த இருளும் இருக்க முடியாது என்ற பேருண்மையை உணர்ந்தாள் நாமகள். இந்த வரலாற்றின் நினைவாக நான்முகன் வேண்டுகோளுக்கிணங்க இன்றும் 'விளக்கொளியாக', நம்போலியரும் வணங்குவதற்காக, ''பின்னானார் வணங்கும் சோதியாகத்'' திகழ்ந்து திருத்தண் காவில் சேவை சாதிக்கின்றான் எம்பெருமான். இந்தப் புராண வரலாற்றைச் சிந்தித்தவண்ணம் அடுத்த திவ்விய தேசத்தை நாடிச் செல்லுகின்றோம்.

***திருப்பவள வண்ணம் :*** பெரிய காஞ்சிபுரத்தில் வைகுண்டப் பெருமாள் திருக்கோயிலின் அருகிலுள்ளது இந்தத் திவ்விய தேசம். திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் குறிப்பிடும் ''*கச்சிப் பவளண்ணா!*'' என்ற சொற்றொடரைத் தவிர ஆழ்வார் பாசுரங்களில் இந்த எம்பெருமானைப்பற்றி வேறு குறிப்புகள் இல்லை. ஆழ்வார் குறிப்பிடும் சொற்றொடரைக்கொண்ட பாசுரம் முழுவதையும் காண்போம்.

''வங்கத்தால் மாமணிவந் துந்து முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சி ஊராய்! பேராய்!
கொங்குத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்
பங்கத்தாய் ! பாற்கடலாய் ! பாரின் மேலாய்!
பனிவரையின் உச்சியாய் ! பவள வண்ணா !
எங்குற்றாய்? எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனே உழிதர் கேனே.''[38]

*(வங்கம்-கப்பல்; முந்நீர்-கடல்; கச்சி ஊராய்- வெஃகாவில் உள்ள பெருமானே; பேராய்-திருப்பேர் நகரானே; கொங்கு-தேன்; அலங்கல்-மாலை; குலவரையன் மடப்பாவை-பார்வதி; பக்கத்தாய்-பக்கத்திலுள்ளவனே; பார்-பூமி (பூமியில் சஞ்சரித்தவன்); பனிவரை-திருமலை; உழிதருதல் - அலைதல்)*

*38. திருநெடுந் - 9.*

இந்தப் பாசுரத்தில் 'பவளவண்ணா' என்பதற்குப் 'பவளம்போல் விரும்பத் தக்கதான வடிவு படைத்தவனே' என்பதே பொருளாகத் தோன்றுகின்றது. **பெரியவாச்சான் பிள்ளை** வியாக்கியானத்திலும் இப்படித்தான் காணப்படுகின்றது. எனினும், ***பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்*** 'திருப்பவளவண்ணம் என்னும் திருப்பதியில் உறைபவனே!' என்றே பொருளாகக் கொண்டுள்ளார்கள். பெரியவாச்சான் பிள்ளைக்கு முற்பட்டவரும் **பராசரபட்டர்** திருவடிகளில் பணிந்துய்ந்தவருமான திவ்விய கவியின் திருவுள்ளத்தைத் தழுவியே இங்ஙனம் கூறுகின்றார்கள். நாமும் அதனை ஒப்புக்கொண்டு அத்திருப்பதி எம்பெருமானைச் சேவிக்க வருகின்றோம்.

இந்த எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுகமண்டலத்தோடு சேவை சாதிக்கின்றான். **பவளவண்ணன்** என்பது எம்பெருமானின் திருநாமம். தாயார் **பவளவல்லி நாச்சியார்**. இவரைச் சேவிக்கும்போது,

> ''பவள வண்ணா !
> எங்குற்றாய்? எம்பெருமான் உன்னை நாடி
> ஏழையேன் இங்ஙனமே உழிதர் கேனே''

என்று கூறிச் சேவிக்கின்றோம். ''எனக்கு முன்னால் உள்ள ஆழ்வார் பெருமக்களுக்கும் அகப்படாதவனே! உன்னை நாடி நான் அலைகின்றேன்'' என்ற திருமங்கை மன்னன் பெற்ற உணர்ச்சியை நாமும் பெற்றதாக எண்ணிய வண்ணம் வழிபடுகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் பாசுரமும் நம் சிந்தையில் எழுகின்றது.

> ''கண்டுஅறிந்தும், கேட்டுஅறிந்தும்,
> தொட்டுஅறிந்தும், காதலால்,
> உண்டுஅறிந்தும், மோந்துஅறிந்தும்,
> உய்யேனே-பண்டைத் தவளவண்ணா! கார்வண்ணா!
> சாமவண்ணா! கச்சிப் பவளவண்ணா! நின்பொற்
> பதம்.''[38]

*(பண்டை-கிருதயுகம்; தவளம்-பால்; கார்-மேகம்; சாமளம்-பச்சை நிறம்; பவளம் - சிவப்பு; பொன் பதம் அழகிய திருவடிகள்)*

*38. நூற். திருப். அந் - 86*

என பாசுரத்தை ஓதுகின்றோம். எம்பெருமான் நான்கு யுகங்களிலும் நான்கு நிறமாயிருக்கிறபடியைச் சாத்திரங்கள் பேசுகின்றன. அதனை உளங்கொண்டு அய்யங்கார் கூறுவதைச் சிந்திக்கின்றோம்.

"பாலின் நீர்மை, செம்பொன் நீர்மை,
பாசியின் பசும்புறம்
போலும் நீர்மை, பொற்புடைத் தடத்து
வண்டு விண்டுலாம்
நீல நீர்மை என்றிவைநிறைந்த
காலம் நான்குமாய்"[39]

என்ற திருமழிசைப் பிரானின் பாசுரப் பகுதியும்,

"திருவடிவில் கருநெடுமால் சேயன் என்றும்,
திரேதைக்கண் வளைஉருவாய்த் திகழ்ந்தான் என்றும்
பெருவடிவில் கடல்அமுதம் கொண்ட காலம்"[40]

(வளைஉரு-வெள்ளைநிறம்)

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரப் பகுதியும் அய்யங்கார் பாசுரத்திற்கு மூலமாக அமைந்திருப்பதையும் சிந்திக்கின்றோம். இந்த நிலையில் தீர்த்தம் திருத்துழாய் பெற்றுத் திரும்பு கின்றோம்.

இத்திருக்கோயிலுக்கருகில் **பச்சை வண்ணர்** சந்நிதி உள்ளது. அங்குச் சென்று அப்பெருமானையும் சேவிக்கின்றோம்.

***திருப்புட்குழி :*** இந்தத் திவ்விய தேசம் காஞ்சியிலிருந்து தென்மேற்குத் திசையில் சுமார் ஏழு கல் தொலைவிலுள்ளது. நெடுஞ்சாலையில் இறங்கி உட்புறமாகவுள்ள குறுக்குச் சாலையின் வழியாக நான்கு ஃபர்லாங்கு தூரம் நடந்து சென்று இத்திருப்பதியை அடைதல் வேண்டும். **பெரிய உடையார்** என்று வழங்கப்பெறும் சடாயு சீதாப்பிராட்டியை இராவணன் கவர்ந்து கொண்டு சென்றபொழுது அவனை வழிமறித்து அவனுடன் கடும்போர் விளைத்தபொழுது இராவணன் சங்கரன் அளித்த வாளால் அவருடைய சிறகுகளைவெட்டி வீழ்த்தி அவனைக் குற்றுயிராக விட்டுச் சென்றான் என்றும், சீதையைத் தேடிவந்த இராமலக்குமணர்கள் சடாயுவைக் கண்டனர் என்றும்,

*39. திருச். விருத் -44* *40. திருநெடுந் - 3.*

அவர்களிடம் அவர் இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற செய்தியை அறிவித்தவுடன் அவருடைய உயிர் திருமேனியி லிருந்து பிரிந்தது என்றும், அதன் பின்னர் அவர்கள் பெரியுவடை யாரின் திருமேனியை ஒரு குழியிலிட்டுத் தகனம் செய்து ஈமக்கடன்களை முறைப்படி செய்தனர் என்றும் இராமாயணத் தால் நாம் அறிவோம். சடாயுவைத் தகனம் செய்த கோலத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலமாதல் பற்றி இத்தலம் *'திருப்புட்குழி'* [41] என்ற பெயர் பெற்றது என்பர்.

திருமங்கையாழ்வார் ஒருவர் மட்டிலுமே இந்த எம்பெரு மானை மங்களாசாசனம் செய்துள்ளார். திருவிட எந்தை எம்பெரு மானைத் தாய்ப்பாசுரமாக மங்களாசாசனம் செய்யும் பொழுது "புலங்கெழு பொரு நீர் புட்குழி பாடும்"[42] என்று குறிப்பிடு கின்றார். "என்மகள் திருப்புட்குழி என்னும் திருப்பதியின் நீர் வளங்களைப்பற்றிப் பாட்டுகள் பாடாநின்றாள்" என்று பராங்குச நாயகியின் நிலையைக் குறிப்பிடுகின்றாள் அவளுடைய திருத்தாயார்.[43] பெரிய திருமடலில் ஆழ்வார் இத்தலத்து எம்பெரு மானைப் 'புட்குழி எம்போரேற்றை'[44] என்று குறிப்பிடுகின்றார். இத்தலத்தில் கிழக்கே திருமுகமண்டலங் கொண்டு வீற்றிருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் **விஜயராகவப் பெருமானையும்,** அவரது இடப்பக்கத்தில் நின்ற திருக்கோலத்தில் காட்சிதரும் **மரகதவல்லி நாச்சியாரையும்** நாம் வணங்குகின்றோம். இந்த இருவருடைய திவ்விய மங்கள விக்கிரகங்களும் மிக அற்புத மானவை; கண்டோரைப் புளகாங்கிதம் செய்ய வல்லவை.

இந்த எம்பெருமானைச் சேவித்த நிலையில் திவ்விய கவியின் பாடலும் நினைவுக்கு வருகின்றது.

"மால்வேழ மும்,அரவும், மாயையும்வெற் பும்,கடலும்,
மேல்வீழ் படையும் விடமும்போய்ப்-பாலன்
நெருப்புஉள் குழிகுளிர நின்றதும்கேட்(டு) ஓதார்
திருப்புட் குழிஅமலன் சீர்."[45]

41. புள்-சடாயு. 42. பெரி. திரு - 2.7:8
43. பராங்குச நாயகியின் நிலையை 12-ஆவது கட்டுரையில் காண்க.
44. பெரிய திருமடல்-கண்ணி 117. போரில் காளை - போன்றவன்.108)
45. நூற். திருப். அந்-88

(மால் வேழம்-பெரி மதயானை; அரவு-பாம்பு; மாயை-சம்பரமாயை; வெற்பு - மலை; மேல்வீழ்படை-வாள் முதலியவை; விடம்-நஞ்சு; பாலன்- பிரகாலதன்; குழி - பள்ளம்; ஓதார்-கூறார்; சீர்-சிறப்புக்கள்)

என்ற அப்பாசுரத்தையும் சேவிக்கின்றோம். 'எம்பெருமானுடைய திருவடிகளையே சரணமாக நம்பியிருந்த பிரகலாதன் தன் தந்தையின் சூழ்ச்சியால் தோன்றிய போராபத்துக் களினின்றும் நீங்கியதைக் கேட்டறிந்தும் அறியாமையில் ஆழங்கால்பட்டுள்ள இவ்வுலகத்து மக்கள் அப்பெருமானது அந்த கல்யான குணங்களை அநுசந்தித்து நற்கதிபெறாது அறிகின்றனரே' என்று கழிவிரக்கம் கொண்டு கூறும் அய்யங்காரின் திருவுள்ளத்தைப் போற்றுகின்றோம்.

தைத் திங்களில் (சனவரியில்) நடைபெறும் தெப்ப உற்சவம் சிறப்பு வாய்ந்தது; பக்த கோடிகளை ஈர்ப்பது. 'சடாயு தீர்த்தம்' என்று வழங்கப்பெறும் புஷ்கரணியில்தான் இது நடைபெறுகின்றது. இதன் கரையில் பெரிய உடையாருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. அமாவாசை தோறும் சிறப்பான வழிபாடு உண்டு. அதிகமான பக்தர்கள் வந்து எம்பெருமானைச் சேவிப்பர்.

மேலே கூறப்பெற்ற காஞ்சியிலுள்ள ஆறு திவ்விய தேசங்களுள் திருப்பாடகம், திருவேளுக்கை, திருத்தண்கா, திருப்பவள வண்ணம் ஆகிய நான்கிலும் எம்பெருமான்கள் தனித் திருக்கோயில்களில் சுதந்திரமாக எழுந்தருளிச் சேவை சாதிக் கின்றனர். திருநிலாத் திங்கள் துண்டத்து எம்பெருமான் ஏகாம்பர நாதர் திருக்கோயிலிலும், திருக்கள்வனூர் எம்பெருமான் காமாட்சி அன்னையின் திருக்கோயிலிலும் ஒண்டுக் குடித்தனமாக எழுந்தருளி, சைவர்களிடம் கைங்கர்யம் பெற்றுக் கொண்டு சேவை சாதிக்கின்றனர். இந்த இரண்டு எம்பெருமான்களும் திருமாலை வணங்காத சில சைவர்களுக்குக் காட்சி தந்து அவர்களை உய்விக்கவே அங்கு எழுந்தருளியுள்ளனர் போலும்! இந்த எண்ணம் நம் சிந்தையில் அலைபாய்ந்த வண்ணம் நம் இருப்பிடத்தை அடைகின்றோம்.

''மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.''[46]

என்ற **தாயுமான அடிகளின்** திருவாக்கை எண்ணிய வண்ணம் ஒய்வு பெறுகின்றோம்.

❖ ❖ ❖

46. தா.பா: பராபரக் கண்ணி - 156.

# 7. திருக்கடிகை அக்காரக்கனி

இறைவன் தன் ஞானசக்தியினால் எங்கும் பரவி எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி நிற்கின்றான். அந்த ஞான சக்தியினாலேயே எல்லாப்பொருள்களுள்ளும் நிறைந்து விளங்கு கின்றான். வைணவ சமயத்தில் இறைவனின் இவ்விருதன்மை களும் 'வியாபகத்துவம்', 'அந்தர்யாமித்துவம்' என்று வழங்கப் பெறும். இவ்விரண்டுமே திருமந்திரத்தின் 'நாராயண' என்ற சொல்லின் சிறப்புப் பொருள்களாகும். நம்மாழ்வாரின்,

"அறிகிலேன் தன்னுள் அனைத்துலகும் நிற்க
நெறிமையால் தானும் அவற்றுள் நிற் கும்பிரான்"[1]

(நெறிமையால் - சேஷ - சேஷி பாவமாகின்ற முறை தவறாமல்)

என்ற திருவாய்மொழிப் பாசுரப்பகுதி இதனை நன்கு விளக்குகின்றது. 'தன்னுள் அனைத்துலகும் நிற்க' என்றது வியாபகத் தன்மையை. 'தானும் அவற்றுள் நிற்கும் பிரான்' என்பது அந்தர்யாமியாம் நிலைமையை. இங்ஙனம் அந்தர்யாமியாக இருக்கும் நிலைமையைக் கொண்டு அவனே எல்லாப் பொருள்களாகவும் இருக்கின்றான் என்று கூறுவதும் உண்டு.

"அனைத்தும் நீ அனைத்துப் பொருளும் நீ"[2]

என்ற பரிபாடல் அடியினால் இதனை அறியலாம்.

இங்ஙனம் எங்கும் பரவிநிற்கும் முதற்பொருளாகிய இறைவன் அடியார்களின் துன்பங்களைக் களைந்து அவர்க்கு வேண்டுவன செய்யும்பொருட்டு இராமன், கிருஷ்ணன் முதலிய அவதாரங்களை மேற்கொள்ளுகின்றான். நாம் நல்வினை தீவினை இவற்றின் வயப்பட்டு அவற்றின் பயனை அநுபவிப்ப தற்கென்றே பிறக்கின்றோம்; அங்ஙனம் நம்மைப் பிறப்பிக் கின்றவன் இறைவன். ஆனால், இறைவனோ "பிறப்பில் பல்பிறவிப் பெருமான்."[3] 'பிறப்பில்லாதவர்' என்றது

1. திருவாய் - 9.6:4 2. பரிபாடல் -8: அடி - 68.

நம்மைப்போல் வினை காரணமாகப் பிறக்குந் தன்மை யில்லாதவர் என்பதைக் குறிக்கின்றது. ஆனால், அடியார்களின் பொருட்டுப் பல பிறப்புக்களை மேற்கொள்பவராதலின் 'பல்பிறவிப் பெருமான்' என்று குறிப்பிடப் பெறுகின்றார். அவரை அங்ஙனம் பிறக்கும்படிச் செய்த தலைவர் ஒருவரும் இல்லை என்பது ஈண்டு அறியத்தக்கது. இக்கருத்தினை,

"முதன்முறை இடைமுறை
கடைமுறைத் தொழிலில்
பிறவாப் பிறப்பிலை
பிறப்பித்தோர் இலையே"[4]

என்ற பரிபாடல் பகுதி தெளிவாக விளக்கி நின்கின்றது.

எம்பெருமான் அடியார்களின் பொருட்டு எடுத்த அவதா ரங்களுள் நரசிம்மாவதாரம் பார்ப்பவர்களின் உள்ளங்களில் அச்சத்தை விளைவிக்க வல்லது. மனித உடலும் சிங்க முகமும் கொண்ட உருவ மாதலின் அவ்வுருவம் கண்டவரை யெல்லாம் அஞ்சும்படி செய்கின்றது. இந்த அவதாரம் 'பரம்பொருள் எங்கும் உளன்' என்ற தத்துவத்தை விளக்கி நிற்கின்றது.

"எங்கும் உளன்கண்ணன்'
என்றமக னைக்காய்ந்து
'இங்கில்லை யால்'என்(று)
இரணியன் தூண்புடைப்ப
அங்(கு)அப் பொழுதே
அவன்வீயத் தோன்றிய,என்
சிங்கப் பிரான்பெருமை
ஆராயும் சீர்மைத்தே."[5]

(கண்ணன் - இறைவன்; மகன் - பிரகலாதன்; காய்ந்து - கோபித்து; புடைப்ப - அறைய; வீய - இறக்க; சீர்மைத்தே - தன்மையதோ?)

என்பது நம்மாழ்வாரின் பாசுரம். இதில் இத்தத்துவத்தின் விளக்கத்தைக் காணலாம். இந்தச் சிங்கப்பிரான் பிறந்த காட்சியைக் கம்பன் மிக அழகாகக் காட்டுகின்றான்.

3. திருவாய் - 2.9:6
4. பரிபாடல் - 3, அடி- 71-72
5. திருவாய் - 2.8:9

நசைதிறந்(து) இலங்கப் பொங்கி
நன்றுநன்(று) என்ன நக்கு
விசைதிறந்(து) உருமு வீழ்ந்த(து)
என்னவே தூணின் வென்றி
இசைதிறந்(து) உயர்ந்த கையால்
எற்றினன்; எற்ற லோடும்
திசைதிறந்(து) அண்டம் கீறிச்
சிரித்தது செங்கட் சீயம்.''[6]

*(நசை, இலக்கணையால் பரிகாசக் கருத்து என்று பொருளது. நசை - விருப்பம் (பிரகலாதனது பேச்சைச் சோதிப்பது); நக்கு - சிரித்து; விசை - வேகம்; உருமு - இடி; இசை - புகழ்; எற்றினன் - அறைந்தான்; திசை - திக்கு; செங்கண் - சிவந்த கண்களையுடைய)*

என்ற பாடலில் இதனைக் காண்க. சிங்கப்பிரான் சிரித்த காட்சியே நம்மைத் துணுக்குறச் செய்கின்றது. அப்பெருமான் கொண்ட பேருருவம் எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்று சொல்லத் தேவை இல்லை.

அச்சத்தரும் இந்த நரசிம்ம மூர்த்தியைச் சாந்த மூர்த்தியாகவும் கண்டு களிக்க அவாவுற்றனர் கலைஞர்கள். ஆகவே, அவர்கள் பெரிய பிராட்டியாரை நரசிம்மனது மடியில் இருத்தி இலக்குமி-நரசிம்மனாகக் கண்டு மகிழ்ந்துள்ளனர். யோக நிலையில் இருந்து கொண்டு எப்பொழுதும் மக்களுக்கு அருள் புரியும் நிலையில் அவனைக் காணவும் ஆசைப்பட்டனர். அந்த ஆசை தீர அவனை யோக நரசிம்மனாகப் படைத்து, சாந்த நிலையில் கண்டு களித்துள்ளனர். இந்தச் சாந்த நிலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசமே **சோழ சிங்கபுரம்** என்பது. இந்தச் சோழசிங்கபுரமே 'சோளங்கிபுரம்' என்றும், 'சோளிங்கர்' என்றும் வழங்கி வருகின்றது. இது வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருத்தணி-சித்தூர் நெடுஞ்சாலையில் திருத்தணியிலிருந்து சுமார் இருபது கல் தொலைவிலுள்ள ஓர் அழகான பெரிய ஊராகும்.

பண்டைக் காலத்தில் இவ்வூருக்கு வழங்கி வந்த பெயர் 'கடிகாசலம்' என்பது. 'கடிகை' என்றே ஆழ்வார்கள் இத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளனர். 'கடிகை' என்ற சொல்லுக்கு 'நாழிகை' என்பது பொருள். பிரகலாதனுடைய மகிழ்ச்சியின் பொருட்டு ஒரு நாழிகை நேரம் இத்தலத்தில் யோக நிலையில்

6. கம்பரா. யுத்தகாண் - இரணியன் வதைப் - 127.

நரசிம்மன் தோன்றிய காரணத்தால் இது ‘கடிகாசலம்’ என்ற பெயரால் வழங்கி வருவதாகக் கூறுவர் பெரியோர். நாம் ஒரு நாழிகைக் காலம் இத்தலத்தில் தங்கியிருந்தாலும் நமக்கு முக்தி கிடைக்கும் என்பதாகச் செவி வழிச்செய்தியால் அறிகின்றோம். இதனால் இத்தலத்திற்குக் ‘கடிகை’ என்ற திருநாமமும் வழங்கலா யிற்று என்றும் அவர்கள் கூறுவர்.

முதல் நாள் திருத்தணி முருகனைச் சேவித்த நாம் மறுநாள் அதிகாலையில் நன்னீராடித் தூய ஆடைகளை அணிந்து கொண்டு இத்தலத்திற்குப் புறப்பட ஆயத்தமாகின்றோம். இஃது அரக்கோணம், சித்தூர், திருத்தணி முதலியவற்றின் நடுவில் அமைந்து தமிழகத்தின் தற்போதைய வடஎல்லையாக உள்ளது. திருத்தணியிலிருந்து இவ்வூருக்குப் பேருந்து வசதி உண்டு. அதிகாலையில் ஐந்தரை மணிக்குப் பேருந்து நிலையத்திற்கு வந்து வண்டி ஏறுகின்றோம். சுமார் ஒன்றரை மணி நேரத்தில் பேருந்து சோழசிங்கபுரத்தை அடைகின்றது. சோழநாட்டைப் போலவே தொண்டை நாட்டிடையில் நரசிங்கப் பெருமான் தங்குவதற்குச் சிறந்த இடமாக இருப்பதனால் இவ்வூர் ‘சோழசிங்கபுரம்’ என்று பெயர் பெற்றது என்பர் ஒருசாரார். பிற்காலச் சோழமன்னர்களில் ஒருவன் இங்குச் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து கோயில் ஒன்றை எழுப்பியதால் இவ்வூர் ‘சோழலிங்கபுரம்’என்று வழங்கலாயிற்று என்றும், அப்பெயரே நாளடைவில் ‘சோழசிங்கபுரம்’ என்று திரிபடைந்தது என்றும் கூறுவர் பிறிதொருசாரார். ஊரின் நடுவிலேயுள்ள சிவாலயம் ஒன்றை இதற்குச் சான்றாகவும் காட்டுவர் இவர்கள். எனினும், இன்று நரசிம்மமூர்த்தியே பெரும்புகழ் பெற்றிருப்பதனால், நாம் இத்தலம் ‘சோழசிங்கபுரம்’ என்று வழங்குவதையே சிறப்பாகக் கொள்வோம்.

சங்ககாலத்தில் தமிழகத்தில் சோழநாட்டை ஆண்டு வந்தவன் கரிகாற் பெருவளத்தான் என்று வழங்கப்பெறும் கரிகாற்சோழன்; ‘பட்டினப்பாலை’ என்றும் பாட்டின் பாட்டுடைத் தலைவன். இவனுடைய காலம் கி.மு. முதல் நூற்றாண்டு என்றும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்றும் கூறுவர். இவன் சோழவள நாட்டை 48 கோட்டங்களாகப் பிரித்தான் என்றும், அவற்றுள் கடிகையைச் சேர்ந்த பகுதி முழுவதும் கடிகைக் கோட்டம் என்று வழங்கப்பெற்றது என்றும் அறிகின்றோம். பல்லவர்கள் காலத்தில் (கி.பி.650-750) இப்பகுதி

பல கலைகளையும் வடமொழியையும் கற்பிக்கும் இடமாக - பல்கலைக் கழகமாக-வழங்கி வந்தது என்பதையும் தெரிந்து கொள்ளுகின்றோம்.

ஆழ்வார்கள் வாழ்ந்த காலத்தில் இத்திவ்விய தேசம் மிகவும் வளம் பெற்றிருந்தது. அடர்ந்து நெருங்கியிக்கும் எழில் மிகுந்த சோலைகள், நறுமணம் மிக்க நந்தவனங்கள், பல்வேறு விதமாகப் படர்ந்துள்ள கொடிகள், இவற்றிடையே 'தென்னாதென' என்று இன்னோசை செய்து கொண்டிருக்கும் வண்டுகள் - இவை பேயாழ்வார் அன்று கண்ட காட்சிகள்.

> "பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
> கொண்டங் குறைவார்க்குக் கோயிலபோல் - வண்டு
> வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
> இளங்குமரன் தன்விண் நகர்"[7]

(பண்டு - தன்னை ஆட்கொள்வதற்கு முன்பு; கொண்டு-இருப்பிடமாகக் கொண்டு; உறைவார் - வாசம் செய்பவர்; வளம் கிளரும் - திரள் மிக்கருக்கும்; நீள் - பரந்த; வண்பூ - அழகிய பூக்களையுடைய; இளங்குமரன் - என்றும் இளையவனாக இருப்பவன்)

என்பது பேயாழ்வாரின் பாசுரம். பாசுரத்தின் 'வண்டு, வளங்கிளரும் நீள் சோலை வண்பூங் கடிகை' என்ற பகுதியால் இத்தலத்தின் பண்டைய நிலைமையை அறியலாம். வைகுண்டபதியான எம்பெருமானுக்குத் திருப்பாற்கடல், திருவேங்கடம், திருக்கடிகை முதலிய திருப்பதிகள் கோயிலாக அமைந்திருந்தன; இப்போது அவன் தன் நெஞ்சம் ஒன்றையே கோயிலாகக் கொண்டு விட்டான் என்பதாகப் பேசுகின்றார் ஆழ்வார். இப்பாசுரத்திற்கு இன்னொரு விதமாகவும் பொருள் கூறலாம். திருப்பாற்கடல், திருவேங்கடம் முதலிய திருப்பதிகளை விட வண்டுவளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகையிலே அதிகமாக அன்புகொண்டு அஃதொன்றையே தன் இருப்பிடமாகக் கொண்டுவிட்டான் என்பதாகவும் கொள்ளலாம்.

பேருந்தினின்றும் இறங்கியவுடன் மலையைநோக்கி நடக்கின்றோம். திருத்தணி- சோளிங்கர்-அரக்கோணம் பெருஞ் சாலை வழியாக நடந்து அதிலிருந்து பிரியும் சிறு சாலை வழியாக மலையடிவாரத்தை அடைகின்றோம். இந்த அடிவாரப்பகுதி ***'கொண்ட பாளையம்'*** என்று வழங்கப்பெறுகின்றது. தெலுங்கும்

7. மூன். திருவந் - 61.

தமிழும் கலந்து நிலவும் பகுதியாதலால் 'மலை' என்று பொருள்படும் 'கொண்ட' என்றதெலுங்குச் சொல்லும், 'பாளையம்' என்ற தமிழ்ச் சொல்லும் காதல் மணம் பூண்டு ஊர்ப்பெயராக அமைந்து கிடக்கின்றது. கொண்ட பாளையத்தில்[8] தேவஸ்தான ஆட்சிப் பொறுப்பிலுள்ள ராயாஜி அன்னதானச் சத்திரத்தில் தங்கி ஒருமைல் தொலைவிற்குமேல் வழிநடந்த களைப்பைப் போக்கிக் கொள்கின்றோம்.

கொண்டபாளையத்திலிருந்து மலையை அண்ணாந்து நோக்கினால் "இந்த மலையில் எப்படி ஏறுவது?" என்ற பிரமிப்பு முதலில் எவருக்கும் ஏற்படுவது இயல்பு. திருக்கோயில் அமைந்திருக்கும் மலை அதிக உயரமானதாக இல்லாவிடினும் அதற்கு முன்புறமாக நீண்டுவளர்ந்து நிமிர்ந்து நிற்கும் இன்னொரு மலைதான் இந்த 'மலைப்பை' உண்டாக்கும். இம் மலையைப் பற்றி அப்பகுதி மக்களிடம் ஒரு செவி வழிச் செய்தி நிலவி வருகின்றது. **பைரவர்** என்ற முனிவர் ஆணையின்படி இக்குன்று வளர்ந்து கொண்டே போயிற்றென்றும், அதன் வளர்ச்சி தேவ லோகத்தையே முட்டிவிடும் என்று எண்ணிய தேவேந்திரன் பலராமனைக்கொண்டு அதன் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தினான் என்றும், அதனால் தான் அது அம்மட்டோடு நின்று விட்டதென்றும் கூறுகின்றனர். உடல்நிலை காரணமாக மலைமேல் ஏறுவதற்கு மலைப்புத் தட்டுபவர்கட்கு **'டோலி'** வசதி செய்யப் பெற்றுள்ளது. ஏழு வெண் பொற்காசுகள் தந்தால் எளிதாக மலை உச்சியை அடைந்து திரும்பலாம்.

யோக நரசிம்மனது திருக்கோயில் சற்றேறக்குறைய நானூறு அடி உயரமுள்ள ஒரு மலைமீ துள்ளது. இது 'பெரியமலை' என்று வழங்கப்பெறுகின்றது. எந்தத் திக்கிலிருந்து கோயிலை நெருங்கினாலும் கோயிலும் மலையும் பத்து மைல் தூரம் கண்ணுக்குத் தட்டுப்படும். முதன் முதலாக ***ராயாஜி*** என்பாரால் மலைமேலுள்ள கோயிலுக்குப் படிக்கட்டுகள் அமைக்கப் பெற்றன என்று அறிகின்றோம். இப்படிக்கட்டுகள் மிகவும் கரடுமுரடாக இருந்தனவாதலால் இன்று பல அன்பர்களின் நன்கொடையினால் அகலமான புதிய படிகள் கட்டப் பெற்றுள்ளன. மலை ஏறுபவர்கட்கு அதிகக் களைப்பும் சோர்வும் ஏற்படாதிருக்கும் பொருட்டு இவற்றைச் சுற்றி வளைத்துக்

8. கொண்ட பாளையத்தில் தனியார் பொறுப்பில் 29 சத்திரங்கள் உள்ளன.

கட்டியுள்ளனர். இந்தப் படிக்கட்டுகளின் வழியாக ஏறுவது எளிதாக இருந்த போதிலும் காலை பதினொரு மணிக்குள் ஏறி மாலை ஐந்து மணிக்குமேல் இறங்குவது சிறப்பாகும். படி வழியில் நிழல் தரும் மரம் செடிகள் இல்லையாதலின் இவற்றிற்கு இடைப்பட்ட நண்பகல் வேளையில் கதிரவன் வெப்பத்தினால் படிகள் சூடேறிக் கொண்டிருக்கும்; ஏறுபர்களின் பாதங்களைத் தகித்துக் கொப்புளங்கள் தோன்றிவிடும்.

அடிவாரத்திலிருந்து பெரிய மலையின் உச்சியை அடையவேண்டுமாயின் ஆயிரத்திற்கு மேற்பட்ட படிகள் ஏறிச்செல்லுதல் வேண்டும். அங்ஙனம் ஏறிச்சொல்லும் நாம் திருக்கோயிலின் முதல் வாயில் வடக்கு நோக்கியிருப்பதைக் காண்கின்றோம். இந்த வாயிலைக் கடந்து கோயிலை வலமாகச் சுற்றிக்கொண்டு உள்ளே சென்றால் கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு வீற்றிருக்கும் திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் **யோக நரசிம்மரைக்** காண்கின்றோம். தனிச் சந்நிதியில் கோயில் கொண்டுள்ள **அமிர்தவல்லித் தாயாரையும்** பார்க்கின்றோம். இந்த எம்பெருமானைத் திருமங்கையாழ்வாரும்'' பேயாழ்வாரும்[10] மங்களாசாசனம் செய்துள்ளனர். பேயாழ்வாரின் பாசுரத்தை மேலே கண்டோம். நாலாயிரம் பாசுரங்கள் கொண்ட நூலில் கடிகை நரசிம்மனைப் பற்றிய முழுப்பாசுரம் ஒன்றே ஒன்றுதான் காணப்பெறுகின்றது. அப்பாசுரத்தை அருளியுள்ளவர் திருமங்கையாழ்வார். ஒரு பாசுரம் என்றாலும் ஒப்பற்றதாக விளங்குவது அது. எத்தனை தரம் வேண்டுமானாலும் அதனை ஓதி ஓதி உளங்கரையலாம்.

''மிக்கானை மறையாய்விரிந்த
    விளக்கை, என்னுள்
புக்கானைப் புகழ்சேர்
    பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத்
    தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை
    அடைந்(து) உய்ந்து போனேனே.''[11]

9. பெரி. திரு. 8.9:4; சிறிய திருமடல் -கண்ணி - 73.
10. மூன். திருவந். - 61. 11. பெரி. திரு. 8.9:4.

(மிக்கான் - சிறந்தவன்; மறை - வேதம்; புகழ் - கீர்த்தி; பொலிகின்ற - விளங்கு கின்ற; தக்கான - தகவுடையவன்; அக்காரம் - வெல்லக்கட்டி; உய்ந்து - பிழைத்து)

என்பது ஆழ்வார் பாசுரம். இந்த எம்பெருமான் எப்பொழுதும் மாலை அலங்காரத்துடன் இருப்பவன். கம்பீரமான உருவத்தன்; கண்களிலே சாந்தம் நிலவும் தன்மையன். இதனால்தான் ஆழ்வாரும் 'தக்கான்' (தக்க பெருமையையுடைய பரமதயாளு) என்றும், அநுபவிப்பவர்கட்கு அவன் வெல்லம்போல் இனிப்புள்ள கனியாக விளங்குகின்றான் என்றும் இத்தலத்து எம்பெருமானைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். வெல்லக் கட்டியையே விதையாகக் கொண்டு ஒரு மரத்தை யுண்டாக்கி அதில் பழம் பழுத்தால் எவ்வளவு இனிப்பாக இருக்குமோ அவ்வளவு இனிமை மிகுந்தவன் எம்பெருமான் என்பது ஆழ்வாரது திருவுள்ளம். 'தக்கான்' என்பதும், 'அக்காரக்கனி' என்பதும் இத்தலத்து எம்பெருமானுக்கு ஆழ்வார் சூட்டின திருநாமங்களாகும்.

எம்பெருமானார் (இராமாநுசர்) இத்தலத்திற்கு எழுந் தருளினபோது நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரத்தைக் கொண்டு இங்குள்ள எம்பெருமானை மங்களாசாசனம் செய்த தாக வரலாறு உண்டு. அப்பாசுரம்:

> ''எக்காலத் தெந்தையாய் என்னுள் மன்னில்,மற்(று)
> எக்கா லத்திலும் யாதொன்றும் வேண்டேன்
> மிக்கார் வேத விமலர் விழுங்கும்,என்
> அக்காரக் கனியே! உன்னை யானே.''[12]

(மன்னில் - பொருந்தியிருக்கப்பெறில்; மிக்கார் - சிறந்தவர்; வேத விமலர் - வேதம் வல்ல பரமைகாந்திகள்; விழுங்கும் - 'வாரிக்கொண்ட உன்மனை விழுங்கும் காணில்' என்பதுபோல் விழுங்குதல்)

இதில் எம்பெருமானோடு சேரப்பேறும் பேற்றினைத் தவிர வேறொன்றையும் தாம் விரும்பவில்லை என்று தம் திருவுள்ளத்தைப் புலப்படுத்துகின்றார் ஆழ்வார்.

இந்த இரண்டு பாசுரங்களையும் அவன் சந்நிதியிலேயே ஓதி ஓதி உளங்கரைந்து தக்கானையும் தாயாரையும் சேவித்து, பிரசாதங்களைப் பெற்றுத் திரும்புகின்றோம்; அடிவாரத்திற்கே வந்துவிடுகின்றோம். அடுத்து, பக்கத்தில் **சின்னமலை** எனப்படும்

*12. திருவாய். 2-9:8.*

குன்றில் தக்கானுக்கும் மிக்கானாக விளங்கும் **யோக ஆஞ்சநேயர்** திருக்கோயில் கொண்டிருக்கும் மலையை நோக்கி நடக்கின்றோம். அந்தக் குன்றினையுடைய அடிவாரத்தில் சிறிது தூரம் நடந்து சுமார் 200 அடி உயரமுள்ள மலையில் படிகளின் வழியே ஏறிப்போதல் வேண்டும். இந்த மலையிலுள்ள படிகள் புதுப்பிக்கப்பெறவில்லை. 'கவிநாயகனின்' பிரதான வாயிலும் வடக்கு நோக்கியே அமைக்கப் பெற்றுள்ளது. ஆயினும், கோயிலினுள் அவனது சந்நிதி மேற்கு நோக்கிய வண்ணம் உள்ளது. தம்முடைய நாயகனாகிய நரசிம்மனை எதிர் நோக்கிய வண்ணம், தம்முடைய வீர உணர்ச்சியை யெல்லாம் உள்ளடக்கிக் கொண்டு, தமது தலைவனைப் போலவே **யோக நிலையில்** எழுந்தருளியுள்ளார் இராமதூதர். யோக நிலையிலுள்ள அஞ்சனை மைந்தனை இத்தலத்தைத் தவிர பிற இடங்களில் காண்டல் அரிது என்று சொல்லுகின்றனர்.

இந்த யோக மூர்த்தியைப் பற்றிய ஒரு புராண வரலாறு உண்டு; ஒரு சமயம் **இந்திரத்துய்மன்** என்ற அரசன் வடமதுரையை ஆண்டுவந்தான். ஒரு நாள் வேட்டையாடிய அவன் ஒரு மானைக் கண்டு அம்பும் கையுமாக அதனைப் பின்தொடர்ந்து மான் கணங்கள் இருக்கும் இடத்தை வந்தடைந்தான். மன்னனைக் கண்ட மான் கணங்கள் மருண்டு புல்மேய்தலை மறந்து, மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர, அசையாத பதுமைகள் போல் திகைத்து நின்றன. அந்நிலையைக் கண்ட அரசன் அம்பெய்யச் சிறிது தயங்கி நின்றான். அவ்வளவில் ஒரு பெண்மான் 'அம்பெய்ய வேண்டாம்' என்று இறைஞ்சி வேண்டியது. அரசன் தன் செயல்மீது வெறுப்புற்று 'இனி வேட்டைமெற் செல்லுவதில்லை' என்று உறுதி கூறித் தன் நாடு திரும்பினான். பின்னர் ஒரு சமயம் **கும்போதரன்** என்ற அரக்கனுடைய கொடுமையையும் அவன் ஒழித்து இப்பகுதி மக்களைக் காப்பாற்றினான். இப்போருக்கு இந்திரன் தன் வச்சிராயுதத்தையும் தேரையும் அரசனுக்கு வழங்கினான். மற்ற தேவர்கள் அவனுக்கு வேண்டிய ஆயுதங்களையும் சேனைகளையும் தந்தனர். அவ்வளவில் யோக நரசிம்மனின் ஆணையால் ஆஞ்சநேயரும் நான்கு புயங்களுடன் சங்கும் ஆழியும் தரித்துக் கொண்டு அந்த அரசனுக்கு உதவியுள்ளார்; பின்னர் இந்த நிகழ்ச்சியின் நினைவாக சின்ன மலையில் கோயில்கொண்டு இன்றும் நமக்கு அதே நிலையில் சேவை சாதிக்கின்றார்.

எம்பெருமான் 'மருத்துவனாய் வந்த மாமணி வண்ணன்' என்பதை நாம் அறிவோம். அங்ஙனமே, சிறிய திருவடியும் மக்கள் பிணிதீர்க்கும் மருத்துவனாக நின்று பெரும்புகழ் பெற்றுள்ளார். பில்லி, சூனியம், பிணி, பிசாசம், ஏவல், தீராத நோய், பைத்தியம், மக்கட்பேறின்மை இவற்றால் பீடிக்கப்பெற்ற வர்கள் மலையின் மீதுள்ள அநுமந்த தீர்த்தத்தில் நீராடி அஞ்சநேயர் சந்நிதியை அடைந்துவிட்டால் போதும். ஏதோ சிறிது நேரம் ஆட்டம் போட்டாலும் அதன்பின் அமைதியாக உறங்கி விடுகின்றனர். உறங்கி எழுந்தால் பிணியும் நோயும் 'தீயினில் தூசுபோல்' மறைந்து விடுகின்றன. பற்றியிருக்கும் பேயும், பிசாசும் பெண்களைவிட்டு இறங்கி மலையைவிட்டே ஓடிவிடு கின்றன. நாடோறும் இத்தகைய பல நோயாளிகள், பெரும் பாலும் பெண்கள், இங்கு வந்து இங்குள்ள நரசிம்ம தீர்த்தம், அநுமந்த தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் (தக்கான் குளம்) முதலிய திருக்குளங்களில் நீராடி நியமங்களை அனுட்டிப்பதை இன்றும் நாம் காணலாம்.

பெரிய மலையிலுள்ள யோகநரசிம்மரும் சின்னமலை யிலுள்ள யோக ஆஞ்சநேயரும் நல்ல சிற்ப வடிவங்கள்; இவர்கள் இருவரும் மூலவர்களே. இன்னும் இவர்கள் செப்புச் சிலை வடிவில் உற்சவர்களாக உருவாகவில்லை. ஆதலால் உற்சங்கள் யாவும் சோழசிங்கபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பக்தவத் சலருக்கே நடைபெறுகின்றன. இந்த எம்பெருமான் பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார் இவர்களுடன் போகநிலையில் எழுந்தருளியுள்ளார். இந்தத் திவ்விய தேசத்தில் ''யோகமும் போகமும் ஒன்றிய நிலையில்'' எம்பெருமான்களைச் சேவிக்கும் பேறு பெறுவதில் உண்மையிலேயே ஒரு சிறப்பாகும்.

இந்தக் கோயிலின் அமைப்பு முறைகளையும், வேலைப் பாடுகளையும் கூர்ந்து நோக்கினால் இது நாயக்க மன்னர்கள் காலத்தில் கட்டப்பெற்றிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. விரிவான வெளிப் பிராகாரங்கள், மண்டபங்கள்முதலியன எல்லாம் இக்கோவிலில் அமைந்துள்ளன. ஆண்டில் பன்னிரண்டு மாதங்களிலும் ஏதோ ஒரு திருவிழா இத்தலத்தில் நடைபெற்ற வண்ணம் உள்ளது. இவையாவும் நடைபெறுவதற்குப் பல்வேறு தனியார் கட்டளைகள் உள்ளன. பெரிய மலையிலுள்ள தாயாருக்கு வெள்ளிக்கிழமைகள் தோறும் பஞ்சாமிர்தத் திருமஞ்சனம் நடைபெறும். கார்த்திகை மாதத்தில் பக்த கோடிகள்

திரளாகவந்து வழிபாடு நடத்துவர். அப்போது ஊரும் குன்றுகளும் திருக்கோவில்களும் எழிலுடன் திகழும். ஆஞ்சநேயருக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பான வழிபாடுகள் நடைபெறும். இவர் கோயிலில் படுத்து உறங்கினால் நற்கனவுகள் தோன்றும் என்றும், அவை பலிக்கும் என்றும் சொல்லுகின்றனர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் சோழசிங்கபுரம் ஒரு போர்க்களமாக இருந்ததாகவும் அறிகின்றோம். கி.பி.1781-இல் ஆங்கிலேயருக்கும் மைசூரை ஆண்ட ஐதர் அலிக்கும் ஏற்பட்ட **இரண்டாம் கர்நாடகப் போர்** இவ்வூரின் தென்பகுதியில் நடைபெற்றது. கூட் (Coote) என்ற படைத்தலைவன் தலைமையில் ஆங்கிலப் படையும் ஐதர் அலியின் படையும் கை கலந்தன என்றும் கூறப்பெறுகின்றது. போரில் மாண்ட முகம்மதிய சேனை வீரர்களின் சமாதி (கல்லறை) ஒன்று திருக்குளத்தின் (சீநிவாச புஷ்கரணி) எதிரில் இன்றும் காணப்பெறுகின்றது. இவர்களது நினைவுச் சின்னங்கள் இவ்வூரிலுள்ள ஆவணக்களரியில் (Sub-Registrar's Office) நின்ற வண்ணம் காட்சியளிக்கின்றன.

இந்தத்தலம் இரண்டு **ஆசாரியர்கள்** வாழ்ந்து திகழ்ந்த இடமாகும். மணவாள மாமுனிகளின் முக்கிய சீடர் **எறும்பியப்பா** என்பவர். இவர் இத்தலத்துக்குச் சுமார் 2 கல் தொலைவிலுள்ள எறும்பி என்ற ஊரில் பிறந்தவர். **வரதாச்சாரியர்** என்பது இவரது திருநாமம். அக்காலத்து மக்கள் இவரை 'அப்பா' என்றே அழைப்பது வழக்கம். ஆதலால் இவர் பிறந்த எறும்பி என்ற ஊரின் பெயரையும் சேர்த்து 'எறும்பி யப்பா' என்று வழங்கலாயினர். அவர் இத்தலத்து எம்பெருமானுக்குக் கைங்கரியம் புரிந்துள்ளார். இவர் கடிகை எம்பெருமானைக் குறித்து **'அமிர்த பலாவளி சதகம்'** என்ற இனிய நூலை வடமொழியில் அருளியுள்ளார். இவர் பெயரால் நிறுவப் பெற்றுள்ள 'எறும்பி அறநிலையத்தின் (Erumbi Special Trust) கட்டளையொன்றால் பங்குனி உத்தரதன்று 'ஹனுமத் ஜயந்தி' என்று உற்சவம் நடைபெற்று வருகின்றது.

இத்தலத்து எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்த இரண்டாவது ஆசாரியர் **தொட்டையாச்சாரியர்** என்பவர். இராமாநுசர் தாம் நிறுவிய வைணவக் கோட்பாடுகள் இந்நிலவுலகம் முழுவதும் தழைத்தோங்க நியமித்தருளிய 74 சிம்மாசனாதி

பதிகளில் முதல்வர் **முதலியாண்டான்** என்பதை நாம் அறிவோம். அவருடைய திருக்குமாரர் **கந்தாடையாண்டான்** என்பவர். அவரது வழித்தோன்றல்களில் பத்தாம் தலை முறையில் வந்தவர் **கந்தாடை தேவராசாசார்யர்.** அவரது திருக்குமாரர் **குமாரபெரியப் பங்கார்** என்பவர். இவரது மகனாரே சுவாமி தொட்டையாச் சாரியர். 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் பல வடமொழி நூல்களை அருளியுள்ளார். இவர் காஞ்சி வரதராசப் பெருமானிடம் அளவற்ற பக்தி கொண்டவர். இவர் 'வையம் கண்ட கச்சித் திருநாள்' என்று பெரும்புகழ் பெற்ற காஞ்சி தேவப்பெருமாள் வைகாசித் திருநாளுக்கு ஒவ்வோர் ஆண்டும் தவறாது எழுந்தருளுவது வழக்கம். ஒரு முறை திருமேனி பாங்கில்லாமையால் அங்குச் செல்ல முடியவில்லை. மூன்றாம் திருநாள் காலையில் காஞ்சி எம்பெருமானின் கருடசேவையை மனத்தில் எண்ணியவாறு தக்கான் குளக்கரையில் நித்திய கர்மாநுஷ்டானம் செய்த வண்ணம் வரதராசனை ஐந்து சுலோகங்கள் கொண்ட **'தேவராஜ பஞ்சகம்'** மூலம் துதித்துத் தம் ஆற்றாமையை வெளியிட்டார் என்றும், அவரது பக்தியை உவந்தருளிய எம்பெருமான் கருடன்மீது அவருக்குக் காட்சி அளித்தான் என்றும் வரலாறு ஒன்று உண்டு.

இவ்வரலாற்றின் நினைவாக இன்றும் காஞ்சி வைகாசித் திருநாள் கருடசேவையின்பொழுது தேவப்பெருமாள் கோபுர வாயிலில் சிறிது தாமதித்து நின்று கர்ப்பூர ஆரத்தி பெறுவது வழக்கமாக இருந்து வருகின்றது. இது சோழசிம்மபுரம் தொட்டையாச்சாரியருக்கு எம்பெருமான் கருடவாகனத்தி லிருந்து கொண்டு சேவை சாதிப்பதன் அறிகுறியாகும். இதே அறிகுறியாகத் தக்கான் குளக்கரையில் தேவப்பெருமாள் கருடவாகனராய்ச் சேவை சாதிப்பதை இன்றும் காணலாம். மேலும், காஞ்சியில் கருடசேவை நடைபெறும் அதே நேரத்தில் தக்கானுக்கும் கருடசேவை புறப்பாடு நடைபெறுகின்றது. அப்பொழுது தொட்டையாசாரிய சுவாமிக்குத் திருப்பரிவட்டம், திருமாலை, சடகோபன் முதலியன சாதிக்கப்பெற்று மங்களா சாசனப் புறப்பாடும் நடைபெற்று வருகின்றது.

இங்ஙனம் பல்வேறு செய்திகளை அறிந்த வண்ணம் யோக நிலையிலுள்ள இருமூர்த்திகளிடம் கொண்ட பக்திப் பெருக்குடன் இத்தல யாத்திரையை நிறைவு செய்கின்றோம்.

"சீர் அருளால் நம்மைத் திருத்தி,நாம் முன்அறியாக்
கூர்அறிவும் தந்து,அடிமை கொண்டதற்கே நேரே
ஒருகடிகை யும், மனமே! உள்ளுகிலாய்-முத்தி
தருகடிகை மாயவனைத் தான்"[13]

(கடிகை-நாழிகை; உள்ளுகிலாய்-நினைக்கின்றாய் இல்லை; முத்தி-மோட்சம்; கடிகை மாயவன்-யோக நரசிம்மன்)

என்ற திவ்விய கவி ***பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்*** அவர்களின் பாடலை மனமுருகிப் பாடி உளங்கரைந்த நிலையில் ஊரை நோக்கித் திரும்பிப் பேருந்து நிலையத்தை அடைகின்றோம்.

❉ ❉ ❉

13. நூற். திருப். அந்.-95

# 8. எவ்வுள் கிடக்கும் பெருமலை

"தேன்உடைக் கமலத்து அயனொடு தேவர்
சென்று சென்று இறைஞ்சிட, பெருகு
வானிடை முதுநீர்க கங்கையின் கரைமேல்"[1]

(கமலம்-தாமரை; அயன் நான்முகன்)

இருப்பது வதரிகாச்சிரமம். இங்ஙனம் திருமங்கையாழ்வரால் சிறப்பிக்கப்பெற்ற திருவதரிகாச்சிரமத்தில் சாலி ஹோத்ரர் என்ற மாமுனிவர் ஒருவர் இருந்தார். நீண்ட காலம் மகப்பேறு இன்றி இருந்த இவருடைய பெற்றோர்கட்குச் சாலியாகத்தின் பயனால் பிறந்தவராதலால் இவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று. சாலி என்பது சம்பாநெல். ஒரு ஹோமத்திற்கு இருபத்தெட்டு சாலி நெற்கள் வீதம் நாளொன்றுக்கு ஆயிரம் ஹோமம் செய்வதாயும், இப்படி ஓராண்டு அனுட்டிப்பதாகவும் சங்கற்பித்துக் கொண்டு செய்யப்பெற்ற ஹோமத்தின் பயனாகப் பிறந்தவர் இந்த முனிபுங்கவர்.

ஒரு சமயம் இம்முனிவர் மோட்சத்தை அடைய விருப்ப முடையவராகத் தவம் செய்ய உறுதி கொண்டு வீக்ஷாரண் யத்திற்கு[2] வந்து சேர்ந்தார். அவர் வந்து சேர்ந்த நாள் தை அமாவாசை. அன்று மாலை அங்குள்ள ஹ்ருத்தாபநாசன தீர்த்தத்தில் (மனநோய் தீர்க்கும் தீர்த்தம்) நீராடி ஓராண்டுக் காலம் பட்டினி கிடந்து மௌனத்துடன் தவம் செய்யவேண்டும் என்று சங்கற்பித்துக் கொண்டு தவத்தைத் தொடங்கினார் தீர்த்தத்தின் வடகரையில். நீண்ட நாள் உணவின்றி இருந்தாமையால் அவருடைய உடலும் மிகவும் இளைத்தது. அடுத்த தைஅமாவா சையும் வந்தது. அன்று அதிகாலை தொடங்கி பொறுக்கிச் சேர்த்த நெல்லை மூன்று பிடி அரிசியாக்கினார்; ஓராண்டுக் காலமாக

1. பெரி. திரு. 1.4:2.

2. இந்த வனத்தில் உலக இன்பத்தில் மண்டியிருக்கும் மனிதர்களுடைய ஊனக்கண்ணாலும் (மாமிஸ சக்ஷுஸ்) பகவான் எளிதாகப் பார்க்கப்படுவதால் 'வீக்ஷாரண்யம்' எனப்பெயர் பெற்றது; எம்பெருமானுடைய தரிசனத்தைக் தரும் வனம் என்பது இதன் பொருள்.

அனுட்டித்துவரும் மௌன விரதத்தையும் உபவாசத்தையும் அன்றுடன் நிறைவு செய்ய நினைத்தார். மக்கள் நடமாட்டம் இல்லாத ஒரு தனி இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கு அரிசியைச் சோறாக்கினார். அந்தச் சோற்றை ஆண்டவனுக்குப் படைத்து அதனை நான்கு கூறுகளாக்கி ஒரு கூறினை அதிதிக்காக வைத்து அதிதியை எதிர்நோக்கிய வண்ணம் காத்திருந்தார்.

அந்தச் சமயத்தில் எம்பெருமான் வயது முதிர்ந்த அந்தணர் வடிவங்கொண்டு, இடக்கையில் தண்டம், குடை இவற்றுடனும், வலக்கையில் கமண்டலத்துடனும், செருப்புக்காலுடனும் நீண்ட தூரம் பயணம் செய்து வருவதால் பசியினாலும் நீர்விடாயாலும் களைப்புற்ற நிலையில் தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்து கொண்டிருந்தார். அந்தக் கோலத்தில் வரும் அதிதியைக் கண்ட முனிவர் தரித்திரன் தனத்தைக் கண்டதைப்போல் களிப்புற்றார். அதிதியை முறைப்படி வணங்கி அவருக்கு அர்க்கியம், பாத்யம், ஆசமனீயங்கள் சமர்ப்பித்து நன்கு ஆராதித்து அவருடைய திருவடி கழுவிய தீர்த்தத்தை உண்டு அவரைக் கிழக்கு முகமாக வீற்றிருக்கச் செய்து அதிதியின் கூறான உணவை அவருக்கு இட்டார். கிழவரும் அதனை விரைவில் உண்டு மேலும் தேவையுள்ளவர்போல் காணப்பட்டார். முனிவரும் மூன்று கூறுகளையும் ஒவ்வொன்றாகப் படைத்தார். நான்காவது பகுதியை உண்டபின்னர்தான் பசியடங்கி மனநிறைவு கொண்டார் அதிதி.

உண்ட களைப்பு தொண்டனுக்கும் உண்டல்லவா? ஆகவே, வந்த அதிதி ''முனிவரே, எவ்வுள்ளில் (எந்த இடத்தில்) இளைப்புத் தீர நாம் உறங்கலாம்? அந்த இடத்தைக் காட்டும்'' என்று கேட்டார். முனிவர் தம்முடைய பர்ணசாலையைக் காட்டி ''இந்த உள்ளிலே திருக்கண் வளர்ந்தருள்க. அடியேன் தேவரீரின் அருகிலிருந்துகொண்டு திருக்கரத்தைப் பிடித்திடுகின்றேன்'' என்று விண்ணப்பித்து அவருடைய அருகில் அமர்ந்தார். அதிதியோ சயனித்துக் கொள்வதற்குத் தெற்குப் பக்கம் தலையைச் சாய்த்தார். கணநேரத்திற்குள் எம்பெருமான் முனிவருக்குத் தமது அசாதாரணமான திவ்விய மங்கள உருவத்தைக் காட்டி அவர் கோரிய சாயுச்சிய பதவியையும் அவருக்கு அளித்தார். அன்று முனிவருக்குக் காட்சி அளித்த அதே நிலையில் இன்றளவும் சயனித்துக் கிடக்கின்றார். நம் போலியருக்கும் சேவை சாதித் தருளுகின்றார். எம்பெருமான்

'தாம் சயனித்துக் கொள்ள வேண்டிய உள் எவ்வுள்?' என்று வினவ, முனிவரும் 'இவ்வுள்ளிலேயே திருக்கண் வளர்ந்தருள்க' என்று விண்ணப்பிக்க, எம்பெருமானும் அவ்விடத்தில் சயனித்துக் கிடந்தமையால் எம்பெருமானுக்கு ''எவ்வுள் கிடந்தான்'' என்று திருநாமம் வழங்கலாயிற்று. திருமங்கையாழ் வாரும் 'எவ்வுள் கிடந்தான்''[3] என்றும், 'எவ்வுள் பெருமலை'[4] என்றும் மங்களாசாசனம் செய்துள்ளார். திருமழிசைபிரானும்,

''நாகத்தணைக் குடந்தை வெஃகா திருவெவ்வுள்
நாகத்தணை அரங்கம் பேர் அன்பில்''[5]

என்று நாகத்தணைமேல் பள்ளிகொண்டிருக்கும் தலங்களாகக் கும்பகோணம், காஞ்சி சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில், திருவரங்கம், திருப்பேர் நகர் (கோவிலடி), அன்பில் முதலான இடங்களைக் குறிப்பிடுங்கால் திரு எவ்வுள்ளையும் சுட்டியுரைக்கின்றார்.

அந்தத் **'திரு எவ்வுள்'** என்ற திவ்விய தேசத்திற்கு இன்று நாம் புறப்படுகின்றோம். 'திரு எவ்வுள்ளூர்' என்று அன்று பெயர் பெற்ற தலம் இன்று திருவெள்ளூர் என்ற பெயரால் வழங்கி வருகின்றது. 'திரு எவ்வுள்ளூர்' என்ற பெயர் .மருவி 'திருவெள்ளூர்' எனத் திரிந்து வழங்கி வந்திருக்கவேண்டும் என்று தோன்றுகின்றது. தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத் திரண்டில் இதுவும் ஒன்று. இது சென்னைக்கு வடமேற்கில் 30 கல் தொலைவில் உள்ளது. சென்னை அரக்கோணம் தென்னிந்திய இருப்பூர்தி வழியில் திருவெள்ளூர் நிலையத்திலிருந்து இரண்டு கல் தூரத்தில் உள்ளது. நிலையத்திலிருந்து பேருந்து வசதி உண்டு. குதிரை வண்டி, மாட்டு வண்டிகளும் கிடைக்கும். சென்னையிலிருந்து பேருந்து மூலம் இவ்வூரை அடையலாம்; இருப்பூர்திப் பயணம் செய்தும் இவ்வூருக்குப் போகலாம். நாம் பேருந்து மூலமே இவ்வூருக்கு வருகின்றோம்.

பேருந்தில் வந்து கொண்டிருக்கும்போதே ஆழ்வார்களின் பாசுரங்கள் நம் சிந்தையில் குமிழியிடத் தொடங்குகின்றன. முதலில் திருவெள்ளூருக்கு அருகில் சென்னைக்குச் செல்லும் நெடுஞ்சாலையிலுள்ள திருமழிசை என்ற ஊரில் திருவரித்த

3. பெரி. திரு -2 4. பெரி. திருமடல் - கண்ணி 116.
5. நான். திருவந் - 36.

'பக்திசாரர்' என வழங்கும் திருமழிசையாழ்வாரின் பாசுரம் நம் நினைவுக்கு வருகின்றது.

> "நாகத்(து) அணைக்குடந்தை வெஃகா திருவெவ்வுள்
> நாகத்(து) அணை அரங்கம் பேர்அன்பில் - நாகத்(து)
> அணைப்பாற் கடல்கிடக்கும் ஆதி நெடுமால்
> அணைப்பார் கருத்தன் ஆவான்."[6]

(நாகம்-ஆதிசேடன்; குடந்தை-கும்பகோணம்; வெஃகா-யதோக்தகாரீ சந்நிதி (காஞ்சி; அரங்கம்-திருஅரங்கம்; பேர்-திருப்பேர் நகர்; அன்பில், இலாலுகுடிக்கு அருகிலுள்ளது; ஆதிநெடுமால்-சர்வேசுவரன்; அணைப்பார்-அன்பர்)

திருக்குடந்தை, திருவெஃகா, திருவெவ்வுள்ளூர், திருவரங்கம், திருப்பேர்நகர், அன்பில், திருப்பாற்கடல் ஆகிய இடங்களில் அரவணைமீது கிடந்தருள்வது அன்பர்களுடைய இதயத்தில் புகுவதற்காகவே என்று காரணங் கற்பிக்கின்றார் ஆழ்வார். எப்பொழுதும் எம்பெருமானுடன் அணைந்தேயிருக்கவேண்டு மென்று ஆசையுடையவர்கள் 'அணைப்பார்' எனப்படுவார்கள். அவர்களுடைய திருவுள்ளத்திலே பொருந்தின வனாக ஆவதற் காகவே இருக்கும் எம்பெருமான் 'கருத்தன் ஆவான்' என்று சுட்டப்பெறுகின்றான்.

இவ்விடத்தில் **பிள்ளை உலகாசிரியரின்** இன்சுவை மிக்க சூத்திரங்களையும் நினைந்து போற்றுகின்றோம்.

> " 'திருமாலிருஞ் சோலைமலையே' என்கிறபடியே,
> உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் பண்ணும்
> விருப்பத்தை இவனுடைய சரீரைக தேசத்திலே பண்ணும்"[7]

என்பது ஒரு சூத்திரம். "தெற்குத் திருமலையையும் திருப்பாற் கடலையும் என் தலையையும் ஒக்க விரும்பா நின்றான்; ஸ்ரீ வைகுண்டத்தையும் திருவேங்கடத்தையும் என் சரீரத்தையும் ஒக்க விரும்பா நின்றான் என்றாரிறே ஆழ்வார்; இப்படி, ஓரோர் அவ்யவத்திலே இரண்டு இரண்டு திருப்பதிகளிலே பண்ணும் விருப்பத்தைப் பண்ணினான் என்ற இது எல்லாத் திருப்பதி களிலும் பண்ணிய விருப்பத்தை ஓரோர் அவயவத்திலே பண்ணி நின்றான் என்னுமதற்கும் உபலட்சணம்" என்ற அதன் உரைப்பகுதியையும் சுவைக்கின்றோம். மேலும்,

6. நான். திருவந் - 36.
7. ஸ்ரீ வச. பூஷ - 174 (புருடோத்தம நாயுடு பதிப்பு)

"அங்குத்தை வாசம் சாதனம்;
இங்குத்தை வாசம் சாத்தியம்"[8]

*(அங்குத்தை-அவ்விடத்தில்; சாதனம்-பயனை அடைதற்குத் துணையாக இருப்பது; இங்குத்தை-இவ்விடம்; சாத்தியம்-அதனால் அடையும் பயன்)*

என்ற மற்றொரு சூத்திரத்தையும் நினைக்கின்றோம். உகந்தருளின் நிலங்களிலே எம்பெருமான் விரும்பி வசிப்பது தக்க உபாயங்களாலே மக்களை அகப்படுத்திக் கொள்ளுகைக்கு; இம் மக்கள் திருந்த இவர்கள் மனங்களிலே தான் வசிக்கப்பெற்றது அந்தத் திவ்விய தேசங்களிலே நின்று பண்ணின கிருஷியின் பலன் ஆகும். ஆகவே, திவ்விய தேசங்களின் வாசம் உபாயமாகவும், பக்தர்களுடைய இதயத்தின் வாசமே புருஷார்த்தமாகவும் (பயனாவும்) இருக்கும் என்றும், இது கிடைத்துவிட்டால் எம்பெருமானுக்குத் திவ்விய தேசவாசத்தில் விருப்பம் குறைந்துவிடும் என்றும் பெறவைக்கும் இன்சுவை மிக்க சூத்திரத்தின் பொருளையும் எண்ணி மகிழ்கின்றோம். அதற்கு "நாகத்தணைக் குடந்தை" என்ற பாசுரத்தையும் மூலமாகக் கொண்டதாகும். "மலைமேல் தான் நின்று என் மனத்துள் இருந்தானை"[9] என்று நம்மாழ்வார் கூறுவதும் இச்சாதன - சாத்தியத்தைக் குறித்ததேயாகும். இக்கருத்துகள் எழும் நிலையில் பேருந்து திருமழிசையை வந்து அடைகின்றது. ஆழ்வார் பிறந்த ஊருக்கு வரும் பேறு கிடைத்தமைக்கு மகிழ்கின்றோம்; அவ்வூர் திருக்கோயில் கோபுரத்தைக் கண்டு ஒரு 'கும்பிடு' போடுகின்றோம்.

திருமழிசையைப் பேருந்து கடந்து வருங்கால் பரகாலரின் பாசுரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நம்மனத்தில் எழுகின்றன.

"காசை ஆடை மூடியோடிக்
காதல்செய் தானவன்ஊர்
நாசம் ஆக நம்பவல்ல
நம்பி நம்பெருமான்,
வேயின் அன்ன தோள்மடவார்,
வெண்ணெயுண் டானிவனென்று
ஏச நின்ற எம்பெருமான்
எவ்வுள் கிடந்தானே"[10]

*8. ஸ்ரீவச. பூஷ. - 175* *9. திருவாய் - 10.4:4*
*10. பெரி. திரு. 2.2:1.*

(காசைஆடை - கல்லாடை (காஷாயம்); மூடி-மறைத்து; தானவன்-அரக்கன் இராவணன்) ; நம்ப-சங்கற்பித்த; வேய்-மூங்கில்; மடவார்-பெண்கள்; ஏச - பரிகசிக்க)

என்பது முதல் பாசுரம். முன்னிரண்டடிகளால் இராமாவதார நிகழ்ச்சியினையும், பின்னிரண்டடிகளால் கிருஷ்ணாவதார நிகழ்ச்சியினையும் அநுசந்திக்கின்றார் ஆழ்வார். மாயமான வடிவு கொண்டு மாரீசன் இராமனையும் இலக்குவனையும் பிரித்த காலத்தில் இராவணன் சந்நியாசி கோலத்துடன் சீதாபிராட்டி இருக்கும் இடம் வந்து பிட்சை கேட்டு அவளுடைய வடிவழகைக் கண்டு காதல் கொண்டதும், தன் செல்வச் சிறப்பையும், வெற்றிச் சிறப்பினையும் விரிவாகச் சொல்லித் தன்னைக் கணவனாக ஏற்றுக்கொள்ளுமாறு பிதற்றியதும், அதனைச் செவிமடுத்த பிராட்டி மிக்க சினங்கொண்டு அவனை நோக்கி பல அவமானச் சொற்களைச் செப்பியதும், பின்பு இராவணன் தன் உண்மை உருவத்தைக் காட்டிப் பிராட்டியைத் தேரேற்றிக் கொண்டுபோய் இலங்கையில் சிறைவைத்ததும், இதுவே காரணமாக அவன் நாசம் அடைந்ததுமான வரலாறு முன்னிரண்டடிகளில் குறிப் பிடப்பெற்றுள்ளது. கண்ணன் திருவாய்ப்பாடியில் திருவிளை யாடல்கள் செய்தருளுங்காலத்து ஆய்ச்சியர் கைப்பட்ட வெண்ணையைக் களவாடி அமுது செய்ததும், அந்தக் களவுத் தொழில்களை அவர்கள் எடுத்துக்காட்டிக் கண்ணனை எள்ளி நகையாடியதுமான வரலாறு பின்னிரண்டடிகளில் காட்டப் பெற்றுள்ளது. இத்தகைய வீரனும் எளியனுமான எம்பெரு மானே திருவெவ்வுள்ளூரிலே திருக்கண் வளர்ந்தருள்கின்றதாக ஆழ்வார் திருவுள்ளங் கொள்ளுகின்றார்.

அடுத்த பாசுரத்தில் இராமாவதாரச் செயல் ஒன்றையே பேசி அநுபவிக்கின்றார் ஆழ்வார்.

“தைய லாள்மேல் காதல்செய்த
தானவன் வாள்அரக்கன்
பொய்யி லாத பொன்முடிகள்
ஒன்பதோ(டு) ஒன்றும்,அன்று
செய்த வெம்போர் தன்னில்அங்(கு)ஓர்
செஞ்சரத் தால்உருள
எய்த எந்தை எம்பெருமான்
எவ்வுள் கிடந்தானே.”[11]

11. பெரி. திரு. 2.2 :2.

(தையல்-அழகு; தையலாள்-அழகுள்ளவள்; செஞ்சரம்-சிவந்த அம்பு)

என்பது பாசுரம். பிராட்டியைப் பிரிந்த பெருமான் விண்ணில் மேகத்திரளைக் கண்டபோது (கார்காலத்தில்) அவள் பிரிவைப் பொறுக்கமாட்டாமல் பட்ட பாட்டை அநுமன் காண்கின்றான். ''வசிட்டனிடம் பயிற்சி பெற்று கடல்போல் கம்பீரமாக இருப்பவன் என்று பெரும்புகழ் பெற்றிருக்கும் இராமன் ஒரு பெண்ணின் நிமித்தம் இப்படித் துவள்கின்றானே'' என்று எண்ணிய அநுமன் கடல் கடந்து அசோகவனத்தில் பிராட்டியின் திருமேனியைச் சேவிக்கப்பெற்ற பிறகு ''அந்தோ! இப்படிப் பட்ட பிராட்டியைப் பிரிந்த பின்பும் உயிர் தரித்துள்ளானே இராமன்; அவனிலும் மிக்க கல்நெஞ்சன் உண்டோ?'' என்று வெறுப்புடன் வியக்கலானான் என்று குறிப்பிடுவர் வால்மீகி. இந்திரிய நிக்கிரகனான திருவடியையும் இப்படி ஈடுபடுத்தவல்ல வடிவழகுடையவளாதலால் சீதையைத் 'தையலாள்' என்றே உருவகித்தார் ஆழ்வார். இப்படிப்பட்ட எழிலுடைச் சாயலாள் மீது காதல் கொண்ட இராவணனுடைய பொன்முடிகள் பத்தும் போர்க்களத்தில் உருளும்படி சரந்துரந்தவன் **வீரராகவன்**. அவனே திருவெவ்வுள்ளூரில் திருக்கண் வளர்ந்தருளா நின்றான் என்கின்றார் ஆழ்வார். இப்பதிகத்திலுள்ள பல சுருதிப் பாடல் நீங்கலாக ஒன்பது பாசுரங்களும் ''எவ்வுள் கிடந்தானே'' என்று முடிகின்றன.

மூன்றாவது பாசுரத்தில் இரண்டுஅவதார நிகழ்ச்சிகளும் அநுசந்திக்கப் பெறுகின்றன. எவ்வுள் கிடந்த எம்பெருமான் யார்?

**''முன்னோர் தூது வானரத்தின்**
**வாயில் மொழிந்து, அரக்கன்**
**மன்னூர் தன்னை வாளியினால்**
**மாள முனிந்து, அவனே**
**பின்னோர் தூது ஆதிமன்னர்க(கு)**
**ஆகிப் பெருநி லத்தார்**
**இன்னார் தூதன் என நின்றான்.''**[12]

(வானரம்-சிறியதிருவடி; அரக்கன் மன்னூர்-இலங்கை; வாளி-அம்பு; மாள - மாண்டுபோம்படி; முனிந்து-கோபித்து; ஆதி மன்னர்-பாண்டவர்கள்; பெருநிலத்தார் - உலகினர்)

12. பெரி. திரு. -2.2:3.

என்பது ஆழ்வார் காட்டும் எம்பெருமான். கூரத்தாழ்வானின் திருக்குமாரரான பராசர பட்டர் இராமவதாரத்தில் அளவற்ற பற்றுடையவர் என்பது உலகறிந்த செய்தி. ''மைவண்ண நறுங்குஞ்சி'' (திருநெடுந் தாண்டகம்-21) என்ற பாசுரத்திற்கு அவர் தரும் விளக்கம் அக்கால மக்களை ஆனந்தக் கடலில் ஆழத்திவிடும் என்று பெரியோர் பணிப்பர். **சிறியாத்தான்** என்பவர் பட்டர் காலத்தில் இருந்த ஒரு பரம பக்தர். ஒருநாள் அவர் பட்டருடைய அருளிச் செயல்களைக் கேட்க விரும்பி அவர் பேருரை அருளும்போது அவர் இசைவு பெற்றுக் கூட்டத்தில் அமர்ந்திருந்தார். பேருரையின் நடுவே ஒரு சமயம் ''சக்கரவர்த்தி திருமகனாருக்கு எல்லா ஏற்ற முண்டாகிலும் ஆச்ரிதர்களுக்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூதுபோன ஏற்றமில்லையே; அந்த ஏற்றம் கண்ணபிரானுக்கே யன்றோ உள்ளது?'' என்றார். அதைப் பட்டர் கேட்டருளி, ''ஓய்! குணக்கடலாகிய இராமனுக்குத் தூது போதல் அநிஷ்டமன்று காணும்; இட்சுவாகு வம்சத்திலே ஸார்வ பௌமனாகப் பிறந்தானாகையாலே மகாராஜன் கழுத்திலே ஓலையைக் கட்டித் தூதுபோக விடுவாரைக் கிடையாமையாலே இராமன் தூது போகப் பெற்றிலனத்தனை; அந்த அவதாரத்திலே திருவடி அங்குமிங்கும் போவது வருவதாய்க் கொண்டும் தூத க்ருத்யஞ் செய்து வார்த்தை சொல்லித் திரிந்த ஏற்றத்தைக் கண்டு 'நாமும் இப்படி ஆச்ரிதர்களுக்காகத் தூது போகப் பெற்றிலோமே' என்று திருவுள்ளம் குறைபட்டு அக்குறை தீருகைக்காகவே பின்னை இழி குலத்திலே வந்து பிறந்து தூது சென்றான்; க்ஷத்திரியனென்று நிச்சயிக்கில் தூதுபோக விடமாட்டார்களென்று அத்தை மறைந்து வளர்ந்தான் காணும்; அபிஷிக்த க்ஷத்திரிய குலத்தில் பிறந்தால் 'தூது போ' என்று ஏவ ஒருவருக்கும் நா எழாதிறே'' என்று அருளிச் செய்தாராம். இந்த இதிகாசத்திற்கு இப்பாசுரம் மூலமாக இருக்கும் என்று கருதலாம். பட்டர், கூறும் இன்சுவை மிக்க காரணம் அநுபவித்து மகிழத்தக்கது.

அடுத்த பாசுரத்தில், ''நம் குலத்துக்கெல்லாம் தலைவன்; விரிபுகழ்சேர் நந்தகோபனின் திருக்குமாரனாக அவதரித்தவன்; நப்பின்னையின் பொருட்டுக் குரூரமான மிடுக்கையுடைய ஏழு காளைகளையும் வென்று அவளையே பரிசாகப் பெற்று மகிழ்ந்தவன். அவனே இன்று எவ்வுள்ளில் கிடக்கும்

எம்பெருமான்''[13] என்கின்றார். பாலனாகி ஏழுலகினையும் திருவமுது செய்து ஆலிலைமேல் பள்ளிகொண்டவனும் அவனே.[14] அந்த எம்பெருமான் பரத்துவமும் சௌலப்பியமும் வாய்ந்த புருடோத்தமன். 'நம்பி! சோத்தம்' என்ற தொண்டர்களால் அழைக்கப் பெறும் உயிர்த் தோழன். இப்படி எளியனாக அழைக்க உரியவனாக இருப்பினும் இவன் சாதாரணமானவன் என்று கருதுதல் வேண்டா. தேவர்களுக் கெல்லாம் மூத்தவன் என்றும், முக்கண்ணனுக்கு அந்தர்யாமியாக இருந்து செயலாற்றுபவன் என்றும் உண்மையையறிந்த முனிவர்களால் தொழுதேத்தப் பெறுகின்றவன் இவனே.[15] செயற்படும் பொருள்களையெல்லாம் தனக்கு உடலாகக் கொண்டு தான் அவற்றுக்கு ஆன்மாவாக இருப்பவன் இவனே. உலகங்களைப் படைத்த நான்முகனையும் படைத்தவன் இவனே. சாம வேதத்தால் பிரதி பாதிக்கப்பெற்றவனும் இவனேயாவான். தனது திருமேனியில் ஒருபக்கத்தில் இருக்கும் சிவபிரானும் உலகளந்த எம்பிரானின் திருவடிகளைத் தன் தலைமேல் சூடிக்கொண்டுள் ளான்.[16] மேலும் இவனே,

''முனிவன் மூர்த்தி மூவராகி
வேதம் விரித்துரைத்த
புனிதன், பூவைவண்ணன் அண்ணல்
புண்ணியன், விண்ணவர்கோன்
தனியன்,சேயன் தான்ஒருவன்
ஆகிலும்தன் அடியார்க்கு
இனியன், எந்தை எம்பெருமான்.''[17]

(புனிதன்-தூய்மையானவன்; தனியன்-தன்னேர் இல்லாதவன்; சேயன் - எட்டாதவன்; இனியன்-ஆராவமுது)

பெரிய பிராட்டியார் 'அகலகில்லேன் இறையும்' என்று தங்கி வாழும் திருமார்பையுடையவன்; நீலமேனி சாமள வண்ண னாகிய இவன் தேவேந்திரனுக்கும் நாதன்.[18] இத்தகைய பெருமானே அன்பர்கட்குச் சேவை சாதிப்பதற்காகத் திரு எவ்வுள்ளில் வந்து கிடக்கின்றான்.

13. பெரி. திரு. 2.2:4.
14. பெரி. திரு. 2.2:5
15. மேலது. 2.2:6
16. மேலது - 2.2:7
17. மேலது - 2.2:8
18. மேலது. 2.2:9

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் எழுந்தவண்ணம் திருஎவ்வுள்ளூரை வந்தடைகின்றோம். நீர்வளமும் நிலவளமும் சூழப்பெற்ற ஊர் அது. இந்த வளங்களைக் காணும் நாம்,

"நீலம் ஆர்வண்(டு) உண்டுவாழும்
நெய்தல்அம் தண்கழனி
ஏலம் நாறும் பைம்புறவில்
எவ்வுள்"[19]

(நீலம்-நெய்தல்பூ; ஆர்-படிந்த; உண்டு-தேனினைப் பருகி; அம்-அழகிய; தண் - குளிர்ந்த; கழனி-வயல்; ஏலம்-மணம்; நாறும்-கமழ்கின்ற; பைபுறவு - பரந்த சோலைகள்)

என்ற ஆழ்வாரின் பாசுரப் பகுதியைச் சிந்திக்கின்றோம்.

பேருந்தினைவிட்டு இறங்கி ஹ்ருத்தாப நாசனி (மனநோய் நீக்கி) என்ற குளத்தில் கை கால்கள் அலம்பி தீர்த்தத்தைத் தலையில் தெளித்துக்கொண்டு திருக்கோயிலினுள் நுழைகின்றோம். முதலில் ஓங்கி உயர்ந்த கொடிமரம் நம் கண்ணைக் கவர்கின்றது. அடுத்து அரங்க மண்டபத்திற்கு வந்து அங்கு எழுந்தருளியிருக்கும் பெரிய திருவடியைச் சேவிக்கின்றோம். துவாரபாலகர்களின் அனுமதிபெற்று உள்ளேசென்றால் திருவெண்ணாழி பிரதட்சிணத்தைக் காண்கின்றோம். தல புராணத்தில் கூறப் பெற்றுள்ள செய்திகள் யாவும் ஓவிய வடிவில் தீட்டப் பெற்றுள்ளமையைக் கண்டு மகிழ்கின்றோம். இந்த இடத்தில் எம்பெருமான் திருமஞ்சனம் (நீராட்டு) கண்டருளுகின்றார். இதனையடுத்து வெள்ளிக் கதவுடன் கூடிய அர்த்த மண்டபத்தைக் காண்கின்றோம். இதனை 'மஞ்சக் கட்டு' என்றும் வழங்குகின்றனர். நாடோறும் இரவு வேளையில் இவ்விடத்தில் தான் மஞ்சம் சமர்ப்பிக்கப் பெறுகின்றது.

இதனை அடுத்து அந்தராளம் (கருவறையின்) அருகில் சென்றால் கிழக்குநோக்கிய திருமுகமண்டலம்கொண்டு சயனத் திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் எம்பெருமாமன் **எவ்வுள் கிடந்தானைக்** (மூலவர்) கண்டு வணங்குகின்றோம். ஆழ்வார் பாசுரங்கள் பத்தும் நம்மிடற்று ஒலியாக வெளிப்படுகின்றன. எம்பெருமான் சாலிஹோத்ர முனிவர் தலையில் தம் வலது திருக்கையை வைத்துக்கொண்டு ஞான முத்திரையுடன் நான்கு மறைகளையும் அருளுகின்றார். மூவருக்கு எதிரில் முன்புறமாக

*19. மேலது - 2.2:5*

***'பூபாலராயர்'*** என் வழங்கப்பெறும் எவ்வுள் கிடந்தான் தமது சிறிய திருமேனியுடன் சேவை சாதிக்கின்றார். இவருக்குத்தான் நாடோறும் திருமஞ்சனம் நடைபெறுகின்றது. இவருக்கு அருகில்வடிவழகில் ஒப்புஉயர்வு அற்ற **வீரராகவன்** (உற்சவர்) உபய நாய்ச்சிமாருடன் சேவை சாதிக்கின்றார். இவரை அலங்கார பீடத்திலிருந்து திருமுடிவரை சேவித்த மாத்திரத்திலேயே நம் தீவினைகள் யாவும் 'தீயினில் தூசுபோல்' நாசமடைந்துவிடும். மேலும், நாடோறும் பலிசாதிக்க எழுந்தருளும் **மணவாளன், கண்ணன், சாளக்கிராம மூர்த்திகள்** ஆகியோர்களும் அங்கு எழுந்தருளியுள்ளனர். அவர்களையெல்லாம் சேவித்து வெளியே வருங்கால் திருவெண்ணாழிப் பிரதட்சிணத்தில் தென் மேற்கில் இலக்குமி நரசிம்மர் சந்நிதியும், வடமேற்கில் சக்கரத்தாழ்வான் சந்நிதியும் தென்படுகின்றன்.

அடுத்து, வெளிப்பிராகாரத்திற்கு வருங்கால பெருமாள் சந்நிதிக்குத் தெற்குப் பகுதியிலுள்ள **கனகவல்லித் தாயார்** சந்நிதியை அடைகின்றோம். அவரை வழிபட்டு அவருக்கு அருகில், முன்புறமாக இரண்டு யானைகளுடன் கூடிய பதுமபீடத்தில் எழுந்தருளியிருக்கும் எல்லா அணிகளுடன் கூடிய தாயார் உற்சவரையும் கண்டு வழிபடுகின்றோம். தாயார் சந்நிதியின் அருகில் வரையப்பெற்றிருக்கும் திருப்பாவை ஓவியங்களையும் கண்டு மகிழ்கின்றோம். தாயார் சந்நிதியின் பின்புறத்தில் ஓவிய வேலைப்பாடுகள் நிறைந்த நான்கு கற்றூண்கள் தாங்கும் **'வெள்ளிக்கிழமை மண்டபம்'** அமைக்கப் பெற்றுள்ளதையும் கண்டு களிக்கிறோம்.

பிராகாரத்தின் பின்புறத்தில் இராமன், வேணு கோபாலன், தேசிகன், நம்மாழ்வார், ஆண்டாள் இவர்கள் சந்நிதிகளும், வடக்குப் பக்கத்தில் பெருமாள் திருவடி மண்டபமும் உள்ளன. பக்தர்கள் பிரார்த்தனையாக உப்பையும் மிளகையும் சேர்ப் பதைத் திருவடிமண்டபத்தில் காண்கின்றோம். இப்பக்கத்தி லேயே திருக்கச்சி நம்பிகள், பாஷ்யக்காரர், விஷ்வக்சேனர் இவர்கள் சந்நிதிகளும், மிகவும் விசாலமான பவித்திர உற்சவ மண்டபம், வாகன மண்டபம், கண்ணாடி அறை இவையும் இருப்பதைக் காண்கின்றோம். வடகலை ஐதிகத்தைச் சார்ந்த இத் திருக்கோயிலை அகோபில மடத்தினர் கண் காணித்து வருகின்றனர்.

***கனகவல்லித் தாயாரை வசுமதி*** என்றும் வழங்குகின்றனர். ***தருமசேனன்*** என்ற அரசரின் திருமகன் வசுமதியை எம்பெருமான் திருமணம் புரிந்துகொண்டான் என்பது புராண வரலாறு. நித்திய கல்யாணராகிய எம்பெருமான் அர்ச்சாவதாரத்தில் **ஆண்டாள், சோழர் குலவல்லி, செஞ்சு வமிசத்துத் தலைவனின் மகள், துலுக்க நாய்ச்சியார்** முதலிய பெண்களை மணந்த வரலாற்றை வைணவ உலகம் நன்கு அறியும். எந்தக் குலத்தைக் சார்ந்திருப்பினும், மனிதனால் படைக்கப் பெற்ற இந்தச் செயற்கை வரம்புகளை யெல்லாம் புறக்கணித்து, பக்குவம் அடைந்த ஆன்மாக்களுக்கு எம்பெருமான் முக்தியை அளிக்கின்றான் என்ற உண்மையை நாம் சிந்திக்கின்றோம்.

இந்நிலையில் கோயிலுக்குள் ஓர் அமைதியாக இடத்தில் சில மணித்துளிகள் அமர்ந்து திருமங்கையாழ்வாரின் பாசுரங் களை மீண்டும் சிந்திக்கின்றோம். ''தையாலாள்மேல்'' என்ற இரண்டாம் பாசுரத்தில் இராமாவதார வீரச்செயல் ஒன்றையே ஆழ்வார் அநுசந்திப்பதால்தான் இத்தலத்து எம்பெருமான் எவ்வுள் கிடந்தானுக்கு ***'வீரராகவன்'*** என்ற திருநாமம் ஏற்பட்டிருக்குமோ என்ற ஊகத்தில் இறங்குகின்றோம். அல்லது ஏற்கெனவே அந்த எம்பெருமானுக்கு 'வீரராகவன்' என்ற பெயர் ஏற்பட்டிருந்தால் ஆழ்வார் இராமபிரானுடைய வீரச்செயல் ஒன்றினையே இப்பாசுரத்தில் அநுசந்தித்தாரோ என்றும் கருதுகின்றோம். எது எப்படியாயினும் நம் முன்னோர் இதிகாச புராணக் கதைகளை வைத்துப் பக்தியநுபவம் குலையாமல் காப்பதற்கு என்னென்ன உக்தி முறைகளையெல்லாம் கை யாண்டுள்ளனர் என்பதை எண்ணி எண்ணி இறும்பூது அடை கின்றோம். இந்நிலையில்,

> ''நீர்மைகெட வைதாரும் நின்னோடு எதிர்ந்தாரும்
> சீர்மைபெற நின்அடிக்கீழ் சேர்க்கையினால், நேர்மைஇலா
> வெவ்உளத்த னேன்செய் மிகையைப் பொறுத்தருளி
> எவ்வுள்அத்த னே!நீ இரங்கு''[20]

(நீர்மை-தன்மை; வைதல்-நிந்தித்தல்; சீர்மை.சிறப்பு; நேர்மை-நற்குணம்; வெவ்உளத்தன் -கொடிய மனத்தினன்; மிகை -குற்றம்; இரங்கு-கருணையுடன் ஆட்கொள்க)

20. நூற். திருப். அந்.-90.

என்ற திவ்வியகவி ***பிள்ளைப்பெருமான் அய்யங்கார்*** அவர்களின் பாடல் நினைவுக்கு வர, அதனையும் ஓதி உளங் கரைகின்றோம். தலந்தோறும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களைச் சேவிக்கும் பேற்றினையளித்த இறைவனின் கருணையுள்ளத்தை மறவாமல் போற்றும் நினைவினை அருளவேண்டும் என்று நெஞ்சார வேண்டி எவ்வுள் கிடந்தானிடமிருந்து விடைபெறுகின்றோம்.

❖ ❖ ❖

# 9. நின்றவூர் நித்திலம்

இராஜ சிம்மன் என்றும் பல்லவ அரசன் மிகுந்த சிவபக்தியுடைவன். சுமார் 1250 ஆண்டுகட்கு முன்னர்க் காஞ்சியைத் தலை நகராகக் கொண்டு அரசோச்சியவன்; இன்று நீலப்பலகையின் (Blue Board) ஆதரவில் பாதுகாக்கப்பெறும் கைலாச நாதர் கோயிலைக் கட்டியவன். அவன் திருப்பணி தொடங்கிய அன்றே **பூசலார் நாயனார்** என்பவர் ஒரு கோயில் அமைக்க எண்ணினார். வெறும் கை முழம் போடுமா? கையில் 'வெள்ளையப்பன்' இல்லாது எப்படிக் கோயில் எழுப்புவது? மானசக் கோயில் ஒன்று எழுப்புகின்றார் தம்மனத்தகத்தில். **''இமைப்பொழுதும், என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க''**[1] என்று மணிவாசகர் குறிப்பிடும் ஆண்டவனுக்கு அவன் இருக்கும் இடத்திலேயே கோயிலை எழுப்பிய பெருமை பூசலார் ஒருவருக்கே உண்டு. **''உள்ளுவார் உள்ளத்தாய்''**[2] என்று திருமங்கையாழ்வார் குறிப்பிடும் அந்தர்யாமித்துவத்திற்குக் கோயில் எழுப்பியதாக வைணவ சமயத்தில் வரலாறு ஒன்றும் இல்லை. காடவர்கோன் காஞ்சியில் அமைத்த கற்றளி வேலையும் பூசலார் 'நெடிதுநாள் நினைந்து செய்த' 'சிந்தை ஆலயத்' திருப்பணியும் ஒரே நாளில் நிறைவு பெறுகின்றன. இலிங்கப் பிரதிட்டை செய்து குடமுழுக்கு விழா நடைபெற நாளையும் குறிப்பிடுகின்றான் பல்லவமன்னன். அன்று இரவில் சிவபெருமான் அரசனது கனவில் தோன்றி,

''நின்றவூர்ப் பூசல் அன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து
நாளைநாம் புகுவோம்; நீயிங்(கு)
ஒன்றிய செயலை நாளை
ஒழிந்துபின் கொள்வாய்'[3]

1. திருவா - சிவபுராணம் - அடி - 2. 2. திருநெடுந் - 8.
3. பெரியபுரா : பூசலார் நாயனார் புராணம் - 10.

என்று கூறி மறைந்தார். திடுக்கிட்டெழுந்த அரசன் பூசலார் வாழும் ஊரை அடைந்தான். அந்த ஊரில் ஆலயம் கட்டப்பெறும் சின்னம் ஒன்றும் தெரியவில்லை. ஊராரை விசாரித்துப் பூசலார் இருக்கும் இடம் அறிந்து அவரையே நேரில் உசாவினான்; அவர் அமைத்த திருக்கோயிலைக் காட்டுமாறு பணித்தான். தான்கண்ட கனவையும் அவருக்கு எடுத்தியம்பினான். அரசன் கூறியதைக் கேட்ட பூசலார் இறைவனுடைய பெரும் கருணைத் திறத்தினைக் கேட்டுப் பேரானந்தம் அடைந்தார். தம்மையும் இறைவன் ஒரு பொருளாக மதித்தான் என்று எண்ண எண்ண அவர் மனம் பூரிப்பால் பெருகிற்று. அரசனும் பூசலாரின் பக்தியையும் இறைவனது பேரருளையும் கண்டு வியப்புற்றான். பூசலார் மனக்கோயிலின் நினைவாகப் பிற்காலத்தார் ஒரு சிறிய கோயிலை எழுப்பியுள்ளனர். இந்தப் பூசலாரைச் சேக்கிழார் பெருமான்,

> "நீண்டசெஞ் சடையி னார்க்கு
>     நினைப்பினால் கோயி லாக்கிப்
> பூண்டஅன்பு இடைஅ றாத
>     பூசலார் பொற்றாள் போற்றி"[4]

என்று மகிழ்ந்து போற்றுகின்றார். இந்தப் ***'பூசல் அன்பன்'*** வாழ்ந்த ஊர் **திருநின்றவூராகும்.** எவ்வுள் கிடந்தானைச் சேவித்த நாம் திருநின்றவூர் எம்பெருமானைச் சேவிக்க அவாக் கொள்ளுகின் றோம். எப்படியோ திருமங்கையாழ்வாருக்குத் தப்பிவிட்ட திருத்தலத்தை நாம் கண்டுகளிக்க வேண்டும் என்ற அவா நம்மை உந்துகின்றது.

திருவெள்ளூரிலிருந்த பேருந்து மூலம் இருப்பூர்தி நிலையத்திற்கு வருகின்றோம். மாலை 3-40க்கு வண்டியேறி 4-மணிக்குத் திருநின்றவூர் நிலையத்திற்கு வருகின்றோம். நிலையத்திலிருந்து தென்திசையில் ஒரு கல் தொலைவிலுள்ளது திருநின்றவூர் என்னும் திருப்பதி. நிலையத்திலிருந்து நேர்வழி உண்டு. சரியாக வண்டி வசதி இல்லை. எவரும் அதை எதிர்பார்ப்பதும் இல்லை. நாமும் வாகன வசதி ஒன்றையும் எதிர்பாராமல் நடையைக் கட்டுகின்றோம் - குறுக்கு வழியாக. அரைமணி நேரத்தில் திருக்கோயிலை அடைகின்றோம். ஊர் நீர்வளமும் நிலவளமும் பொருந்திய ஊரே. இதனால் செல்வச் செழிப்புடைய ஊராக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்

4. மேலது : பூசலார் நாயனார் புராணம் -17.

றோம். இதனால் இந்த வூருக்கு இலக்குமி பொருந்திய தலம் எனப் பொருள்படும் **'திருநின்றவூர்'** என்ற பெயர் ஏற்பட்டதோ என்ற ஊகத்தில் இறங்குகின்றோம்.

இந்தத் தலத்திற்கு எந்த ஆழ்வாரும் வந்து இத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்யவில்லை. எண்பத்தாறு திவ்விய தேசங்களைச் சேவித்த திருமங்கையாழ்வார் கூட இங்கு வராதது ஏனோ என்று சிந்திக்கின்றோம். ஆயினும், இந்த ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை இரண்டு பாசுரங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார். இந்தவூர் எம்பெருமானுக்குப் **'பத்தராவிப் பெருமாள்'** என்ற பெயரும் உண்டு என்று கேள்வியுற்றிருக்கின்றோம். பக்தர்களின் உயிருக்கு உயிராய் இருப்பவர் என்பது இதன் பொருள். அர்ச்சாவதார சேவாரசி கரான திருமங்கையாழ்வாருடைய பாசுரத்தைப் பெறவேண்டும் என்ற இத்தலத்து எம்பெருமான் இந்த ஆழ்வார் திருக்கடல் மல்லை எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும்பொழுதும், திருக்கண்ணமங்கை [5] எம்பெருமானுக்குச் சொல்மாலைகள் சாத்தும்போதும் அந்தர்யாமியாக ஆழ்வார் திருவுள்ளத்தில் சேவை சாதிக்கின்றார். ஆழ்வாரும் கிடைத்தற்கரிய முத்து கிடைத்ததே என்ற பெருமகிழ்ச்சியுடன், எக்களிப்புடன், "நின்றவூர் நித்திலத்தை"[6] என்றும், "நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை"[7] என்றும் மங்களாசாசனம் செய்தருளுகின்றார். இரண்டாவது திருக்குறிப்பில் அந்த எம்பெருமான் சேவை சாதிக்கும் திருக்கோலத்தையே காட்டிவிடுகின்றார். **'நின்ற நித்திலத்தொத்து'** என்ற தொடரில் எம்பெருமானின் 'நின்ற திருக்கோலம்' காட்டப் பெறுவதைக்கண்டு பேரானந்தம் அடைகின்றோம். ஆழ்வாரின் திருவுள்ளத்தில் அந்தர்யாமியாகக் காட்சி அளித்தபோதும் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்திலேயே காட்சி அளித்த அற்புதத்தையும் சிந்திக் கின்றோம். ஆழ்வார் இந்தத் திவ்விய தேசத்திற்கு வந்து மங்களா சாசனம் செய்தது போன்ற பெருமையையும் பெற்றுவிடு கின்றார். "என்னால் தன்னை இன் தமிழ் பாடிய ஈசன்",[8] "தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன்", [9] "என்னால் தன்னை வன்கவி பாடும் வைகுந்தநாதன்"[10] என்று நம்மாழ்வார்

5. சோழநாட்டு திவ்விய தேசங்களுள் ஒன்று. 6. பெரி. திரு - 2.5:2.
7. பெரி. திரு.; 10:5. நித்திலம் - முத்து; தொத்து - திரள்.
8. திருவாய் - 7.9:1 9. மேலது - 7.9:2
10. மேலது - 7.9:6

குறிப்பிடும் 'தன்னை என்னாக்கும்'[11] எம்பெருமானின் தடங் கருணைத் திறத்தினை வியந்து போற்றுகின்றோம்

திருமங்கையாழ்வார் இத்திருப்பதிக்கு வந்ததாகச் கருது வோரும் உண்டு. ''ஆழ்வார் எவ்வுள் கிடந்தானைச் சேவித்த பின்பு திருவல்லிக்கேணிக்கு எழுந்தருள்வதற்கு முன்னே திருநின்றவூரைச் சேர்ந்தார்; அத்திருப்பதியில் எழுந்தருளியுள்ள பத்தராவிப் பெருமாள் அப்பொழுது ஆழ்வாருக்கு முகங்கொடாமல் பிராட்டியாரோடு ஸரஸ சல்லாபம் செய்து கொண்டு பராமுகமாக இருந்திடவே, ஆழ்வார் அத்திருப்பதியை விட்டு அப்பால் சென்று திருவல்லிக்கேணியையும் திருநீர்மலை யையும் சேவித்து, அதன்பின்னர் திருக்கடல்மல்லையை யடைந்து அத்தலத்துப் பெருமானைச் சேவித்து நிற்கும் பொழுது, திருநின்றவூர் எம்பெருமான் திருமகளால் தூண்டப்பட்டு இவ்வாழ்வார் திருவாக்கினால் பாடல்பெற்றுச் சிறப்புறக் கருதிக் கடல் மல்லையில்வந்து சேவை சாதிக்க, இப்போது ''நின்றவூர் நித்திலத்தைக்...கண்டது நான் கடல் மல்லைத் தலசயனத்தே' என்று திருநின்றவூர்ப் பத்தராவிப் பெருமானையும் இங்கே சேவிக்கப்பெற்றதாக அருளிச்செய் கினறாரென்று பெரியோர்களின் நிர்வாகம்''[12] என்று குறிப்பிடுவர் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள். நம் ஆராய்ச்சியை எல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு எப்படி எப்படியெல்லாம் பக்தர்கள் அர்ச்சாவதார மூர்த்திகளை அநுபவித்துள்ளார்கள் என்று வியப்பு அடைகின்றோம். அதே சமயத்தில் 'நம்மால் அந்த அளவுக்கு அநுபவிக்க முடிய வில்லையே' என்ற கழிவிரக்கமும் கொள்ளுகின்றோம்.

இனி, நின்றவூர் எம்பெருமானைக் குறிப்பிடும் ஆழ்வார் பாசுரங்கள் இரண்டையும் ஈண்டுச் சிந்திக்கின்றோம். தலசயனப் பெருமாள் மீதுள்ள பாசுரம்:

**'பூண்டு அவத்தம் பிறர்க்கு அடைந்து தொண்டு பட்டுப்**
**பொய்ந்நூலே மெய்ந்நூலென்று என்றும் ஓதி**
**மாண்டு, அவத்தம் போகாதே வம்மின்: எந்தை;**
**என்வணங்கப் படுவானை, கணங்கள் ஏத்தும்**
**நீண்டவத்தை; கருமுகிலை எம்மான் தன்னை;**
**நின்றவூர் நித்திலத்தை; தொத்துஆர் சோலைக்**

11. மேலது- 7.9:7. 12. பெரி. திரு. 2.5:2 ('திவ்வியார்த்த தீபிகை'காண்க.)

காண்டவத்தைக் கனல்எரிவாய்ப் பெய்வித் தானைக்
கண்டதுநான் கடல்மல்லைத் தலசய னத்தே''[13]

(அவத்தம்.தீயசெயல்கள்; பிறர்க்கு-பிறரை (நீசர்களை); பொய்நூல்-புறச்சமய ஏடுகள்; என்றும்-எப்போதும்; மாண்டு-இறந்து; அவத்தம்-பாழாக; கணங்கள்-ஞானியர் கூட்டம்; நீண்ட அவத்தை-ஒரு வகையாலும் அளவிட முடியாத பொருள்; நித்திலம் - முத்து; தொத்து - பூங்கொத்துகள்; காண்டவத்தை - காண்டவ வனத்தை (அருச்சுனன் தீக்கடவுளின் நிமித்தம் எரியூட்டியது)

இங்குத் தலசயனத்து உறைவாரைத் தாம் சேவிக்கப் பெற்றது போல் உலகிலுள்ளார் அனைவரும் சேவிக்கப் பெறவேண்டும் என்ற பேரவாவினால் அவர்களை அழைக்கின்றார். வயிற்றுப் பிழைப்பிற்காகப் பிறருக்கு அடிமைப்பட்டுக் காலத்தைப் போக்குவாரும், புறச்சமயத்தினர்திரளிலே புகுந்து சொரூப நாசம் அடைவாரும் பலர் உண்டாகையினால் அவர்களையும் விடமாட்டாத காருண்யத்தினால் அவர்களையும் மங்களாசா சனத்திற்கு ஆளாக்கிக் கொள்ளப் பாரிக்கின்றார். தமக்குத் தந்தை போன்ற எம்பெருமான் முனிவர்களால் துதிக்கப் பெறுபவன்; அளவிறந்த பொருள்களாகப் பரிணமிக்கின்றவன்; காளமேகத் தை யொத்த திருமேனியினையுடையவன்; காண்டவவனத்தை அர்ச்சுனனைக்கொண்டு தீக்கடவுளுக்கு இரையாக்கினவன்; **திருநின்றவூரில் முத்துக்கோவைபோல் குளிர்ந்த திருமேனியுடன் எழுந்தருளியிருப்பவனும்** அவனே என்பதாகத் திருவுள்ளங் கொள்கின்றார் ஆழ்வார். அந்த எம்பெருமானே திருக்கடல் மல்லைத் தலசயனத்திலும் சேவை சாதிக்கின்றார் என்கின்றார். கிருஷ்ணாவதாரமாக வந்தவனும் அர்ச்சைவிடிவாக எழுந்தருளி யிருப்பவனும் அந்தப் பரம்பொருளே என்ற உண்மை இதனால் தெளிவாகின்றது.

அடுத்து, திருக்கண்ண மங்கைப் பாசுரம் நம் நினைவுக்கு வருகின்றது.

''ஏற்றினை, இமயத் துள்ளம் ஈசனை,
இம்மையை, மறுமைக்கு மருந்தினை,
ஆற்றலை அண்டத்து அப்புறத்து உய்த்திடும்
ஐயனை, கையில் ஆழிஒன்று ஏந்திய
கூற்றினை, குருமா மணிக் குன்றினை,
நின்றவூர் நின்ற நித்திலத்தொத்தினை
காற்றினை, புனலைச் சென்று நாடி
கண்ணமங்கையுள் கண்டுகொண் டேனே''[14]

13. பெரி. திரு. 2.2:2. 14. பெரி. திரு. 7.10 : 5

(ஏற்றினை-காளைபோன்று செருக்குடையவனை; இமயத்துள் எம் ஈசனை - திருப்பிரிதி எம்பெருமானை; ஆற்றலை-சக்தியுடைவனை; உய்த்திடும்-செலுத்தவல்ல; ஆழி -சக்கரம்; கூற்றினை- எதிரிகட்கு யமன் போன்றவ்ன்; குருமாமணி-சிறந்த நீலமணிமயமான; நித்திலத்தொத்து -முத்துகளில் திரள்)

என்பது பாசுரம். எம்பெருமான் நித்தியானந்தத்தினால் காளை போல் மிடுக்குடன் மேனாணித்திருப்பவன்; இமயமலையில் திருப்பிரிதியில் தன் இருப்பைக் காட்டி ஆழ்வாரை ஈடுபடுத்திக் கொண்டவன்; இவ்வுலகப் பலன்களையும் சுவர்க்கலோகப் பலன்களையும் விரும்புவார்க்கு அளிக்க வல்லவன்; இச் செயலை நிறைவெற்றுவதற்கு உறுப்பான எல்லா ஆற்றலையும் உடையவன்; கையில் கொண்டுள்ள திருவாழியின் மகிமையால் எதிரிகட்கு எமன் போன்றவன்; சிறந்த நீலமணி மயமான மலை போன்றவன்; திருநின்றவூரில் முத்துப்போல் குளிர்ந்த திருமேனி யுடன் எழுந்தருளியிருப்பவன்; ஊற்றுணர்ச்சியினால் பரமசுகம் அளிக்கும் காற்றுப்போலே விரும்பத் தக்கவன்; உயிர் தரிப்பதற்கு ஏதுவான நீர் போன்றவன். இப்படிப்பட்ட எம்பெரு மானைக் கண்ண மங்கையில் கண்ட தாகக் கூறுகின்றார் ஆழ்வார். நின்றவூரில் இருப்பவனும், கண்ணமங்கையில் எழுந்தருளி யிருப்பவனும், ஐம்பெரும் பூதங்கட்கும் அந்தர்யாமியாக இருப்பவனும் ஒருவனே என்ற தத்துவத்தை இப்பாசுரத்தில் வெளியிடுகின்றார் ஆழ்வார்.

இப்பாசுரங்களையும் அவற்றின் உட்பொருளையும் சிந்தித்தவண்ணம் திருக்கோயிலுக்கு வந்து சேர்கின்றோம். கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு திருக்கோயிலுக்குள் நுழைகின்றோம். பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார் இவர்களுடன் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் **பக்தவத்சலரைக்** கண்டுகளிக்கின்றோம். எம்பெருமானின் இருப்பைக் கண்டு மகிழும் நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரம் நம்மிடற்று ஒலியாக வெளிவருகின்றது.

''வீற்றிருந்த ஏழ்உலகும் தனிக்கோல்
செல்ல, வீவுஇல்சீர்
ஆற்றல்மிக்(கு) ஆளும் அம்மானை
வெம்மா பிளந்தான்தன்னை.
போற்றி என்றே கைகள்ஆரத்
தொழுது சொல்மாலைகள்

ஏற்ற நோற்றேற்(கு) இனிஎன்ன
குறை எழுமையுமே.''[15]

(வீவு இல்-முடிவுஇல்லாத; சீர்-அனந்த கல்யாண குணங்கள்; வெம்மா-குதிரை வடிவாக வந்த கொடிய கேசி)

என்பது பாசுரம். சோறு உண்பதற்கு பசி கருவி ஆகுமாப்போலே எம்பெருமானே அநுபவிப்பதற்கு அளவு கடந்த ஆசையன்றோ கருவியாவது? இப்பாசுரத்தில் ஆழ்வார் அநுபவிக்கும் பேரானந்தம் சொற்களால் எல்லைக்கட்டிக் காட்டவொண்ணாது. ''இனி என்ன குறை எழுமையுமே?'' என்ற சொற்றொடர் ஆழ்வார் பெற்ற எக்களிப்பின் துடிப்பாகும். பரமபத நாதனை நேரில் கண்டாற்போன்ற ஆனந்தமாகும் இது. திருநின்றவூர் எம்பெருமானைச் சேவிக்கும் நமக்குள்ளும் இத்தகைய ஓர் அநுபவம் எழுவதை உணர்கின்றோம். அடுத்து, தாயார் சந்நிதிக்கு வருகின்றோம். **என்னைப் பெற்ற தாயார்** என்பது அவருடைய திருநாமம். அவரையும் சேவித்து அவருடைய திருவருளுக்குப் பாத்திரமாகின்றோம்.

பரிபூர்ணாநுபவம் பெற்றது போன்ற ஒருவித பெருமித உணர்வுடன் திருக்கோயில் பிரசாதங்களைப் பெற்று வெளியில் வருகின்றோம். பக்தி பரவசர்களாய் ஓர் அமைதியாக இடத்தில் அமர்கின்றோம். இந்நிலையில் திவ்வியகவி ***பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்*** அவர்களின் பாசுரம் நம் நினைவுக்கு வருகின்றது.

''சீர்அறிந்த தோழிமீர்! சென்று கொணர்ந்(து) எனக்குப்
போர முலைமுகட்டில் பூட்டுமினோ-நேர் அவுணர்
பொன்றஊர் புட்கழுத்தில் பொன்னைமா ணிக்கத்தை,
நின்றவூர் நித்திலத்தை நீர்''[16]

(சீர்-சிறப்பு; முகடு-உச்சி; நேர் அவுணர்-எதிர்த்துப் பொருத அசுரர்கள்; பொன்ற - அழியும்படி; புள்-பெரிய திருவடி)

என்ற பாடலை ஓதி உளங்கரைகின்றோம். மகள் பாசுரமாக வடிவு கொண்டுள்ள இது,

''குற்றம் அற்ற முலைதன்னைக்
குமரன் கோலப் பணைத்தோளோடு

*15. திருவாய். 4.5:1 16. நூற். திருப். அந் - 89*

அற்ற குற்றம் அவைதீர
அணைய அமுக்கிக் கட்டீரே.''[17]

என்ற ஆண்டாள் பாசுரப் பகுதியையும் நினைக்கத் தூண்டு கின்றது. 'காதற் பெருக்கே நாச்சியார் திருமொழி' என்ற உண்மை யையும் புலப்படுத்துகின்றது. இப்பாசுரத்தின் தொனியை மேற்காட்டிய அய்யங்கார் அவர்களின் பாசுரத்தில் தெளிவாகக் காண்கின்றோம். இந்த உணர்வு நிலையில் நம் இருப்பிடத்திற்குச் செல்லச் சித்தமாகின்றோம்.

இந்நிலையில் **பூசலார்** நினைவாகப் பிற்காலத்தார் கட்டிய கோயிலையும் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் நம்மிடையே எழுகின்றது. ஊராரை விசாரித்து அக்கோயில் இருக்கும் இடத்தை அறிகின்றோம். கோயில் வாயிலில் கோபுரம் இல்லை; தகரக் கொட்டகை ஒன்றையே நாம் காண்கிறோம். இந்தச் சிறுகுடிலில் இருப்பவரே **இருதயாலய ஈசுவரர்;** பூசலார் தம் இதயத்தில் பிரதிட்டை செய்த இலிங்கத்தின் பிரதிநிதி. அவரது துணைவியே **மரகதாம்பிகை.** இந்த அம்பிகையின் சிலையில் பின்னமுற்றிருப் பதால் பூசை நடைபெறுவதில்லை. புதிய சிலை தயாரிலிருந்தும் ஏனோ பிரதிட்டை ஆகாமல் உள்ளது. கருவறையினுள் இருதயாலய ஈசுவரரின் அருகில் **'பூசல் அன்பனும்'** சிலை வடிவில் காணப்பெறுகின்றார். மனத்துள் வைத்து வழிபாடு நடத்திய வருக்குக் கருவறையிலும் வைத்துப் பூசனை புரிய வேண்டும் என்று நினைத்தனர்போலும் அக்கோயிலை நிறுவிய அன்பர்கள். இந்தக் கோயிலில் பூசலார் செப்புச்சிலை வடிவிலும் காணப் பெறுகின்றார். இந்தச் சிலை வடிவில் பூசலார் மார்பில் நெஞ்சுக்கு வெளியே இலிங்கத் திருவுருவம் அமைந்துள்ளனர் அன்பர்கள். பண்டையோரின் அரிய கற்பனைக்கு உரிய உருவம் கொடுக்க வேண்டும் என்று நினைத்தனர் போலும் இவர்கள்.

பக்தவத்சலராலும் பூசலாராலும் பெரும்புகழ் பெற்ற திருநின்றவூருக்கு வேறொரு சிறப்பும் உண்டு. இந்த ஊரில் வாழ்ந்த **காளத்திவாணர்** என்ற வள்ளலாலும் இவ்வூருக்கு இலக்கியப் புகழ் ஏற்பட்டுள்ளது. **'நின்றை நித்திலம்'** பக்தர்கட்குத் தண்ணளி சுரப்பது போலவே **நின்றைக் காளத்தி வாணர்** வறுமையால் வாடும் புலவர்களை ஆதரித்து வந்தார். நீண்ட நாளாக வறுமையுடன் போராடிய கவிஞர் ஒருவர் நின்றவூரை

17. நாச்.திரு.13:7

நோக்கி வருங்கால் இருட்டி விடுகின்றது. நின்றவூருக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூரில் ஒரு சத்திரத்தில் தங்குகின்றார் கவிஞர். அன்றிரவு உறக்கம் சரியாக வரவில்லை. அங்குள்ளவர்களிடம் பேச்சு கொடுக்கின்றார்; இடையில் தன் கவலையையும் சொல்லுகின்றார். அவர்கள் காளத்திவாணரின் கொடைத் தன்மையைப் பலபடப் புகழ்ந்து பேசுகின்றனர்; அவ்வள்ளல் கவிதைகளைச் சுவைக்கும் திறத்தையும் பாராட்டிப் புகழ் கின்றனர். மறுநாள் அவ்வள்ளலைக் கண்டுவிட்டால் தம் வறுமைக்கு ஒரு 'செண்ட் ஆஃப்' தந்து விடலாமே என்று கருதுகின்றார் புலவர். நீண்ட நாளாகத் தன்னோடு பிறந்து வளர்ந்த வறுமையைப் பிரிய மனமும் இல்லை. தம்மிடம் இந்த ஒரு நாளாவது இருந்துவிட்டுப் போகட்டுமே என்று பரிவுடன் நினைக்கின்றார் கவிஞர். இந்தப் பரிவு ஒரு பாட்டு வடிவங்கொள்ளுகின்றது.

> "தீளத்திரிந்(து) உழல்கின்றாய் நீங்கா நிழல்போல
> நாளைக்கு இருப்பாயோ? நல்குரவே! - காளத்தி
> நின்றைக்கே சென்றக்கால் நீளங்கே? நான் எங்கே?
> இன்றைக்கே சற்றே இரு"[18]

*(உழல்தல்-அலைதல்; நல்குரவு-வறுமை; நின்றை-நின்றவூர்)*

என்பது அப்பாடல்.இப்பாடலை நினைந்து சுவைத்துக் கொண்டே இருப்பூர்தி நிலையத்தை நோக்கி நடை கட்டுகின்றோம்.

❖ ❖ ❖

18. தனிப்பாடல் திரட்டு -1: பாடல் 866 : (கழகப் பதிப்பு.)

# 10. அல்லிக் கேணி அச்சுதன்

**ப**ண்டு நடைபெற்ற பாரதப் பெரும் போரில் பார்த்தனுக்குத் தேரூர்ந்து கீதையை உபதேசித்த வரலாற்றை நாம் அறிவோம். அன்று பார்த்தனுக்கு அஞ்ஞான இருளை அகற்றிய கீதையின் பொருள் இன்று பாரிலுள்ள மக்கட்கெல்லாம் பயன்பட்டு வருகின்றது. பாரதப் போரின் முதல் நாளில் போர்த் தொடக்கத்திலே. எதிர் நின்ற வீரர்கள் யாவரும் தன் உறவினராய் இருக்கக் கண்டு, மனம் சோர்ந்து, வாள் தடக்கை வில்நெகிழத் திகைத்துத் தேர்த்தட்டில் இருக்கின்றான் பார்த்தன். சாரதியாக அமைந்த கண்ணன் தத்துவப் பொருளை விளக்கி அவன் மயக்கத்தைப் போக்கத் தொடங்குகின்றான். ''பலன் கருதாது உன் கடமைகளைச் செய்யக் கடவாய்'' என்பதே அவன் உரைத்த தத்துவத்தின் சாரம். பாரதக் கதையில் கண்ணன் அர்ச்சுனனுக்குக் கீதையை உபதேசம் செய்ய நேர்ந்த இடமும் காலமும் மக்கள் மனத்தில் ஆழப்பதிய வேண்டியவை; அன்று அர்ச்சுனனுக்குக் காட்டின கீதையின் ஒளியில் நாம் நடந்து வாழ்க்கையை நடத்த வேண்டியவர்கள்.

''அர்ச்சுனா, இப்போது உன் மனம் மாயையின் வசப்பட்டுள்ளது. அதுதான் இப்போது உள்ளதை இல்லாத தாகவும், இல்லாததை உள்ளதாகவும், ஒன்றைப் பிறிதொன் றாகவும் காட்டி நிற்கின்றது. மனம் அந்த மாயையின் ஆற்றலுக்கு உட்படும்பொழுது, பொருள்களின் நிலையை உள்ளபடி அறியும் தத்துவ ஞானம் உன்னிடம் தோன்றவில்லை. மாயையின் ஆற்றலால் உன்னிடம் இப்போது தோன்றியுள்ளது விபரீத ஞானம். அதன் காரணமாகவே, நித்தியமான ஆன்மாவுக்கு யாதொரு தொடர்பும் படாமல் அநித்தியமான உடலையே பற்றிய தாய் முதலியோரிடத்துச் சுற்றத்தவர் என்ற பொய் அன்பு உன்னிடம் நிலைபெற்று நிற்கின்றது'' என்று கூறுகின்றான்.

மேலும், அவன் தரும் விளக்கம்: ''வெற்றி வீரனே, இந்த மனம் மெய், வாய், கண், செவி, மூக்கு என்னும் ஐம்பொறிகளின்

துணைக்கொண்டு ஊற்றின்பம், சுவை, ஒளி, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களையும் துய்க்கின்றது. இங்ஙனம் அநுபவிக்குங்கால் அது சத்துவம், இராஜசம், தாமசம் என்ற முக்குணங்களுடனும்; காமம், கோபம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் வேறு ஆறு உணர்ச்சிகளுடனும் நல்லுறவுகொண்டு ஆட்சி புரிகின்றது. இதனால் தூய நல் அறிவன் என்ற தோன்றல் (புருஷன்) தோன்றுவதற்கு வழி இல்லாது போகின்றது. இங்ஙனம் ஐம்பொறிகட்கு வசப்பட்டு அவற்றின் புலன்களிலே முக்குணங்களோடும் மற்றும் பல தீய சிந்தைகளோடும் மனத்தை அதன் போக்குப்படி யதேச்சையாக விட்டிடாமல் அடக்கிவைத்தால் தத்துவ ஞானம் தோன்றும்.''

''இன்னும் கேட்பாயாக :

''அந்தநல் அறிவன் தன்னை
  அறிந்தவர் அறிஞ ராவார்;
தந்தையால் வகுக்கப் பெற்ற
  சராசரப் பொருள்கள் தோறும்
வந்தஆன் தீம்பால் நெய்போல்
  உயிர்க்குஉயிர் ஆகி வாழும்
பந்தம்அது உணர்ந்து நேரே
  £õUS [ PÕA £øP õ° |s £°''

(அறிவன்-சுத்த ஞானம் என்ற புருஷன்; தந்தை-இறைவன்; சரம் அசரப் பொருள்கள் -இயங்கு திணைப் பொருள்களும் நிலைத்திணைப் பொருள் களும்; ஆன்வந்த தீம்பால்-பசுவினிடமாக வந்த இனியபால்; உயிர்க்கு உயிராகி - சீவான்மாக்களுள்ளும் உறையும் பரமான்மாவாய்; பந்தம் அது - உறவினை(சரீர-சரீரிபாவனை)

எல்லாச் சீவான்மாக்களிடத்தும் பரமான்மா ஒரு தன்மையாகப் பொருந்தியிருக்கையில் அவற்றுள் சிலவற்றைப் பகையாகவும், சிலவற்றை நட்பாகவும் கருதுவது மாயசெயலேயன்றி வேறு அன்று என்பதை உணர்வாயாய.''

''மேலும் கூறுகின்றேன், கேள்:

''உம்பரும் முனிவர் தாமும்
  யாவரும் உணரா ஒன்றை
இம்பரின் உனக்கு நானே
  இசைவுற உணர்த்தா நின்றேன்;

1. வில்லிபாரதம் - விட்டுமப் பருவம்-முதற்போர்ச் சருக்கம் - 4.

ஐம்பெரும் பூதத் தானும்
அமைத்தன உடலம் யார்க்கும்;
நம்பனும் ஒருவன் உள்ளே
ஞானியாய் நடத்து கின்றான்''[2]

(உம்பர்-தேவர்; ஒன்றை-ஒரு தத்துவப் பொருளை; இம்பர்-இவ்விடத்து; இசைவு உற-பொருந்தும்படி; உடலம்-உடல்கள்; யார்க்கும்-எல்லாப் பிராணிகட்கும்; நம்பன் -இறைவன்)

கடைப் பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, வானம் என்பனவற்றினுள்ளே மனிதன் புகுந்து அவற்றைக் கொண்டு பல்வேறு தொழில்களை நடத்துவதைப் போலவே, இறைவனும் உயிருள்ள பொருள்களிடத்தும், அந்தர்யாமியாகத் தங்கிருந்து தொழில் நடத்துகின்றான் என்பதைத் தெளிவாயாக.

'என்னை நீ புகலக் கேண்மோ
'எங்குமாய் யாவும் ஆகி
மன்னிய பொருளும் யானே;
மறைக்கெலாம் முடிவும் யானே'

(புகல-சொல்ல; கேண்மோ-கேட்பாயாக; மன்னிய-அழியாது நிலைபெற்ற; பொருள்-பரம்பொருள்; மறை-வேதம்)

என்ற உண்மையையும் உணர்வாயாக.''

இங்ஙனம் தான் உபதேசித்த உண்மைப் பொருள் பார்த்தனுக்குக் கட்புலனாகி அவனுடைய திகைப்பைத் தீரவொழித்தற்குத் தன் நிலையை ''விசுவரூபமாகக்'' காட்டு கின்றான் பார்த்தசாரதியாகிய கண்ணன். இதனை வில்லிபுத்தூரார்,

'' 'நின்னிடை மயக்கும் இந்த
நேயமும் ஒழிக' என்று
தன்னிலை அவற்குக் காட்டித்
தத்துவம் தெளிவித் தானே.''[3]

(மயக்கு-திகைப்பு; நேயம்-உறவினரென்னும், நண்பினரென்றும் கொண்ட அபிமானம்; தத்துவம்-உண்மை உணர்வு)

என்று விளக்குகின்றார்.

2. வில்லிபாரதம் - விட்டுமப் பருவம் - முதற்போர்ச் சுருக்கம் -5.
3. வில்லிபா : வீட்டுமப் பருவம் - முதற்போர் - 7.

கண்ணனின் கீதோபதேசம், விசுவரூப தரிசனம் இவை பார்த்தனின் மயக்கத்தைத் தெளிவிக்கின்றன. செருச் செய்த வற்கும் இசைகின்றான். அந்தப் போரில் பாண்டவர்கள் வாகை சூடுவதற்கும் காரணமாக இருந்தவனும் கண்ணனே என்பதையும் நாம் அறிவோம். இந்தக் கருத்துகளையெல்லாம் அடக்கிக் காட்டும் வில்லிபுத்தூராரின் பாசுரத்தை ஓதி உளங்கரைகின்றோம்.

''மேவரு ஞானா னந்த
வெள்ளமாய் விதித்தோன் ஆதி
மூவரும் ஆகி அந்த
மூவருக்குள் முதல்வன் ஆகி
யாவரும் யாவும் ஆகி
இறைஞ்சுவார் இறைஞ்சப் பல்பல
தேவரும் ஆகி நின்ற
செங்கண்மால் எங்கள் கோவே''[4]

(மேவு அரு-அடைதற்கு அருமையான; யாவரும்-எல்லா உயர்திணைப் பொருள்களும்; யாவும்-எல்லா அஃறிணைப் பொருள்களும்; இறைஞ்சுவார் - வணங்குவதற்குரியவர்கள்; கோ-தலைவர்)

என்பது பாடல். இப்பாடலை ஓதியவுடன் மீண்டும் கீதையின் உட்பொருள் நம் சிந்தையில் எழுகின்றது. அல்லிக்கேணி அச்சுதனைக் காண விரைகின்றோம்.

'மா மயிலை மாஅல்லிக் கேணி' என்று திருமழிசையாழ்வாரால் குறிப்பிடப்பெறும் மயிலாப்பூரும், திருவல்லிக்கேணியும் சென்னையில் பழம்பெருமை வாய்ந்த பகுதிகளாகும். திருமயிலை பழங்காலத்தில் (ஆழ்வார்கள் காலத்தில்) மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் நிறைந்த ஒரு பட்டினமாகத் திகழ்ந்தது.

மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும்
மாடமா ளிகையும் மண்டபமும்
தென்னன்தொண் டையர்கோன் செய்தநல் மயிலை''[5]

என்ற திருமங்கை மன்னன் வாக்கினால் இதனை அறியலாம். திருவல்லிக்கேணியோ ஒரே பசுஞ்சுடர்ச் சோலையாக விளங்கியது.

4. வில்லிபா - வீட்டுமப்பருவம் - முதற்போர் (காப்பு)
5. பெரி. திரு. 2.3:11.

"குரவமே கமழும் குளிர்பொழி லூடு
குயிலொடு மயில்கள்நின் றாட
இரவியின் கதிர்கள் நுழைதல்செய் தறியாத்
திருவல்லிக் கேணி"[6]

என்ற ஆழ்வாரின் வாக்கு இதனை அரண் செய்கின்றது. மயிலையில் பொருட்செல்வர்களும் பக்திச் செல்வர்களும் இருந்தனர். வாணிகத்துறையில் மேம்பாடுற்றிருந்த மயிலாபுரிக்கு வங்கக் கடல்மூலம் மரக்கலங்கள் வந்து போவதுண்டு. திருவல்லிக்கேணியோ வைணவம் என்னும் பக்திப் பெருஞ் செல்வத்தின் நிலைக்களனாகத் திகழ்ந்தது. இந்தத் திருவல்லிக் கேணியில்தான் எம்பெருமான் பார்த்தசாரதி நின்ற திருக் கோலத்தில் திருக்கோயில் கொண்டுள்ளான். இக்கோயிலின் திருக்குளம் அல்லிப்பூக்கள் நிறையப்பெற்றிருந்ததால் 'அல்லிக் கேணி' என்ற பெயர்பெற்று அதுவே நாளடைவில் தலத்திற்கும் உரிய பெயராகி நிலைத்துவிட்டது.

இந்தக் கருத்துகள் நம் மனத்தில் குமிழியிட்டெழுந்த வண்ணம் திருக்கோயிலினுள் நுழைவதற்குச் சித்தமாகின்றோம். திருக்கோயிலின் முன்பு அமைக்கப் பெற்றுள்ள மண்டபங்களைக் கடந்து 'மகா மரியாதை வாயில்' என்று வழங்கப்பெறும் இடத்திற்கு வருகின்றோம். இதன்மேல்தான் இராஜகோபுரம் கட்டப்பெற்றுள்ளது; ஐந்து நிலைகளும் ஏழு கலசங்களும் கொண்ட இக்கோபுரம் சில ஆண்டுகட்கு முன்புதான் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. இந்த வாயிலைக் கடந்து அதன் பின்னர்த் தொண்டரடிப் பொடிகளின் சந்நிதியைக் கடந்துதான்,

"பார்ஏறு பெரும்பாரம் தீரப் பண்டு
பாரதத்துத் தூதுஇயங்கி பார்த்தன் செல்வத்
தேர்ஏறு சாரதியாய் எதிர்ந்தார் சேனை
செருக்களத்துத் திறல்அழியச் செற்றான் தன்னை"[7]

(பார்-பூமி; பண்டு-முற்காலத்தில்; தூது இயங்கி-தூதுசென்று; பார்த்தன் - அருச்சுனன்; சாரதி-பாகன்; எதிர்ந்தார்-எதிரிகளின்; செருக்களம்-போர்களம்; திறல் - வலி; செற்றான்-ஒழித்தவன்)

என்று திருமங்கை மன்னன் போற்றும் பார்த்தசாரதியைச் சேவிக்க வேண்டும்.

6. மேலது - 2. 3 :7
7. பெரி. திரு - 2. 10:8.

இக்கோயிலில் ஒரு சம்பிரதாயம் நிலவிவருகின்றது; பார்த்தசாரதியைத் தரிசிப்பதற்கு முன்னரே திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஏனையவர்களையெல்லாம் சேவித்து விடவேண்டும் என்பதுவே அந்த ஐதிகம். ஆகவே, பார்த்த சாரதியை வலம்வரும் நிலையில் புறப்படுகின்றோம். சந்நிதி வாயிலினின்றும் தென்புறமாகத் திரும்பியதும் முதலில் நமக்குச் சேவை சாதிப்பவர் **வேதவல்லித் தாயார்.** இவரைப்பற்றி வரலாறு ஒன்று உண்டு. ஒரு காலத்தில் திருவல்லிக்கேணிப் பகுதி துளசிச் செடிகள் மண்டிக்கிடந்த காடாக இருந்தது. ஒரு சமயம் ஸ்ரீமந் நாராயணனுடன் **'அகலகில்லேன் இறையும்'**[8] என்று கிடக்கும் பெரிய பிராட்டியார் ஒரு சிறு கலகம் காரணமாகத் திருமாலை விட்டுப் பிரிந்து பிருந்தாரண்யம் (துளசிவனம்) என்று வழங்கும் திருஅல்லிக்கேணிக் கரையில் ஒரு சந்தன மரத்தடியில் ஒரு பெண் குழவி வடிவத்துடன் கிடக்கின்றார். அப்போது அங்குத் தவம்புரிந்து கொண்டிருந்த பிருகு முனிவர் அக்குழந்தையை எடுத்து **'வேதவல்லி'** என்று பெயரிட்டு வளர்த்து வருகின்றார். எம்பெருமான் ஓர் அரசகுமரன் வடிவத்தில் எழுந்தருளி மங்கைப் பருவம் எய்தியிருந்த வேதவல்லியைக் காதலித்துத் திருமணம் புரிந்து கொள்ளுகின்றார். பின்னர் இவர் இங்கேயே தங்கிவிட்டதாகப் புராணவரலாறு. வேதவல்லித் தாயார் சர்வாங்கசுந்தரி. இவரை மனமாரச் சேவிக்கின்றோம்.

அடுத்து நம்மை ஆட்கொள்ள இருப்பவர் கருடன் மீது எழுந்தருளியிருக்கும் **வரதராசர்.** அவருடைய சந்நிதிக்கு வந்ததும் திருமங்கையாழ்வாரின்,

**மீன்அமர் பொய்கை நாள்மலர் கொய்வான்**
**வேட்கையி னோடுசென்(று) இழிந்த**
**கான்அமர் வேழம் கைஎடுத்து அலற,**
**கராஅதன் காலினைக் கதுவ,**
**ஆனையின் துயரம் தீரப்புள் ஊர்ந்து**
**சென்றுநின்(று) அழிதொட் டானை,**
**தேன்அமர் சோலை மாடமா மயிலைத்**
**திருவல்லிக் கேணிக்கண் டேனே''**[9]

(பொய்கை-தடாகம்; நாள்மலர்-புதிய பூ; வேட்கையோடு-ஆகையோடு; இழிந்த - இறங்கின; வேழம்-யானை (கஜேந்திரன்); கை-துதிக்கை; அலற -கூச்சலிட; கரா -முதலை; கதுவ-கௌவிக்கொள்ள; புள்-(இங்கு) கருடன்; ஆழி-சக்கரம்)

*8. திருவாய் - 6- 10:10* *9. பெரி. திரு. 2.3:9.*

என்ற பாசுரத்தைப் பாடிச் சேவிக்கின்றோம். யானை அரசனது துயர் தீர்த்த எம்பெருமான் நம்முடைய துயரையும் தீர்த்தருள வேண்டும் என்று முறையிடுகின்றோம். அன்று யானை தன் உயிர் போகின்றதே என்ற துயரத்தால் அலறவில்லை; வருந்திப் பறித்த தாமரை மலர்களைச் செவ்வி அழியாமல் எம்பெருமானுடைய திருவடியில் சாத்த முடியவில்லையே என்ற கவலையாலேயே அது கதறியது. அந்த யானையின் உணர்ச்சி நமக்கு ஏற்பட வேண்டுமே என்று கதறுகின்றோம்; ஓலமிடுகின்றோம். முதலையினால் அடர்ப்புண்ட யானையின் இடரைத் தீர்த்தருளின எம்பெருமான் ஐம்பொறிகளாகின்ற முதலைகளின் வாயில் அகப்பட்டுத் தவித்துத் துடிக்கிற நம்மையும் காத்தருள்வதற்காகத்தான் இங்கு வந்து எழுந்தருளி யுள்ளான் என்று எண்ணி அவன் கருணைத்திறத்தினை வியந்து போற்றுகின்றோம். 'ஆழி விட்டானை' என்னாது 'ஆழி தொட்டானை' என்றதால் எம்பெருமானுடைய செயலின் இலாகவத்தைத் தெரிவிக்கும் ஆழ்வார் பாசுரத்தின் நயத்தையும் அநுபவிக்கின்றோம்.

இந்த அநுபவத்துடன் ***அழகிய சிங்கர்*** சந்நிதிக்கு வருகின்றோம். பார்த்தசாரதிப் பெருமானின் கருவறைக்குப் பின்புறத்தில் மேற்கு நோக்கிய திருமுகமண்டலங் கொண்டு யோக நிலையில் இவர் வீற்றிருக்கின்றார். இவர் ***அத்திரி*** முனிவருக்குக் காட்சி கொடுத்த அவசரத்தில் வீற்றிருக்கின்றார் என்பது புராண வரலாறு. இவரை நோக்கி; "அன்று பிரகலாதனை ஆட்கொண்ட எம்பெருமானே, அடியேனையும் இன்று ஆட்கொள்ள வேண்டும்" என்று இறைஞ்சுகின்றோம்.

"பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்
வாயில்ஓர் ஆயிரம் நாமம்
ஒள்ளிய ஆகிப் போத,ஆங்(கு) அதனுக்கு
ஒன்றும்ஓர் பொறுப்பிலன் ஆகி,
பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்பப்
பிறைஎயிற்று அனல்விழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே"[10]

(ஓதி-படித்துவிட்டு; சிறுவன்-பிரகலாதன்; நாமம்-திருப்பெயர்; ஒள்ளிய ஆகி - அழகுடன்; ஒன்றும்-உள்ளளவும்; பொறுப்பிலன் ஆகி -பொறுக்க மாட்டா தவன் ஆகி; வெகுண்டு-சினந்து; பிறை எயிறு-பிறைபோன்ற பற்கள்; அனல்

10. பெரி. திரு. 2. 3:8.

விழி -நெருப்புப் பொறி கிளர்கின்ற கண்கள்; பேழ்வாய்-பெரிய வாய்; தேவை - தேவனை)

என்ற பாசுரம் நம்மிடற்றொலியாக வெளிப்படுகின்றது. அன்று பிரகலாதன் பொருட்டுத் தூணினின்றும் வெளிப்பட்ட நரசிங்கப் பெருமானே இன்று இங்கு அர்ச்சாவதார வடிவத்துடன் நமக்குச் சேவை சாதித்துத் திருவருள் பாலிக்கின்றான் என்று நினைந்து பரவசப்படுகின்றோம்.

அடுத்து, **ஆண்டாள்** சந்நிதிக்கு வருகின்றோம்.

''கோலச் சுரிசங்கை மாயன்செவ்
வாயின் குணம்வினவும்
சீலத் தனள்தென் திருமல்லி
நாடி செழுங்குழல்மேல்
மாலைத் தொடைதென் அரங்கருக்(கு)
ஈயும் மதிப்புடைய
சோலைக் கிளி,அவள் தூயநற்
பாதம் துணைநமக்கே''[11]

(கோலச்சுரி சங்கு-அழகிய புரியினையுடை சங்கு; மல்லி-ஒருநாடு; குழல் -கூந்தல்; ஈயும்-தரும்)

என்ற பாசுரத்தை நினைந்த வண்ணம் பெரியாழ்வாரின் அருமைத் திருமகள் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியைச் சேவிக்கின்றோம். ஈசுவரனையும் உயிர்களையும் ஆளும் திறமையினால் 'ஆண்டாள்' என்ற திருப்பெயருடன் இலங்கும் எம்பெருமாட்டியை மனம் ஆரச் சேவிக்கின்றோம். இங்ஙனம் பிராகாரத்திலுள்ள நால்வரையும் சேவித்த நிலையில் பிராகாரத் தினை வலம் வந்து பார்த்தசாரதியின் சந்நிதிக்குள் நுழைவதற்குச் சித்தமாகின்றோம். அதற்கு முன்னதாக ஆண்டாள் சந்நிதியின் அருகிலிருந்து பார்த்தசாரதியின் கருவறையின் மேலுள்ள விமானத்தைச் சேவிக்கின்றோம்.

பார்த்தசாரதியின் சந்நிதிக்குள் நுழைந்து வலப்பக்கமாகத் திரும்பியதும் புயங்க சயனத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு எழுந்தருளியிருக்கும் **அரங்கநாதன்** நம்மை ஆட்கொள்ளுகின்றார். இந்த அரங்நாதனே வேதவல்லித் தாயாரை மணந்து கொண்ட பெருமான். இவருக்கு 'மந்நாதன்'

11. நாச். திரு. தனியன் ; திருக்கண்ணமங்கையாண்டான் அருளிச் செய்தது.

என்ற திருநாமமும் உண்டு. அல்லிமலரில் தோன்றிய அன்னையார் 'என் நாதன்' என்று கூறித் திருமணம் புரிந்து கொண்டதால் இந்த எம்பெருமானுக்கு 'மந்நாதன்' என்ற திருநாமம் ஏற்பட்டது. 'என் நாதன்' என்ற தமிழ்ப்பெயரே வடமொழியில் 'மந்நாதன்' என வழங்கலாயிற்று. வேதவல்லித் தாயாரைத் திருமணம் புரிந்து கொண்ட அரங்கநாதன் 'மந்நாதன்' என்ற பெருடன் திருவல்லிக்கேணியிலேயே தங்கிவிட்டதாக ஐதிகம். இதனை நினைந்தே பேயாழ்வார்,

-''எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்பன்
திருவல்லிக் கேணியான் சென்று''[12]

(ஒரு அல்லி- ஒப்பற்ற இதழ்களையுடைய; தாமரையாள்-பெரிய பிராட்டியார்; திருஅல்லிக்கேணியான்-மந்நாதன்)

என்று மங்களாசாசனம் செய்தருளியுள்ளார். மாமனார் வீட்டில் சற்றுச் சுகமாகப்படுத்துக் கொண்டிருக்கும் மருமகனைப் போலவே, திருமணம் புரிந்துகொணட களிப்பினால் சிறிது சௌகரியமாகக் காலை நீட்டியே படுத்துக்கொண்டுள்ளார். உருவம் சற்றுச் சிறிய திருவுருவமே. இந்த எம்பெருமானே இத்தலத்தின் ஆதிமூர்த்தியாக இருந்தவர் என்ற வரலாறும் உண்டு. கிடந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் இந்த எம்பெருமானை மண்மகளும் மலர்களும் அடிவருடிய நிலையில் உள்ளனர். தலைப்புறமாக யக்ஞ வராகமூர்த்தியும், திருவடிப் புறமாக உக்கிர நரசிம்ம மூர்த்தியும் எழுந்தருளியுள்ளனர். இந்த எம்பெருமானையே திருமழிசையாழ்வாரும்,

''தாளால் உலகம் அளந்த அசைவேகொல்,
வாளா கிடந்தருளும் வாயதிறவான்,-நீளோதம்
வந்துஅலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்,
ஐந்தலைவாய் நாகத் தணை''[13]

(தாளால்-திருவடியால்; அசைவு-சோர்வு; வாளா-சும்மா; நீள் ஓதம்-பெரிய அலைகள்; அலைக்கும் -வீசும்; நாகத்து அணை- திருவனந்தாழ்வானாகிற படுக்கை)

என்று மங்களாசாசனம் செய்துள்ளார். பல்வேறு சமயங்களிலும் உழன்று திரிந்து அலுத்தப்போன உள்ளம் இங்கே ஓய்வுபெறுவதற்காக வந்து இறைவனை நோக்கி, ''நீயும்

12. மூன். திருவந் - 16. 13. நான். திருவந் - 35.

உலகமெலாம் திரிந்து, அலுத்து, ஓய்வு பெறுவதற்காகத்தான் இந்தக் கடற்கரையில் வாய்திறவாமல் படுத்துக் கிடக்கின்றாயோ?'' என்று விடுக்கும் வினாவில் ஆழ்வாரின் கடல்போன்ற பக்திப் பெருக்கு வெளிவருவதைக் கண்டு உள்ளம் குழைந்து மகிழ்கின்றோம். அந்த மகிழ்ச்சியில் திளைக்கும் நாமும்,

''வேதத்தை வேதத் தின்சுவைப் பயனை
விழுமிய முனிவர்கள் விழுங்கும்,
கோதுஇல் கனியை நந்தனார் களிற்றைக்
குவலயத் தோர்தொழு தேத்தும்,
ஆதியை அமுதை என்னை ஆளுடை
அப்பனை ஒப்பவ ரில்லா
மாதர்கள் வாழும், மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே''[14]

(கோது-குற்றம்; இங்கு எம்பெருமான் வேதம், வேதத்தின்பயன், முனிவர்கள் விழுங்கும் கனி, நந்தனார் களிறு என்று உருவகிக்கப்படுகின்றார்; குவலயம் -பூமி; மாடம் - மாளிகை)

என்ற பெரிய திருமொழிப் பாசுரம் நம் மிடற்றொலியாக வெளிவர, இந்த எம்பெருமானைச் சேவிக்கின்றோம்.

உலகில் ஒவ்வொருவருடைய விருப்பம் ஒவ்வொரு விதமாக இருப்பதால் அவரவர்களுடைய விருப்பத்திற்கிணங்க எம்பெருமானை அடையும் வழிகளையும் அவற்றாலேற்படும் பயன்களையும் வேதத்தின் மூலமாகக் காட்டிக் கொடுக்கின்றமை பற்றி 'வேதத்தின் சுவைப் பயனாக' உருவகிக்கப் பெற்றுள்ளார் எம்பெருமான். வியாசர், பராசரர், வால்மீகி போன்ற முனிபுங்கவர்கட்கு இனிய கனிபோல் மிகவும் இனியனாயிருப்பது பற்றி 'விழுமிய முனிவரர் விழுங்கும் கோதுஇல் இன்கனி' எனப்போற்றப் பெறுகின்றார். எம்பெருமான் கண்ணனாக அவதரித்த காலத்தில் நந்தகோபருடைய திருமாளிகையில் யானைக்கன்றுபோல் விளையாடி அனைவருக்கும் மகிழ்ச்சி தந்தவனாதலால் 'நந்தனார்களிறு' என்று குறிப்பிடப் பெற்றுள்ளார். வேதவல்லித் தாயார் 'என் நாதன்' என்று கூறிய கருத்தை உட்கொண்டே திருமங்கையாழ்வாரும் 'என்னை ஆளுடைய அப்பனை' என்று சுட்டுகின்றார் என்பதையும், வேதவல்லித் தாயார் திருவவதரித்து முக்கியத்துவம் பெற்ற

14. பெரி. திரு. - 2. 3 : 2.

இடமாதலால் பெண்க்ளுக்கு முக்கியத்துவம் கொடுத்து 'ஒப்பவர் இல்லா மாதர்கள் வாழும்... திருவல்லிக்கேணி' என்று சிறப்பித் தார் என்பதையும் நினைந்து மனம் உருகுகின்றோம்.

அடுத்து, இடப்பக்கம் திரும்பியதும், தம்பிமார்கள் மூவர், துணைவியார், அநுமன் இவர்கள் சமேதராக நமக்குச் சேவை சாதிக்கின்றார் சக்கரவர்த்தி திருமகன். இராமர் இத்திருக் கோயிலுக்குள் குடிபுகுந்தமைக்கும் ஒரு வரலாறு வழங்கி வருகின்றது. **சசிபதர்** என்ற முனிபுங்கவர் ஒருவர் பாண்டாரம் என்னும் மலையில் தவம்புரிக்கின்றார். அவர் தவத்தைக் குலைக்க **ஹேலை** என்ற தேவகன்னிகை வருகின்றாள்; முனிவர் தவமும் கலைகின்றது. பொறிகள் அவரை ஆட்கொள்ளுகின்றன. அவர்கட்கு ஓர் ஆண் மகவும் பிறக்கின்றது. இருவரும் குழவியை விட்டுப் பிரியவே, அது மரத்தினின்றும் சொட்டும் தேனை உட்கொண்டே வளர்ந்து 'மதுமான்' என்ற பெயரையும் பெறுகின்றது. இந்த மதுமானுக்குக் காட்சி தந்து அவனை ஆட்கொள்வதற்காகவே அன்று மாயமானைத் தொடர்ந்து சென்ற இராமர் இங்குத் தம் சுற்றம்சூழ எழுந்தருளியுள்ளார். இந்த இராமச்சந்திரனை,

"பரதனும் தம்பி சத்துருக் கனனும்
இலக்கும னோடுமை திலியும்
இரவுநன் பகலும் துதிசெய்ய நின்ற
இராவணாந் தகனைஎம் மானை,
குரவமே கமழும் குளிர்பொழி லூடு
குயிலொடு மயில்கள்நின்(று) ஆல,
இரவியின் கதிர்கள் நுழைதல்செய் தறியாத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே"[15]

*(மைதிலி-மிதிலைச் செல்வி, சீதை; இராவண அந்தகன்-இராவணனுக்கு யமன் (இராமன்); குரவம்-ஒருமலர்; கமழும்-வாசனை வீசும்; பொழில் - சோலை; ஆல- ஆரவாரிக்க; இரவி-சூரியன்)*

என்ற பாசுரத்தைப் பாடிச் சேவிக்கின்றோம். பரதன் முதலிய நால்வரைச் சொல்லியது மற்றுமுள்ள வானர முதலிகட்கும், முனிக்கணங்கட்கும், பிறருக்கும் உபலட்சணமாகும். இவர்கள் யாவரும் இராவணவதமாகிய வீரச் செயலை நினைந்து இராமரைத் துதிசெய்கிறனர். அந்தக் குழுவில் நாமும் சேர்ந்து

*15. பெரி. திரு. - 2. 3: 7.*

கொண்டாற் போன்ற உணர்ச்சியுடன் அந்த எம்பெருமானைச் சேவிக்கின்றோம்.

இராமரிடம் விடை பெற்றுக்கொண்டு பார்த்தசாரதியின் கருவறையை நோக்கிச் செல்லுங்கால் இராமநாமத்தையன்றி வேறொன்றையும் வேண்டாத சிறிய திருவடி நமக்குக் காட்சி தருகின்றார்: அவரை வணங்கிவிட்டு நகருங்கால் **ஆழ்வார்கள்** நமக்குத் திருமுகங்கள் காட்டி ஆசி கூறுகின்றனர். அவர்கட்கெல்லாம் தனித்தனி கும்பிடு போட்டுவிட்டுக் கருவறையை நோக்கி நடக்கின்றோம். அங்கு கம்பீரமான நீண்டுயர்ந்த தோற்றத்துடன் முறுக்கிய மீசையுடன் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிப்பவரே **வேங்கடகிருஷ்ணன்.** இவரே மூலவர். உற்சவரே **பார்த்தசாரதி** என்பவர். திருமலையில் எழுந்தருளி யிருக்கும் திருவேங்கட முடையானே **சுமதி** என்ற தொண்டை மான் சக்கரவர்த்தியின் பிரார்த்தனைக்கிணங்க 'பார்த்தன் செல்வத் தேர் ஏறு சாரதியாய்' எழுந்தருளியுள்ளான் என்பது வரலாறு. எம்பெருமான் தனியாக வரவில்லை. குடும்ப சகிதமாகவே வந்து விடுகின்றார். எழிலெல்லாம் திரண்டு வடிவெடுத்தற்போல் உருக்குமிணிப் பிராட்டியார் எம்பெருமான் பக்கத்தில் நின்ற திருக்கோலத்தில் நமக்குச் சேவை சாதிக்கின்றார். பிராட்டிக்குப் பக்கத்தில் ஒரு கையில கலப்பையுடனும், மற்றொரு கையில் வரதமுத்திரையுடனும் பலராமர் நிற்கின்றார். பெருமாளுக்கு இடப்பக்கமாகத் தம்பி சாத்தகியும், மகன் பிரத்யும்னனும், பேரன் அநிருத்தனும் எழுந்தருளியுள்ளனர். பார்த்தனுக்குத் தேரோட்டியாய் எழுந்த அவசரம் ஆனதால் இடதுகையில் இருக்க வேண்டிய சங்கு வலது கையில் மாறிக் கிடக்கின்றது. போரில் 'படைஎடேன்' என்று வாக்குக் கொடுத்ததால் சக்கரப்படை இல்லை. ஆயினும், அவருடைய இடையினின்றும் வாள் ஒன்று தொங்குகின்றது. அது கீதாச்சாரியனாக ஞான யோகத்தை விளக்கும்போது அஞ்ஞானத்தால் எழும் ஐயங்களையெல்லாம் வேருடன் களையும் 'ஞானவாள்' என்று விளக்கப் பெறுகின்றது. இவ்விளக் கத்தால் 'படை எடேன்' என்ற வாக்கு பொய்க்கவில்லை என்பதை உணர்தல் வேண்டும்.

மூலவருக்கு முன்னால் பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார் இவர்களுடன் நிற்பவரே பார்த்தசாரதி என்பவர்.

'கொண்டல் வண்ணன்' என்பதற்கேற்ப நல்ல கவர்ச்சியான கரிய திருமுக மண்டலத்துடனும் திருமேனியுடனும் காட்சியளிக்கின்றார். முகத்தில் பாரதப்போரில் ஏற்பட்ட வடுச்சின்னங்கள் காணப்பெறுகின்றன. ஆடை அணிகலன்கள் யாவும் வைரத்தாலானவை. கையில் சாட்டை கொண்டு 'இந்திரன் சிறுவன் தேர்முன் நிற்கும்' கோலமாக எழுந்தருளியிருப்பது மிகுந்த ஏற்றமுடையது. ஆனால், இந்தச் சாட்டையை அவர் மேனியை அலங்கரிக்கும் நகைகள் மறைத்து விடுகின்றன. இங்ஙனம் மூலவர், உற்சவர் இவர்களின் திவ்விய மங்கள விக்கிரகங்களின் அழகில் நமது மனத்தைப் பறிகொடுத்து நிற்கும் நிலையில்,

"வில்பெரு விழவும், கஞ்சனும், மல்லும்,
வேழமும், பாகனும் வீழச்
செற்றவன் தன்னை, புரம்எரி செய்து
சிவன்உறு துயர்களை தேவை,
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு
பார்த்தன்தன் தேர்முன் நின்றானை,
சிற்றவை பணியால் முடிதுறந் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே."[16]

(வில்பெரு விழவு-கம்சன் தன் வில்லுக்கு எடுத்த பெருவிழா; மல் - மல்லர்கள்; வீழ - நாசம் அடைய; வேழம்-யானை (குவலயாபீடம்); களை- போக்கும்; பற்றலர் - பகைவர்; வீய-மாள; சிற்றவை-கைகேயி)

என்ற பெரியதிருமொழிப் பாசுரம் மிடற்றொலியாக வெளிப்படுகின்றது. பார்த்தசாரதியாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் வீரச்செயல்களும், சிறுசேவகங்களும் நம் சிந்தையில் குமிழியிட்டு எழுகின்றன. கண்ணனாகவும் இராமனாகவும் திருவதரித்து அக்காலத்து மக்களை வாழ்வித்தருளின எம்பெருமான் பின்னானாராகிய நம்போலியரையும் வாழ்விக்கத் திருவுள்ளங்கொண்டு அவன் எழுந்தருளியிருக்கும் கருணைத் திறத்தை வியந்து போற்றுகின்றோம்.

திருமங்கையாழ்வார் அநுசந்தித்து இனியரான நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக எண்ணி மகிழ்கின்றோம். நஞ்சூட்டிய முலையுடன் கண்ணனுக்குப் பாலூட்டி அவனைக் கொல்வதற்காகத் தாயுருவுடன் வந்த பூதனையின் உயிரையும் சேர்த்து அமுது செய்தவன் எம்பெருமான்; திருமால் கடல்

16. பெரி. திரு. - 2.3 :1.

கடைந்த காலத்தில் **தந்வந்தரி** என்னும் தேவ உருவுடன் அமுத கலசத்துடன் பாற்கடலினின்று தோன்றிய பொழுது அசுரர்கள் அமுத கலசத்தை வலிந்து பற்றிக் கொள்ள, எம்பெருமான் மோகினி அவதாரம் கொண்டு அசுரர்களை மயக்கி அவர்களிடமிருந்து கலசத்தைக் கைக்கொண்டு அமுதத்தை அசுரர்கட்கு வழங்கினன்.[17] ஆண்டுதோறும் ஆயர்கள் இந்திரனுக்கு எடுத்த எழில் விழவினை மலைக்கு எடுக்குமாறு கண்ணன் பணிக்க, ஆயர்களும் அதனைக் கேட்டு அங்ஙனமே செய்ய, இந்திரன் வெகுண்டு மேகங்களை ஏவி ஏழு நாட்கள் கல்மாரி பெய்விக்க, கண்ணன் குன்றம் ஏந்திக் குடையாகப் பிடித்து ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்தருளினன்.[18] எம்பெருமான் அலர்மேல்மங்கையாகிய பெரியபிராட்டியாருக்கு இன்பன்; பூமிப்பிராட்டியாருக்கு இறைவன்; நப்பின்னைப் பிராட்டியின் நாயகன்; ஏனையோர்கட்கெல்லாம் ஒருக்காலும் விட்டு நீங்காத துணைவன்; பாண்டவர்க்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூது சென்று வாயுரை செய்த வித்தகன். திருமங்கை மன்னனுக்குத் தோன்றாத் துணையாக இருப்பவன்; அவருடைய குலத்துக்கே நாதனாகவும் இருப்பவன்.[19] இங்ஙனம் பரத்துவமும் சௌலப்பியமும் பொலியத் திகழும் எம்பெருமான் திருவல்லிக்கேணியில் சேவை சாதிக்கின்ற நிலையை எண்ணி மகிழ்கின்றோம்.

அடுத்து, பாஞ்சாலியின் துன்பத்தைத் துடைத்தற் பொருட்டே கண்ணன் பல்வேறு செயல்களை மேற்கொண்டான் என்பதை ஆழ்வார் அநுசந்தித்ததை நாம் நினைவு கொள்ளு கின்றோம்.

> "அர்ச்சுனனுக்குத் தூத்ய சாரத்தியங்கள் பண்ணிற்றும் பிரபத்தி உபதேசம் பண்ணிற்றும் இவளுக்காக"[20]

என்பது ஸ்ரீவசன பூஷணம். தூது போனது போரை விளைவிப்பதற்காக; சாரதியாய் நின்றது தேர்க்காலாலே ப்ரதிபக்ஷத்ததை (எதிரியை) அழிப்பதற்காக; பிரபத்தியை உபதேசித்தது, 'போர் செய்யேன்' என்றிருந்தவனை 'உன்

17. பெரி. திரு. 2. 2 : 3 18. மேலது - 2. 3 : 4
19. மேலது - 2. 3 :5
20. ஸ்ரீவச. பூஷ - சூத்திரம் - 23 (புருடோத்தம நாயுடு பதிப்பு)

சொற்படி நடக்கிறேன்' என வணங்குவித்துப் போரிலே ஆஸக்தனாக்குவதற்காக (ஈடுபாடுடையவனாக்குவது). ஆக இவையெல்லாம் செய்தது சரணாகதையான இவளுடைய சங்கற்பத்தின்படியே துரியோதனனை ஒழித்து இவள் கூந்தலை முடியச் செய்வதற்காகவாதலால் கண்ணன் மேற்கொண்ட செயல்கள் யாவும் இவள் பொருட்டே என்னத் தட்டில்லை. இந்த எண்ணங்களுடன்,

"அந்தகன் சிறுவன் அரசர்தம் அரசற்(கு)
இளைவன் அணியிழை யைச்சென்று,
'எந்தமக்(கு) உரிமை செய்'எனத் தரியாது
'எம்பெரு மான்!அருள்' என்ன,
சந்தம்அல் குழலாள் அலக்கண்நூற் றுவர்தம்
பெண்டிரும், எய்தி,நூல் இழப்ப,
இந்திரன் சிறுவன் தேர்முன்நின் றானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே."[21]

(அந்தகன்-குருடன் (திருதராட்டிரன்); சிறுவன்-துரியோதனன்; இளையவன் - துச்சாதன்ன; சந்தம் அல்-அழகிய இருண்ட; குழல்-கூந்தல்; அலக்கண் - துன்பம்; நூல் -மங்கள நாண் (தாலி); இந்திரன் சிறுவன்-அருச்சுனன்)

என்ற பாசுரத்தை அநுசந்திக்கின்றோம். இந்நிலையில் சுரமலோகத்தின் பொருள் விளக்கமாக அமைந்த பாசுரங்களுள் ஒன்று நினைவுக்குவர, அதனையும் ஓதி உளங்கரைகின்றோம்.

"ஒண்தொடியாள் திருமகளும் தானும் ஆகி
ஒருநினைவால் ஈன்றஉயிர் எல்லாம் உய்ய
வண்துவரை நகர்வாழ வசுதே வற்குஆய்
மன்னவற்குத் தேர்ப்பாகன் ஆகி நின்ற
தண்துளவ மலர்மார்பன் தானே சொன்ன
தனித்தருமம் தான்எமக்காய்த் தன்னை என்றும்
கண்டுகளித்(து) அடிசூட விலக்காய் நின்ற
கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே"[22]

(ஒண்தொடி-அழகிய வளையல்; நினைவு-சங்கல்பம்; வண்துவரை - அழகிய துவாரகை; உயிர்-சீவான்மா; ஆய்-(மகனாக) அவதரித்து; தனித்தருமம்-நிகரற்ற உபாயம்; அடி-திருவடி; விலக்கு-தடை; கண் புதையல்-கண்ணாம்பூச்சி)

என்பது அப்பாசுரம்.

21. பெரி. திரு. 2. 3 : 6. 22. தே. பி. - 85.

இங்ஙனம் திருவல்லிக்கேணியில் நிற்கும் பார்த்த சாரதிப் பெருமானைப் பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கை யாழ்வார் ஆகிய மூன்று ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்து மனம் உருகி மகிழ்ந்துள்ளனர். இந்தத் திவ்வியதேசத்தில் பார்த்தசாரதி, மந்நாதன், சக்கரவர்த்தித் திருமகன், தெள்ளிய சிங்கர், தேவப் பெருமாள் (வரதராசர்) ஆகிய ஐந்து மூர்த்திகளும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்றவர்களாதலின் இது *'பஞ்சமூர்த்தித் தலம்'* என்று வழங்கப்பெறுகின்றது.

இந்த ஐந்து எம்பெருமான்களையும் சேவித்துக் கொண்டு, பக்திப் பெருக்குக் கரைபுரண்டோடும் நிலையில் வாகனங்கள் இருக்கும் மண்டபத்தில் வந்து அமர்கின்றோம். பெரிய திருமொழிப் பாசுரங்களை மீண்டும் ஒருமுறை மனமுருக ஓதிப் பக்திப் பெருக்கில் திளைக்கின்றோம். இந்நிலையில் ***திவ்வியகவி பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்*** அவர்களின் பாடல் நினைவுக்கு வருகின்றது.

> "திரிந்துஉழலும் சிந்தைதனைச் செவ்வே நிறுத்தி
> புரிந்து புகன்மின்; புகன்றால் மருந்துஆம்
> கருவல்லிக்கு; ஏணிஆம் மாக்கதிக்கு; கண்ணன்
> திருவல்லிக் கேணியான் சீர்"[23]

(உழலும்-அலையும்; செவ்வே-நேராக; புரிந்து-விரும்பி; புகல்மின் - கூறுங்கள் ; கருவல்லி-கருப்பமாகிய கொடி; மாகதி-முக்தி; சீர்-புகழ்)

என்ற அப்பாசுரத்தை ஓதிஓதி உளங்கரைகின்றோம். திருவல்லிக்கேணியில் கோயில் கொண்டருளிய எம்பெருமான் கண்ணபிரானின் - பார்த்தசாரதியின் - புகழைப் பக்தியுடன் கூறக்கூற அது நம் பிறவிப்பிணிக்கு மருந்து ஆகும் நிலையினையும், முக்தி உலகிற்குச் செல்லத் துணைபுரியும் ஏணி ஆகும் நிலையினையும் உணர்கின்றோம். இல்லையா?

❖ ❖ ❖

23. நூற். திருப். அந். - 94.

# 11. நீர்மலை நீர்வண்ணன்

எம்பெருமான் எண்ணற்ற கல்யாண குணங்களை யுடைவன் என்பது வைணர்களின் கொள்கை. இவற்றுள் எம்பெருமாட்டியின் புருஷகாரத்தின்[1] ஊன்றுதலினால் அவனிடம் மறைந்து கிடந்த வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்பியம், ஞானம், சக்தி முதலான குணங்கள் தலையெடுத்து நின்று சேதநனுக்கு உதவுகின்றன என்பதாகச் சாத்திரங்கள் கூறும்.[2] ஈண்டு வாத்சல்யம் என்பது, கன்றினிடத்தில் பசு இருக்கும் இருப்பு. சுவாமித்துவம் என்பது, உடையவனாய் இருக்கும் இருப்பு. சௌசீல்யம் என்பது, உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு புரையறக் கலத்தல். சௌலப்பியம் என்பது, எளியனாய் இருக்கும் இருப்பு. ஞானம் என்பது, அறிவு. சக்தி என்பது, சாமர்த்தியம். இந்த ஆறினுள் முதலில் குறிப்பிட்ட நான்கு குணங்களும் சேதநன் இறைவனைப் பற்றுவதற்குத் துணை செய்யக்கூடியவை. இறுதியாகவுள்ள இரண்டு குணங்களும் பகவான் தன்னை வந்தடைந்த சேதநனுடைய காரியத்தைச் செய்வதற்குப் பயன்படுபவை.

ஈண்டுக் குறிப்பிட்ட 'முமுட்சுப்படி' என்னும் நூலே, ''இங்குச் சௌலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம்''[3] என்று குறிப்பிடுகின்றது. கண்ணன் கீதையில், பரமபுருடனாகிய தன்னை மலர்கள் முதலிய பொருள்களைக் கொண்டு வழிபட்டு வாழவேண்டும் என்று கருதும் சேதநன் தன் கையில் கிடைத்ததொன்றைத் திருமேனியாய் ஏறியருளப் பண்ணி, ''எம்பெருமானே, இங்கு நீர் எழுந்தருளியிருக்க வேண்டும்'' என்று வேண்டும்போது அதற்கு இணங்கித் தான் பரநிலையில் செய்யும் விருப்பத்தை அந்தத் திருமேனியில் செய்து

*1.* புருஷகாரம் - தகவுரை, பரிந்துரை, எம்பெருமான் முகங்கொடுக்காமல் இருக்கும்பொழுது குற்றம் செய்த சேதநர்களைப் பற்றிக்கொண்டு 'காப்பாற்றத் தகுந்தவர்கள் இவர்கள்!' என்று தகவுரை கூறுவதால் 'புருஷகார பூதை' என்ற பெயரால் வழங்கப் பெறுபவள் எம்பெருமாட்டி.

*2. முமுட்சு - 136 - 137.* *3. முமுட்சு - 139.*

இவனுக்கு அருள் புரிவதாக இயம்பியுள்ளான்.[4] இதனையே பொய்கையாழ்வாரும் "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே"[5] என்று அருளிச் செய்துள்ளார்.

மேலே குறிப்பிட்ட குணங்கள் யாவற்றையும் அர்ச்சை வடிவாதக எழுந்தருளியிருக்கும் எல்லா எம்பெருமான்களிடமும் காணலாம் என்பது **மணவாள மாமுனிகள்** போன்ற ஞானச் செல்வர்களின் திருவுள்ளம்.[6] இந்த எண்ண அலைகள் நம் சிந்தையில் எழுந்த வண்ணம் சென்னையிலிருந்த நிலையில் திருநீர்மலை என்ற திவ்விய தேசத்தை நோக்கிப் புறப்படுகின் றோம்- இருப்பூர்தியில் வண்டியில் சென்று கொண்டிருக்கும் பொழுதே அத்தலத்து எம்பெருமான் நம் மனத்தில் அந்தர்யாமி யாக எழுந்தருளி விடுகின்றான்.

நீர்மலை நீல்வண்ணனை இரண்டு ஆழ்வார்கள் 'சொல் மாலைகளால்' மங்களாசாசனம் செய்துள்ளனர். பூதத்தாழ்வார்,

"பயின்றது அரங்கம், திருக்கோட்டி; பல்நாள்
பயின்றதுவும் வேங்கடமே; பல்நாள் பயின்றது
அணிதிகழும் சோலை அணிநீர் மலையே
மணிதிகழும் வண்தடக்கை மால்."[7]

*(பயின்றது-பழகி வாழ்ந்தது; பல்நாள்-அநாதி காலம்; அணி-அழகு; திகழும் - விளங்கும்; மணி-நீலமணி; மால்-எம்பெருமான்)*

என்று போற்றியுரைப்பர். ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு எம்பெருமான் கோயில்கொண்டுள்ள திவ்விய தேசங்களில் திருவரங்கம், திருக்கோட்டியூர், திருமலை என்னும் சிலவற்றைப் பேசி அநுபவிக்கும் போது 'அணி திகழும் சோலை அணி நீர்மலை' என்று சிறப்பித்து இந்தத் திவ்விய தேசத்தைக் குறிப்பிடுகின்றார். 'எழில் கொழிக்கும் சோலைகளையுடையதாய் இந்நிலவுலகினுக்கு ஆபரணம் போன்றதாய் இருப்பது திருநீர்மலை' என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.மேலும் திருவரங்கம், திருவேங்கடம், திருக்கோட்டியூர் ஆகிய திவ்விய தேசங்களைப் போலவே, திருநீர்மலையும் மிகப் பழமையான திருப்பதி என்பதும் இந்த ஆழ்வார் வாக்கினால் தெளிவாகின்றது.

4. பகவத்கீதை - 4 : 11. 5. முத. திருவந் - 44.
6. முமுட்சு - 141 (அவர் உரைநோக்கி அறிக.) 7. இரண். திருவந் - 46.

திருநீர்மலை எம்பெருமான்மீது திருமங்கையாழ்வாருக்கு ஒரு தனி அன்பு உண்டு. இதனைப் பல பாசுரங்களில் வெளியிடுகின்றார். நாயகி நிலையில் இருந்து பேசுவதை, ''போதுமோ நீர்மலைக்கு என்னும்''[8] என்றும், ''நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும்''[9] என்றும், ''நீர்மலை என்று வாய்வெருவினாள்''[10] என்றும் அவளுடைய திருத்தாயார் வாக்கில் காணலாம். ஆழ்வார் நாயகி திருநாகைத் திருப்பதி எம்பெருமான் பேரழகில் ஈடுபட்டுத் தமது நெஞ்சைப் பறிகொடுத்து நிற்கின்றாள். தன்மை மறந்தது போல் திருப்பதியையும் மறக்கின்றாள். அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானையும் இனங்கண்டு கொள்ள முடியவில்லை.

''முடிச்சோதி யாய்!உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ?''[11]

(முடிக்சோதி- கிரீடத்தின் பேரொளி; முகச்சோதி-திருமுகமண்டலத்தின் பேரொளி ; அடிச்சோதி-கழலிணையின் பேரொளி)

என்று நம்மாழ்வார் கூறுவது போல், முகத்தை நேரே பார்த்து முன்னிலையாக்கிச் சொற்கள் கூறுமுடியாதபடி சோதி வெள்ளம் அலையெறிந்து தள்ளுவதால் ''நீர்மலையார் கொல்?''[12] என்று ஐயுறுகின்றாள். தலைவனது உருவெளிப்பாட்டில் நலியும் தலைவி தோழியிடம் சொல்லுவதுபோல் இப்பாசுரம் அமைந்துள்ளது.

ஆழ்வார்கள் காலத்தில் இம்மலையைச் சுற்றி அழகான சோலைகள் அமைந்திருந்தன என்பது அறியக்கிடக்கின்றது. 'அணி திகழும் சோலை அணி நீர் மலை' என்பது பூதத்தாழ் வாரின் திருவாக்கு. திருமங்கையாழ்வாரும்,

''சேடுஆர் பொழில்சூழ்
திருநீர் மலையான்''[13]

என்று குறிப்பிட்டிருத்தல் காண்க. அவரே பிறிதோரிடத்தில் ''ஏரார் பொழில்சூழ் இட எந்தை நீர்மலை''[14] என்று சுட்டியுரைத்

8. பெரி. திரு. -2. 7: 8.
9. திருநெடுந் -18
10. பெரி. திரு - 3.1 :1
11. திருவாய் - 3. 1:1
12. பெரி. திரு. - 9.2 :8.
13. பெரி. திரு. 6. 8: 4
14. சிறிய திருமடல் - கண்ணி - 73

துள்ளார். 'ஏரார் பொழில்' என்ற அடைமொழி திருவிட எந்தைக்கும் திருநீர்மலைக்கும் கூட்டியுரைத்தல் தகும். இரண்டுமே சோலைகள் சூழ்ந்த இடங்களாகும். சோலை என்றால் மான் முதலிய பிராணிகள் வாழுமல்லவா? இத்தகைய பிராணிகளை நேரில் கண்ட ஆழ்வார்,

> ''கலைவாழ் பிணையோ டணையும் திருநீர்
> மலைவாழ் எந்தை மருவும் ஊர்''[15]

(கலை-ஆண்மான்; பிணை-பெண்மான்; அணையும்-புணரும், சேரும்; மருவும் -பொருந்தி வாழும்)

என்று கூறியிருத்தல் ஈண்டு எண்ணி மகிழத்தக்கது. கூடலூர் எம்பெருமானைச்சேவித்துக் கொண்டிருக்கும்பொழுது 'திருநிர் மலை வாழ் எந்தை' ஆழ்வார் நினைவில் வருகின்றார். நீர்வளம் நிலவளம் மலிந்த தஞ்சை மாவட்டத்திலுள்ள திருநறையூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஆழ்வார் சேவித்துக் கொண்டிருக்கும் பொழுதே திருநீர்மலை எம்பெருமான் அவருக்குக் காட்சி தருகின்றார். ஆழ்வாருக்குத் திருநீர்மலையான் மீது சிறப்பான ஈடுபாடு இருப்பதுபோல், திருநீர்மலை எம்பெரு மானுக்கும் ஆழ்வார்மீது அளவிலடங்காச் சிறப்பான கருணை உள்ளதுபோலும்! ஆழ்வாரும் ''திருநீர் மலையானை.......... .நறையூரில் கண்டேனே'' என்று பாசுரத்தைத் தலைக்கட்டு கின்றார்.[16]

திருநறையூர் எம்பெருமான்மீதுள்ள இன்னொரு பாசுரத்தாலும் ஆழ்வாருக்கு இத்தலத்து எம்பெருமான் மீதுள்ள தனி அன்பு தெளிவாகின்றது.

> ''கதியேல் இல்லை,நின்
> அருள்அல்லது எனக்கு;
> நிதியே!திரு நீர்மலை
> நித்திலத் தொத்தே!
> பதியேபர வித்தொழும்
> தொண்டர் தமக்குக்
> கதியே!உன் னைக்கண்டுகொண்
> டுய்ந்தொழிந் தேனே''[17]

15. பெரி. திரு. 5.2:8. 16. பெரி. திரு. 6.8:2
17. மேலது - 7. 1 :7

(நிதியே-நிதிபோன்றவன்; நித்திலம்-முத்து; தொத்து-மாலை; பதி-திவ்விய தேசம்; பரவி-ஏத்தி; தொண்டர்-அடியார்; உய்ந்து-விழைத்து)

திருநறையூர் எம்பெருமானைச் சேவித்துக் கொண்டிருக்கும் போது இந்த எம்பெருமான் காட்சி தரவே, 'திருநீர்மலையில் கோயில் கொண்டிருக்கும் முத்துமாலை போன்ற எம்பெருமானே, உன் திருவருளைத் தவிர எனக்கு வேறொன்றும் புகல் இல்லை; எனக்கு வைத்தமா நிதியும் நீயே, உன்னை ஈண்டும் காண்கின்றேன்; உய்யவும் பெற்றேன்' என்று களிப்புடன் பேசுகின்றார் ஆழ்வார்.

மேற்கண்டவற்றிலிருந்து வைணவ தத்துவத்தின் ஓர் உண்மை தெளிவாகின்றது. அஃதாவது, விபவாவ தாரங்களில் எம்பெருமானே எல்லா அவதாரங்களையும் எடுத்தான் என்பதுபோல, "விண்ணகரம், வெஃகா, விரிதிரை நீர் வேங்கடம், மண் நகரம் மாமாடம் வேளுக்கை, மண்ணகத்த தேன்குடந்தை, தேனார் திருவரங்கம், தென்கோட்டி"[18] "கண்டியூர், அரங்கம், மெய்யம், கச்சி, பேர், மல்லை,[19] "சீரார் திருவேங்கடமே, திருக்கோவலூரே, மதிள் கச்சி ஊரகமே, பேரகமே"[20] என்பன போன்ற திவ்விய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள் யாவரும் ஒருவரே என்பதாகும். ஒரே எம்பெருமானே ஆங்காங்குள்ள பக்தர் களுக்குச் சேவை சாதித்து அவர்களை உய்விக்கும் பொருட்டு அங்ஙனம் எழுந்தருளியுள்ளான் என்பது வைணவர்களுடைய நம்பிக்கை.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் எழுந்த வண்ணம் பல்லாவரம் பேருந்து நிலையத்தினின்றும் குதிரை வண்டியில் மூன்று மைல் தொலைவிலுள்ள திருநீர்மலையை நோக்கி வருகின்றோம். நெடுஞ்சாலையினின்றும் பிரியும் குறுஞ்சாலை வழியாக நாம் போய்க்கொண்டிருக்கும் பொழுதே சாலைக்கு இருபுறமுள்ள பச்சைப்பட்டு விரித்தாற்போன்ற நெல்வயல்கள் நம் கண்ணில் படுகின்றன. அவற்றைக் கண்டுகளித்த வண்ணம் திருக்கோயிலை நோக்கி வருங்கால் தொலைவிலிருக்கும் பொழுதே திருக்கோயிலின் கோபுரம், கொடிமரம் ஆகியவை நம் கண்ணில் படுகின்றன.

18. முன். திரு - 62. 19. திருக்குறுந் - 19.
20. சிறிய திருமடல் - கண்ணி - 69, 70.

**''வினைச் சுடரை நந்துவிக்கும்**
**வேங்கடமே வானோர்**
**மனச்சுடரைத் தூண்டுமலை''[21]**

*(வினைச்சுடர்-தீவினையாகின்ற நெருப்பு; நந்துவிக்கும்-அணைக்கும்; மனச்சுடர் -இதயமாகிய விளக்கு)*

என்று வேங்கடமலையைக் கண்ட பொய்கையாழ்வார் கூறும் அநுபவத்தைப் போன்ற ஓர் அநுபவத்தைப் பெறுவதை நாம் உணர்கின்றோம். இத்தலத்திற்குத் திருமங்கையாழ்வார் எழுந்தருளினபோது ஏரியின் நீர்ப்பிடிப்பால் அவரால் எம்பெரு மானைச் சென்று சேவிக்கமுடியவில்லை என்றும், பல நாட்கள் காத்திருந்து நீர் வடிந்த பிறகே சென்று சேவித்தார் என்றும் செவிவழிச் செய்தியால் அறிகின்றோம். இங்ஙனம் அரண்போல நீர் சூழ்ந்த இடத்தில் அமைந்திருப்பதால்தான் 'நீர் மலை' என்ற காரணப்பெயர் பெற்று 'திரு' என்ற அடைமொழியுடன் 'திருநீர்மலை' என்று இம்மலை வழங்கி வருகின்றதுபோலும் என்ற ஊகத்தில் இறங்குகின்றோம். இதற்குள் குதிரைவண்டியும் குன்றின் அடிவாரத்தை வந்தடைகின்றது.

வண்டியை விட்டிறங்கியும் திருக்கோயிலின் சுற்றுப்புறச் சூழ்நிலை நம் கருத்தை ஈர்க்கின்றது. அதனைச் சுற்றிப் பார்க்கின்றோம். மலையும் திருக்கோயிலும் மிகப் பழைமை யானவை. மலையடிவாரத்திலுள்ள ஆலயமும் ஆழ்வார்கள் காலத்திலிருந்தே இருந்துவருகின்றது என்பதற்கு அகச்சான்றுகள் உள்ளன. அடிவாரத்திலுள்ள ஆலயத்திற்குப் பின்புறமாக 'மணி கர்ணிகா புஷ்கரணி' என்ற ஒரு திருக்குளம் நீராழி மண்டபத் துடன் எழிலுடன் திகழ்கின்றது. சிறிது தூரத்தில் குளக்கரையில் வசந்த மண்டபம் ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது. மலையின் உயரம் சுமார் இருநூறு அடி இருக்கும். இந்தத் திவ்விய தேசத்தைப் பற்றிய பதிகத்தில்[22] திருமங்கையாழ் வார் ஒவ்வொரு பாசுரத்திலும் இம்மலையினை 'மா மலை' என்றே குறிப்பிடு கின்றார். இஃது இறைவனைத் தாங்கி நிற்பதால் சிறந்த மலையா கின்றது என்ற கருத்தினால் இங்ஙனம் கூறப்பெற்றதாகக் கொள்ள லாம்; உயரம் பற்றியதனால் இல்லை. நீர்மலை எம்பெரு மானிடத்தில் தானான தன்மையிலும் பிராட்டியாகவுள்ள தன்மையிலும் தம்மையே இழந்த ஆழ்வார் அந்த எம்பெருமான்

21. முதல் திருவந் - 26. 22. பெரி. திரு. 2.4.

எழுந்தருளியிருக்கும் மாமலையை இங்ஙனம் போற்றியது வியப்பில்லை.

இங்ஙனம் சிந்தித்த வண்ணம் திருக்கோயிலின் முன் வாயிலை அடைகின்றோம். அதனைக் கடந்து முதலில் நீர் வண்ணன் சந்நிதியை நண்ணுகின்றோம். **நின்ற திருக்கோலத்தில்** கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் சேவை தரும் ***நீர்வண்ணப் பெருமானைத்*** தரிசிக்கின்றோம். இந்நிலையில்,

''அன்றாயர் குலக்கொடியோடு அணிமாமலர்
மங்கையோடு அன்பளவி அவுணர்க்கு
என்றாலும் இரக்கமி லாதவனுக்கு
உறையும்இட மாவது இரும்பொழில்சூழ்
நன்றாய புனல்நறையூர் திருவாலி
குடந்தை தடந்திகழ் கோவல்நகர்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தார்க்கு
இடம்மா மலையாவது நீர்மலையே''[23]

*(ஆயர் குலக்கொடி-நப்பின்னை; அணிமா மலர் மங்கை-உருக்குமிணி; அவுணர் -இராக்கதர்; புனல்-தீர்த்தம்; குடந்தை-கும்பகோணம்; தடம்-தடாகம்; கோவல் நகர் - திருக்கோவலூர்)*

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரம் நம்மனத்தில் எழ அதில் ஆழங்கால்படுகின்றோம். திருநறையூரில் நின்ற திருக்கோல மாகவும், திருவாலியில் நரசிங்க உருவில் வீற்றிருந்த திருக்கோலமாகவும், திருக்குடந்தையில் பள்ளிகொண்ட திருக்கோலமாகவும், திருக்கோவலூரில் உலகளக்கத் திருவடிகளே நீட்டி நடக்கும் திருக்கோலமாகவும் சேவை சாதிக்கும் எம்பெரு மான் அந்த நான்குவகைத் திருக்கோலங்களையும் இத்திவ்விய தேசம் ஒன்றிலேயே கொண்டருளிச் சேவை சாதிக்கும் திருக்குணத்தை ஆழ்வார் அநுபவித்துப் பேசுவதை நினைக்கின் றோம். திவ்வியதேச யாத்திரையில் ஆழ்வார்கள் பெற்ற அநுபவத்தை அவர்கள் அருளியுள்ள பாசுரங்களைப் பாடிப்பாடி நெஞ்சு நெக்குருகி அவர்கள் பெற்ற அநுபவத்தை நாமும் பெற முயல்வது போலவே, ஆழ்வார்களும் தம்முடைய யாத்திரையில் எம்பெருமானின் திருக்குணங்களையும், வீரச்செயல்களையும், திவ்வியமங்கள் விக்கிரகத்தையும், அவதார மகிமைகளையும் எண்ணி எண்ணி உருகி உள்குழைந்த நிலையினை அவர்தம் பாசுரங்கள் மூலம் அறிகின்றோம். இப்பாசுரத்தின் முன்பகுதியில்

*23. பெரி. திரு. 2.4:1*

நப்பின்னைப் பிராட்டியைத் திருமணம் புணரும் நிமித்தமாக எருது வடிவத்தில் வந்த அசுரர்களைக் கொன்றொழித்த செயலும், உருக்குமிணிப் பிராட்டியைத் திருமணம் புணரும் நிமித்தமாக உருக்குமன் முதலிய சில அசுரப் பிரகிருதிகளைப் பங்கப்படுத்திய செயலையும் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். ''அன்றாயர் குலக்கொடியோடு அணிமாமலர் மங்கையொடு அன்பளவி'' என்று பாசுரத்தைத் தொடங்குவதனால் திவ்விய தம்பதிகளின் சேர்த்தி ஆழ்வார் திருவுள்ளத்தில் ஊறியிருந்து மேற்காட்டிய திருக்கூடலூர்ப் பதிகப் பாசுரத்தில் ''கலைவாழ் பிணையோடணையும்''[24] என்று மற்றொன்றைக் குறித்துச் சொல்வதுபோல் (அற்யாபதேசம் - ஒன்றைக் கூறி மற்றொன் றைப் புலப்படுத்தல்) கூறப் பெறுகின்றது என்று கருதலாம்.

இந்த நிலையில் எம்பெருமானின் வெற்றிச் செயல்களில் ஈடுபட்டுப் பாடிய திருமங்கை மன்னனின் இன்னொரு பாசுரமும் நம் நினைவிற்கு வருகின்றது. அதனையும் சிந்திக்கின்றோம்.

''பாராருல கும்பனி மால்வரையும்
    கடலும்சுட ரும்இவை யுண்டுமெனக்(கு)
ஆராதென நின்றவன் எம்பெருமான்
    அலைநீர்உல குக்கர சாகியஅப்
பேரானைமு னிந்தமு னிக்கரையன்
    பிறரில்லை நுனக்கெனும் எல்லையினான்
நீரார்பே ரான்நெடு மாலவனுக்
    கிடம்மாமலை யாவது நீர்மலையே''[25]

(பார்-உலகம்; ஆராது-போதாது; முனிக்கு அரையன்-பரசுராமன்)

என்பது பாசுரம். எம்பெருமானின் வெற்றிச் செயல்களில் உலகம் உண்ட செயலும், பரசுராம அவதாரத்தில் கார்த்தவீரியனை வெற்றி கொண்ட செயலும் இருபத்தொரு தலைமுறை க்ஷத்திரியப் பூண்டு வேரறும்படி செய்த செயலும் இப்பாசுரத்தில் அநுசந்திக்கப் பெறுகின்றன. ஈண்டு 'நீரார் பேரான்' என்பது இத்தலத்து எம்பெருமான் பெயராகிய நீர்வண்ணன் என்பதைக் குறிக்கும் சொற்றொடர் ஆகும். எம்பெருமான் நீரின் தன்மையை யுடையவனாதலால் ஆழ்வார் அவன் எழுந்தருளியிருக்கும் தலத்தையே 'நீரகம்' என்று கொண்டு, ''நீரகத்தாய்!''[26] என்றே

24. பெரி. திரு. 5.2:8    25. மேலது - 2.4:6
26. திருநெடுந் - 8.

ஓலமிட்டு அழைக்கின்றார். அடியார்களின் விருப்பத்தை நிறைவேற்றும்பொருட்டு எம்பெருமான் நீர்ப்பண்டமாய் உருகுவானாதலின் அவனுக்கு 'நீர்வண்ணன்' என்ற பெயர் மிகவும் பொருத்தமாகும் என்று எண்ணி மகிழ்கின்றோம். ஈண்டு எம்பெருமானுக்கும் நீருக்கும் உள்ள ஒற்றுமைகளையெல்லாம் தெளிவாக விளக்கும் **பிரதிவாதி பயங்கரரின்** உரையை நினைத்து போற்றி மனம் கரைகின்றோம்.[27]

இந்நிலையில் இந்த மலையின் சிறப்பினைக் குறிக்கும் ஆழ்வார் பாசுரம் நம் சிந்தையில் எழுகின்றது; அதனையும் சிந்திக்கின்றோம். "திருநீர்மலையின் சிறப்பினைச் சொற்களால் சொல்லித் தலைக்கட்ட முடியாது. நான் சொல்லுவதை இப்போது நீங்கள் கேட்பீர்களாக. இத்திருப்பதி தன்னைப் பணிவார்களின் வினைகளை வேருடன் களைந்து விடுமாதலின், இதுவே நாம் உய்வதற்கு உரிய இடமாகும். புலன் வழியொழுகி மதிகெட்ட நீசர்கள் சென்று கிட்ட முடியாத எம்பெருமான் இங்கு திருக்கோயில் கொண்டுள்ளான். ஆகவே, அவன் இருப்பிடம் செல்வோம், வாருங்கள்" என்று தம்முடன் ஒத்த மனமுடைய சிலரை அழைக்கின்றார் ஆழ்வார்.

"பேசுமள வன்றிது வம்மின்நமர்!
பிறர்கேட்பதன் முன்பணி வார்வினைகள்
நாசமது செய்திடும் ஆதன்மையால்
அதுவேநம துய்விடம் நாள்மலர்மேல்
வாசமணி வண்டறை பைம்புறவில்
மனமைந்தொடு நைந்துழல் வார்,மதியில்
நீசரவர் சென்றடை யாதவனுக்
கிடம்மாமலை யாவது நீர்மலையே"[28]

(பிறர்-ஈண்டு நாத்திகரைக் குறித்தது; பணிவார்-வணங்குபவர்கள்; ஆதன்மையால் -ஆகையால்; உய்தல்-மோட்சம் அடைதல்; வாசம்-மாயம்; புறவு - சோலை; நைந்து-வருந்தி; மதி-புத்தி; நீசர்-அற்பர்)

என்பது பாசுரம். இதனை நினைந்த வண்ணம் மலையின்மீது ஏறுகின்றோம். படிக்கட்டுகளை அமைப்பதற்கு நன்கொடை அளித்த பல்வேறு அன்பர்களின் பெயர்கள் அமைந்த

27. திவ்வியார்த்த தீபிகை - திருநெடுந் - பாசுரம் 8-இன் உரையின்கீழ் உள்ள அகல உரையை நோக்கி அறிக.

28. பெரி. திரு - 2.4:9

''கல்வெட்டுக்களைப் பார்த்துக் கொண்டே மலையுச்சியினை அடைகின்றோம்.

மலையின்மீதுள்ள திருக்கோயிலில் தெற்கு நோக்கிய திருமுகமண்டலங் கொண்டு கிடந்த திருக்கோலத்தில் **அரங்கநாதன்** சேவை சாதிக்கின்றான். அவனையும் தரிசிக்கின்றோம். இவன் கொண்டுள்ள சயனத் திருக்கோலத்தை ***'மாணிக்க சயனம்'*** என்று கூறுவர். 'பாலகனாய் ஏழுலகு உண்டு ஆலிலை மேல் துயிலும்' நிலையும், 'உறங்குவான் போல் யோகு செய்யும்' நிலையும் நமது நினைவிற்கு வர அவற்றில் ஆழங்கால் படுகின்றோம். 'என் அரங்கத்து இன்னமுதர், குழல் அழகர் வாய் அழகர் கண் அழகர் கொப்பூழில், எழுகமலப் பூ அழகர்''[29] என்று ஆண்டாள் அரங்கனின் திருமேனி அழகில் ஈடுபட்டதை நினைத்து அந்த அநுபவத்தைப் பெற முயல்கின்றோம். அஃது என்ன அவ்வளவு எளிதா? ''அண்டர்கோன் அணி அரங்கன் என் அமுதினைக், கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''[30] என்று பாண் பெருமான் பெற்ற அநுபவத்தை அடைகின்றோம். தீர்த்தம், திருத்துழாய் பெற்று, சடகோபம் சாத்தப்பெற்று எம்பெருமானை வலங்கொள்ள உளங்கொள்ளுகின்றோம்.

சுற்றுப் பிராகாரத்தின் வழியாக வலம்வருங்கால் முதலாவதாக உலகளந்த மூர்த்தி நடந்த திருக்கோலத்தில் சேவை சாதிப்பதைக் காண்கின்றோம். இந்த மூர்த்தியை ஆழ்வார் ''குறளாகி நிமிர்ந்தவன்'' என்று மங்களாசாசனம் செய்கின்றார். இந்த எம்பெருமானின் சந்நிதியில்,

''காண்டாவனம் என்பதுஓர் காடுஅமரர்க்கு
அரையன்னது, கண்டுஅவன் நிற்க,முனே
மூண்டுஆர் அழல்உண்ண முனிந்ததுவும்;
அது அன்றியும் முன்உலகம் பொறைதீர்த்து
ஆண்டான், அவுணன்அவன் மார்வுஅகலம்
உகிரால்வகிர் ஆகமுனிந்து, அரியாய்
நீண்டான், குறளாகி நிமிர்ந்தவனுக்கு
இடம்மாமலை ஆவது நீர்மலையே.''[31]

(அமரர்க்கு அரையன்-இந்திரன்; கண்டு நிற்க - பார்த்துக் கொண்டிருக்க; ஆர் அழல் - தீக்கடவுள்; முனிந்ததுவும்-சீறி நிமித்தவனும்; பொறை-பாரம்; அவுணன் - இரணியன்;உகிர்-நகம்; அகலம் மார்பு-அகன்ற மார்பு; வகிர் ஆக -இரு பிளவாம்படி; அரி - நரசிங்கம்)

30. அமலனா - 10. 31. பெரி. திரு - 2. 4: 2.

என்ற பாசுரத்தை ஓதுகின்றோம். கிருஷ்ணாவதாரத்தில் எம்பெருமான் காண்டவ வனத்தை அங்கியங் கடவுள் உண்ண அநுமதித்த வரலாற்றிலும், நரசிம்மாவதாரத்தில் அவன் இரணியனது நெஞ்சினைப் பிளந்து கொன்ற வீரச் செயலிலும், குள்ளனாகச் சென்று மாவலியிடம் மூவடி நிலம் பெற்று உலகளந்த மூர்த்தியாகப் பேருருவங் கொண்ட அற்புதச் செயலிலும் ஆழ்வார் ஈடுபட்டுப் பேசுவதைக் காண்கின்றோம். காண்டவ வனத்தின் நிகழ்ச்சியை நினைந்தே இந்தத் தலத்துப் புராணமும் எழுந்திருக்க வேண்டும். மலையில் ஏறும்போது "காண்டவ வனத்தில் தோயாத்திரி[32] மலை வாசல்" தொடர் அதன் படிவாயிலில் பொறிக்கப் பெற்றிருந்ததைக் கண்டோமல்லவா?

இந்த மூர்த்தியிடம் விடைபெற்று வருங்கால் பிராகாரத்தி லேயே பிரகலாதனுக்குக் காட்சி தந்த வீரநரசிங்கமூர்த்தி சாந்தமூர்த்தியாக இருந்த திருக்கோலத்தில் எழுந்தருளி யிருப்பதைக் கண்டு மகிழ்கின்றோம். இந்த மூர்த்தியைக் காணப் போகிறோம் என்று நினைந்தே ஆழ்வார்,

...." அவுணன் அவன் மார்வு அகலம்
உகிரால்வகிர் ஆகமுனிந்து, அரியாய்
நீண்டான்"

என்று முற்பாசுரத்திலேயே ஆழங்கால் பட்டார் போலும். இந்த எம்பெருமான் சந்நிதியில்,

"தாங்காததுஓர் ஆள்அரிஆய், அவுணன்தனை
வீடமுனிந்து அவனால் அமரும்
பூங்கோதையார் பொங்குஎரி மூழக்விளைத்து
அது அன்றியும் வென்றிகொள் வாள்அமரில்
பாங்குஆக முன்ஐவரொடு அன்புஅளவி,
பதிற்றைந்து இரட்டிப் படைவேந்தர்பட
நீங்காச் செருவில் நிறைகாத்தவனுக்கு
இடம்மா மலைஆவது நீர்மலையே."[33]

(ஆள்அரி-நரசிங்கம்; அவுணன்-இரணியன்; வீட-மடிய; பூங்கோதையர் - இரணியனின் மனைவியர்; வென்றிவாள் அமர்-பாரதப்போர்; அன்பு அளவி - உறவு பண்ணி; பதிற்றைந்து இரட்டி வேந்தர்-நூற்றுவர்; செரு-போர்; நிறை - திரௌபதியின் நலம்)

என்ற பாசுரத்தை ஓதி உளங்கரைகின்றோம். இங்ஙனம் மூன்று மூர்த்திகளையும் சேவித்து மனநிறைவு பெற்ற நிலையில்

32. தோய் - தண்ணீர் ; அத்திரி -மலை; தோயாத்திரி - நீர் மலை.
33. பெரி. திரு - 2. 4:4.

மலையின் மீதிருந்த வண்ணம் நாற்புறமும் உள்ள காட்சிகளைக் கண்டு மகிழ்கின்றோம். திவ்விய தேசயாத்திரையின் பலன்க ளெல்லாம் கைவந்து விட்டதாக நம்மனம் புளகாங்கிதம் அடைகின்றது. இந்நிலையில் மலையிலிருந்து கீழே இறங்கு கின்றோம்.

அடிவாரத்தில் சக்கரவர்த்தி திருமகன் சந்நிதியும் உள்ளது. இந்த எம்பெருமானையும் ஆழ்வார் மங்களாசாசனம் செய்துள் ளார்.

"மாலுங்கட லாரம லைக்குவடிட்
டணைகட்டி வரம்புரு வமதிசேர்
கோலமத ளாயஇ லங்கைகெடப்
படைதொட்டொரு கால்அம ரில்அதிர
காலமிது என்றுஅயன் வாளியினால்
கதிர்நீள்முடி பத்தும் அறுத்தமரும்
நீலமுகில் வண்ணன்எ மக்கிறைவற்கு
இடம்மாமலை யாவது நீர்மலையே."[34]

(மாலும்-பெரிய; மலைக்குவடு-கொடுமுடிகள்; மதிசேர்-சந்திரமண்டலம் வரையில்; கோலம்-அழகிய; அயன்-நான்முகன்; வாளி-அம்பு)

என்பது பாசுரம். இதனை அவன் சந்நிதியில் மிடற்றொலியிட்டு அநுசந்திக்கின்றோம்.

சக்கரவர்த்தி திருமகன் சந்நிதிக்கு இடப்புறமாக **அணிமாமலர் மங்கைத் தாயார்** சந்நிதி உள்ளது. இவரையும் நீர்வண்ணனையும் நினைந்தே "அணிமாமலர் மங்கையொடன்பளவி" என்று ஆழ்வார் இத்திவ்விய தேசத்து மங்காளசாசனத்து முதற் பாசுரத்தில் குறிப்பிட்டதை நினைத்து போற்றுகின்றோம். இத்தாயார் சந்நிதியில் இப்பதிகத்துப் பத்துப் பாசுரங்களையும் அநுசந்தித்துக் கரைபுரண்டோடும் பக்தி நிலையைப் பெறுகின் றோம்.

திருக்கோயிலை விட்டுப் புறப்பட்டுவதற்கு முன்பு ஓர் ஒதுக்கிடத்தில் அமர்ந்து ஓய்வு கொள்ளுகின்றோம். நம்மனம் இங்ஙனம் இறையநுபவம் பெறுகின்றது: திருமங்கையாழ்வார் திருநீர்மலை எம்பெருமான்மீது சொல் மாலைகள் தொடுத்துப் போற்றுங்கால் கிருஷ்ணாவதாரம்,[35] நரசிம்மாவதாரம்,[36]

34. பெரி. திரு - 2. 4: 5
35. பெரி. திரு - 2. 4: 1, 2,3,4,7
36. மேலது - 2. 4: 1, 2,4

திரிவிக்கிரமாவதாரம்,[37] இராமாவதாரம்,[38] பரசுராமாவதாரம்,[39] பலராமாதாரம்[40] ஆகிய அவதாரங்கள் எடுத்தபோது எம்பெருமான் செய்தருளின் வீரச்செயல்களையும் வெற்றிச் செயல்களையும், 'உம்பரும் இவ்வேழுலகும் ஏழ்கடலும் எல்லாம் உண்ட'[41] செயலையும் உள்குழைந்து போற்றி இனியராவதை அறிகின்றோம். பொதுவாக எல்லா ஆழ்வார் களுமே இங்ஙனம் எம்பெருமானின் வெற்றிச் செயல்களையும் வீரச்செயல்களையும் போற்றுவர் என்பதையும் நினைக்கின் றோம். சில சமயம் ஆழ்வார்கள் தாமான தன்மையை விட்டுப் பிராட்டியின் நிலையை ஏறிட்டுக் கொண்டு அகத்துறை அமைந்த பாசுரங்களாலும் மங்களாசாசனம் செய்யும் அநுபவத்தையும் சிந்திக்கின்றோம். ஆகவே, எம்பெருமானைப் பற்றியே அகத்துறை, புறத்துறைகள் அமைந்த பாசுரங்களாலனதே **'நாலாயிர திவ்விய பிரபந்தம்'** என்னும் திருமறையாகும் என்ற பொது உண்மையை நினைந்து பரவசப்படுகின்றோம்.

இந்த அநுபவ நிலையில் திவ்வியகவி **பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்,**

> "இரங்கும் உயிரனைத்தும் இன்னருளால் காப்ப..ன்
> அரங்கன் ஒருவனுமே ஆதல், கரங்களால்
> போர்மலை வான்வந்த புகழ்வாணன் காட்டினான்
> நீர்மலைவாழ் எந்தைஎதிர் நின்று"[42]

(இரங்கும்-வருந்துகின்ற; உயிர்கள்-சீவராசிகள்; அருள்-கருணை; வாணன் - பாணாசுரன்.)

என்ற பாசுரம் நினைவிற்கு வரவே, அதனை மிடற்றொலியாக ஓதி உளங்கரைகின்றோம். வாணனைக் காத்த கண்ணனது கருணை வெள்ளங் கோத்து நம்மீதும் மடை திறந்து பாயும் என்று அசையாத நம்பிக்கையுடன் மனநிறைவு பெறுகின்றோம். இந்த நிலையில் குதிரை வண்டி ஏறி பல்லாவரம் மின் இருப்பூர்தி நிலையத்தை அடைந்து நம் இருப்பிடத்திற்கு ஏகுகின்றோம்.

❉ ❉ ❉

37. மேலது - 2. 4: 1
38. மேலது - 2. 4: 5
39. மேலது - 2. 4: 6,
40. மேலது - 2. 4: 3
41. மேலது - 2. 4: 6
42. நூற். திருப். அந். - 91

# 12. திருஇடஎந்தை எம்பெருமான்

"சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்"[1] என்ற கொள்கையில் ஊற்றமுடைய ஆழ்வார்கள் எம்பெருமானின் அநுபவத்தைப் பலவிதமாகப் பெறுவர். அவர்களிடம் ஞானம் மீதூர்ந்து நிற்கும்பொழுது எம்பெருமானின் திருநாமங்களைச் சொல்லியநுபவிப்பர்; அவனுடைய திவ்விய மங்கள வடிவழகை வருணித்து அநுபவிப்பர்; அவன் உகந்த திவ்விய தேசங்களின் வளங்களைப் பேசி அநுபவிப்பவர்; அவ்விடங்களில் ஆதரம் மிக்க பாகவதர்களின் பெருமைகளைப் பகர்ந்து அநுபவிப்பர். அவர்களிடம் பக்தி மீதூர்ந்து நிற்கும்பொழுது அது காதலாகக் பரிணமித்துத் தாமும் தாமான நிலையை இழந்து பிராட்டி மாருடைய தன்மையை அடைவர். அந்நிலைக் கேற்பப் பாசுரங்களும் வேற்றுவாயாலே வெளிப்படும். இந்நிலைமை களையே 'ஆசாரிய ஹ்ருதயம்',

"ஞானத்தில் தம்பேச்சு;
பிரேமத்தில் பெண்பேச்சு"[2]

(பிரேமம்-காதல், அன்பு)

என்று குறிப்பிடுகின்றது. ஆழ்வார்களும் ஆழ்வார் நாயகிகளாக நின்று பேசுவர்.

ஆழ்வார்கள் நாயகி நிலையிலிருந்து பேசும் பொழுது தாய் சொல்லுவதுபோலவும், தலைமகள் சொல்லுவது போலவும், தோழி சொல்லுவது போலவும் பாசுரங்கள் அமையும். இங்ஙனம் பாசுரங்கள் பலவிதமாக வெளிவந்தாலும் பாசுரங்களைப் பகர்பவர் ஆழ்வார்களேயாவர். ஓர் ஆறானது பல வாய்க்கால்களாகப் பிரிந்து சென்றாலும், அவற்றுக்கு முக்கியமான பெயர் ஒன்றேயாக இருக்குமாப்போலே, இம்மூன்று நிலைமைகளில் 'சொல்மாலைகள்' வடிவு கொண்டாலும், "மன்னுமா மாட மங்கையர் தலைவன்

*1. திருவாய் - 10. 4:1* *2. ஆசா ஹ்ரு - 118.*

மானவேல் கலியன் வாயொலிகள்''[3] என்று ஆழ்வார் பரசுரமாகவே தலைக்கட்டும். நாயகி வாக்காக வடிவு கொள்ளும் பதிகங்களின் இறுதிப் பாசுரம் ஆழ்வார் தாமான நிலையிலிருந்து பேசுவது போலவே நிறைவுபெறும்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் திருமல்லையிலிருந்து *'திருவிடவெந்தை'* என்ற திவ்விய தேசத்திற்குப் புறப்படுகின்றோம். திருமல்லையிலிருந்து சற்றேறக்குறைய ஐந்து கல் தொலைவிலுள்ளது இத்திருப்பதி. இதுவும் கடற்கரைப் பகுதியிலுள்ளது. மாமல்லபுரத்திலிருந்து சென்னைசெல்லும் பேருந்தில் ஏறிச் சென்று இவ்வூரருகில் இறங்கி ஒரு ஃபர்லாங் தூரம் நடந்து சென்றால் திருக்கோயிலை அடையலாம். திருவிடவெந்தை மிகவும் சிறிய ஊரே; ஆனால் அழகான சூழ்நிலையில் அமைந்துள்ளது. இந்தத் திருப்பதி எம்பெருமான் திருமங்கையாழ்வாரால் மங்காளாசாசனம் செய்யப் பெற்றுள்ளார்[4]. இந்த ஆழ்வாரைத் தவிர வேறு ஆழ்வார்கள் இத்தலத்து எம்பெருமானைப் பாடவில்லை. ஆனால் இவர் திருமங்கையாழ்வாரின் திருவுள்ளத்தை மிகவும் கவர்ந்தவராகக் காணப்பெறுகின்றார். திருமலைக்குச் சென்று ஏழுமலையானை மங்களாசாசனம் செய்யும்பொழுதும் இவர் இந்த ஆழ்வாரின் திருவுள்ளத்தில் இடம் பெற்றிருந்தமையைக் காணலாம்.

''ஏத்துவார்தம் மனத்துள் ளான்,இட
வெந்தை மேவிய எம்பிரான்,
தீர்த்தநீர்த் தடம்சோலை சூழ்திரு
வேங்க டம்அடை நெஞ்சமே''[5]

(ஏத்துவார்தம்-துதிப்பவர்களுடைய; மேவிய-பொருந்திய; தடஞ்சோலை - பெரிய சோலை)

என்ற பாசுரப்பகுதியால் இதனை அறியலாம்.

திருக்கோயிலை நோக்கி நடந்து செல்லும்போது திருமங்கையாழ்வாரின் பாசுரங்கள் ஒன்றின்பின் ஒன்றாக நம் சிந்தைல் எழத்தொடங்குகின்றன. இத்திருப்பதி எம்பெருமானைப்பற்றிய பதிகம் 'தாய்ப்பாசுரங்களாக' நடைபெறு

3. பெரி. திரு. - 2.7 :10 4. மேலது - 2.7.
5. பெரி. திரு. 1. 8: 4.

கின்றது. இதனால் ஆழ்வாரிடம் நாயகியின் நிலை ஒரு புறத்திலும் தாயின் நிலை மற்றொரு புறத்திலும் எழுவதைக் காண்கின்றோம். பெற்றோர் அல்லது உறவினர் துணையின்றித் தானாகவே புணர்ந்து தலைவனுடைய மேம்பாட்டிலே மிகவும் ஈடுபட்டுத் தான் பிறந்த குடியின் கட்டுப்பாட்டையும் பாராமல் 'அவனைக் கிட்டியல்லது நான் உயிர் வாழேன்' என்று பதற்றத்தையுடைய வளாயிருப்பவள் **மகள்;** பெற்று வளர்த்துப் பெண் பிள்ளை தக்க பருவம் எய்தினவுடன் தலைவனிடமுள்ள அன்பின் மிகுதியால் அவளிருப்பிடத்திற்குச் செல்ல வேண்டுமென்று பதறுங்கால் படிகடந்து புறப்படுதல் தான் பிறந்த குலத்தின் பெருமைக்குச் சிறிதும் பொருந்தாதென்று தடுத்து நிற்பவள் **தாய்.** இந்த இரண்டு மனநிலைகளும் ஆழ்வார் மனத்தில் நடைபெறுவதால் எம்பெரு மானை அநுபவிப்பதில் ஆழ்வார்க்கு விரைவு உண்டானமையும், தாம் பதறக் கூடாது என்கின்ற எண்ணம் உண்டானமையும் புலனாவதை அறியலாம். அப்பெருமானுடைய வைலக்ஷண் யத்தை (தனிச் சிறப்பினை) நோக்கும் பொழுது பதற்றமும், தம் சொரூபத்தை நோக்குமளவில் தாம் பதறக் கூடாது என்ற எண்ணமும் உண்டாகும். இந்த இரண்டு வகையான மனநிலை களும் பாசுரங்களில் நிழலிடுவதைக் காணலாம். இங்குத் தாய் நிலையிலுள்ளது ஆழ்வாருடைய அந்தக்கரணங்களுள் ஒன்றான 'நெஞ்சம்' அல்லது 'மனம்' என்பதையும், அவ்வந்தக் கரணங் களுள் வேறுபட்ட சீவான்மாகிய ஆழ்வார் தாமே இங்குத் 'தலைவியாகக்' கூறுப்பெற்றவர் என்பதையும் எண்ணி உணர்தல் வேண்டும்.

பரகால நாயகியைப் (திருமங்கையாழ்வாரைப்) பெற் றெடுத்த திருத்தாயார் திருவிடவெந்தைப் பெருமானிடத்தில் தன் மகள் காதல் கொண்டிருக்கின்ற நிலைமையும் அக்காதலின் அநுபவம் கைக்கூடாமையினால் அவள் பல்வேறு விகாரங்களை (மாறுபாடுகளை) அடைந்திருக்கின்ற நிலைமையையும் ஒவ் வொரு பாசுரத்திலும் ஒவ்வொருவகையாக எடுத்துரைக் கின்றாள். பின்னர் ஒவ்வொரு பாசுரத்திலும் 'இப்படிப்பட்ட என்மகள் விஷயத்தில் நீ செய்ய நினைத்திருப்பது என்னோ? பிரானே!' என்று வினவுகின்றாள். இங்ஙனம் இத்தலத்து எம்பெருமானிடம் ஈடுபாடுள்ள ஆழ்வார் தம்முடைய ஆராக் காதலை எடுத்துக்காட்டித் தன்னை ஏற்றருளத் திருவுள்ளமோ?

6. பெரி. திரு. 2.7

அல்லது ஏற்றருளாதிருக்கத் திருவுள்ளமோ? இரண்டிலொன் றைத் தன் சோதிவாய் திறந்து கூற வேண்டுமென்று வேண்டு கின்றார்.

"திவளும்வெண் மதிபோல் திருமுகத்(து) அரிவை
செழுங்கடல் அமுதினில் பிறந்த
அவளும்நின் ஆகத்(து) இருப்பது அறிந்தும்,
ஆகிலும் ஆசைவி டாளால்;
குவளைஅம் கண்ணி கொல்லிஅம் பாவை
சொல்லு:நின தாள்நயந் திருந்த
இவளையுன் மனத்தால் என்நினைந்(து) இருந்தாய்
இடவெந்தை எந்தை பிரானே!"[7]

(திவளும்-பிரகாசிக்கின்ற; மதி-சந்திரன்; திருமுகம்-அழகிய முகம்; அரிவை-இளம் பருவமுள்ளவள்; அவள்-பெரிய பிராட்டியார்; ஆகம்- மார்பு; குவளை -நீலோற்பலம்; பாவை-பதுமை)

என்பது ஆழ்வாரின் பாசுரம்.

உலகில் ஓர் ஆடவன்ஒரு பெண்ணிடம் அளவற்ற அன்பு வைத்திருப்பதாகக் கண்டால் அவனிடத்தில் மற்றையோர் மையல் கொள்ளலாகாது. அப்படிக் கொள்வது அறிவுடைய செயலன்று. இந்த நியாயத்தைக் காட்டித் திருத்தாயார் திருவிடவெந்தை எம்பெருமானிடம் வினவுகின்றாள்: "இட வெந்தை பிரானே! உன் மீது என் மகள் ஆசை கொள்ளுதல் கூடாது. நீயோ பாற்கடலில் பிறந்த அழகிய திருமகளை ஒரு நொடிப்பொழுதும் விடாது நின்திருமார்பில் வைத்துக் கொண்டு ள்ளாய். இதனை அறிந்திருந்தும் என் மகன் உன்மீது காதல் கொண்டுள்ளாள்; கொண்ட ஆசையைக் கைவிடுகின்றவளாகவும் இல்லை. தன்னுடைய தனிச்சிறப்பினை எண்ணி நீ திருமகளி டத்தில் காட்டும் அன்பை விட தன்னிடத்தில்தான்அதிக அன்பைக் காட்டுவாய் என்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றாள். யார் எது விரும்பினாலும் உனது திருவுள்ளம் உவந்தாலன்றிப் பலன் கிடைக்க மாட்டாதாகையால் என் மகள் விஷயத்தில் நீ என்ன செய்யத் திருவுள்ளங் கொண்டுள்ளாய்? அடியேன் அறியச் சொல்லியீருள்க" என்று வேண்டுகின்றாள்.

இப்பாசுரத்தின் நயமும் நம் சிந்தையில் எழுகின்றது. சிசுக்களுக்குத் தாயின் முலைபோல அடியவர்கட்கு எம்பெரு

7. பெரி. திரு. 2.7:1.

மானுடைய திருவடியே கதியாதலின் 'நின்தாள் நயந்திருந்த இவளை' என்றார். ''சொரூப ஞானமில்லாத காரணத்தால் திருமகள் நின் திருமார்பை விரும்பினாள்; என் மகள் நற்குடிப் பிறந்து நல்லறிவு வாய்க்கப் பெற்றவளாதலின் நின் திருவடியையே விரும்புகின்றாள்'' என்ற சமத்காரம் தோன்றப் பேசுகின்றாள் தாய். 'உன் மனத்தால் என் நினைந் திருந்தாய்?'-இது எல்லா சாத்திரங்களின் பொருளையும் அடக்கிக் கொண்டுள்ள வினாவாகும். சேதநனுடைய செயல் தொகுதிகள் யாவும் பேற்றுக்குச் சாதனம் அன்று; எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் பிறக்கும் இரக்கமே பலனைப் பெறுவிக்க வல்லது என்ற தொனிப் பொருள் இதில் அடங்கிக் கிடக்கின்றது. இத்தலத்து எம்பெருமான் தமது தேவியை இடப்பக்கத்தில் தாங்கிக் கொண்டிருத்தலால் இத்தலம் 'திருஇட எந்தை' (திருவினை இடப்புறத்துக் கொண்டிருக்கும் எந்தை) என்ற திருநாமத்தால் வழங்கி வருகின்றது என்பது ஈண்டு அறியத் தக்கது.

தமிழில் அகப்பொருள் துறைகளில் வரும் செய்திகளை யெல்லாம் பொருத்தி நாயக - நாயகி பாவனையாக வரும் பாசுரங்களைச் சுவை மிக்கதாக்கியுள்ளனர் ஆழ்வார் பெருமக்கள். தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவிக்கு ஏற்படும் உடல் நிலைகளையெல்லாம் எம்பெருமான்மீது ஆராக்காதல் கொண்டிருக்கும் ஆழ்வார் நாயகிக்கும் ஏற்படுவதாகச் சொல்லுவது கவிமரபாகி விட்டது. அடுத்து வரும் பாசுரங்களி லெல்லாம் இச்செய்திகள் குறிப்பிடப் பெற்றுள் ளதைக் காணலாம். திருத்தாயார் இவ்வாறு பேசுகின்றாள்: ''திருவிட வெந்தையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! என் மகள் தோழியரிடம் புன்சிரிப்புக் காட்டிப் பேசுவதில்லை; மார்பில் சந்தனம் பூசிக் கொள்வதில்லை; கண்ணில் மை தீட்டிக் கொள்வதில்லை; கூந்தலிலும் மணமிக்க மலர்களைச் சூட்டிக் கொள்வதில்லை. வாய்விட்டு ஏதாவது சொல்ல நேர்ந்தால் 'அன்று இவ் உலகம் அளந்தாய்!' என்பன போன்ற சொற் களையே வாய்வேருவுகின்றாள்.[8] தன் மகளின் ஆற்றாமையைக் கண்ட திருத்தாயார் அவளுடைய தாபமெல்லாம் தீரும்படி சில உபசாரங்களைச் செய்திடுகின்றாள். அவை நினைத்ததற்கு நேர்மாறான பலனைத் தருகின்றன. மார்பில் சந்தனத்தைப் பூசி முத்து வடத்தை அணிவித்தாள்; அவை நெருப்பை வாரிக்

8. பெரி. திரு. 2.7 :2.

கொட்டினாற்போல் இருக்கின்றன. அவளை நல்ல வெண்ணிலவில் கொண்டு நிறுத்தினாள்; நிலவு உடம்பு மேல் பட்டதும் இளைக்கத் தொடங்கிற்று. அவளைக் கடற்கரையருகே இட்டுச் சென்றாள்; கடலொலி காதில் விழத் தொடங்கியதும் கதறத் தொடங்கினாள். மாந்தளிர் போன்ற அவள் மேனியிலும் பொன்மூலாம் பூசியது போல் பசலை படர்ந்தது. உடல் ஈர்க்குப் போல் இளைத்து விட்டபடியால் வளையல்களும் கழன்று விழத் தொடங்கின.[9]

அடுத்து, தன் மகள் வாய்வெருவுதலைக் குறிப்பிடுகின்றாள்:

''ஊழியின் பெரிதால் நாழிகை என்னும்;
ஒண்சுடர் துயின்றதால் என்னும்;
ஆழியும் புலம்பும் அன்றிலும் உறங்கா,
தென்றலும் தீயினில் கொடிதுஆம்,
தோழி! ஓ! என்னும்; துணைமுலை அரக்கும்''[10]

(ஊழி-கல்பம்; ஒண்சுடர்-சூரியன்; ஆழி-கடல்; அன்றில்-ஒருவகைப் புள்; அரக்கும் - இடத்தைவிட்டுப் பெயர்த்தாள்)

என்பது பாசுரப்பகுதி. தலைவனைப் பிரிந்த தலைவி பேசுவதுபோலவே ஆழ்வார் நாயகியும் பேசுகின்றாள். இரவு கழிக்க முடியாமையைச் சொல்லும்போது, 'ஒரு நாழிகைப் பொழுதும் ஒரு யுகமாக நீண்டு செல்லுகின்றதே; பகலவன் உறங்கி விட்டானோ?' என்கிறான். தன் பாங்கியை நோக்கி, ''தோழி, கடலும் கேட்போர் செவி கைக்கும்படி கூக்குரலிடுகின்றதே; அன்றில் பறவையும் கண்மூடாமல் கத்துகின்றதே; எல்லோருக்கும் குளிர வீசும் தென்றல் என்மாட்டு நெருப்பைவிடக் கொதிக்கின்றதே,'' என்கின்றாள். ''கொள்ளும் பயனொன்றில்லா கொங்கைதன்னைக் கிழங்கோடும், அள்ளிப் பறித்திட்டு அவன் மார்பில் எறிந்து என் அழலைத் தீர்வேனே''[11] என்று ஆண்டாள் அருளிச் செய்ததுபோல இப்பரகால நாயகியும் தன் இரண்டு முலைகளையும் வேருடன் பிடுங்கி எறிபவள் போல் அவற்றை இடம் பெயர்க்கின்றாள் என்பதாகக் குறிப்பிடுகின்றாள் திருத்தாயார்.

9. மேலது - 2. 7.: 3. 10. பெரி. திரு. 2.7 :4
11. நாச். திரு . 13 : 8

இவ்விடத்தில் பராங்குசநாயகி தோழியிடத்தில் கூறுவதையும் சிந்திக்கின்றோம்.

''பலபல ஊழிகள் ஆயிடும்;
அன்றிஓர் நாழிகையைப்
பலபல கூறிட்ட கூறுஆயிடும்;
.........................................
பலபல நாள்அன்பர் கூடிலும்
நீங்கிலும் யாம்மெலிதும்'';[12]

(ஊழிகள்-கற்பகங்கள்; கூறு-பகுப்பு; அன்பர்-தலைவர்; மெலிதும் - வருந்துகின்றோம்)

தலைவரைப் பிரிந்து நிற்கும் காலம் நீண்டு தோன்றுகிறது; அவருடன் சேர்ந்து நிற்கும் காலம் மிகச்சிறிய பொழுதாகக் கழிந்து விடுகின்றது. 'நீங்கில் ஊழியாயிடும்; கூடில் நாழிகைக் கூறாயிடும்' என்று மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். மேலும்,

''கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா''[13]

(கொடியார்-கொடிய தலைவர்; நெடிய-நீண்டு; இரா-இரவு)

என்ற திருக்குறளையும் அதற்கு, ''காதலோடு நாம் இன்புற்ற முன்னாள்களில் குறியவாய், அவர் பிரிவாற்ற மாகின்ற இந்நாட்களிலே நெடியவாய்ச் செல்கின்ற கங்குல்கள்'' என்று பரிமேலழகர் கூறும் உரையையும் நினைந்து பார்க்கின்றோம்.

தன் மகள் வாய் வெருவுதலைப்பற்றி மேலும் தொடர்ந்து பேசுகின்றாள் திருத்தாயார். ''ஓதிலும் உன் பேர் அன்றி மற்று ஓதாள்''[14] என்று குறிப்பிடுகின்றாள். ''என் மகள் வாய் திறந்து பேசுவதே அரிது. அங்ஙனம் வாய் திறந்து பேச முற்பட்டால் 'அம்மா, அண்ணா' என்ற பேச்சே இல்லை. 'கோவிந்தா, கோபாலா' என்று எம்பெருமானுடைய திருநாமங்களையே சொல்லுகின்றாள் என்பது திருத்தாயார் வாக்கு. இவ்விடத்தில் ஒரு சிறு வரலாறு நினைக்கத் தக்கது: திருவாய்ப்பாடியில் கண்ணன் பிறந்த வளர்ந்து வருங்காலத்தில் ஒரு சமயம் ஓர் ஆயர்குல நங்கை இடைவிடாது கண்ணனையே சிந்தித்துக்கொண்டு ஆராக் காதலுடையவளாக இருந்தாள். அந்நிலையைக் கண்ட அவள் அன்னை அவளது சிந்தனையையே மாற்றிவிடக் கருதி தயிர்,

12. திருவிருத் - 16. 13. குறள் - 1169.
14. பெரி. திரு . 2. 7: 5.

நெய், பால் முதலியவற்றை விற்று வருமாறு ஏவினாள். அவளோ கண்ணபிரானையன்றி 'மற்றும் ஓர் தெய்வம் உளது'[15] என்று அறியாதவள். அன்னையின் வற்புறுத்தலுக்காகக் கூடையைத் தலையில் வைத்துக் கொண்டு தெருவில் புறப்பட்டாலும் 'தயிர் வாங்கலையோ தயிர்......' என்று கூவுவது இல்லை. 'கோவிந்தன் வாங்கலையோ கோவிந்தன்! தாமோதரன் வாங்கலையோ தாமோதரன்!, மாதவன் வாங்கலையோ மாதவன்!' என்று கண்ணனுடைய திருநாமங்களையே கூவிக் கொண்டு செல்வாளாம். இதே நிலையில்தான் பரகால நாயகியும் இருந்தாள்.

இன்னும் திருத்தாயார் தன்மகளைப்பற்றிப் பேசுகின்றாள்:

"உளம்கனிந்து இருக்கும் உன்னையே பிதற்றும்;
உனக்கன்றி எனக்கன்பொன் றிலளால்;
வளங்கனிப் பொழில்சூழ் மாலிருஞ் சோலை
மாயனே! என்றுவாய் வெருவும்"[16]

(உளம்-நெஞ்சு; வளம்-செழிப்பான; கனி-பழம்; பொழில்-சோலை; மாயன் - ஆச்சரியன்)

என்று குறிப்பிடுகின்றாள். "என் மகள் பரிபக்குவமான நெஞ்சுடையவள். ஏதாவது வாய் பேசினாலும் உன்னைப் பற்றின பேச்சு தவிர வேறொன்றையும் பேசுவதில்லை. தன்னுடைய அன்பு முழுவதையும் உன் மாட்டே காட்டுகின் றாள். உன் பெயரைச் சொல்வதும் நீ உகந்தருளும் திருப்பதி களின் பெயர்களைச் சொல்வதும் தவிர வேறொன்றறியாள். 'வளங்கனி பொழில்சூழ் மாலிருஞ்சோலை மாயனே!' என்று வாய்வெருவுவதைக் காண்பாயாக" என்கின்றாள். இத்துடன் விட்டாளா? இல்லை. இன்னும்,

"அலங்கெழு தடக்கை ஆயன்வாய் ஆம்பற்கு
அழியுமால் என்உள்ளம் என்னும்;
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்,
போதுமோ நீர்மலைக்கு என்னும்"[17]

(அலம்-கலப்பை; ஆம்பல்-ஆம்பல் குழல்; புலம்கெழு-மனத்தை ஈர்க்கும்; பொருநீர் - அலை எறியும்; புட்குழி, நீர்மலை-இரண்டும் திவ்விய தேசங்கள்)

15. மேலது - 8. 10 : 3. 16. பெரி. திரு. 2. 7 : 7
17. மேலது - 2. 7 : 8.

என்று மேலும் திருத்தாயார் தன் மகளைப்பற்றிய தன் பேச்சைத் தொடர்கின்றாள். கண்ணன் திருப்பவளத்தில் வைத்து ஊதுகின்ற புல்லாங்குழலின் ஓசை தன் நெஞ்சைக் கொள்ளை கொள்ளு கின்றது என்கின்றாள். திருப்புட்குழி[18] என்னும் திருப்பதியின் நீர்வளங்களை எடுத்துப் பாடுகின்றாள். திருநீர்மலைக்குப்[19] போக வேண்டும் என்று பயணம் எடுக்கின்றாள்.

தன்னுடைய மகளின் உண்மை நிலையையும் எடுத்துப் பேசுகின்றாள் திருத்தாயார். தன் மகள் எம்பெருமானின் சொரூப குணங்களிற் காட்டிலும் அவனுடைய உருவத்தில் ஊற்றம் அதிகமுடையவளாதலால் அதனையே சிந்தித்து நீர்ப்பண்ட மாகின்றாள். எம்பெருமானுடைய திருமேனி அழகு பெரிதா அல்லது இவளுடைய காதன்மை (ஆசை) பெரிதா என்று சீர் தூக்கிப் பார்த்தால் இவளுடைய ஆசையே பெரிதாகத் தோன்றுகின்றது. இந்த ஆசையின் காரணமாக இவள் ஒன்றும் செய்ய முடியாதவளாய்ச் செயலற்றுக் காணப் பெறுகின்றாள். அறிவுக்குறைவான தன் வயிற்றில் பிறந்தவளாதலின் இவளும் அறிவு வளர்ச்சி பெறாத நிலையில் உள்ளாள். இளம்பருவம் நீங்காத நிலையிலும் எம்பெருமானுடைய சொரூப உருவ குணங்களில் மிகவும் தெளிவுள்ள சிந்தையளாக உள்ளாள்.[20] தன்னுடைய குலமரியாதைக்கேற்ப நடந்து கொள்ளும் திறனைச் சிறிதும் ஆராய்கின்றாள் இலள். 'களைவாய் துன்பம்; களையாது ஒழிவாய்; களைகண் மற்று இலேன்'[21] என்று கருதி அவன் செய்கிறபடி செய்து கொள்ளட்டும் என்று ஆறியிராமல் பதறுகின்றவளாகையால் 'தன்குடிக்கேதும் தக்கவாறு நினையாத வளாகின்றாள்'. இலங்கைக் கோனைக் குலத்துடன் அழியச் செய்த செய்தி கேட்டு, ஒரு பிராட்டிக்காக எம்பெருமான் செய்த செயலை எண்ணி, அதில் ஈடுபடாநின்றாள்.[22] எப்பொழுதும் எம்பெருமானையே நினைந்தவண்ணம் உளங்கனிந்த நிலையில் உள்ளாள்.[23] மேலும் இவள் நிலைமை,

18. காஞ்சிக்குப் பத்துமைல் தொலைவிலுள்ள ஒரு திவ்விய தேசம்.
19. பல்லாவரத்திற்கு மூன்று கல் தொலைவிலுள்ள ஒரு திருப்பதி.
20. பெரி. திரு. 2.7:5 21. திருவாய் - 5.8:8
22. பெரி. திரு. 2.7:6 23. மேலது - 2.7:7

"பொன்குலாம் பயலை பூத்தன மென்தோள்;
பொருகயல் கண்துயில் மறந்தாள்;
அன்பினால் உன்மேல் ஆதரம் பெரிது; இவ்
அணங்கினுக்கு உற்றநோய் அறியேன்"[24]

*(பயலை-பசலை; துயில்-உறக்கம்; ஆதரம்-ஆர்வம்; அணங்கு-பெண்)*

என்று எடுத்துக் காட்டுகின்றாள். இங்ஙனம் பரகால நாயகியின் நிலையை எண்ணிய வண்ணம் திருக்கோயிலை அடைகின்றோம். இந்நிலையில் "பிராப்திக்கு உபாயம் அவன் நினைவு"[25] என்ற சூத்திரத்திற்குப் **பிள்ளை உலகாசிரியர்** இத்தலத்து எம்பெருமான் பாசுரத்திலிருந்து 'உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்' என்ற அடியை எடுத்துக் காட்டியிருப்பதையும் சிந்திக்கின்றோம். மேலும், இத்திருமொழியில் ஆழ்வாருக்குந் தலைவியின் நிலை ஒரு புறத்திலும், தாயின் நிலை மற்றொரு புறத்திலும் நடக்கின்றபடியால் எம்பெருமானை அநுபவிப்பதில் ஆழ்வாருக்கு விரைவு உண்டானமையும், 'நாம் பதறக் கூடாது' என்கின்ற எண்ணம் மற்றொரு புறத்திலுண்டானமையையும் அறிகின்றோம். தன் நிலையை நோக்கும்போது பதற்றமற்ற நிலையும், அவனது பேரழகை நோக்கும்போது பதற்றநிலையும் மாறி மாறி உண்டாதலைச் சிந்திக்கின்றோம். 'உன் மனத்தால் என் நினைந்து இருந்தாய்?' என்பது போன்ற வினாக்களால் பதற்றமற்ற நிலையையும், 'ஆசை விடாளால்', 'மாலிருஞ் சோலை மாயனே', 'துணை முலை அரக்கும்' என்பன போன்ற வாசகங்களால் பதற்ற நிலையையும் உணர்கின்றோம்.

திருக்கோயிலில் புகுந்ததும் நேராக எம்பெருமானின் சந்நிதியை அடைகின்றோம். கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் **அகிலவல்லித் தாயாரைத்** தமது இடக்கரத்தில் ஏந்திய நிலையில் பரமரசிகராய்ச் சேவை சாதிக்கும் மூலவர் **ஆதிவராகப் பெருமானை** உளமாரத் துதித்து வணங்குகின்றோம். உற்சவர் **நித்திய கல்யாணப் பெருமாளும் கோமளவல்லித் தாயாரும்** திருக்கல்யாண அவசரத்தில் எழுந்தருளியிருப்பதாக ஐதிகம் ஒன்று உண்டு. இவ்விருவர் திருமேனியிலும் தாடையில் பொட்டு இயற்கையாகவே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தலத்தில் "குலங்கெழு கொல்லிக் **கோமளவல்லித்**"[26] தாயார் தனிக்கோயில்

24. மேலது - 2.7 : 9
25. ஸ்ரீவச. பூஷ - இரண். பிரகரணம் - 44.
26. பெரி. திரு - 2. 7 :8

கொண்டிருப்பது சிறப்புடையதாகும். எம்பெருமான் சந்நிதியிலேயே அவன்மீது திருமங்கையாழ்வார் பாடியுள்ள பதிகம் முழுவதையும் மனம் உருகிப் பாடிப் பரவசப்படுகின்றோம். அடுத்து, கோமளவல்லித் தாயாரைச் சேவித்த பிறகு வடகிழக்கு மூலையில் கோயில் கொண்டு சயனத் திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் **திருஅரங்கநாதனையும் திருஅரங்கநாயகியையும்** சேவிக்கின்றோம். இத்தலத்து எம்பெருமான்மீதுள்ள பதிகமும் நம்மாழ்வார் திருஅரங்கநாதன் மீது அருளிச் செய்துள்ள "கங்குலும் பகலும்"[27] என்னும் திருவாய்மொழிப் பதிகமும் ஒப்புமை பெற்றுள்ளமையால் அப்பதிகத்தை இங்குள்ள அரங்கநாதன் சந்நிதியில் ஓதி உளங்கரைகின்றோம்.

இத்தலத்து எம்பெருமான் எம்பெருமாட்டியை இடக் கரத்தில் சுமந்து கொண்டிருப்பதற்குப் புராண வரலாறு ஒன்று உண்டு. சம்புத் தீவில் சரசுவதி நதிக் கரையில் **குணி** என்ற முனிவர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பணிவிடை செய்வதற்கு ஒரு கன்னிகை தோன்றினாள். முனிவர் சுவர்க்கம் புகுந்த பிறகு கன்னிகை கடுந்தவம் புரிந்தாள். நாரதமுனிவர் ஒரு நாள் அவளைச் சந்தித்துத் திருமணம் ஆதாதவளுக்குச் சுவர்க்கம் கிடைக்காது என்று தெரிவித்தார். உடனே அவள் முனிவர் குழுவை நாடி தன்னை யாராவது ஒருவர் திருமணம் புரிந்து கொள்ளுமாறு வேண்டினாள். **காலவ முனிவர்** என்பார் அவளை மணம் புரிந்து கொண்டார். ஓர் ஆண்டில் அவளிடம் பெரிய பிராட்டியார் அம்சமாக 360 கன்னிகைகள் தோன்றினர். பின்னர் அவளும் துறக்கம் புகுந்தாள். முனிவர் அக்குழந்தைகளைக் காப்பாற்றும் ஆற்றலின்றிச் சம்புத் தீவிற்கு வந்த அந்தணர்கள் மூலம் திருவிடவெந்தை என்ற தலம் இருப்பதை அறிந்து குழந்தைகளுடன் அங்கு வந்தார். நாடோறும் முனிவர் **வராக மூர்த்தியைச்** சேவித்து வரும் நாளில் கன்னிகையருக்குத் தகுந்த கணவன்மார் கிடைக்க வேண்டுமென்று கவலையுடன் இருந்தார். பரமபதநாதன் ஒரு மாணி (பிரம்மச்சாரி) வடிவமாக அவரிடம் வந்து அக்கன்னிகையரைத் திருமணம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டார். நாளொன்றுக்கு ஒரு கன்னிகை வீதம் திருமணம் புரிந்த கொண்டே வந்தார். ஆண்டு இறுதி நாளில் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே எல்லாக் கன்னிகையரையும் ஒன்று சேர்த்து ஒரே கன்னிகையாக்கி

27. திருவாய் - 7.2.

எல்லோருக்கும் ஞானோபதேசம் செய்தார். 360 கன்னிகையரும் ஒருங்கு சேர்ந்து ஓர் உருவான படியால் வராகமூர்த்தி தாங்கிக்கொண்டிருக்கும் நாச்சியாருக்கு **அகில வல்லி**[28] நாச்சியார் என்று திருநாமம் வழங்கலாயிற்று. ஆண்டு முடியும் அளவும் நாடோறும் திருமணம் புரிந்து கொண்டபடியால் வராக மூர்த்திக்கு **நித்திய கல்யாணப் பெருமாள்** என்ற மறு திருநாமமும் ஏற்பட்டது. பெருமாளுடைய திருக்கோயிலாதலால் **நித்திய கல்யாண புரி** என்ற ஊருக்கு மறு பெயரும், பெரிய பிராட்டியார் அவதரித்த இடமாதலால் **ஸ்ரீபுரி** என்ற பெயரும், எம்பெருமான் வராக வடிவத்துடன் சேவை சாதிக்கின்ற படியால் **வராகபுரி** என்ற பெயரும் வழங்கலாயின. அந்த 360 கன்னிகையருள் முதல் கன்னிகையின் பெயர் **கோமளவல்லி** என்பது. ஆகவே, இங்குத் தனிக் கோயில் கொண்டுள்ள தாயாருக்குக் **கோமளவல்லி நாச்சியார்** என்ற திருநாமம் ஏற்பட்டது. பிராட்டியாரை இடப்புறம் வைத்துக்கொண்ருப்பதால் **திருஇடஎந்தை** என்ற பெயரால் இத் திவ்விய தேசம் வழங்கி வருகின்றது என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் **அசுரகுல கால நல்லூர்** என்றே காணப்பெறுகின்றது. இச் செய்திகளையும் அறிந்து கொள்ளுகின்றோம்.

இந்நிலையில் திவ்வியகவி **பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்,**

> ''நின்று திரியும் பிறவியெல்லாம் நேர்வித்து
> கொன்று திரியும் கொடுவினையார் இன்று
> வெருவிட, எந்தைக்கே விழுமிய தொண்டு ஆனேன்
> திருவிட எந்தைக்கே செறிந்து.''[29]

(கொடுவினையார், வினைக்கு உருவகம்; வெருவிட-பயந்துஓட; விழுமிய - உயர்ந்த; செறிந்து-நெருங்கி)

என்ற பாடல் நம் நினைவிற்கு வர அதனையும் திருக்கோயிலி லிருந்த வண்ணம் ஓதி ஓதி உளங்கரைகின்றோம். அதன்பிறகு திருக்கோயில் பிரசாதங்களைப் பெற்று எம்பெருமானிடம் பிரியா விடைபெற்றுத் திரும்புகின்றோம்.

திரும்பும் நிலையில் இத்திருக்கோயில் கல்வெட்டுகளால் சில செய்திகளை அறிந்த கொள்ளுகின்றோம். திருக்கோயில் மிகப்

28. அகிலம் - எல்லாம் ஒன்றானது.

29. நூற். திருப். அந் - 94.

பழமையானது. கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுகள் பிற்காலத்துச் சோழ மன்னர்கள் காலத்தில் ஏற்பட்டவை. விஜயராஜேந்திர சோழ தேவன் காலத்தில் கி.பி. 1052 இல் இவ்வூர் பெருமாளுக்குத் தேவதான இறையிலியாகத் தரப்பெற்று. இன்றைக்கும் இவ்வூர் இத்தலத்து எம்பெருமானுக்கே சொந்தமாக உள்ளது. இவ்வூரில் பங்குனி உத்தரத்திலிருந்து ஒன்பது நாள் திருவிழா நடந்தமை, ஆவணிச் சதயம் ஈறாக ஏழு நாள் விழா நடைபெற்றமை, கும்ப ஞாயிறு முழுமையும் சிறப்பாக இருந்தமை, இங்கிருந்த கலிச்சிங்க மடத்தில் அமாவாசைதோறும் அந்தணர்கட்கு உணவு வழங்கியமை, மலையாளத்திலிருந்து யாத்திரையாக வந்த சில வணிகர்கள் தீப கைங்கரியத்துக்காகப் பொன் அளித்தமை ஆகிய இன்னோரன்ன செய்திகள் கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றன.

❖ ❖ ❖

## 13. கடல்மல்லைக் கிடக்கும் கரும்பு

தெய்விக வாழ்க்கை வாழ்ந்த மக்களின் பேச்சுக்கே ஒரு தனியான வேகம் உண்டு. அவர்களுடைய உபதேச மொழிகளுக்கு உள்ள ஆற்றல் வெறும் படிப்பும் அறிவும் படைத்தவர்களின் அறவுரைக்கு இருப்பதில்லை. அத்தகைய முனிபுங்கவர்கள் பேசும்போது அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் பேசுகின்றது. பழங்காலத்து முனிவர்களைப் போன்றவர் நம்முடைய காலத்தில் வாழ்ந்த இராமகிருஷ்ணர். அவர் நூல் ஒன்றும் எழுத வில்லை; சொற்பொழிவும் செய்யவில்லை. தூய்மையான துறவியாக வாழ்ந்து மறைந்த பெரியார் அவர். பக்தியுடன் தம் அருகில் அமர்ந்து கேட்ட சீடர்களுடன் பேசிய பேச்சே அவருடைய அருள் மொழிகள்; திருமொழிகள். அப்படி அவர் பேசியவற்றைக் கேட்ட சீடர்கள் பிறகு அந்தத் திருமொழிகளை எழுதி வைத்துள்ளனர்.

ஒரு சமயம் பகவான் இராமகிருஷ்ணர் இவ்வாறு சொன்னார்: ''பசு பால் தருகின்றது.இந்தப் பால் பசுவின் உடலில் ஓடும் குருதியில் கலந்து அதன் உடல் முழுவதுமே உள்ளது. ஆயினும், பசுவின் காதைப் பிழிந்தால் பால் வருமா? வராது. பசுவின் மடியிலுள்ள காம்புகளில்தான் பால் சுரக்கும். உலகமெல்லாம் கடவுள் என்பது உண்மையே. ஆயினும் பசுவின் உடலில் பால் சுரக்கும் மடியைப் போன்றது திவ்விய தேசங்களின் மகிமை. அங்கே பக்தர்கள் சென்று, அந்தத் தலங்களில் சுரக்கும் பக்தியைப் பெற்று, பகவானை அடைகின்றனர். தலைமுறை தலைமுறையாகப் பலப்பல பக்தர்கள் தவமும் தியானமும் செய்த அந்தத் திருத்தலங்களில் ஆண்டவன் தன் தரிசனத்தை எளிதில் கிட்டும்படி செய்கின்றான். எண்ணற்ற பக்தர்களுடைய தவம், செபம், தியானம், பூசை, பிரார்த்தனை இவற்றின் ஒளி அங்கே படிந்து கிடக்கின்றது. அஃது அவ்விடம் பக்தியுடன் செல்லும் மக்களின் உணர்ச்சியைத் தன் மயமாக்கும்.

பக்தர்களின் கால்தூசி பட்டாலுமே போதும் என்று சொல்வதன் தத்துவம் இதுதான். கோடிக்கணக்கான பக்தர்கள் - படித்தவர்கள், படிப்பில்லாத பாமர மக்கள் - விழுந்து புரண்டு வழிபட்ட இடங்களுக்குத் தனியொரு ஆற்றல் உண்டு. உலக வாழ்க்கையையும் ஆசைகளையும் நீக்கியவர்கள் உள்ளம் உருகி ஆடியும் பாடியும் புனிதமாக்கிய தலங்களுக்கு நாமும் சென்று நம் உள்ளத்தை ஆண்டவன் திருவடிகளில் சமர்ப்பித்தால் நம்முடைய கல்மனம் உருகும்.[1] ஆகவே அத்தகைய இடங்களில் எங்கும் பரவி நிற்கும் ஈசனை எளிதில் காணலாம்.''

''எந்த இடத்தில் பூமியைத் தோண்டினாலும் நீர் எடுக்கலாம். ஆனால் சில இடங்களில் ஏற்கெனவே கிணறும், குளமும், வாவியும், ஏரியும் தயாராக உள்ளன. அவற்றை நாம் அடைந்து எளிதாக நீர் வேட்கையைத் தணித்துக் கொள்ளலாம் அல்லவா? இத்தகைய நீர் நிலைகளைப் போன்றவையே திருக்கோயில்களும், திவ்விய தேசங்களும். அவ்விடங்களை அடைந்து நம் பக்தி வேட்கையைச் சிரமமின்றித் தணித்துக் கொள்ளலாம். இத்தகைய திவ்விய தேசங்களைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளுதல் நம் கடமை. மாடுகள் வயிறு நிறையப் புல்லை மேய்ந்து விட்டு ஓரிடத்தில் படுத்து அசைபோடுவதுபோல் புண்ணியத் தலங்கட்குப் போய் பூசை, பிராத்தனை முதலிய வழிபாடுகளைச் செய்தான பிறகு தல மகிமையின் பயனாக அடைந்த புனித எண்ணங்களை நாம் அசைபோட வேண்டும். யாத்திரை முடிந்ததும் கடமை தீர்ந்து விட்டது என்று கருதிப் பக்தியையும் புனித எண்ணங்களையும் அங்கேயே விட்டுவிடாமல் தனிமையான இடத்தைத் தேடி அமர்ந்து தியானத்தில் மனத்தைச் செலுத்துதல் வேண்டும்; அடைந்த பக்தியை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். இல்லையெனில் அடைந்த பயனை விரைவில் இழந்து விடுவோம்.''

1. ''ஆடிப்பாடி அரங்க! ஓ! என்று
அழைக்கும் தொண்டர் அடிப்பொடி
ஆடநாம்பெறில், கங்கைநீர்குடைந்து
ஆடும்வேட்கைஎன் ஆவதே''
என்ற 'பெருமாள் திருமொழியின்' (2 : 2) பகுதியில் இத்தகைய கருத்து அமைந்துள்ளமை கண்டு மகிழலாம்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்ட வண்ணம் 'மகாபலிபுரம்' (மாமல்லபுரம்) என்ற தலத்தை நோக்கிப் புறப்படுகின்றோம். ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்தருளிய தொண்டை நாட்டுத் தலங்களுள் இதுவும் ஒன்று. இந்த ஊருக்குச் சென்னையிலிருந்தும் செல்லலாம்; செங்கற்பட்டிலிருந்தும் செல்லலாம். பேருந்து வசதி உண்டு. 'கோயில் நகரமாகிய' காஞ்சி யாத்திரையை முடித்துக் கொண்டு இங்கு வரலாம். காஞ்சியி லிருந்து நேர் பேருந்து வழி உள்ளது. நாம் காஞ்சியிலிருந்து பேருந்து மூலம் மாமல்லப்புரத்திற்குப் போகின்றோம்.

புராணங்களில் வரும் மகாபலியின் வரலாற்றை நாம் அறிவோம். இன்றுள்ள அந்த ஊரை மகாபலி ஆண்டு வந்தான் என்றும், பாற்கடலிலுள்ள பரந்தாமன் 'ஆலமர் வித்தின் அருங்குறளாகி' அவனை ஆட்கொண்டான் என்றும், அவன் தலையில் தன் காலை வைத்துப் பாதாளத்தில் அமிழ்த்தின பொழுது தான் இருந்து அரசாண்ட இடம் தன் பெயராலேயே வழங்குமாறு வேண்டிக் கொண்டான் என்றும், பரந்தாமனும் மாபலியின் விருப்பத்தை நிறைவேற்றினான் என்றும் அதனால் அவ்வூருக்கு 'மகாபலிபுரம்' என்று பெயர் வழங்கி வருகின்றது என்றும் ஒரு செவிவழி வரலாறு வழங்கி வருகின்றது. அத்தலத்திலுள்ள வழிகாட்டிகளும் (Guides) இதையேதான் சொல்லி வருகின்றனர். இது சரியன்று. பல்லவ மன்னர்களில் மகேந்திரவர்மன் பெரும் புகழ் பெற்றவன்; சிற்பக்கலையில் அளவற்ற காதல் கொண்டவன். ஆதலால் அவன் 'சித்திரகாரப் புலி' என்ற பட்டப்பெயராலும் வழங்கப்பெற்று வருகின்றான். அவனுடைய மகன் நரசிம்மவர்மனோ தந்தையையும் மிஞ்சியவனாகிச் சிற்பிகளை ஆதரித்த ஒரு கலைவள்ளல். மலைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களை உருவாக் கினவன் தந்தை என்றால், மலைகளையே வெட்டிச் செதுக்கிக் கோயில்கள், விகாரங்கள், இரதங்கள் முதலியவற்றையெல்லாம் நிர்மாணித்தவன் மைந்தன். இன்று நாம் மாமல்லபுரத்தில் கண்ணுக்கெட்டியவரை காணும் கலைக்கூடத்தை உருவாக்கி யவன் இந்த நரசிம்மனே ஆவான். சிற்பக்கலை வல்ல நரசிம்மவர்மன் மற்போர்க் கலையிலும் வல்லவன். போரில் பெரிய பெரிய மல்லவர்களையெல்லாம் மண்ணைக் கவ்வச்செய்து 'மாமல்லன்' என்ற விருதுப் பெயரையும்

பெற்றவன். இந்த மாமல்லன் ஆதரவில் உருவாகிய சிற்பக்கூடத்தையே அதனை உருவாக்கிய சிற்பிகள் **'மாமல்லபுரம்'** என்று வழங்கியிருக்க வேண்டும். இந்த மாமல்லபுரத்தையே திருமங்கையாழ்வார் **'கடல் மல்லை'** என்று தம் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளார், 'காஞ்சிபுரம்' என்ற பெயர் 'காஞ்சி', 'கச்சி' என்றெல்லாம் மருவி வழங்குவது போலவே, 'மாமல்லபுரம்' என்ற பெயரும் 'மாமல்லை' என் மருவிற்று. இதுவே எப்படியோ 'மகாபலிபுரம்' என்று திரிந்து வழங்கி வருகின்றது. இவ்வாறு திரிந்து வழங்குவதுகூட வியப்பன்று. ஆனால், இத்தனை விவரங்களும் தெரிந்த அரசினரும் இலட்சக்கணக்காகச் செலவு செய்து கட்டின விருந்தினர் விடுதிக்கு 'மகாபலிபுரம் விருந்தினர் விடுதி' என்று பெயர் சூட்டியிருந்தனர். அண்மையில் இது திருத்தப்பெற்றது மகிழ்ச்சிக்குரியது.

காஞ்சியிலிருந்து பேருந்து மூலம் வந்து கொண்டிருக்கும் நாம் 'கடி பொழில்சூழ் தலசயனத்தை' அடைகின்றோம். பேருந்து மாமல்லபுரத்தை அடைந்ததும், அது தலசயனப் பெருமாளை வலம்வந்து அவர் திருக்கோவிலுக்கு இடப்பக்கமாக வந்து நம்மை இறக்கிவிடுகின்றது. எத்தனையோ காலமாகத் தலசயனரைச் சேவிக்க வேண்டும் என்று துடித்து நிற்கும் நாம் முதலில் தலசயனர் ஆலயத்தினுள் நுழைகின்றோம். திருமங்கை யாழ்வார் பெற்ற உணர்ச்சியை நாமும் அடைகின்றோம்.

"எம்மானைக் கண்டு கொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசய னத்தே"[2]

(கடி-வாசனை; பொழில்-சோலை)

என்று ஆழ்வார் பெற்ற எக்களிப்பினைப் பெறுகின்றோம். கிழக்கே திருமுக மண்டலங்கொண்டு புயங்க சயனத் திருக்கோலத்தில் பள்ளி கொண்டுள்ள **தலசயனத்துறைவாரையும்** அவர் சந்நிதிக்கருகே தனிக்கோயில் கொண்டு சேவை சாதிக்கும் **நிலமங்கை நாய்ச்சியாரையும்** வணங்குகின்றோம்.

எம்பெருமான் பரமபத நாதன் அர்ச்சையில் நின்ற நிலையிலும், இருந்த நிலையிலும், கிடந்த நிலையிலும் நடந்த

2. பெரி. திரு. 2. 5 : 3 , 5, 6.

நிலையிரும் எழுந்தருளியிருப்பான் என்பதை நாம் அறிவோம். இவற்றைப் பொய்கையாழ்வார்,

**"வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்றநகரும் நான்குஇடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர்."[3]**

(வேங்கடம்-திருமலை; விண் நகர்-வைகுந்தம்; வெஃகா-காஞ்சி சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில்; கோவல்-திருக்கோவல்)

என்று குறிப்பிடுவதால் அறியலாம். இவற்றுள் அவனது சயனத் திருக்கோலமே கண்டோர் மனத்தைக் கவரத்தக்கது. இந்தச் சயனத்திருக் கோலத்திலும் பலவகை உண்டு. 108 திவ்விய தேசங்களில் அவர் கிட்டத்தட்ட இருபதில் அநந்தன்மீது சயனம் கொண்டுள்ளார். இதனைப் புயங்க சனம் (பாம்பணைப் படுக்கை) என்று வழங்குவர். ஏனைய இடங்களில் உள்ளவை உத்தியோக சயனம், தர்ப்ப சயனம் (புல்படுக்கை), போக சயனம், (இன்பப்படுக்கை), மாணிக்க சயனம், வடபத்திர சயனம் (ஆலிலைப் படுக்கை), வீர சயனம் என்பவையாகும்.

மாமல்லபுரத்தில் எம்பெருமான் கொண்டுள்ள திருக் கோலம் மேற்கூறிய வகையுள் ஒன்றிலும் அடங்காது. இங்கு வெறும் தரையில் படுத்துக்கிடக்கின்றான் இறைவன். படுக்காப்பாயும் இன்றி, தலைக்கும் அணையும் இன்றித் தரையில் கிடக்கின்றான். இதனைத் *'தலசயனம்'* என்றே வழங்குகின்றனர். இவர் தரையில் எழுந்தருளியிருக்க நேர்ந்ததற்குப் புராண வரலாறு ஒன்றுண்டு.[4] **புண்டரீகர்** என்பவர் ஒரு முனிவர்; திருமாலிடம் அளவற்ற பக்தியுடையார். கடற்கரையில் ஒரு பெரிய பூங்கா வனத்தை ஏற்படுத்தி அதில் சிறந்த மலர்களை விளைவிக்கின்றார். அம்மலர்களைப் பாற்கடலில் பாயல் கொண்டுள்ள பரந்தாமனின் திருவடியில் சேர்க்க வேண்டும் என்று பாரிக்கின்றார். பாற்கடலை அடைவற்கு இடையிலுள்ள கருங்கடலைக் கடக்க வேண்டும். அக்கடல் நீரைக் கையால் இறைத்து வற்ற அடிக்க முயல்கின்றார் முனிவர். செயல் துரிதமாக நடைபெறுகின்றது. பரந்தாமன் பக்தனின் அன்பின் மிகுதியைக் கண்டு வியந்து உவந்து முதியவர் வடிவத்தில் அவர் முன்னே வந்து தனக்குச் சிறிது உணவும் நீரும் கூலியாகத் தரின்

3. முத.திருவந் -77.

தான் துணை செய்தவாகக் கூறுகின்றனர். புண்டரீகர் அதற்கிசைந்து உணவும் கொணர்வதற்கு ஊருக்குள் செல்கின்றனர். திரும்பி வந்து பார்க்கும்போது வயோதிகர் கூராழிவெண் சங்கு தரித்த கோலத்துடன் தரையில் படுத்துக் கிடக்கின்றார். கடல் நீரும் வற்றியுள்ளது. பாற்கடலுக்கும் வழி திறக்கப்பெற்றுள்ளது. புண்டரீகருக்குச் சேவை சாதிப்பதற் காகவே பரந்தாமன் இந்தக் கோலத்தில் எழுந்தருளியுள்ளான். அம்முனிவரின் வேண்டு கோளின்படி அவர் உகந்த தலசயனனாகவே என்றும் மக்களுக்குச் சேவை சாதித்து வருகின்றான். ***'தலசயனன்'*** உகந்தருளின இடம் ***'தலசயனம்'*** என்ற பெயராலும் வழங்கி வருகின்றது.

அர்ச்சையில் எம்பெருமானைக் காணும் திருமங்கையாழ் வாருக்கு எம்பெருமானின் வியூக விபவாவதார வீரச் செயல்கள் பலவற்றைத் திருவுள்ளங்கொண்டு அவரது பெருமைக் குணத்தில் தம் மனத்தை ஈடுபடுத்துகின்றார். பெரும்பாலும் கண்ணனின் வீரசெயல்களே அவரது திருவுள்ளத்தில் ஒரு சேரத் தோன்றி குமிழியிடத் தொடங்குகின்றன. அவற்றைப் பாசுரங்களாகப் பேசி இனியராகின்றார். திருக்கடல் மல்லைப் பெருமான் பாலனாய் ஏழுலகுண்டு உமிழ்ந்தவன்; பாற்கடலில் துயில் அமர்ந்து பல்வேறு செயல்களைக் கவனிப்பவன்; கடும்பரிமேல் கற்கியாக வரப்போகின்றவன்; வளை மருப்பின் ஏனமாகிப் பாரிடத்தை எயிறுகீற இடந்தவன்; இரு நிலனும் பெருவிசும்பும் இரண்டடிகளுக்குப் போதாவென்று அளந்து கண்டவன்; இலங்கையிலுள்ள வலியரக்கர் பெருவரைத்தோள் இறும்படி நெரித்தவன்; மாயமான் மாயப் பின்தொடர்ந்தவன்; அணிகள் பூண்ட அவுணர்கோனின் ஆகத்தைப் பிறை எயிற்று அடல் அரியாய் நின்று பிளந்தெறிந்த பெம்மான்; பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்து அரக்கர்கள் உண்ணாதபடி செய்தவன்; கசேந்திரனுடைய இடர் களைந்தவன். இந்த எம்பெருமானே திருநின்றவூர் நித்திலமாக இருப்பவன்; தஞ்சை மாமணிக் கோயிலில் எழுந்தருளியிருப்பவன்; தண் ஆர்ந்த வார்புனல் சூழ்திருமெய்யத் தடவரை மேல் பணங்கள்மேவிக் கிடக்

4. பிரும்மாண்ட புராணத்தில் இவ்வரலாற்றைப் பரக்கக் காணலாம்.

கின்றவன்; நான்கு வேதங்கள், ஐந்து கேள்விகள், ஆறு அங்கங்கள் இவற்றைக் கண்டவன்.

இங்ஙனம் திருமங்கையாழ்வார் எம்பெருமானைப் பற்றிப் பேசி மகிழும் ஒரு பாசுரத்தை நாமும் சொல்லி மகிழ்வோம்.

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறாய்
உலகுய்ய நின்றானை, அன்றுபேய்ச்சி
விடம்பருகு வித்தகனைக் கன்றுமேய்த்து
விளையாட வல்லானை வரைமீகானில்,
தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக்கோயில்
தவநெறிக்கோர் பெருநெறியை வையங்காக்கும்,
கடும்பரிமேல் கற்கியைநான் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே.''[5]

(உரு-வடிவம்; உய்ய-பிழைக்க; வித்தகன்-ஆச்சரியமானவன்; வரைமீகான் - மலை மீதுள்ள காடு; தடம்-குளம்; கருமுகில்-காளமேகம்; நெறி-வழி; கடி - மணம்)

என்பது பாசுரம். எம்பெருமானுக்கு உயிருள்ள பொருள்களும் உயிரில்லாப் பொருள்களும் உடலாக இருக்கின்றன என்பது வைணவ சமயக்கொள்கை. இது சரீர சரீரி பாவனை (உயிர்-உடம்பு-உறவு) என்று வழங்கப்பெறும். நான்முகன் முதலிய தேவதைகள் எம்பெருமானுக்கு உடலாக இருப்ப வர்கள்; எம்பெருமானோ அந்த உடலுக்கு உயிராக இருப்பவன். உலகத்தில் உடலோடு கூடின ஓர் ஆன்மாவைக் குறிப்பிடுங்கால் உடலை ஒரு தனிப்பட்ட பொருளாகவும், பிரித்துப் பேசாது இரண்டையும் ஒரு பொருளாகவே பேசுகின்றோம். இங்ஙனம் பேசுவதற்கு மேற்குறிப்பிட்ட சரீர-சரீரி வனையே ஆதாரமாகும். அங்ஙனமே, எம்பெருமானுக்கு உடலாகவுள்ள நான்முகன் முதலிய தேவதைகளை வேறாகவும், அந்த உடலுக்கு உயிராகவுள்ள எம்பெருமானை வேறாகவும் பிரித்து நோக்காது ஒன்றாக நோக்கினால் வேற்றுமை தோன்றாது ஒற்றுமையே தோன்றும். இதுவே 'உடம்புருவில் மூன்றொன்றாய்' என்று பாசுரத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

5. பெரி. திரு - 2.5:3.

ஆயினும் பிரமன், இந்திரன், சிவன், சந்திரன் முதலிய தெய்வங்கள் யாவும் நாராயணனே என்று சாத்திரங்களில் பலவிடங்களில் ஓதப்பெற்றுள்ளது. இவ்விடங்களில் பிரமன் முதலிய தெய்வங்ளைச் சரீர மாகக்கொண்ட சர்வ சரீரியான நாராயணன் ஒருவனே என்பதாகக் கொள்ள வேண்டும். அஃதாவது, தெய்வங்கள் பலவுள்ளனவாகச் சொல்லப் பெற்றுள்ள இடங்களிலெல்லாம் சர்வ சரீரியான நாராயணனிற் காட்டிலும் சரீரங்களான தெய்வங்களுக்கு உள்ள **ஸ்வரூப** பேதம் (வடிவின் வேற்றுமை) சொல்லப் பெறுவதாகக் கொள்ள வேண்டும். படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய செயல்கள் நடைபெறுவதற்காகவே இங்ஙனம் நான்முகன் முதலிய தெய்வங்கள் தனிப்பட நிறுத்திக் காட்டப் பெற்றுள்ளன. 'உலகுய்ய' என்ற தொடர் இதனை விளக்குகின்றது.

**'வரைமீகானில் தடம்பருகு கருமுகிலை'** என்பதற்கு நஞ்சீயர் பொருள் கூறிக்கொண்டிருக்கும் போது அதனைக் கேட்டுக் கொண்டிருந்த **பிள்ளையழகிய மணவாளப் பெருமாளரையர்** என்பவர் **பராசரபட்டர்** அருளிச் செய்த வேறு பொருளை அவரிடம் சமர்பித்ததாக நாம் அறிகின்றோம். அப்பொருள்: கண்ணன் மலைமீதுள்ள காடுகளில் கன்றுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போது, இளங்கன்றுகள் அங்குள்ள தடாகங் களில் நீர் குடிக்கப் புகும்போது நீரில் முன்னே இறங்கிக் குடிக்க அஞ்சுமாம். அக்கன்றுகட்கு நீருண்ணும் விதத்தைப் பழக்குவிப் பதற்காகக் கண்ணன் **தன்முதுகில்** கைகளைக் கட்டிக்கொண்டு கவிழ்த்து நின்று தண்ணீரமுது செய்து காட்டுவானாம். மேற் காட்டிய சொற்றொடர் கண்ணனுடைய இச்செயலைக் குறிப் பிடுகின்றது என்பாராம் பட்டர். பாசுரத்தை அநுபவித்த பட்டரின் திறனை நாம் எண்ணி எண்ணிப் போற்றுகின்றோம்.

தலசயனரை மங்களாசாசனம் செய்து கொண்டிருக்கும் போதே தஞ்சை மாமணிக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஆழ்வாரின் திருவுள்ளத்தில் முகங்காட்டுகின்றான். அவன் ஆழ்வாருக்கு 'தவநெறிக்கோர் பெரு நெறியாக'த் தோற்றுகின்றான். எம்பெருமானைப் பெறுவதற்குக் கரும யோகம், ஞானயோகம், பக்தியோகம் முதலிய வழிகள் விதிக்கப் பெற்றிருப்பினும், யானையின்மீது ஏற நினைப்பார்க்கு யானையின் காலைப் பற்றியே ஏற வேண்டுவதுபோல்

எம்பெருமானுடைய திருவடியைப் பற்றியே அவனைப் பெறுதல் சிறக்கும் என்பது அடியார்களின் கொள்கை. இதுவே, 'சித்தோபாயம்' (முன்னமே உள்ள உபாயம்) எனப்படும். 'தவநெறியாக' இருக்கும் அவனை அடைவதற்கு அவனே ஒரு 'பெருநெறியாக' அமைகின்றான் என்பது கருத்து.

கண்ணனாக அவதரித்து நிறைவேற்றின திருவிளையாடல் களையே அதிகமாக இத்தலத்து எம்பெருமானின் செயல்களாகப் பேசுகின்றார் ஆழ்வார். ஆழ்கடலில் தோன்றின அமுதத்திற்கு நிகரான எம்பெருமான் குதிரைவடிவாக வந்த **கேசி** என்னும் அசுரனது வாயைக் கிழித்தெறிந்து அவனைக் கொன்றவன்; கம்சனது குவலயாபீடமென்ற யானையின் கொம்புகளைப் பறித்து முறித்தெறிந்தவன்; இரட்டை மருதமரங்களினிடையே தவழ்ந்து அவற்றை முறித்தெரிந்தவன்; அர்ச்சுனனைக் கருவியாகக் கொண்டு காண்டவவனத்தைக் கனல் எரிவாய்ப் பெய்வித்தவன்; நஞ்சு தடவப் பெற்ற முலையுடன் பாலூட்ட வந்த பூதனையிடம் பாலுண்டு அவளது உயிரையும் குடித்த வித்தகன்; கோகுலங்கள் தளராமல் குன்றம் ஏந்திக் கல்மாரி தடுத்தவன்; ஆயர்பாடியில் சேமித்து வைத்திருந்த தயிர் வெண்ணெய் அனைத்தையும் அமுது செய்து களித்தவன்; இடைப் பெண்களோடு குரவைக் கூத்து ஆடியவன். அடுக்கின குடங்களைக்கொண்டு குடக்கூத்து ஆடியவன்; குழவிப் பருவத்தில் உருளுகின்ற சகடத்தில் ஆவேசித்துப் புகுந்துவந்த அசுரனைத் திருவடியால் உதைத்துக் கொன்றவன்; பாண்டவர் கட்காகத் தூது சென்றவன்; பொய்யாசனம் இடுவித்து நிலவரையில் நிறுத்திவைத்த மல்லர்கள் யாவரையும் ஒருசேரக் கொன்றொழித்த மாவீரன்.

இந்த எம்பெருமானைப் பல்வேறு விதமாக உருவகப்படுத்திப் பேசி மகிழ்கின்றார் ஆழ்வார். பவளத் தூண்[6], தொண்டர்களின் சிந்தையில் முளைத்து எழுந்த திங்கரும்பு, போர் ஏறு, பொற்குன்று, கற்பகம், கருமுகில், நித்திலம், அமுதம் என்றெல்லாம் எம்பெருமானை உருவகப்படுத்தி அவனை அநுபவித்து இனியராகின்றார், சதாயோகியர்களால் சிந்திக்கப் பெறுபவன் என்றும், உள்ளுவார் உள்ளத்தே உறைகின்றவன்

6. தூணானது எப்படிப் பெருத்த பாரங்களைத் தாங்கி நிற்கின்றதோ அப்படியே பக்தர்களின் நலன்களைத் தாங்கிக் கொண்டிருப்பவன் எம்பெருமான்.

என்றும், அரவிந்தம் போன்று 'கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரி ஓடி நீண்ட அப்பெரியவாய கண்களையுடையவன்' என்றும் சொல்லிச் சொல்லி இன்புறுகின்றார் ஆழ்வார். இங்ஙனம் மங்களா சாசனம் செய்த பாசுரங்கள் பத்தையும்[7] அவன் சந்நிதியிலேயே பாடிப் பக்திபரவசமாகின்றோம்.

"படநாகத்து அணைக்கிடந்து அன்று அவுணர் கோனைப்
படவெகுண்டு மருதுஇடைப்போய்ப் பழனவேலி
தடமார்ந்த கடல்மல்லைத் தலசய னத்துத்
தாமரைக்கண் துயிலமர்ந்த தலைவன் தன்னை
கடமாரும் கருங்களிறு வல்லான் வெல்போர்க்
கலிகன்றி ஒலிசெய்த இன்பப் பாடல்
திடமாக விளவஐந்தும் ஐந்தும் வல்லார்
தீவினையே முதலரிய வல்லார் தாமே."[8]

(அணை-படுக்கை; அவுணர்கோன்-இரணியன்; பழனம்-வயல்; தடம்-குளம்; கடம்ஆரும் -மதம்மிக்க; கலிகன்றி-திருமங்கையாழ்வார்; திடமாக-உறுதியாக; முதல் - வேர்)

என்ற பாசுரத்தில் கூறப்பெற்றுள்ள பலனை அடைந்த உணர்ச்சியையும் பெறுகின்றோம்.

இங்ஙனம் திருமங்கையாழ்வார் போற்றிப் பாடிய 'மன்னும் கடல்மல்லை மாயவனைத்'[9] தொழுதேத்தித் திருக்கோயிலினின்றும் வெளிவருகின்றோம். பல்லவமன்னன் அமைத்த கலைச் செல்வங்களைக் கண்டு களிக்கும் எண்ணத்துடன் மேற்கு நோக்கி நடைகட்டுகின்றோம். முதலில் நம் கண்ணில் படுவது கிருஷ்ண மண்டபம். அங்குக் 'குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவனின்'[10] சிற்பத்தைக் காண்கின்றோம். அச்சிற்பத்தில் காணப்பெறும் கண்ணன் சிறிய வயதுடைய சின்னப்பையனாக இல்லை; எட்டடிக்குமேல் உயர்ந்து வளர்ந்தவன். அந்தச் சிற்பத்தைக் கண்டு களிக்கின்ற நிலையில் பால் கறக்கும் நிலையிலிருக்கும் கோபாலனின் சிற்பம் நம் கண்ணிற்குத் தட்டுப்படுகின்றது. அந்த இடையன் இன்றைய காலத்து மனிதனைப் போலக் காணப்பெறுகின்றான்.' நாம் வருகின்றோம்' என்று நம்மைத் திரும்பிப் பார்ப்பது போல் தோற்றம் அளிக்கின்றான். இச்சிற்பம் மிகப் பெரிய பாறையில்

7. பெரி. திரு - 2. 5. 8. பெரி. திரு . 2. 5: 10

9. பெரிய. திருமடல் - கண்ணி - 120. 10. திருவாய் - 3. 3 : 8.

செதுக்கப் பெற்றுள்ள அரிய சிற்பம். பிற்காலத்தில் யாரோ நாம் நின்று பார்க்கக் கூடியவாறு கட்டியுள்ள மண்டபத்தில் நாம் இந்தச் சிற்பங்களைக் கண்டு மகிழ்கின்றோம்.

இந்த மண்டபத்தை விட்டுச் சற்று மேற்கே சென்றால் ***'அர்ச்சுனன் தவம்'*** என்னும் அர்த்த சித்திரப் பாறையைக் கண்ணுறுகின்றோம்.

**''ஒருதாளின் மிசைநின்று நின்ற தாளின்**
**ஊருவின்மேல் ஒருதாளை ஊன்றி ஒன்றும்**
**கருதாமல் மனமடக்கி விசும்பின் ஓடும்**
**கதிரவனைக் கவர்வான்போல் கரங்கள் நீட்டி**
**இருதாரை நெடுந்தடங்கண் இமையாது ஓரா**
**யிரங்கதிரும் தாமரைப்போ(து) என்ன நோக்கி**
**நிருதாதி பரின்மனுவாய்த் தவஞ்செய் வாரின்**
**நிகரிவனுக்(கு) ஆர்கொல்என நிலைபெற் றானே''[11]**

*(தாள்-கால்; ஊரு-தொடை; விசும்பு-ஆகாயம்; இருதாரை-கருவிழி; நிருத அதிபர் - அரக்கர்; மனு-மனிதர்)*

என்று வில்லி கூறும் அருச்சுனன் தவ உருவத்தைக் கண்டு மகிழ்கின்றோம். நாம் நின்று பார்க்கும் இடத்திலிருந்து பதினைந்து அடி தாழ்ந்தும் மேலே இருபது அடி உயர்ந்தும் நீண்ட இரண்டு பெரிய பாறைகள் முழுவதையும் அடைத்துக் கொண்டுள்ளன இந்தச் சிற்பங்கள். இவற்றுள் எத்தனையோ விதமான வடிவங்கள் காணப் பெறுகின்றன. பூனை முதல் யானை வரை; தேவர் முதல் தவசி வரை. பார்த்தன் சடைமுடியுடனும் நீண்ட தாடியுடனும் தவம் செய்யும் கோலமும் அங்கு மலைமகள் கொழுநன் எழுந்தருளிப் பாசுபதம் அளிக்கும் காட்சியும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. இவற்றின் இடையே ஒரு நகைச்சுவைச் சிற்பமும் காணப் பெறுகின்றது. உண்மைத் தவசிகளிடையே ஒரு போலித் தவசி போல உருத்திராக்கப் பூனையொன்று தவம் செய்வது போன்ற சிற்பம் ஒன்று செதுக்கப்பெற்றுள்ளது. 'தவக்கோலம்' கொண்டுள்ள பூனையைச் சுற்றி எலிகள் அடிக்கும் கும்மாளம் நகைச் சுவையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது.

இந்தச் சிற்பங்களைக் கண்டு களித்த வண்ணம் இன்னும் சற்று மேற்கே சென்றால் பேன் பார்க்கும் குரங்குகள், கண்ணன்

*11. வில்லி பாரதம் - அருச்சுன்ன தவநிலை - 38.11. வில்லி பாரதம் - அருச்சுன்ன தவநிலை - 38.*

வெண்ணெய் உண்ணும் காட்சி இவற்றை விளக்கும் சிற்பங்களைக் காணலாம். தெற்கே திரும்பிக் குன்றினை நோக்கியுள்ள மேட்டின்மீது ஏறினால் அடுக்கடுக்காய்ப் பல மண்டபங்களைக் காணலாம். **இலக்குமி மண்டபம், வராக மண்டபம், மகிஷாசுரமர்த்தனி மண்டபம்** என்று பல மண்டபங்கள் உள்ளன. இவை யாவும் மலையைக்குடைந்து உண்டாக்கப் பெற்றவை. ஒரு மண்டபத்தில் பூமியை இடந்த வராக மூர்த்திக்கு எதிரே உலகளந்த பெருமாள் காட்சியளிக்கின்றார். மற்றொரு மண்டபத்தில் மகிஷாசுர மர்த்தனிக்கு எதிரில் புயங்க சயனர் காணப்பெறுகின்றார். இந்தச் சிற்பங்கள் யாவும் அர்த்த சித்திரச் சிற்பங்கள் (Bas Relief), இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது நேரம் போவது கூடத் தெரியவில்லை. கலைவளம் காலவெள்ளத்தையும் மறக்கச் செய்து விடுகின்றது.

இன்னும் மலைமேல் பார்க்க வேண்டியவை பல உள்ளன. வேலை தொடங்கப்பெற்று முற்றுப்பெறாத கோயில் ஒன்று மலைமீது உள்ளது. அதற்கு முன்புறம் பெரிய கோபுரம் ஒன்று நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்று நின்று போயுள்ளன. அதனைக் கண்ட வண்ணம் அடுத்துக் காணப்பெறும் கலங்கரை விளக்கத்தை அடைந்து அதன்மீது ஏறிப் பார்க்கின்றோம். திருமங்கையாழ்வார் காலத்தில் பொற்குவியல்களும் நவமணிக் குவியல்களும் யானைகளும் சுமக்கப்பெற்ற மரக்கலங்கள் பல்வேறு நாடுகளினின்றும் மாமல்லபுரத் துறைமுகத்திற்கு வந்திருக்க வேண்டும்.

''புலன்கொள்நிதிக் குவையோடு
புழைக்கைமா களிற்றினமும்
நலங்கொள்நவ மணிக்குவையும்
சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்களியங் கும்மல்லைக்
கடல்மல்லைத் தலசயனம்''[12]

*(புலன்கொள்-இந்திரியங்களைக் கவர்கின்ற; நிதிக்குவை-பொற்குவியல்; புழைக்கை -துவாரம் உள்ள துதிக்கை; நான்று இசிந்து-(சரக்குகளின் கனத்தால்) மிகவும் உள்ளிழிந்து; கலங்கள்-கப்பல்கள்; இயங்கும்-சஞ்சரிக்கும்)*

என்ற பாசுரப் பகுதியால் இதனை அறியலாம். பிறிதோரிடத்திலும் இதனைக் கருத்திற்கொண்டே,

12. பெரி. திரு. 2. 6 : 6.

"வங்கத்தால் மாமணிவந் துந்து முந்நீர்
மல்லையாய்!"[13]

(வங்கம்-கப்பல்; மாமணி-இரத்தினங்கள்; உந்து-தள்ளும்; முந்நீர்-கடல்)

என்று ஆழ்வார் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

கலங்கரை விளக்கத்தைச் சுற்றிப் பார்க்கும் பொழுது சில வரலாற்றுக் குறிப்புகள் நம் மனத்தில் குமிழியிடத் தொடங்கு கின்றன. **தாலமி** என்ற மேனாட்டு யாத்திரிகன் இந்தியாவின் தென் கரையில் **மாலியார்பா** என்ற துறைமுகம் இருந்ததாகக் குறிப் பிடுவது இந்த மாமல்லையாகத்தான் இருக்க வேண்டும். **ஹியான் - சுவாங்** என்ற சீன யாத்திரிகள் காஞ்சிபுரத்தைக் குறிப்பிடுங்கால் அது தென்கடற்கரை வரை நாற்பது மைல் தொலைவிற்குப் பரவிச் சிங்கள நாட்டை நோக்கியுள்ளது என்கின்றான். அவன் குறிக்கும் தென் கடற்கரைப் பட்டினமும் இந்த மாமல்லை யாகத்தான் இருக்க வேண்டும்.

"நிர்பெயற்று எல்லைப் போகி பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை"[14]

(நீர்பெயற்று எல்லை-நீர்ப்பாயல் துறை என்னும் ஊர்; பால்கேழ் - பால்போன்ற; வால்உளை-வெண்மையான பிடரி மயிர்; நாவாய் - மரக்கலம்; படப்பை - கடல்பக்கம்)

என்று தென் கரையில் விளங்கிய துறைமுகப் பட்டினம் ஒன்றைக் குறிப்பிடுகின்றது பெரும் பாணாற்றுப்படை. தொண்டைமான் இளந்திரையனுடைய நாட்டின் பல பகுதிகளைக் கூறிக்கொண்டு வருங்கால் கடற்கரைப் பட்டினமொன்றில் பண்டங்களும் புரவிகளும் மரக்கலங்களில் வந்திறங்குவதைப்பற்றிக் கூறு கின்றார் பெரும் பாணாற்றுப்படை ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். தொண்டைமான் இளந்திரையனுடைய ஊராகிய காஞ்சிக்கு அருகிலுள்ள மல்லையையே 'நீர்ப் பாயல் துறை' என்று அந்த ஆசிரியர் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

கலங்கரை விளக்கத்தைவிட்டு இறங்கி இன்னும் சற்று மேற்குப் பக்கமாகச் செல்லும்பொழுது வராக மூர்த்தியின் ஆலயம் ஒன்றைக் காண்கின்றோம். இஃது ஒரு குகைக்கோயில். இந்தக் கோயிலில் பூசை முதலியன நடைபெறுகின்றன. இங்கு

13. திருநெடுந் - 9. 14. பெரும் பாண் - அடி - (319-2)

எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் **ஞானப்பிரான்** என்ற திருநாமத்தையுடையவர். இவரைத் திருமங்கையாழ்வார்,

"ஏனத்தின் உருவாகி
நிலமங்கை எழில்கொண்டான்
வானத்தில் அவர்முறையால்
மகிழ்ந்துஏத்தி வலங்கொள்ள,
கானத்தின் கடல்மல்லைத்
தலசயனத்து உறைகின்ற
ஞானத்தின் ஒளிஉருவை
நினைவார்என் நயகரே."[15]

*(ஏனம்-வராகம்; நிலமங்கை-பூமிப் பிராட்டியார்; எழில்-அழகு; வானத்தில் அவர் -தேவர்கள்; ஏத்தி-துதித்து; கானம்-காடு; நாயகர்-தலைவர்)*

என்று மங்களாசாசனம் செய்து மகிழ்கின்றார். அந்தப் பாசுரத்தையே நாமும் பக்தியுணர்ச்சியுடன் பாடி அவர் பெற்ற உணர்ச்சியையே பெற முயல்கின்றோம். வராகப் பெருமானுக்கு **'ஞானப் பிரான்'** என்று திருநாமம் வழங்குதல் வைணவ சம்பிரதாயம். அது தோன்றவே பாசுரத்தில் 'ஞானத்தின் ஒளிஉரு' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. நம்மாழ்வாரும் "ஏனத்துருவாய் இடந்த பிரான்........ஞானப் பிரான்"[16] என்று அருளியுள்ளது ஈண்டு நினைக்கத் தக்கது.

திருமால் வராக அவதாரமாக வந்த காலத்தில் நெடுங்காலம் காட்டில் விளையாடிப் பொழுது போக்கினதாகப் புராண வரலாறு உண்டு. இதனைத் திருவுள்ளத்தில் கொண்டே,

"வானத் தெழுந்த மழைமுகில் போல், எங்கும்
கானத்து மேய்ந்து களித்து விளையாடி
ஏனத்து உருவாய் இடந்தஎம் மண்ணினை
தானத்தே வைத்தான்"[17]

*(வானம்-ஆகாயம்; முகில்-மேகம்; கானம்-காடு; இடந்த-கோட்டால் குத்தி எடுத்த; மண்-பூமி; தானத்து-அதன் இருப்பிடத்தில்)*

என்று பெரியாழ்வாரும் அருளிச் செய்துள்ளமை ஈண்டு எண்ணி மகிழத் தக்கது.

*15. பெரி.திரு.2.6:3* *16. திருவிருத் - 99.*
*17. பெரியாழ். திரு - 2.10 :9*

இந்த ஞானப்பிரானைப் பற்றி வரலாறு ஒன்று உண்டு. திருக்கடல்மல்லையில் **அரிசேகரன்** என்ற அரசன் நாள்தோறும் உச்சிக் காலத்தில் அண்மையிலுள்ள *'திருவிடவெந்தை'* என்ற திவ்விய தேசம் சென்று அங்கு எழுந்தருளியுள்ள **ஆதிவராக மூர்த்தியைச்** சேவித்து விட்டு ஊருக்கு வந்து திருவாராதனை முடித்த பிறகு உணவு கொள்வது வழக்கம். ஒருநாள் வராகமூர்த்தி இவ்வரசனின் பக்தியை உலகத்தினருக்கு அறிவிக்கத் திருவுள்ளங் கொண்டார். தானே ஒரு கிழ அந்தணர் உருவு கொண்டு பூமிப்பிராட்டியாரை ஒரு பெண்ணாக அழைத்துக் கொண்டு திருக்கடல் மல்லைக்கு எழுந்தருளினார். அப்பொழுதுதான் அரசன் திருவிடவெந்தைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அந்தணர் அரசன் எதிர்சென்று பசிக்கு உணவு தருமாறு கேட்டார். அரசன் தான் திருவிடவெந்தை சென்று திரும்பி வந்தவுடன் அவருக்கு வேண்டுவன நல்குவதாகக் கூறினான். கிழவரோ அச்சமாதானத்தைக் கேட்பதாக இல்லை. ஆகவே, அரசன் அந்தக் கிழவரை வராகமூர்த்தியாக பாவித்து உபசரித்து திருவாராதனை சமர்ப்பித்தான். உடனே வராகமூர்த்தி அரசனது பக்திக்கு மெச்சி பூமிப்பிராட்டியைத் தனது வலப்புறத்தில் வைத்துக் காட்சி தந்தருளி ஞானோபதேசமும் செய்தார். இந்த நிலையில்தான் திருக்கடல் மல்லையில் எழுந்தருளியுள்ளார். இங்கு எம்பெருமான் தனது வலக்காலை ஆதிசேடன் மீது வைத்துக் கொண்டும் இடத்துடையின் மீது பூமிப்பிராட்டியைத் தாங்கி கொண்டுமுள்ளார். இந்தத் **திருவல எந்தையைச்** சேவித்து மகிழ்கின்றோம். இந்தப் பாசுரத்தைக் கொண்ட பதிகம் முழுவதையும் அவன் சந்நிதியிலேயே ஓதி உளங்கரைகின்றோம்.

எம்பெருமான் எழுந்தருளியுள்ள இந்தக் குகைக் கோயில் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பெறுகின்றது. குகையிலுள்ள சுவரில் சிம்மவிஷ்ணு, முதலாம் மகேந்திரவர்மன் முதலியோரது சிலைகள் செதுக்கப் பெற்றுள்ளன. இவற்றி லிருந்து இக்கோயில் ஆறாம் நூற்றாண்டில் இருந்தது என்பதைத் தெளிவாக அறிகின்றோம்.

இக்கோயிலை விட்டுச் சாலையை அடைந்து சாலை வழியாகக் கிழக்கு நோக்கி நடக்கின்றோம். 'ஐந்து இரதங்கள்' என்ற கைகாட்டி காட்டும் திசையை நோக்கிச் சாலைவழியாக நடந்து சென்று கால்வாய் ஓரமாகவுள்ள **பஞ்சபாண்டவ இரதங்களைக்** காண்கின்றோம். பாண்டவர்கட்கும் இந்த இரதங்கட்கும் யாதொரு தொடர்புமில்லை. என்றாலும், அவை

யாவும் மிகவும் அழகானவை; மிகப் பெரியவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாணியல் நல்ல வேலைப்பாட்டுடன் ஒரே கல்லில் செதுக்கப் பெற்றவை. வடகோடியிலுள்ள இரதத்தைத் தரெளபதி இரதம் என்று சொல்லுகின்றனர். அஃது உண்மையில் துர்க்கையின் கோயில். தேவிக்குத் தலைப்பலியிடும் சிற்பம் அக்கோயிலில் காணப்பெறுகின்றது. இந்த ஐந்து அசையாத தேர்களையும் எத்தனைச் சிற்பிகள் எவ்வளவு நாட்கள் வேலை செய்து முடித்தார்களோ? எவ்வளவு செலவு ஆயிற்றோ?

மாமல்லரின் கலையுள்ளத்தை வியந்த வண்ணம் நாம் வந்த வழியிலேயே முன்னர் பார்த்த கைகாட்டி வரை திரும்பி வந்து கிழக்கு நோக்கி நடக்கின்றோம். வழியிலுள்ள சவுக்குத் தோப்புக்களைக் கடந்தால் கடற்கரைக் கோயிலை அடையலாம். இதுகாறும் பார்த்தவை யாவும் கற்பாறைகளை வெட்டிச் செதுக்கியவை; மலையைக் குடைந்து நிறுவியவை. ஆயின், இங்குக் காணும் இரண்டு கோயில்களும் கல்லால் கட்டப் பெற்றவை. ஒன்று சிவபெருமானுடையது; இது கடலின் அருகிலுள்ளது. மற்றொன்று, திருமாலுக்குரியது; சிவாலயத்தை அடுத்து மேற்புறமாக உள்ளது. இரண்டு கோயில்களின் மதிற்சுவர்கள் சிதைந்த நிலையில் உள்ளன. கடலலைகளால் தாக்கப்பெற்றதாலும், பேரலைகள் அடிக்கும் போது உப்புநீர்த் துளிகள் சிதறப்பெற்றதாலும் கோயிலின் அடியிலிருந்து உச்சி வரையிலும் உள்ள கற்கள அரிக்கப்பெற்றுள்ளன.

சிவன் கோயிலின் கருவறையில் பதினாறு பக்கங்கள் கொண்ட கருங்கல் இலிங்கம் உடைந்த நிலையில் உள்ளது; இதனால் இதற்குப் பூசை முதலியன நடை பெறுவதில்லை. சோமாஸ்கந்த நிலையில் மலைமகளுடன் வீற்றிருக்கும் சிவபெருமான் சிலையையும் அங்கே காண்கின்றோம். அருகிலுள்ள திருமால் ஆலயத்தில் பள்ளி கொண்ட நிலையில் ***''ஜலசயனனாக''*** இருக்கும் பெருமானின் வடிவம் மிகப் பெரியது. கையில் மின் விளக்கு இருப்பின் இருட்டில் ஒதுங்கிக்கிடக்கும் அவரை நன்கு சேவிக்கலாம். இந்தச் சிலையும் பின்னப்பட்டுக் கிடப்பதால், இதற்கும் பூசை முதலியன இல்லை. இதைப் போன்ற உருவம் ஒன்று மலைமீதுள்ள மண்டபம் ஒன்றில் கல்லில் செதுக்கப் பெற்றுள்ளது. இவற்றையெல்லாம்

அநுபவித்த வண்ணம் மாலை ஐந்து மணிக்குக் கடற்கரை மணலில் உட்கார்ந்து குளிர்ந்த கடற்காற்று வீச நாம் இளைப்பாறுகின்றோம்.

இந்தக் கடல் மல்லையில் கடற்கரைக் கோயில், ஊரிலுள்ள கோயில், மலையடிவாரத்திலுள்ள கோயில் ஆகிய மூன்றிலும் எழுந்தருளியருக்கும் எம்பெருமான்களைப் பூதத் தாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகிய இரண்டு ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர்.[18] கையிலுள்ள நாலாயிலாரத் திவ்வியப் பிரபந்தத்தை எடுத்து இப்பாடல்களையெல்லாம் ஓதி உளங்கரை கின்றோம். கடற்கரையிலிருந்து ஓதுங்கால் பாசுரங்கள் யாவும் பாற்கடல் ஈந்த ஆராவமுதுபோல் தித்தப்பதை உணர்ந்து மகிழ்கின்றோம். ஆழ்வார்கள் பெற்ற உணர்ச்சி நம்மையும் வந்து கௌவுகின்றது. இந்நிலையில் திவ்வியகவி **பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்** பாடலும் நம் நினைவிற்கு வருகின்றது.

''செறிந்த பணைபறித்து திண்களிற்றைச் சாடி
முறிந்துவிழப் பாகனையும் மோதி எறிந்து
தருக்குஅடல் மல்லைக்குமைந்தான் தஞ்சம் என்று-நெஞ்சே
திருக்கடல் மல்லைக்குள் திரி''[19]

(பனை-கொம்பு; களிறு-யானை (குவலயாபீடம்) தருக்கு-செருக்கு; மல்லை - மல்லர்களே; குமைத்தான்-கொன்றான்)

என்ற அப்பாசுரத்தையும் ஓதி மகிழ்கின்றோம். திருக்கடல் மல்லைக்குள் திரிந்தநாம் 'கண்ணனே தஞ்சம்' என்று மனவுறுதியையும் கொள்ளுகின்றோம்.

கடற்கரைக் கோயில்களை அடுத்துள்ள கடற்கரை வனப்பு மிக்கது. பழங்காலத்தி இது மிகவும் நீண்டதாக இருந்தது என்றும் எவ்வளவோ பகுதிகளைக் கடல் கொண்டுவிட்டது என்றும் கூறுவர். எஞ்சியுள்ள பகுதியையும் விழுங்கவருவதுபோல் கடலலைகள் கொந்தளித்துக்கொண்டு வந்து மோதுகின்றன. இந்த அலை களையும் கண்டுகளிக்கின்றோம்.

18. இரண். திருவந் - 70; பெரி. திரு. 2.5 ; 2.6 ; 3.5.8; 7.1:4; திருக்குறுந் - 19; திருநெடுந் 9; சிறிய திருமடல்-கண்ணி 73; பெரிய திருமடல் -கண்ணி - 120.

19. நூற். திருப். அந் - 93.

மாமல்லபுரம் தமிழருடைய நாகரிகத்தின் சின்னமாக விளங்குகின்றது. தமிழகத்தில் சிற்பக்கலை வளர்த்த பேரரசர்களில் தலையாய மாமல்லனிற் புகழ் எல்லாம் இந்தக் கடல்மல்லையில்கற்பாறையில் இழைக்கப் பெற்ற கவின் உருவங்களில் அடங்கிக்கிடக்கின்றன. இவற்றைக் ***'கல்லால் இழைத்த கவிதைகள்'*** என்று புகழ்ந்தாலும் அது மிகையன்று. தமிழ் நாட்டின் கலைச் செல்வம் நிறைந்த இடம் என்று உலகோர் புகழ்ந்து கூறும் கடல் மல்லையை மாமல்லன் பேரால் ***மாமல்லபுரம்*** என்று வழங்குவது மிகவும் பொருத்தமன்றோ? மாமல்லனது கனவெல்லாம் நனவாக வேண்டிய இடம் இது. மலைமீது நின்று சுற்றிப்பார்த்தால் நம் கண்வடத்திற்குட்பட்ட இடங்களிலெல்லாம் அரை குறையான சிற்பங்கள் அங்குமிங்குமாகக் கிடப்பதைக் காணலாம். என்ன காரணத்தாலோ மாமல்லனின் கனவு முழுவதும் நனவாகாமல் போயிற்று. அது நனவாகியிருந்தால் மாமல்லபுரம் கல்லால் இழைத்த ஒரு மாபெரும் கலைக் கூடமாக வளர்ந்திருக்கும் என்பதற்கு ஐயம் இல்லை.

❈ ❈ ❈

# 14. திருஅயிந்திரபுரத்துத் தெய்வநாயகன்

எம்பெருமானுடைய அர்ச்சாவதாரம் எப்பொழுதும் நம்மருகில் நிலைபெற்றுக் கண்ணால் கண்டுகளிப்பதற்கு இடந்தருகின்றது.

> "அண்டர்கோன் அணிஅரங்கன் என் அமுதினைக்
> கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே."[1]

என்ற திருப்பாணாழ்வாரின் அநுபவம் இதனை நன்கு உறுதி செய்கின்றது. நாம் எம்பெருமானைப் பற்றுவதற்கு எம்பெருமானுடைய சௌலப்பிய குணமே நமக்குத் துணையாக உள்ளது. அந்த சௌலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம்.

அர்ச்சாவதாரத்தில் எம்பெருமான் சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையனாக இருத்தலைக் காண்கின்றோம். இங்ஙனம் ஆயுதங்களை எப்பொழுதும் தாங்கிக் கொண்டிருத்தல் வன்மைமிக்க வீரனுடைய செயலாகும். தன்னை வந்தடைந்த பக்தர்களின் விரோதிகளைப் போக்குவதற்கு இப்படைகள் பயன்படுகின்றன. இவ்வாயுதங்களைத் தாங்கும் வன்மை மட்டிலும் போதிய தன்று; விரோதிகள் இன்னவை என்பதையும் அவற்றைப் போக்கும் முறைகளையும் நன்கு அறிந்தவனாய் இருத்தல் வேண்டும். எனவே, எம்பெருமான் தன்னைப் பற்றின நம்முடைய காரியத்தைச் செய்யும் பொழுது பயன்படு பவையான ஞானம், சக்தி என்ற திருக்குணங்கட்கு ஒளி தருபவை திவ்விய ஆயுதங்கள் என்று அறிகின்றோம்.

நாம் செய்த குற்றங்களை நினைத்து "அந்தோ! இத்தனைப் பிழைகளை இழைத்த நாம்எங்ஙனம் அத்துணை உயரிய எம்பெருமானைச் சென்றடைவது?" என அஞ்சி அகலாதிருத்தற் பொருட்டே அவருடைய திருக்கை அபயமுத்தரையுடன் சேவை

1. நடுநாட்டுத் தலம்
அமலனாதி - 10

அளிக்கிறது. இஃது உங்கள் குற்றங்களை நினைத்து நீங்கள் மனங்கவன்று அஞ்சுதல் வேண்டா; என்னை வந்தடையுங்கள். யான் உங்களை ஏற்றுக் கொள்வேன்'' என்னும் அன்பைக் காட்டும் வாத்சல்யத்தின் அறிகுறியாகும். எம்பெருமான் தலையில் கவித்திருக்கும் இரத்தின் முடி அவன் எல்லா உலகங்கட்கும் தலைவனாயிருப்பதனை அறிவிப்பதாகும். அன்பர்களைக் காணுங்கால் எம்பெருமானுக்கு உண்டாகும் முகமலர்ச்சியும் புன்சிரிப்பும் அவர்களுடன் புரையறக்கலக்கும் சீலகுணத்தைத் தெரிவிப்பனவாகும். ஆசனபதுமத்தில் அழுந்தி நிற்கும் எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளும் அனைவரும் பற்றுதற்கு இடம் தந்து நிற்கின்றன. இத்தன்மை எம்பெருமானின சௌலப்பியத்தை வெளிப்படுத்துகின்றது.

''திருக்கையிலே பிடித்த திவ்வியாயுதங்களும், வைத்தஞ்சல் என்ற கையும், கவித்த முடியும், முகமும் முறுவலும், ஆசனபத்மத்திலே அழுந்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம்''[2]

என்று முமுட்சுப்படி வாக்கியத்தில் குறிப்பிடப்பெறும் எம்பெருமானின் நிலையே நமக்குப் புகலிடமாகும். ''க்யூ'' வரிசையில் பல மணி நேரம் நின்று நடந்து சென்று திருவேங்கடமுடையானைச் சேவிக்கும் எண்ணற்ற பக்தர்கள் இந்த அநுபவத்தைப் பெற்றிருப்பார்கள் என்பது உறுதி. இங்ஙனம் அவனைச் சேவிக்கும் பக்தர்கள்,

''முடிச்சோதி யாய்உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ?''[3]

என்று நம்மாழ்வார் பெற்ற அநுபவத்தைத் தாமும் பெறுவதை நன்கு உணர்வார்கள்.

திருப்பாதிரிப் புலியூரில் ஒரு விடுதியில் தங்கி அதிகாலையில் நீராடி, தூய ஆடைகள் அணிந்து திருக்கோயிலுக்குப் போகச் சித்தமாக இருக்கும் நம் மனத்தில் மேற்கூறிய கருத்துகள் குமிழியிட்ட வண்ணம் உள்ளன. இந்த நிலையில் பேருந்து ஒன்றில் ஏறி மேற்குத் திசையில் சுமார் மூன்று கல் தொலைவிலுள்ள 'திரு அயிந்திரபுரம்' என்ற திவ்விய தேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம். சாலையின் இரு புறங்களிலும்

2. முமுட்சு - 142 3. திருவாய் - 3. 1 : 1

அமைந்துள்ள இயற்கைச் சூழலைத் துய்த்த வண்ணம் திருக்கோயிலை நோக்கிப் போகின்றோம்.

பேருந்து திரு அயிந்திரபுரத்தை நோக்கிச் செல்லுங்கால் சாலையின் இருபுறமும் நெருங்கி நிற்கும் மரவரிசைகள், பச்சைப்பட்டு விரித்தாலெனப் பரந்து கிடக்கும் நெல் வயல்கள், இங்கும் அங்குமாகத் திகழும் சிறு சிறு தோப்புகள், பூங்கொத்துகள் குலாவும் குளிர் சோலைகள், வலைப்பின்னல் போல் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து செல்லும் கால்வாய்கள் இவற்றைக் கண்டுகளித்துக் கொண்டே செல்லுகின்றோம். திருப்பாதிரிப் புலியூரிலிருந்து திரு அயிந்திரபுரம் வரையில் இதே சூழ்நிலைதான். சித்தும் அசித்தும் எம்பெருமானுடைய திரு மேனியாக அமைந்துள்ள தத்துவ உண்மையினைச் சிந்திக்கின் றோம். ஆழ்வார்கள் பாசுரங்களில் வரும் இயற்கைய வருணனை களைப் படிக்கும்போது இந்த உண்மை நம் நினைவில் எழுகின்றது. அசித்தினைத் தொழுதாலே எம்பெருமானின் திருமேனியைத் தொழுதலுக்குச் சமமாகும் என்று நினைந்தே ஆழ்வார்கள்,

"வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடமே! வானோர்
மனச்சுடரைத் தூண்டும் மலை."[4]

(வினைச்சுடர்-தீவினையாகிய நெருப்பு; நந்துவிக்கும்-அணைக்கும்; மனச்சுடர்-இதயமாகிய விளக்கு.)

என்றும்

"மதிதவழ் குடுமி மாலிருஞ் சோலைப்
பதியது ஏத்தி எழுவது பயனே"[5]

(குடுமி-சிகரம்; பதி-ஊர்; ஏத்தி-தொழுது.)

என்றும்,

"திருவேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்விணை ஓயுமே"[6]

என்றும் கூறியுள்ளனரோ என்று எண்ணுகிறோம்.

இங்ஙனம் சிந்தித்த வண்ணம்,

"வையம் ஏழும்உண்டு ஆல்இலை வைகிய
மாயவன், அடியவர்க்கு
மெய்யன் ஆகிய தெய்வநா யகன்இடம்
மெய்தரு வரைச்சாரல்"[7]

4. முத. திருவந் - 26
5. திருவாய் - 2. 10 : 2
6. மேலது - 3. 3. : 8
7. பெரி. திரு - 3 . 1 : 3.

*(வையம்-உலகம்; வைகிய-தங்கிய; வரைச்சாரல்-மலைச்சாரல்)*

என்று திருமங்கையாழ்வார் போற்றும் திருக்கோயிலை அடைகின்றோம். ஆழ்வார் கூறியுள்ளவாறு திருக்கோயில் ஒரு சிறு மலைத்தொடரின் அடிவாரத்தில் அமைந்திருப்பதைக் காண்கின்றோம். இந்தத் திருக்கோயில் எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் மட்டிலுமே ஒரு பதிகத்தால் மங்களா சாசனம் செய்துள்ளார்.[8] ஆழ்வாரின் பாசுரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நம் மனத்தில் எழுகின்றன.

"இருந்தண் மாநிலம் ஏனம் அதுஆய்வளை
மருப்பினில் அகத்துஒடுக்கி
கருந்தண் மாகடல் கண்துயின் றவன்இடம்
கமலநல் மலர்த்தேறல்
அருந்தி இன்இசை முரன்றுஎழும் அளிகுலம்
பொதுளிஅம் பொழிலூடே
செருந்தி நாள்மலர் சென்று, அணைந்து உழிதரு
திருவயிந்திர புரமே."[9]

*(இருதண்-மிகக் குறைந்த; ஏனம்-பன்றி; வளை மருப்பு-வளைந்த கோரப்பல்; ஒடுக்கி -அடக்கி; அம்பொழில்-அழகிய சோலை; கமலம்-தாமரை; தேறல் - தேன் ; முரன்று -பாடிக்கொண்டு; அளிகுலம்-வண்டுக் கூட்டங்கள்; பொதுளி - நெருங்கி; செருந்தி -சுரபுன்னை; அணைந்து-சேர்ந்து; உழிதரு - சஞ்சரிக்கப் பெற்ற)*

என்பது முதல்பாசுரம். இதில் முதல் இரண்டடிகளில் திவ்விய தேசத்து எம்பெருமானின் சிறப்பும், பின் இரண்டடிகளில் திவ்விய தேசத்தின் சிறப்பும் கூறப் பெறுகின்றன. பாசுரந்தோறும் இங்ஙனமே அமைந்துள்ளது. திவ்விய தேசமாகிய திருமேனியில் எம்பெருமானாகிய பரமான்மா அமைந்திருப்பதுபோல் நமக்குத் தோற்றுகின்றது.

இப்பாசுரத்தின் பொருளில் நம் மனம் ஆழங்கால்படு கின்றது. கோலவராகமாகி பூமிப் பிராட்டியை மீட்டுக் கொணர்ந்தவனும், பாலாழியில் திருக்கண் வளர்ந்தருள் பவனுடைய எம்பெருமான் கோயில் கொண்டருளிய இடம் திருவயிந்திரபுரம். அவனோ "உளங்கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறிய தேனாக"[10] இருப்பவன். அவன் உறையும் இடம் சோலைகள் சூழ்ந்தது. அச்சோலைகளில் திரள் திரளாக வண்டுகள் புகுந்து மதுவைப் பருகிக் களித்து

*8. மேலது - 3.1 9. மேலது -3.1:1*
*10. பெரி. திரு - 4. 3 : 9*

அக்களிப்புக்குப் போக்கு வீடாக இன்னிசைகளைப் பாடிக் கொண்டு உலாவுகின்றன. அங்ஙனம் உலாவுங்கால் செறியப் பூத்த சுரபுன்னை மரங்கள் எதிர்ப்படுகின்றன. அவற்றிலும் மதுவைப் பருகச் சொல்கின்றன அவ்வண்டின் குழாங்கள்.

இப்பாசுரத்தில் வரும் 'வண்டு' என்பதன் உள்ளுறைப் பொருளில் நம் மனம் ஈடுபடுகின்றது. வண்டுகட்கு 'மது விரதம்' என்ற ஒரு திருப்பெயர் உண்டு. தேனைத் தவிர வேறொன் றையும் உணவாகக் கொள்ளாதது என்பது இதன் பொருள். இது போன்ற தன்மையர் அடியார்கள்(பாகவதர்கள்) ஆதலின் 'உளம் கனிந்திருக்கும் அடியவர்' என்று சிறப்பிக்கப் பெற்றனர். மேல் நோக்கிய வழிக்குச் செல்லக் கருவியாகப் பயன்படும் இரண்டு சிறகுகள் போன்றவை ஞான அநுட்டானங்கள். இதனால் வண்டுகளைப் பாகவதர்களாகச் சொல்லுவது வைணவமரபு.[11] அத்தகைய பாகவதர்கள் பகவத் பாகவத போக்கியதைகளை அநுபவித்த ஆனந்தத்திற்குப் போக்கு வீடாக நாரத முனிவர், திருப்பாணாழ்வார், தம்பிரான்மார் (அரையர்) முதலானோரைப் போல ''பண்கொள் தலைக்கொள்ளப் பாடிப் பறந்தும் குனிந்தும் உழல்வர்''[12]; இந்த நிலையை 'இன்னிசை முரன்று எழும்' என்ற சொற்றொடர் குறிப்பிடுகின்றது. பகவத் பாகவத குணாநு பவத்திற்கு வாய்த்த இடங்கள் 'பொழில்' எனப்படும். 'செருந்தி' என்ற சுரபுன்னை மரத்தைக் குறித்ததன் தாற்பரியத்தையும் நம் மனம் எண்ணுகின்றது. ''தன் ஒப்பார் இல் அப்பன் தந்தனன் - தனதாள் நிழலே''[13] என்று ஆழ்வார் குறிப்பிட்டவாறு சம்சார மாகிய கொடிய வெய்யலிலே தபிக்கப் பெற்றவர்கட்கு நிழல் தந்து விடாய் தீர்க்கும் நன் மரமாகிய எம்பெருமானின் கழலிணைகளில்சேர்ந்திருக்கும் இருப்பே 'செருந்தி' என்று குறிக்கப் பெற்றுள்ளது. எனவே, சாரத்தை அறிந்தவர் களாகிய (ஸாரக்ராஹிகள்) பாகவதர்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்ட பகவத் பாகவத குணாநுபவக் களிப்பாலே எம்பெருமானைப் பற்றிய இசைப்பாடல்களை - அழ்வார்களின் பண்ணார்ந்த பாடல்களைப் - பாடிக் கொண்டு எம்பெருமானின் திருவடிப் பேற்றினையே நினைந்துகொண்டு வாழும் இடம் திருவயிந்திர புரம் ஆகும். 'அஹீந்த்ரபுரம்' என்ற வடசொல் 'அயிந்திரபுரம்'

11. ஆசா. ஹிரு - 152

12. பெரி. திரு - 3.5:2 13. மேலது - 6. 3: 9

என்று விகாரப்பட்டது. அஹீந்த்ரன் - திருவனந் தாழ்வான். அவன் வழிபட்ட தலமாதலால் 'அயிந்திரபுரம்' என்று வழக்காறு பெற்றது என்பதனையும் அறிகின்றோம்.

எம்பெருமான் உறையும் இருப்பிடத்தை மேலும் நம் மனம் ஆராயத் தொடங்குகின்றது.

''பின்னும் மாதவிப் பந்தலில் பெடைவரப்
பிணியவிழ் கமலத்து
'தென்ன என்றுவண் டின்னிசை முரல்தரு
திருவயிந்திர புரமே''[14]

(மாதவி-குருக்கத்தி; பெடை-பெண் அன்னம்; பிணி-கட்டு; கமலம்-தாமரை; முரல்தரு -பாடா நிற்கின்ற)

என்பது ஒரு கோணத்தில் பார்க்கப்பெறும் சூழ்நிலை. ஆண் வண்டுகள் தம்முடைய பெண் வண்டுகளுடன் கூடித் தாமரை மலரின்மீது இருந்துகொண்டு 'மதுபானம்' பண்ணுகின்றன. தம்பதிகட்குள் ஊடல் (பிரணயகலகம்) ஏற்படுகின்றது. பெண் வண்டு ஆண் வண்டை வீட்டு நீங்கிக் குருக்கத்திப் பந்தலில் புகுந்து ஒளிந்து கொள்ளுகின்றது. அதனைப் பிரிந்து ஆற்றமாட்டாத ஆண் வண்டு, தனது துணை வண்டு ஊடல் தீர்ந்து ஓடிவருமாறு தாங்கொணாத தனது சிரம நிலையை வெளியிடுகின்ற இன்னிசைக் பாடல்களைத் தாமரை மலரில் இருந்து கொண்டு பாடுகின்றது. இப்படிப்பட்ட பொழில் வாய்ப்புப் பொருந்தியது இத்திவ்விய தேசம். வண்டானது கிளைகளின் (சாகைகளின்) நுனியிலே திரியுமாப் போலவே வேத சாகையின் நுனியில் (உபநிடதங்களில்) விளங்குகின்ற எம்பெருமான், எம்பிராட்டியுடன் ஊடல் கொண்டு செய்யும் செயல்களைச் சொல்லியதாகக் கொள்வர் வியாக்கியாதாக்கள். ''பிராட்டியும் தானுமான சேர்த்தியில் ப்ரணய கலகம் மாறாதே செல்லுமாப் போலேயாயிற்று அங்குத்தைத் திர்யக்குகளுடைய யாத்ரையும்''[15] என்ற இன்சுவை மிக்க **பெரிய வாச்சான் பிள்ளையின்** அருளிச் செயலில் ஆழங்கால் பட்டு நிற்கின்றோம். இன்னொரு பக்கத்தில் அன்பொடு பொருந்தி வாழும் அன்னப் பறவைகளின் தம்பதிகள் காட்டப்பெறுகின்றன. இவை பெரிய தாமரைப் பூவாகிய படுக்கையில் பொருந்தி வாழ்கின்றன.

14. பெரி. திரு. 3. 1: 2.
15. அங்குத்தை - அவ்விடம்; திர்யக்குகள் - விலங்குகள்.

இவற்றின் வாழ்வு மேலும் இனிதாகும்பொருட்டு செந்நெல் நிறைந்த கதிர்கள் சாமரம் வீசி நிற்கின்றன.[16]

பிறிதொரு கோணத்தில் சூழ்நிலையின் காட்சி இது: நெருங்கிய குருக்கத்திச் செடிகளோடும் சண்பக மரங்களோடும் தழுவி நிற்கின்றன முல்லைக் கொடிகள். அங்குள்ள வயல்களில் செந்தாமரைப் பூக்கள் செழித்த வளர்ந்து காணப்பெறுகின்றன. வயல்களில் இன்றொரு பக்கத்தில் மெல்லிய கரும்பின் இளந்தடிகள் ஓங்கி வளர்நது காணப்பெறுகின்றன. வயல்களின் பிறிதொரு புறம் கருப்பஞ்சாற்றின் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேறு காணப்பெறுகின்றது[17]. அன்று கரும்புகளின் இருப்பு இருந்ததைப் போன்று இன்றும் அப்பகுதிகளில் கரும்பு மலிந்து காணப்பெறுகின்றது. இதனால்தான் அருகிலுள்ள நெல்லிக் குப்பத்தில் ***'சரூக்கரை ஆலை'*** நிறுவப்பெற்றுள்ளது என்ப தையும் அறிகின்றோம். கடலூர் - விழுப்புரம் பாதையில் இருப்பூர்தியில் செல்வோர் சரூக்கரை ஆலையினின்றும் கிளம்பி வரும் சருக்கரைப் பாகின் மணத்தை நுகரலாம்.

மற்றொரு கோணத்தில் காணும் சூழ்நிலை இது: வானில் சஞ்சரிக்கும் சந்திரன் தவழப்பெறும் ஓங்கி உயர்ந்த பெரிய மலையும் பெரிய மதிளும் சூழ்ந்திருக்கப்பெற்றது இத்தலம். இந்த மலையில் வண்டுகள் இசைபாடும் சோலைகள் நிரம்ப உள்ளன.[18] சோலையில் குரங்குகள் புரியும் சிறு குறும்புகள் கூறுப்பெறுகின்றன.

> ''பொன்மலர்திகழ் வேங்கை
> கோங்கு செண்பகக் கொம்பினினல் குதிகொடு
> குரக்கினம் இரைத்தோடி
> தேன்க லந்ததண் பலங்கனி நுகர்தரு
> திருவயிந்திர பரமே''[19]

(பொன்மலர்-பொன்நிறமான பூக்கள்; கொம்பு-கினை; தண்பலங்கனி-சிறந்த பலாப்பழம்; நுகர்தரு-உட்கொள்ளப்பெற்ற)

என்பது இச்சிறுகுறும்புகளைக் காட்டும் பாசுரப்பகுதி. வேங்கைமரம், கோங்குமரம், சண்பகமரம் ஆகியவற்றின்

*16. பெரி.திரு.3.1:7 17. மேலது. 3.1.:6 18. மேலது. 3.1:4*
*19. மேலது.3.1.:5*

கிளைகளில் குதித்தோடிப் பெரிய ஆரவாரங்களை விளைவித்து தேன் மிக்க சிறந்த பலாப்பழங்களைப் பறித்து நுகர்கின்றன குரங்குகள். குரங்குகளைக் கூறி சபலரான சம்சாரிகளின் செயல்களைக் குறிப்பதாகப் புலப்படுத்தும் ஆழ்வாரின் திருவுள்ளத்தைக் கண்டு வியந்து நிற்கின்றோம். ஒரு நிலையில் நில்லாத நெஞ்சினையுடையராய், ஒன்றைவிட்டு மற்றொன் றைப் பற்றும் தன்மையுடையராய், சிறு பலன்களை விரும்புபவர்கள் சம்சாரிகள். இப்படிப்பட்டவர்களின் தன்மையும் குரங்குகளின் தன்மையும் ஒப்புமை கொண்டவை யன்றோ? ஆயினும், இப்படிப்பட்ட சம்சாரிகள் 'உண்டியே உடையே என்று உகந்து ஓடும்' தன்மையராயினும், பலாக் கனிபோன்ற பகவத் குணங்களையும் இடை இடையே அநுபவித்து வாழ்வர் என்பதையும் குறிப்பதாகப் புலப்படுத்தும் ஆழ்வாரின் திறனை வியந்து போற்றுகின்றோம்.

இன்னொரு கோணத்தில் நோக்கினால் திருத்தலத்தின் அருகில் ஓடும் கருடநதியின் (கடில நதியின்) வளமான சூழ்நிலை நம் கண்ணலே படுகின்றது.

"தடம்ஆர்
வரைவ ளந்திகழ் மதகரி மருப்பொடு
மலைவளர் அகில்உந்தித்
திரைகொ ணர்ந்தணையு செழுநதி வயல்புகு
திருவயிந்திர புரமே"[20]

*(தடம்ஆர்-குளங்கள் நிறைந்த; மதகரி-மதயானைகள்; மருப்பு-தந்தம்; மலைவளர் -மலையில் வளரும்; திரை-அலை; உந்தி-தள்ளி; அணை - சேருகின்ற; செழுநதி -அழகிய ஆறு)*

என்பது கருடநதியின் காட்சியைக் காட்டும் பாசுரப்பகுதி. கருடநதி வெள்ளமாய்ப் பெருகி வருங்கால் யானைத் தந்தங்களையும், அகில் மரங்களையும், மற்றும் பலபல மணிகளையும் கொழித்துக் கொண்டு வருகின்றது. இந்த ஆறு கழனிகளில் கால்வாய்களாகப் பாய்ந்து அதனை வளமிக்கதாக்கு கின்றது. இந்த ஆற்றில் மீன்கள் துள்ளி விளையாடுகின்றன. ஆறுபாயும் வெற்றிலைக் கொடிக்கால்களில் கணுக்கள் தோறும் வெற்றிலைக் கொடிகள் கிளைக்கின்றன். சோலைகளிலுள்ள பாக்கு மரங்கள் இளங்குருத்துகளை விடுங்கால் சோலை முழுவதும் நறுமணம் வீசுகின்றது.[21]

20. பெரி. திரு. 3. 1. :8 21. மேலது. 3. 1 : 9

இங்ஙனம் எம்பெருமானின் திருமேனியை யொத்த புறச் சூழ்நிலையில் ஆழங்கால் பட்டவண்ணம் திருக்கோயிலை நண்ணுகின்றோம். எம்பெருமானின் நிலை பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற ஐந்தாக இருப்பினும் இந்த ஐந்து நிலைகளிலுள்ள எம்பெருமான்கள் வேறுபாடற்ற ஒருவரே என்பது வைணவ தத்துவம். இதனை,

"மூவர் ஆகிய ஒருவனை மூவுலகு
உண்டு உமிழ்ந்(து) அளந்தானை
தேவர் தானவர் சென்றுசென்று இறைஞ்சு,தண்
திருவயிந்திர புரத்து
மேவு சோதியை"[22]

(தானவர்-அரக்கர்கள்; மேவு-பொருந்தியுள்ள; சோதி-பரஞ்சோதி)

என்ற இறுதிப் பாசுரப்பகுதி தெளிவாக்குகின்றது. மும் மூர்த்திகளாக நின்று படைப்பு, அளிப்பு, அழிப்புச் செயல்களைச் செய்பவனும் (பரநிலை), மூவுலகு உண்டு உமிழ்ந்தவனும் (வியூக நிலை), இவ்வுலகினை அளந்தவனும் (விபவநிலை), திருஅயிந்திரபுரத்துள் உறையும் சோதியும் (அர்ச்சை) ஒருவனே என்பது ஆழ்வார் கருத்து என்பதை அறிகின்றோம்.

இந்த உண்மையின் அடிப்படையில் பாசுரங்கள் தோறும் கூறப்பெறும் எம்பெருமானின் வெற்றிச் செயல்களையும் வீரச்செயல்களையும் நோக்குகின்றோம்; சிந்திக்கின்றோம். சுடர்விட்டு ஒளிரும் திருவாழியை ஏந்தியவன் எம்பெருமான்; செய்யவள் உறையும் திருமார்பன்; வேதங்கள் ஓதும் பல்வேறு பொருள்களும் தானேயாக இருப்பவன்.[23] பாலனாகி ஏழுலகையும் உண்டு சிறிய ஆலிலையில் அறிதுயில் கொள்ளும் மாயவன் அவன்.[24] இரணியனின் மார்பை இரண்டு பிளவாக்கிப் பள்ளியிலோதிய அவன் மகன் சிறுக்கன் உய்யக் கருணை வெள்ளம் பாய்ச்சினவன்.[25] மாவலியின் வள்ளண்மையைப் பயன்படுத்திக்கொண்டு அவனிடம் மூவடி நிலம் இரந்து பெற்று எல்லா உலகங்களையும் தன் திருவடியால் அளந்து தன்னுடைனவாக்கிக் கொண்டவன்.[26] கூனியின் கொடிய சொற்கேட்டுப் பிராட்டியோடு காட்டுக்கெழுந்தருளிய காளமேகம்.[27] பிராட்டியின் காரணமாகவே இலங்கையர்கோன்

22. மேலது - 3. 1 : 10
23. மேலது . 3.1 : 2
24. மேலது - 3.1 : 3
25. மேலது - 3.1 : 4
26. மேலது - 3.1 : 5
27. மேலது - 3.1 : 6

முடிகள் பத்தையும் அயன் சரத்தால் உருண்டோடச் செய்த வீரராகவன்.[28] அப்பிராட்டியின் காரணமாக வில்லிறுத்த வித்தகன். பசிக்கோபத்தால் இந்திரன் பெய்வித்த கல்மாரியைக் குன்றம் ஏந்தித் தடுத்து ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்தமாயன்.[29] பாரதப் போரில் பார்த்தன் பொருட்டுத் தேர் ஏறும் சாரதியாகித் திருவாழி ஏந்திய கையால் கோலேந்திய கோமகன்.[30] இத்தகைய எம்பெருமானே திருஅயிந்திர புரத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவன்.

திருக்கோயிலின் கருவறைக்குச் சென்று கிழக்கு நோக்கிய திருமுக மண்டலங் கொண்டு, நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் அடியவர்க்கு மெய்யனாகிய **தெய்வ நாயகனையும், செங்கமலவல்லி தாயாரையும்** (ஹேமாம்புஜ நாயகி) வணங்கு கின்றோம். ஆழ்வார் அருளிச் செய்த பத்துப் பாசுரங்களையும் அவன் சந்நிதியிலேயே மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரை கின்றோம். இத்திருக் கோயிலில் தாயாருக்குத் தனிச்சந்நிதி உண்டு. அங்கும் சென்று அன்னையின் அருள் பெறுகின்றோம். இந்த யாத்திரையால் ''போய பிழைகள், புகுதருவான் நின்றனவும், தீயினில் தூசாகும்''[31] என்ற உணர்ச்சியைப் பெறுகின்றோம்.

இந்த நிலையில் திவ்வியகவியின் திருப்பாசுரமும் நம் நினைவில் எழுகின்றது.

> ''அன்பணிந்த சிந்தையராய் ஆய்ந்த மலர்தூவி
> முன்பணிந்து 'நீர்எமக்கு மூர்த்தியரே' என்பர்
> எம்ஐந் திரபுரத்தார்க்(கு) இன்தொண்டர் ஆனார்
> தமைஇந் திரபுரத்தார் தாம்''[32].

(அன்பு-பக்தி; ஆய்ந்த மலர்-ஆராய்ந்து எடுத்த மலர்; தூவி-சொரிந்து; மூர்த்தியார் -கடவுளர்; தொண்டர்-அடியார்; இந்திரபுரத்தார்-தேவர்கள்)

என்ற பாசுரத்தையும் ஓதி உணர்ச்சி பரவசத்தராகின்றோம். 'மணியாழி வண்ணன் உகந்தாரைத் தன் வடிவாக்குமென்றே, துணியாழிய மறை சொல்லும்' என்ற ஆன்றோர் கூற்றுக்கிணங்க எம்பெருமானுக்கு அடிமைப்பட்ட மாத்திரத்தில் அவனோ டொத்த நிலையைப் பெறுதலால் அப்படிப்பட்ட அடியார்களை

28. மேலது - 3.1 : 7
29. மேலது. 3. 1 : 8
30. மேலது - 3.1 : 9
31. திருப் - 5
32. நூற். திருப். அந்.- 72

நல்வினையொழிந்த மாத்திரத்தில் நசிக்கும் தன்மையுடைய தேவர்கள் தாங்கள் நற்பேறு பெறும்பொருட்டு வணங்குவர் என்று திருமாலடியார்களின் மேன்மையை அறிகின்றோம். தீர்த்தம், திருத்துழாய் பெற்று சடகோபம் சாதிக்கப்பெற்று மனஅமைதி பெற்ற நிலையில் கருவறை யினின்றும் வெளிவருகின்றோம்.

பார்த்தன் தலயாத்திரை வந்தபொழுது "நேமிக்கையாளன், அயிந்தபுரமும் கண்டு கை தொழுதான்"[33] என்று இத்திவ்விய தேசத்திற்கு வந்து பார்த்தன் வணங்கியதாக வில்லிபுத்தூராழ்வார் குறிப்பிட்டுள்ளதும் நம் நினைவிற்கு வருகின்றது.

இந்தத் திவ்விய தேசத்தில் **வேதாந்த தேசிகனுக்கு** ஒரு பெரிய சந்நிதி உள்ளது. இளமையில் இந்த சுவாமி இங்கு வாழ்ந்தமைக்குச் சுவாமியின் திருமாளிகையும் திருக்கிணறும் சான்றுகளாக நிற்கின்றன. திருக்கோயிலுக்கு அருகிலுள்ள ஔஷதாத்திரியில் (மருத்து மலையில்)[34] பெரிய திருவடியும் ஹயக்கிரீவனும் சுவாமிக்கு நேரில் காட்சி தந்ததாக வரலாறு. ஆகவே, ஹக்கிரீவன் 'ஸ்வயம் வியத்தமான' (தாமே தோன்றிய) திவ்விய தேசமாகின்றது. இத்தலத்து எம்பெருமான்மீது தேசிகன் வடமொழியில் 'தேவ நாயக பஞ்சாசத்', 'அச்யுத சதகம்' என்ற இரண்டு நூல்களையும், தமிழில் மும்மணிக் கோவை, பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல், நவமணி மாலை ஆகிய ஏழுசிற்றலக் கியங்களையும் அருளியுள்ளார். இதனை,

"அந்தமில்சீர் அயிந்தைநகர் அமர்த்த நாதன்
அடியிணைமேல் அடியுரையில் ஐம்பது ஏத்திச்
சிந்தைகவர் பிராகிருத நூறு கூறிச்
செழுந்தமிழ்மும் மணிக்கோவை செறியச் சேர்த்துப்
பந்துகழல் அம்மானை ஊசல் ஏசல்
பரவுநவ மணிமாலை இவையும் சொன்னேன்
முந்தைமறை மொழியவழி மொழிநீ என்று
முகுந்தன் அருள் தந்தபயன் பெற்றேன் நானே."[35]

33. வில்லிபாரதம் - ஆதிபர்வம் - அர்ச்சுன்ன தீர்த்த யாத்திரை - 17.
34. அநுமன் சஞ்சீவி மலையைப் பெயர்த்து இலங்கையை நோக்கி வந்த காலத்தில் ஒரு சிகரம் முறித்து விழுந்ததாகவும், அதுவே இம்மலை என்பதாகவும் ஐதிகம்.
35. தேசி. பிரபந் - 366.

(அந்தம்-முடிவு; சீர்-பெருமை; அடிஉரை-வடமொழி; ஐம்பது-தேவநாயக பஞ்சாசத்; பிராகிருதம் நூறு-அச்யுதசதகம்; முகுந்தன்-போக மோட்சங்களை அளிப்பவன்)

என்ற அவர் பாசுரத்தாலேயே அறியலாம். மும்மணிக் கோவையிலுள்ள இருபது பாசுரங்களும் பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல் ஆகிய பிரபந்தங்கள் ஐந்தும் இப்போது அருகிவிட்டன. தெய்வ நாயகன்மீது தேசிகனுக்குள்ள அளவிலாக் காதலால் ஆழ்வார்களைப் போலத் தாமும் பெண் தன்மையை ஏறிட்டுக் கொண்டு தோழி, செவிலி இவர்களின் பேச்சாகப் பாடியருளிய சில பாசுரங்கள் நம் மனத்தைப் பெரிதும் கவர்வனவாக உள்ளன.

இவற்றையெல்லாம் நினைந்த வண்ணம் திருக்கோயிலின் வெளிப் பிராகாரத்தில் அமைதியான ஓரிடத்தில் அமர்கின்றோம். திருக்கோயிலின் அலுவலர் ஒருவர் மூலம் சில செய்திகளை அறிகின்றோம். ஆண்டுதோறும் சித்திரை மாதம் தெய்வநாய கனுக்கு ஒரு பிரம்மோத்சவமும், புரட்டாசி மாதம் சுவாமி தேசிகனுக்கு ஒரு பிரம்மோத்சவமும், மார்கழி மாதத்தில் 21 நாட்கள் திருமொழி - திருவாய்மொழித் திருநாளும் (பகல் பத்து-இராப்பத்து) நடைபெற்று வருகின்றன. இவற்றைத் தவிர சிறப்பாக நடைபெறுவது மாசிமகம் உற்சவம் ஆகும். திருக்கோயிலுக்குச் சுமார் முந்நூறு ஏக்கர் நிலம் நிவந்தமாக இருப்பதாகவும். அதினின்றும் சுமார் ஐம்பதாயிரம் ரூபாய்வரை வருமானம் வருவதாகவும் அந்த வருமானத்ததைக்கொண்டும் பக்தர்கள் காணிக்கையாக வழங்கும் தொகைகளைக் கொண்டும் இந்தத் திருவிழாக்கள் நன்கு நடைபெற்று வருகின்றன.

திருவயிந்திரபுரத்துச் சோழர் காலச் கல்வெட்டொன்று[36] சோழர் வரலாற்றை அறியத் துணை செய்கின்றது. மூன்றாம் இராசராசசோழன் (கி.பி. 1216-1256) சுந்தர பாண்டியனால் தோற்கடிக்கப்பட்டான். அவன் தன் நண்பன் குந்தள நாட்டரசனாகிய வீர சிம்மனிடம் உதவிபெறும் பொருட்டு வடதிசையை நோக்கிச்செல்லும் பொழுது, காடவர்குல மன்னன் (பல்லவன்) கோப்பெருங்சிங்கன் இவனைத் தெள்ளாறு என்ற இடத்தில் எதிர்த்துவென்று தன் தலைநகராகிய சேந்த மங்கலத்தில் சிறையிட்டனன். இதனைக் கேள்வியுற்ற வீர நரசிம்மன் தன் படைத் தலைவர்களாகிய அப்பண்ண தண்ட நாயகன், சமுத்திர

36. Epigraphia Indica Vol VII pp (167-68.)

கொப்பைய தண்ட நாயகன் ஆகிய இருவர்களைக் கொண்டு சிறை வீடு செய்தான். அதன் பின்னர் இராசராசன் சோழ நாட்டை ஆண்டு வரலாயினன். இக்கல்வெட்டு இல்லையேல் அக்காலப் பகுதியில் (கி.பி. 1231-1232) நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகளைச் சிறிதும் அறிய இயலாது என்பது ஒருதலை.[37] இந்த வரலாற்று உண் எண்ணுகின்றோம்.

இத்தகைய செய்திகளையறிந்த வண்ணம் முழுநிறைவு பெற்ற மனத்துடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

❉ ❉ ❉

37. சதாசிவ பண்டாரத்தார் , T.V : பிற்காலச் சோழர் சரித்திரம் - பகுதி 2. பக் (192 - 194).

# 15. திருக்கோவலூர்த் தீங்கரும்பு

**வை**ணவ சமயத்தவர் தத்துவங்கள் மூன்று எனக் கொண்டனர். அவை ***சித்து, அசித்து, ஈசுவரன்*** என்பன. ஆழ்வார்களின் பாசுரங்களில் இத்தத்துவங்களைக் காணலாம். இவற்றுள் சித்தாகிய உயிரும், அசித்தாகிய பிரகிருதியும் இறைவனாகிய தலைவனுக்கு உடலாக அமைந்தள்ளன என்பது இந்த மூன்று தத்துவங்களும் இயைந்த நிலையை விளக்கும் கொள்கையாகும். சரீர-சரீரி பாவனை(உடல்-உயிர் உறவு) என்ற இந்தக் கொள்கையைச் சித்தாந்தப்படுத்தி முதன் முதலாக வெளியிட்டவர் இராமாநுசர். வேத வியாசர் அருளியுள்ள பிரம்ம சூத்திரங்களின் நாடி நரம்புகளையெல்லாம் நன்கறிந்த, ஆழ்வார்களின் பாசுரங்களின் தோய்ந்து நின்று இவ்வுண்மையை உலகிற்கு உணர்த்தினார் அந்த உத்தம சீலர். வடமொழி வேதங்களிலும் உபநிடதங்களிலும் தெளிவு ஆகாதிருந்த பகுதிகள் யாவும் ஆழ்வார்களின் பாசுரங்களினால் தெளிந்தனவாகக் கூறுவர் வேதாந்த தேசிகர்.

''செய்யதமிழ் மாலைகள்நாம்
தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள்
தெளிகின் றோமே.''[1]

(தெளியாத மறை நிலங்கள்-விளங்கலாமலிருந்த வேதப் பகுதிகள்)

என்பது அவரது திருவாக்கு. இந்த உடல்-உயிர் உறவுக் கொள்கைக்கு ஆழ்வார்களின் பாசுரங்களே வழி அமைத்தன வாகக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக,

''உடல்மிசை உயிர்எனக்
கரந்தெங்கும் பரந்துளன்''[2]

நடுநாட்டுத்தலம். பேருந்துகளிலும் பிற இடங்களிலும் பிழையாக திருக் கோவிலூர்' என்று எழுதப் பெற்றுள்ளது.

என்ற திருவாய்மொழிப் பாசுரப்பகுதியில் இக்கருத்து வந்துள்ளமை காணலாம்.

இறைவனுடைய உடலை வைணவர்கள்'திவ்விய மங்கள விக்கிரகம்' என்று பாராட்டிப் பேசுவர். அஃது எல்லையற்ற பேரொளியினைக் கொண்டதாய், கண்டாரை ஈர்க்கும் தன்மையதாய், சௌகுமார்யம் (மிருதுத் தன்மை), அழகு முதலிய மங்கள குணக் கூட்டங்கட்குக் கொள்கலமாய் இருப்பதாகக் கொள்வர் அவர்கள். அசித்தை எம்பெருமான் உடலாகக் கொண்டிருப்பதால், எங்கெங்கெல்லாம் அழகு கொழிக்கின்றதோ அங்கங்கெல்லாம் இறைவன் திருக்கோயில் கொண்டிருப்பான் என்று கருதித் தமிழர்கள் இறைவனுக்குக் கோயில் எடுத்து வழிப்பட்டனர் என்று கூடக் கருத இடம் உண்டு. பெரும்பாலும் ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்து வழிபட்ட 108 எம்பெருமான்களும் அழகு தவழும் இடங்களிலேயே திருக்கோயில் கொண்டு சீவான்மாக்கள் கடைத்தேறும் கருத்துடன் அவர்களிடம் கருணை வெள்ளமிட்டோடச் செய்கின்றனர். இத்தகைய திருப்பதிகளுள் நடுநாட்டைச் சார்ந்த **திருக்கோவலூர்** என்ற திவ்விய தேசமும் ஒன்றாகும்.

தென்னிந்திய இருப்பூர்தி வழியில், விழுப்புரம் காட்டுப்பாடி வழியில், விழுப்புரத்திலிருந்து சற்றேறக்குறைய இருபத்தைந்து கல் தொலைவிலுள்ளது இத்திருப்பதி. விழுப் புரத்தில் தங்கி, அதிகாலையில் நான்கு மணிக்கு நன்னீராடித் தூய ஆடைகளை உடுத்திக் கொண்டு புறப்படுகின்றோம்; அதி காலையில் ஐந்து மணிக்கு வண்டி புறப்படுகின்றது. திருவண்ணா மலையில் தங்குபவர்கள் திருவண்ணாமலையிருந்து பேருந்து மூலமாகப் புறப்படலாம். நேராக ஊருக்குள்ளேயே இறங்கலாம். அருகிலுள்ள **அரகண்டநல்லூர்** இருப்பூர்தி நிலையத்தில் இறங்கும் நாம் சுமார் இரண்டு கல் தொலைவினைக் கடந்து திருக்கோவலூரை அடைதல் வேண்டும். திருக்கோவலூர் ஒரு சிற்றூரே. எனினும், அதில் மேலூர், கீழூர் என்ற இருபகுதிகள் உள்ளன. இரண்டு ஊர்களும் ஆற்றின் தென்கரையில் உள்ளன. ஆற்றையொட்டியிருப்பது கீழூர். கீழூரில் தென் பெண்ணை யாற்றங்கரையில் வீரட்டானேச்சவரம் என்ற ஒரு பெரிய சிவன்

1. தேசி. பிரபந் - 40.

2. திருவாய் - 1. 1: 7

கோயில் உள்ளது; அதையும் பார்க்கலாம். அப்பர் பெருமானும் ஞான சம்பந்தரும் பாடிய தலம் இது. சிவபெருமான் அசுரர்களை வதை செய்த எட்டு வீரட்ட தலங்களில் இதுவும் ஒன்று. மேலூரில்தான் திருமால் ஆலயம் உள்ளது; அது பெண்ணை யாற்றுத் தென்கரையில் உள்ளது; பாலத்தின்மூலம் ஆற்றைக் கடந்துதான் மேலூரை அடைதல் வேண்டும்; ஆற்றில் நீர் இல்லாத பொழுது ஆற்றின் குறுக்கே நடந்தும் போகலாம். திருக்கோவலூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து மாட்டு வண்டி, குதிரை வண்டி வசதிகள் உள்ளன.

திருக்கோவலூர் ஓர் அழகான திருப்பதி: நீர்வளமும் நிலவளமும் மிக்க ஊர். ஆண்டவனின் உடலாக இருக்கும் அசித்தின் அழகினை இப்பகுதியில் கண்டு களிக்கலாம். முதலாழ்வார்கள் மூவரும் திருமங்கையாழ்வாரும்[5] இத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளனர். இத்திருப்பதி யின் நீர்வளம், நிலவளங்கள் திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் நன்றாகச் சித்திரிக்கப்பெறுகின்றன. தோப்புகளும் சோலைகளும் சூழ்ந்த அழகான பகுதியில் இவ்வூர் அமைந்துள்ளது. தென்னந் தோப்புகள், கமுகந் தோட்டங்கள், மாஞ்சோலைகள் முதலிய வற்றை எம்மருங்கும் காணலாம்.

"கோங்குஅரும்பு சுரபுன்னைக் குரவுஆர் சோலைக்
குழாம்வரிவண்டு இசைபாடும் பாடல் கேட்டுத்
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
திருக்கோவலூர்"[6]

(கோங்கு, சுரபுன்னை, குரவு-மரவிசேடங்கள்; கண் வளரும்-கணுக்கள் வளரும்; உறங்கவுமாம்)

என்பது பாசுரப் பகுதி. கோங்கு அரும்புகளும், சுரபுன்னைகளும், குரவமலர்களும் நிறைந்த சோலைகளில் கூட்டங் கூட்டமாக வுள்ள வண்டுகள் பூக்களிலுள்ள மதுவினையுண்டு அந்தக் களிப்பினால் இன்னொலிகளை எழுப்புகின்றன. அந்த 'இசைப்

4. முத. திருவந். - 1, 77, 86 ; இரண். திருவந் - 1, 80 ; மூன். திருவந் - 1.
5. பெரி. திரு. 2.4 : 1 ; 2. 10 ; 5.6 : 7 ; 7.3 ; 2 ; 7. 10 : 4 ; திருநெடுந். 6, 8, 17 ; சிறிய திருமடல் - கண்ணி 69. 70 ; பெரிய திருமடல் - கண்ணி 122.
6. பெரி. திரு. 2. 10 : 4

பாடல்களின்' இன்பச் சாறு பாயப்பெற்று வயல்களிலுள்ள கரும்புகளின் கணுக்கள் வளர்கின்றன. வண்டுகள் பாடும் இசையைக் கேட்டு அஃறிணைப் பொருளாகிய கரும்பும் அசைவற்று நிற்பதாகக் கூறும் பாநயம் எண்ணி எண்ணி அநுபவிக்கத் தக்கது.

இன்னும் நம் கற்பனைச் சிறகுகள் கொண்டு பறக்கக் கூடுமாயின் ஈண்டுத் திருக்கோவலூர் எம்பெருமானையே கரும்பாகக் குறிப்பிட்டதாகவும் கொள்ளலாம். வண்டுகள் வெறும் இன்னொலிகளாக எழுப்பாமல் முதலாழ்வார்களின் பாடல் களையே இன்னொலிகளாக எழுப்பினதாகக் கருதலாம். அமுதூறும் அப்பாடல்களின் இன்பப் பெருக்கில் திளைக்கும் **'திருக்கோவலூர்த் தீங்கரும்பு'** (எம்பெருமான்) கண் வளர்கின்றதாகவும் கொள்ளலாம். இங்ஙனம் அவரவர்களுடைய பக்திக்கேற்றவாறு கற்பனையும் வளரும்; அதில் கவிதைய நுபவத்துடன் பக்தியநுபவமும் கலந்து ஊற்றெடுத்து நம்மைப் பேரின்பக்கடலில் கொண்டு செலுத்தும். பக்தியநுபவத்தின் கொடுமுடியைக் கண்ட திருமங்கையாழ்வார் திருக்கோவலூர்த் திரிவிக்கிரமனை இங்ஙனம் எல்லாம் சிந்தித்து அநுபவித்திருக்க வேண்டும் என்று கருதுவதில் தவறில்லையல்லவா? மூன்று ஆழ்வார்களைக் கரும்பினைப் பிழியும் மூன்று ஆலை உருளைகளாவும், அவர்களால் நெருக்குண்ட எம்பெருமானை நெருக்குண்ட இடமாகிய திருக்கோவலூர் அருகில் விளையும் கரும்பாகவும், அந்த எம்பெருமானின் சௌலப்பிய குணத்தைச் சாறாகவும் **வேதாந்த தேசிகர்** குறிப்பிட்டுள்ளமை[7] ஈண்டு நினைவு கூர்ந்து மகிழத் தக்கது. மேற்குறிப்பிட்ட ஆழ்வாரின் பாசுரமே இச்சுலோகத் திற்கு அடிப்படையாக அமைந்திருக்க வேண்டும்.

திருக்கோவலூரைச் சுற்றியுள்ள சோலைகளில் ஏராளமான கமுக மரங்கள் காட்சியளிக்கின்றன. கமுக மரத்தின் நிறமோ கறுப்பு; அவற்றின் பாளைகளின் நிறமோ பச்சை; அவை வெடித்து வெளிப்படுத்தும் பாக்குப் பிஞ்சுகள் வெண்ணிற முத்துக்களையொத்துள்ளன; முற்றின பச்சைநிறப் பாக்குக் காய்கள் மரகதம் போல் பொலிவுற்றுத் திகழ்கின்றன; பழுத்த

7. தேஹளீச ஸ்துதி - சுலோகம் - 7.

செந்நிறப் பாக்குப் பழங்களோ பவளங்களைப் போல் காட்சியளிக்கின்றன. பாக்கு மரங்களினூடே வளர்ந்துள்ள சரபுன்னையின் மொக்குகள் மலர்ந்து சோலையினைப் பொலிவுறச் செய்கின்றன. இந்தச் சூழ்நிலையை,

''கருங்கமுகு பசும்பாளை வெண்முத்து ஈன்று
காயெல்லாம் மரகதமாய்ப் பவளங் காட்ட''[8]

(கமுகு-பாக்கு)

என்ற ஆழ்வாரின் பாசுரப் பகுதியில் காணலாம்.

வயல் வாய்ப்பும் பொழில் வாய்ப்பும் இயல்பாகவே அமையப்பெற்ற இந்தத் திவ்விய தேசம் ஒரு பொற்கொல்லனின் களரிபோல் காட்சியளிக்கின்றது. தட்டானின் பட்டறையில் கரிகள் கொட்டப்பெற்றிருக்கும்; பொன்களும் முத்துகளும் நிறைந்திருக்கும்; தீப்பிழம்பு சுடர் விட்டுக் கொண்டிருக்கும். திருக்கோவலூர் அங்ஙனம் காட்சியளிக்கின்றது.

''எழுந்தமலர்க் கருநீலம் இருந்தில் காட்ட,
இரும்புன்னை முத்துஅரும்பிச் செம்பொன் காட்ட
செழுந்தடநீர்க் கமலம் நீ விகைபோல் காட்டும்
திருக்கோவலூர்''[9]

(எழுந்த-நீரினின்றும் மேல் கிளம்பின; கருநீலம்-கருநெய்தல்; கமலம்-தாமரை; தீவிகை - விளக்கு)

என்ற ஆழ்வாரின் பாசுரப் பகுதி இக்சாட்சியினைத் தெளிவாகக் காட்டுகின்றது. இங்குக் கருநீலமலர்கள் கரியாகவும், புன்னையின் மொக்குகள் முத்துக்களாவும், புன்னைப் பூக்கள் பொன்னாகவும், தாமரை மலர்கள் நெருப்பாகவும் உருவகிக்கப் பெற்றுள்ள கவிதைகளின் நயம் அநுபவித்து மகிழத்தக்கது. இத்தகைய சோலைகள் சூழ்ந்த திருப்பதியில் தென்றற் காற்று வீசி அச்சூழலை மேலும் இன்பமயமாக்குகின்றது.

*8. பெரி. திரு. 2. 10 : 7* *9. மேலது . 2. 10 : 3.*

"சிறையணைந்த பொழில்அணைந்த தென்றல் வீசும்
திருக்கோவ லூர்"[10]

(சிறைஅணைந்த-நீர் அரண் நெருங்கின; பொழில்-சோலை)

என்ற பாசுரப் பகுதியால் இதனை அறியலாம். இவ்வளவு வளத்திற்கும் அவ்வூரருகில் ஓடும் பெண்ணையாறே காரணமாகும். பெரும்பாலான நாட்களில் நீர்வற்றிக் கிடக்கும் இந்த ஆற்றில் மழைக் காலத்தில் வெள்ளம் பெருகியோடும்; கோடையில் ஊற்று நீர் கிடைக்கும். இதுபயிரிடுவதற்கும் பயன்படும். ஆகவே, ஆழ்வாரும் "துஞ்சாநீர் வளஞ்சுரக்கும் பெண்ணை"[11] என்று அவற்றைப் புகழ்வது காண்க.

இந்தச் சூழ்நிலையில்அமைந்துள்ளது திருக்கோவலூர். இருப்பூர்தி நிலையத்திலிருந்து குதிரை வண்டியில் ஏறி இச்சூழ்நிலையைக் கண்டு களித்த வண்ணம் திருக்கோவலூரை அடைகின்றோம். திருக்கோவலூர் ஒரு சிறிய ஊரே. எனினும், நல்ல கட்டட வசதிகள் சிறந்த ஊர் என்றே சொல்லலாம். "செல்வச், செறியார்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும் திருக்கோவலூர்"[12] என்று இந்த ஊரின் மாட மாளிகை அமைப்பினைச் சிறப்பிப்பர் திருமங்கையாழ்வார். இந்தத் திருப்பதியில் ஏழு இசைகள், ஆறு அங்கங்கள், ஐந்து வேள்விகள், நான்மறைகள், முத்தீ ஆகியவற்றைக் கொண்டு இறைவனை இடையறாமல் துதிக்கும் "தூய நான்மறையாளர்" வாழ் கின்றனர். இதனை,

"வந்தனைசெய்து இசையேழா(று) அங்கம் ஐந்து
வளர்கேள்வி நான்மறைகள் மூன்று தீயும்
சிந்தனைசெய்(து) இருபொழுதும் ஒன்றும் செல்வத்
திருக்கோவ லூர்"[13]

(வந்தனைசெய்து-அடிபணிந்து; இருபொழுதும்-இரவும்பகலும் (காலையும் மாலையும்); சிந்தனை செய்து-மனனம் செய்து; ஒன்றும்-பொருந்தும்)

10. பெரி. திரு. 2. 10 : 5 11. மேலது . 2. 10 :1.
12.மேலது. 2. 10 : 6 13. மேலது - 2. 10 : 2

என்ற பாசுரப் பகுதியால் அறியலாம். அவர்கள் வாழும் வீடுகள் தோறும் மறையொலி ஓங்கி நிற்கும்; புகழ் மணம் வீசும்; தெருக்களிலுள்ள மண்டபங்களிலெல்லாம் 'வாரம் ஓதுகை' என்று வழங்கும் வேதபாராயணம் நடைபெறும். இவற்றை,

> "மறைவளரப் புகழ்வளர மாடந் தோறும்
> மண்டபம்ஒண் தொளிஅனைத்தும் வாரம் ஓத"[14]

(ஒண்தொளி-அழகியவீதி)

என்று ஆழ்வார் குறிப்பிடுவர். மேலும், அந்தணர்கள் ஒரு பலனையும் விரும்பாமல் மனத்தூய்மையுடன் சோமயாகங் களைச் செய்கின்றனர் என்பதும், அக்காரணத்தால் நெற்பயிர்கள் செழித்து வளர்கின்றன என்பதும்,

> "தூயநான் மறையாளர் சோமுச் செய்ய
> செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும்
> திருக்கோவ லூர்"[15]

(சோமு-சோமயாகம்; செஞ்சாலி-நெற்பயிர்)

என்ற ஆழ்வாரின் பாசுரப்பகுதியால் அறியலாகும் செய்திகள். திருநெடுந்தாண்டகத்திலும்,

> "கடிபொழில்சூழ் நெடுமறுகில்
> கமல வேலி"[16]

(கடி-மணம்; நெடுமறுகு-அகன்ற தெரு; கமலவேலி-தாமரைத் தடாகங்கள் சுற்றிலும் உள்ள)

என்று இத்தருப்பதியின் நறுமணம் மிக்க சோலைகளையும், நீண்டு அகன்ற வீதிகளையும், ஊருக்கென்று வேலிபோல் அமைந்த தாமரைத் தடாகங்களையும் ஆழ்வார் சுட்டியுரைப்பர்.

திவ்வியப் பிரபந்தம் முதன்முதலாகத் தோன்றியது திருக்கோவலூரில்தான். முதலாழ்வார்கள் மூவரும் ஒருவரை யொருவர் சந்தித்து அந்தாதி தொடுத்த தலம் இதுவேயாகும். இதுதான் வரலாறு: ஒரு சமயம் மாலை நேரத்தில், பொழுது சாயும் சமயத்தில், வானம் திடீரென்று இருண்டது; அந்த இருள்

14. மேலது - 2. 10 : 5 15. மேலது. 2. 10 : 1
16. திருநெடு . 7.

உலகத்தைக் கருந்திரையிட்டு மறைத்தது. அத்துடன் நல்ல மழையும் பொழிந்தது. மழையில் நனைந்து கொண்டே வந்த பெரியார் ஒருவர் ஒரு வீட்டில் மழைக்காக ஒதுங்கவும், இரவு நேரத்தைக் கழிக்கவும் இடம் கேட்டார். வீட்டுக்காரர் இடைகழியைக் காட்டி[17] அதில் 'ஒருவர் படுக்கலாம்' என்று கூறி இடம் கொடுத்துக் கதவினைத் தாளிட்டுக் கொண்டு உள்ளேபோய்ப் படுத்துக்கொண்டார். இவர்தான் பொய்கை யாழ்வார். மழையோ விடாமல் பெய்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் இன்னொருவர் வந்து அதே வீட்டில் தங்க இடம் கேட்டார். பொய்கையார், 'ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்' என்று கூறிக்கொண்டே வந்தவருக்கு இடங்கொடுத் தார். இவர்தான் பூதத்தாழ்வார். மேலும் சிறிது நேரம் கழிந்ததும் மூன்றாவதாக மற்றொருவர் அதே வீட்டிற்கு வந்து ஒதுங்க இடம் வேண்டினார். இடைகழியிலிருந்த இருவரும் 'ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்' என்று கூறிக் கொண்டே அவரையும் அழைத்துக் கொண்டனர். இப்போது வந்தவர் பேயாழ்வார். இன்கவிபாடும் பரம கவிஞர்களாகிய இம்மூவரும் இறைவனுடைய திருக்குணங்களைப் போற்றிப் புகழ்ந்துபாடிய வண்ணம் இருந்தனர். இவர்கள் மூவரும் ஒருவரையொருவர் முன்பின் அறியாவதவர்ளே.

இந்நிலையில் குரல் கொடுக்காது இசைவும் பெறாது நான்காமவராக யாரோ ஒருவர் நுழைந்துவிட்டார்; நெருக்கத் தினால் இது தெரிந்தது. இப்புதியவரைத் தெரிந்து கொள்ள அந்த இருட்டிலும் மழையிலும் விளக்கு கிடைக்கவில்லை. இந்நிலையில் பொய்கையாழ் ஒரு விளக்கேற்றுகின்றார். இதுதான் விளக்கு:

**''வையம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காகச்-செய்ய**
**சுடராழி யான்அடிக்கே சூட்டினேன் சொன்மாலை**
**இடராழி நீங்குகவே என்று.''[18]**

17. இக்காலத்தில் இதனை 'ரேழி' என்று வழங்குவர் ; வாயிலுக்கும் வீட்டிற்கும் இடைப்பட்ட ஒடுக்கான இடம். வடமொழியில் இது 'தேஹளி' என வழங்கப்பெறும்.

18. முத. திருவந் - 1

(தகளி-அகல்; வார்-நீண்ட; வெய்ய-வெப்பமான; கதிரோன்-பகலவன்; செய்ய -சிவந்த; சுடராழியான்-ஒளிவீசும் சக்கரத்தையுடைவன்; இடர்ஆழி - துன்பக் கடல்)

உலகத்தை அகலாகவும் , கடலை நெய்யாகவும், கதிரவனைத் திரியாகவும் கொண்டு ஒரு விளக்கை ஏற்றிவிட்டார். இந்தப் பாசுரத்தின் மகிமையால் அந்த இடைகழியில் பளிச்சென்று ஏதோ ஒரு திரை விலகி எப்படியோ ஒளியும் வந்து விட்டது; புறத்தே கவிந்து கிடந்த இருளும் நீங்கியது. அதே சமயத்தில் பூதத்தாழ்வாரும் ஞான விளக்கேற்றினார். இதோ அந்த விளக்கு:

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா-நன்புருகி
ஞானச் சுடர்விளக்(கு) ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்து நான்"[19]

(ஆர்வம்-விருப்பம்; நன்பு-ஆன்மா)

அன்பை அகலாகவும், பொங்கிவரும் ஆர்வத்தை நெய்யாகவும், சிந்தையைத் திரியாகவும் கொண்டு ஞானவிளக்கு ஏற்றினார் பூதத்தார். இந்த விளக்கினால் அகத்தே மண்டிக்கிடந்த உள்இருட்டும் நீங்கியது. உடனே அந்தப் பேயாழ்வார் நான்காவது ஆளைக்கண்டுபிடித்துவிட்டார். அந்த எக்களிப்பே ஒரு பாசுரமாக வடிவங்கொண்டு நான்காவது ஆள் எம்பெருமானே ('திருக்கோவலூர்த் தீங்கரும்பே') என்று காட்டிவிட்டது. பாசுரம் இது:

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்; திகழும்
அருக்கண் அணிநிறமும் கண்டேன்;-செருக்கிளரும்
பொன்ஆழி கண்டேன்; புரிசங்கம் கண்டேன்;
என்ஆழி வண்ணன்பால் இன்று."[20]

(திரு-இலக்குமி; அருக்கன்-சூரியன்; செருகிளரும்-போரில் வல்லமை காட்டும்; ஆழி -சக்கரம்; ஆழிவண்ணன்-கடல் நிறத்தவன்)

பேயாழ்வார் முதன் முதலாகப் பெரிய பிராட்டியாரின் அருள் வடிவத்தைக் கண்டார்; பொன் மேனியையுடைய

19. இரண். திருவந் . 2.
20. முன். திருவந் - 1

அன்னையாருடன் கூடிய எம்பெருமானின் மரகதத் திருமேனி இப்போது பொன்மேனியாகவே காட்சியளித்தது. மரகத மலையில் உதித்து ஒளி வீசி வரும் இளஞாயிறு போலத் தோன்றி இருவரது ஒளியையும்-பொன் ஒளியும் மரகத ஒளியும் கலந்து ஒளிர்கின்ற அந்தக் கலப்பு ஒளியையும்-கண்டாராம்; 'திகழும் அருக்கன் அணி நிறமும் கண்டேன்' என்பதால் இது பெறப்படுகின்றது. 'இருவர் சேர்த்தியால் பிறந்த சமுதாய சோபை' என்பது **பெரிய வாச்சான் பிள்ளையின்** வியாக்கியான விளக்கம்.

ஆழ்வார்கள் மூவரும் எம்பெருமானைக் கண்டதும் பக்திப் பெருக்கில் திளைத்துப் போயினர். பொய்கையாழ்வார் தமது பாடலைத் தொடர்ந்து 'முதல் திருவந்தாதி' யைப் பாடி முடித்தார்; பூதத்தாழ்வார் தமது பாடல் தொடங்கி 'இரண்டாம் திருவந்தாதியை' நிறைவு செய்தார்; பேயாழ்வார் 'மூன்றாம் திருவந்தாதியைத் தலைக்காட்டினார். இங்ஙனம் 'குருபரம்பரை' என்ற நூல் கூறுகின்றது. அஞ்ஞான இருள் அகலப்பெறின் இறைவன் காட்சியளிப்பான் என்ற உண்மையை முதலாழ்வார்களின் வரலாற்றால் அறிகின்றோம்.

> ''நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்
> பாயும் பனிமறுத்த பண்பாளா-வாசல்
> கடைகழியா உள்புகாக் காமர்பூங் கோவல்
> இடைகழியே பற்றி இனி.''[21]

(பாயும்-சொரிகின்ற; பாயும் பனி-மழை; காமர்பூ-விரும்பத் தக்க; வாசல்கடை - திருவாயிலுக்கு வெளியே; உள்புகா-உள்ளே புகாமலும்; இடைகழி - நடுக் கட்டு; பற்றி - விரும்பி)

என்ற பொய்கையாழ்வாரின் பாசுரமும் மேற்கண்ட நிகழ்ச்சியை எடுத்துரைப்பதாக உள்ளது.

இங்ஙனம் முதலாழ்வார்கள் மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து அந்தாதிகள் அருளிச்செய்த திருக்கோவலூரை நினைந்து,

21. முத. திருவந் - 86

"பாவரும் தமிழால் பேர்பெறு மனுவல்
பாவலர் பாதிநாள் இரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக்(கு) ஏற்றி
முகுந்தனைத் தொழுதநன் னாடு."[22]

(முகுந்தன்-திருமால்)

என்று போற்றிப் புகழ்வர் வில்லிபுத்தூராரின் புதல்வர் வ ர ந் த ரு வார். வேதாந்த தேசிகரும்,

"பாட்டுக்(கு) உரிய பழையவர்
மூவரைப் பண்(டு) ஒருகால்
மாட்டுக்(கு) அருள்தரும் மாயன்
மலிந்து வருத்துதலால்
நாட்டுக்(கு) இருள்செக நான்மறை
அந்தி நடைவிளங்க
வீட்டுக்(கு) இடைகழிக் கேவெளி
காட்டும்அம் மெய்விளக்கே."[23]

*(பழையவர்-முதலாழ்வார்கள்; மலிந்து-அதிகமாக; வருத்துதல் - நெருக்குதல்; மாடு-செல்வமாகிய ஆன்மா; மாயன்-திருமால் ; இருள்செக-அஞ்ஞானம் நீங்க; நான்மறை அந்தி-உபநிடதம்; நடை-வழி; வெளி-உபாயங்கள்)*

என்று இந்நிகழ்ச்சியைப் பாராட்டியுள்ளமை காண்க.

இந்த நினைவுகள் நம் மனத்தில் எழுந்த வண்ணம் ஊரின் நடுவேயுள்ள திருக்கோயிலை நண்ணுகின்றோம். கோயிலின் முன்னும் பின்னுமாக இரண்டு கோபுரங்கள் உள்ளன. ஆனால், சந்நிதித் தெருவின் கீழ்க் கோடியில் பதினொரு நிலைகளுடன் ஒரு பெரிய கோபுரம் உள்ளது. அதனை நோக்க இவ்விரண்டும் சிறிய கோபுரங்களே. அந்தப் பெரிய கோபுரத்தின் அருகில்தான் தேர் முட்டி உள்ளது. இவற்றைத் தவிர மொட்டைக் கோபுரத்தையும் காண்கின்றோம். பேயாழ்வார் இதனை ஒரே இரவில் கட்டுவதாக முடிவு செய்துகொண்டு கட்டினதாகவும், கோபுரப்பணி நிறைவு பெறுவதற்கு முன்னர் விடிந்து விட்டதால் கோபுர வேலை அரை குறையாக நின்று விட்டதென்றும் செவிவழிச் செய்தியால் அறிகின்றோம்.

22. வில்லிபாரம் - சிறப்புப் பாயிரம் -9. 23. தே. பிரபந் - 89.

சந்நிதித் தெருவின் கோடியிலுள்ள கோபுரத்தைத் தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டே திருக்கோயிலின் வாயிலை அடைகின்றோம். கோயில் மிகப் பெரியது. கோபுர வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்ததும் முதலில் நாம் காண்பது கொடிமரம். அதனைத் தாண்டிச் சென்றால் திருமங்கை மன்னன் கட்டிய கோபுரவாயிலை அடையலாம். அதனைக் கடந்து சென்றால் பெரிய மண்டபத்தைக் (பாண்டியன் மண்டபம்) காணலாம். இதனை அடுத்துதான் கோயிலின் கருவறை உள்ளது. அங்குத் தான் 'வியந்தவர்வெருக்கொள விசும்பின் ஓங்கிய' உலகளந்த **திரிவிக்கிரமன்** கிழக்கே திருமுகங்கொண்டு இருப்பதைக் காண்கின்றோம். பெயரளவிலேயன்றி வடிவிலும் மூலவர் விண்ணுற நிமிர்ந்து நிற்கும் திரிவிக்கிரமனாகவே காட்சி அளிக்கின்றார். காஞ்சியில் உலகளந்த பெருமாள் கோயில் சுவரின்மீது செதுக்கியுள்ள சிற்பம் இந்தப் பெருமான் தனியே நிற்கும் வடிவமேயாகும். இந்த மூலவரின் திருவுரு மரத்தாலானது. முகத்திலே நல்ல களை அமைந்துள்ளது. எம்பெருமானின் ஒரு திருவடி மகாபலிச் சக்கரவர்த்தியின் தலை மீது வைத்த நிலையில் உள்ளது. மற்றொரு திருவடியோ விண்ணை அளப்பதாகத் தூக்கிய நிலையில் காணப் பெறு கின்றது. பெரிய பிராட்டியார், மாபலி, சுக்கிராச்சாரியார், மிரு கண்டு முனிவர், அவர் துணைவி, முதலாழ்வார்கள் மூவர் முதலானோர் சூழ நிற்க வலத்திருவடியை நான்முகனும், இடத் திருவடியை மாபலியின் புதல்வன் நமுசியும் ஆராதித்து நிற்கின்றனர். இரண்டடி நிலம் போக 'எஞ்சின ஓரடி நிலம் எங்கே?' என்று மாவலியை வினவுவதுபோல் வலக்கையின் ஏந்திய நிலையில் காணப்பெறுகின்றார் எம்பெருமான். இந்தக் கோலத்தில் எம்பெருமானைக் காணும் நாமும்,

"ஒண்மிதியல் புனல்உருவி ஒருகால் நிற்ப
ஒருகாலும் காமரூசீர் அவுணன் உள்ளத்(து)
எண்மதியும் கடந்(து) அண்ட மீது போகி
இருவிசும்பின் ஊடுபோய் எழுந்து, மேலைத்
தன்மதியும் கதிரவனும் தவிர ஓடித்
தாரகையின் புறந்தடவி அப்பால் மிக்கு
மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை
மலர்புரையும் திருவடியே வணங்கி னேனே"[24]

24. திருநெடுந் - 5

*(ஒண்மிதி-ஓரடி இட்டு; புனல்-ஆவரண நீர்; அவுணன்-மாபலி; எண்மதி - நினைத்திருக்கும் எண்ணம்; விசும்பு-ஆகாயம்; மதி-சந்திரன்; தாரகை - நட்சத்திரம்; மலர் புரையும் - தாமரை மலரையொத்த)*

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரத்தைப் பாடிச் சேவிக்கின்றோம்.

அடுத்து, பிராகாரத்தில் கோயிலை வலம் வருகின்றோம். முதல் பிராகாரத்தின் முகப்பிலேயே துர்க்கையின் திருவுருவத்தைக் காண்கின்றோம்; சந்நிதி பிராகாரத்திற்குள் நுழைந்ததும் இடப்புறத்தில் இத்தேவியை காண்கின்றோம். இத்திருக்கோயிலைக் காவல் புரிகைக்காக விந்தியமலையைச் சார்ந்த அடவியில் இவள் தவம் புரிந்ததாகவும், திரிவிக்கிரமன் ஆணையால் அவள் காவல் புரியும் பணியை ஏற்றதாகவும் புராண வரலாறு கூறும். பெரும்பாலும் துர்க்கையின் சிலையைத் திருமால் ஆலயங்களில் காண்பது இல்லை. எனினும், ஈண்டு அதனைக் காண்கின்றோம். துர்க்கை காவல் புரிவதைத் திருமங்கையாழ்வாரே தமது பாசுரங்களில் குறிப்பிடுகின்றார்.

''வியன்கலை எண்தோளினாள் விளக்கு செல்வச்
செறியார்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூர்''[25]

*(வியன்கலை-அழகிய மானை வாகனமாயுடையவனாய்; எண்தோளினான் - எட்டுத் தோள்களையுடையவனாய்)*

என்ற பெரிய திருமொழிப் பாசுரப் பகுதியாலும்,

''கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட விந்தம் மேய
கடிபொழில்சூழ் நெடுமறுகில் கமல வேலி
பொற்புடைய மலையரையன் பணிய நின்ற
பூங்கோவ லூர்தொழுதும் போது நெஞ்சே.''[26]

*(விந்தம்-விந்தியமலை; மேய-வாழ்ந்தவளாய்; கன்னி-துர்க்கை; மலையரையன் - மலையமான் சந்ததியினர்)*

என்ற திருநெடுந்தாண்டகப் பாசுரப் பகுதியாலும் இதனை அறியலாம். இந்தத் துர்க்கா தேவிக்குச் சிறப்பான பூசனை முதலியவை உண்டு; இவள் மிக்க வரப்பிரசாதி என்ற நம்பிக்கை இன்றும் இருந்து வருகின்றது. இந்தப் பிராகாரத்திலேயே

25. பெரி. திரு - 2. 10 : 6 26. திருநெடுந் - 7.

இலக்குமி நாராயணன், இலக்குமி வராகன், இலக்குமி நரசிம்மன் ஆகிய மூவருக்கும் தனித்தனி சந்நிதிகள் உள்ளன. மேலும் இராமர், உடையவர், திருக்கச்சி நம்பி, ஆண்ட ாள், மணவாள மாமுனிகள் இவர்கள் சந்நிதிகளையும் இங்குக் காணலாம்.

இரண்டாவது பிராகாரம், கல்யாண மண்டபம் முதலிய வற்றைக் கடந்து சென்றால் **புஷ்பவல்லித்தாயார்** (பூங்கோவல் நாச்சியார்) சந்திநிதியை அடையலாம்; அவளையும் சேவிக்க லாம். தாயார் சந்நிதி மிக விரிவாக அமைக்கப் பெற்றுள்ளது. கட்டட விவரங்களைக் கூர்ந்து நோக்கினால் நாய்க்க மன்னர்களே கோயிலின் பெரும் பகுதியைக் கட்டியிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. இக்கருத்தினை அரண் செய்வதுபோல் நாய்க்க மன்னர்களது சிலைகளும் அங்கு அதிகமாகக் காணப் பெறுகின்றன. இத்தலத்து.எம்பெருமானின் திருநாமம் **ஆயனார்** என்பது. திருமங்கையாழ்வாரே "மதிள் கோவல் இடைகழி ஆயனை"[27] என்றும், "மதிள் கோவல் இடைகழி மைந்தனை"[28] என்றும் குறிப்பிடுவர். எம்பெருமானாரின் சீடரில் ஒருவராகிய **ஆயனார்** என்பருடைய வழியில் வந்த ஒருவர் இன்றும் அறநிலையக் காவலராகவும் சீடராகவும் இருந்து வருகின்றார்.

தீர்த்த யாத்திரையாக வந்த அர்ச்சுனன் தென் பெண்ணை யாற்றில் தீர்த்தமாடி ஏழேழுபிறப்பையும் போக்கிக் கொண்டு திருக்கோவலூர்த் திரிவிக்கிரமனையும் சேவித்தான் என்று வில்லிபுத்தூராழ்வார் குறிப்பீடுவர்.

"உருகுங் கமழ் நெய்பாலிரு பாலும் கரையொத்து
பெருகுந் துறை யேழேழு பிடிப்பும்கெட மூழ்கிக்க
கருகுங் கருமுகில் மேனியர் கவிஞானியர் கண்ணில்
பருகுஞ் சுவை அமுதானவர் பாதம்தலை வைத்தான்."[29]

(கமழ்-வாசனை வீசும்; இருபால்-இரண்டு; கரையொத்து-கரையின் அளவுக்கு; பெருகும் -வழியும்; துறை-பெண்ணையாற்றின் துறை; முகில்மேனியர்-மேகவண்ணர்;கவிஞானியர்-முதலாழ்வார்கள்; பாதம்-திருவடிகள்; தலைவைத்தான் - வணங்கு கினான்)

27. பெரி. திரு - 7. 3 : 2 28. மேலது - 7. 10 : 4
29. வில்லி பாரதம் - ஆதிபர்வம் - அர்ச். தீர்த்த - 16

என்பது அவர் வாக்கு. பரந்தாமன்மீது கொண்டுள்ள பக்தியில் ஆழ்வார் பெருமக்களின் பக்தியுடன் ஒப்பிடக் கூடியவரும் தொண்டை நாட்டைச் சேர்ந்தவருமான வில்லிபுத்தூராரின் நாட்டுப்பற்றையும், முதலாழ்வார்கள் பேரில் அவர் கொண்டுள்ள பேரன்பையும் பெருமதிப்பையும் இப்பாடலில் கண்டு மகிழலாம்.

ஆழ்வார்கள் வாழ்ந்த காலத்திற்கு முன்பாகவே திருக்கோவலூர் புகழ் பெற்றிருந்தது. சங்கப் புலவர்களை ஆதரித்து வந்த கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய ***மலையமான் திருமுடிக்காரி*** இவ்வூரைச் சார்ந்தவன். பெண்ணை யாற்றங்கரையிலுள்ள பகுதி அக்காலத்தில் 'மலாடு' என்ற பெயரால் வழங்கியது. மலையமான் திருமுடிக்காரி திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு இந்நாட்டை ஆண்டு வந்தான்.

"துஞ்சா முழவிற் கோவற் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கான் மூன்றுரைப்ப
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கும்"[30]

என்ற அகப்பாடலில் கோவலூரைப்பற்றியும் பெண்ணை யாற்றைப்பற்றியும் உள்ள குறிப்பினைக் காணலாம். குறுந்தொகையிலும்,

"முரண் கொடுப்பிற் செவ்வேள் மலையன்
முள்ளூர்க் கானம்...."[31]

என்ற பாடற்பகுதியல் கோவலூருக்கு அருகில் மலையமானுக்குச் சொந்தமாக இருந்த 'முள்ளூர்க்கானம்' பற்றிய குறிப்பு உள்ளது. மலையனுக்கு 'முள்ளூர்ப் பொருநன்' என்ற பெயரும் உண்டு.

"துஞ்சாநீர் வளஞ்சுரக்கும் பெண்ணை"[32] என்ற சொற்றொடரை "துஞ்சாமுழவு" என்ற சங்கப்பாடலின் (அகம்- 35) சொற்றொடருடன் ஒப்ப நோக்கினால் சங்க காலத்திலேயே திருக்கோவலூர் விழாக்கள் மலிந்த ஊராகத் திகழ்ந்தது என்பது

*30. அகநானூறு - 35*

*31. குறுந்தொகை - 132; நற்றிணை - 170 ;அக நானூறு - 209 , புறநானூறு - 123, 126 என்ற பாடல்களிலும் இக்குறிப்பினைக் காண்க.*

*32. பெரி. திரு. 2. 10 : 1*

புலனாகும். திருக்கோவலூர் மன்னனாகிய மலையமான் அந்த ஊர் எம்பெருமான் மீது கொண்டிருந்த அன்பு,

"பொற்புடைய மலையரையன் பணிய நின்ற
பூங்கோவ லூர்"[33]

என்ற ஆழ்வாரின் பாசுரப் பகுதியால் அறியலாகும். 'மலையரையன்' என்பதற்கு 'மலையமான்களை' என்று உரை வகுத்துள்ளார் பெரியவாச்சான் பிள்ளை.[34] திருமங்கையாழ்வார் வாழ்ந்த காலத்தில் திருமுடிக்காரியின் வழியினர் வாழ்ந்தனர் என்பது இதனால் பெறப்படும் உண்மையாகும்.

'முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரண்டு திகிரி ஏந்திய தோளே."[35]

என்ற புறப்பாடற் பகுதியால் இவ்வூரை **அதியமான் நெடுமானஞ்சி** போரில் அழித்து வென்ற செய்தியை அறியலாகும்.

மேலும், ***பாரிமகளிர் அங்கவை சங்கவை*** என்பவர்களை மணம் புரிந்த **தெய்வீகன்** என்ற அரசன் அரசோச்சிய இடம் திருக்கோவலூர் ஆகும். இவன்வழி வந்தவர்களே மெய்ப் பொருள் நாயனார், நரசிங்க முனையரையர் முதலியவர்கள். இந்தத் தெய்வீகனோ மலையமான் திருமுடிக்காரியின் வழித் தோன்றல். பாரிமகளிரின் திருமணம் முடிந்து பின்னர் கபிலர் இத்திருக்கோவலூரிலேயே ஒரு பாறை மீது எரி வளர்த்து அதில் வீழ்ந்து முக்தி அடைந்தார் என்பது வரலாறு.

"வன்கரை பொருது வருபுனல் பெண்ணை
தென்கரை உள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத்து இயலும் முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதை செஞ்சொற் கபிலன்
மூரிவண் தடக்கைப் பாரிதன் அடைக்கலம்
பெண்ணை மலையற்கு உதவி.......

*33. திருநெடுந் - 7* *34. மேற்படி பாசுரத்தின் உரை காண்க.*
*35. புறம் - 99.*

**மினல்புகும் விசும்பின் வீடுபேறு எண்ணிக்**
**கனல்புகும் கபிலக் கல்''[36]**

என்று கல்லிலே பொறிக்கப்பெற்ற ஒரு கவிதையால் அறியலாம்.

மேலூரிலுள்ள உலகளந்தாரைச் சேவித்துத் திரும்பும் நாம் கீழூரிலுள்ள் வீரட்டானரையும் காண விழைகின்றோம். அவரை வழிபட்டபிறகு ஆற்றின் வடகரையிலுள்ள அறையணிநல்லூர் **அறையணி நாதரையும்** அவரது துணைவி **அருள் நாயகியையும்** கண்டு வழி படுகின்றோம். அறையணி நல்லூரை அடைய (இது அரகண்ட நல்லூர் என்று வழங்கப்பெறுகின்றது) ஆற்றினைக் கடக்கும்போது ஆற்றின் நடுவில் வீரட்டானேசுவரர் கோயிலுக் கருகில் ஒரு பெரும் பாறையைக் காணலாம். இப்பாறையின் மீதுள்ள கோயிலும் அதனை அடைய அமைந்துள்ள படிக்கட்டுகளும் ஓர் இடைச்சியால் கட்டப் பெற்றவை என்று கூறுவர் அப்பகுதி மக்கள். ஆகவே, அப்பாறை 'இடைச்சிக் குன்று', 'இடைச்சிக் கல்' என்று வழங்கப்பெறுகின்றது. ''வெண்ணை உருகுமுன் பெண்ணை பெருகும்'' என்பது பழமொழியல்லவா? ஒரு சமயம் இடைச்சி ஒருத்தி திருக்கோவ லூரிலிருந்து ஆற்றைக் கடந்து வந்தபோது, அக்கரையில் இறங்கும்போது நீரே இல்லாதிருந்த ஆற்றில், இக்கரையை அடையும் முன்னரே வெள்ளம் பெருகியதாம். அவ்விடைச்சி அப்பாறையில் ஒதுங்கி நின்று தப்பித்தாளாம். அவளே அச்சிவன்கோயிலைக்கட்டிப் படிகளை அமைத்தாள் என்பது செவிவழிச் செய்தி. இலிங்கம் கபிலேசுவரருடையது. சங்கப் புலவரான கபிலரது கோயிலே அது என்றும் சிலர் கூறுவர். காரி நாடு வேள்வித் தீயைக் காக்கும் அந்தணரு டையது என்பதாக,

**''கழபுனைந் திருந்தடிக் காரிநின் நாடே**
**அழல்புறந் தரூஉம் அந்தண ரதுவே.''[37]**

*36. வேங்கடம் முதல் குமரிவரை -பொன்னியின் மடியிலே பக். 35.*
*37. புறம் - 121*

என்ற புறப்பாடலின் வரிகள் குறிப்பிடுகின்றன. இதையொட்டியே திருமங்கையாழ்வாரும்,

**"சீரேறு மறையாளர் நிறைந்த செல்வத்**
**திருக்கோவ லூர்"[38]**

என்று குறிப்பிடுள்ளதாகக் கருதலாம்.

திருக்கோவலூரைப்பற்றிய இன்னொரு வரலாற்றுக் குறிப்பும் உண்டு. **ஔவையார்** இவ்வூரில் தனக்கு ஆதரவளித்த ஆயர்குல நங்கையர் இருவருக்கு மூவரசரை வரவழைத்துச் சிறப்பாகத் திருமணம் நடத்தினார் என்று ஒரு வரலாறு வழங்குகின்றது.

**"பொன்மாரி பெய்யும்ஊர் பூம்பருத்தி ஆடையாம்**
**அந்நாள் வயலாகிஆகும்ஊர்-எந்நாளும்**
**தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்**
**ஓங்குதிருக் கோவ லூர்'[39]**

என்று ஔவையார் பாடியதாக ஒரு தனிப்பாடலும் உள்ளது. இன்னும் பாரிமகளின் திருமணம் பற்றி ஔவையார் பாடியவையாக வேறு பல பாடல்களும் உள்ளன. இவை யாவும் இலக்கியப் புலவர்கட்கு இன்பம் பயப்பதாயினும் உண்மையை அறிய விழையும் வரலாற்று அறிஞர்கட்கு தலைவலியைத் தருபவை.

இருப்பூர்தி நிலையத்திலிருந்து சாலைவழியாகத் திருக்கோவலூருக்குச் செல்லும்பொழுது வழியில் 'பிருந்தா வனம்' என்ற ஓர் இடத்தில் மாத்வ சுவாமிகள் மடம் ஒன்றிருப்பதைக் காணலாம். நாட்டின் பல பகுதிகளி லிருந்து பெரும்பான்மையான மக்கள், சிறப்பாக மாத்வ வகுப்பைச் சார்ந்தவர்கள், இங்கே வந்து ஆசி பெற்றுச் செல்வர். மக்கட்பேறு இல்லதவர்கள் இங்கே முக்கியமாக வந்து ஆசி பெறுவதுண்டு.

பூங்கோவல் இடைகழி ஆயனைச் சேவித்த நாம் அவன் சந்நிதியிலேயே ஒருமுறை ஆழ்வார்களின் பாசுரங்களைப் பாடி

*38. பெரி. திரு. 2. 4 : 8*
*39. தனிப்பாடல் திரட்டு (கழக வெளியீடு) முதற் பகுதி - 68*

அவன் அருளால் பக்தி உணர்வைப் பெற்றதுடன் வேறு சில செய்திகளையும் அறிந்து,

> "பூங்கோவல் ஆதியாய்த் தாவரங்கள் ஈறுஆன
> சேம உயிரும் செகம்அனைத்தும்-பூமடந்தைக்கு
> ஆம்கோ அலாயுதன் பின்னே அவதரித்த
> பூங்கோவர் ஆயன் பொருள்."[40]

(அலாயுதன்-கலப்பையை ஆயுதமாக உடைய பல ராமன்)

என்ற **பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்** பாடலை நினைந்த வண்ணம் மன நிறைவுடன் திரும்புகின்றோம்.

❉ ❉ ❉

*40. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி - 73.*



ஸ்ரீ சடகோபன் பொன்னடி
வைணவ இலக்கியமாமணி
தமிழ் வாகைச் செம்மல்
பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார்
எம்.ஏ., பி.எஸ்சி. எல்.டி., பி.எச்.டி., டி.லிட்.,

## இந்நூலாசிரியர் பற்றி...

**பணிகள் :**

9 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசியர்
( 1941 - 50)
10 ஆண்டுகள் ஆசிரியப் பயிற்கிக்கல்லூரி
- தமிழ்ப் பேராசிரியர் - துறைத்தலைவர் ( 1950 - 60)
திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
துறைத் தலைவர் (1960- 1980)

**ஓய்வுக்குப் பின்னர் பணிகள் :**

18 திங்கள் தமிழக் கலைக் களஞ்சியம் தலைமைப் பதிப்பியல்
18 திங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மதிப்பியல்
பேராசியர்.
சென்னைப் பல்கலைக் கழகம் - தமிழ் இலக்கியத்துறை
வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்.
மதிப்பியல் இயக்குநர் - மரபியல் பண்பாடு நிறுவனம்
(1995 - 2002) சென்னைப் பல்கலைக் கழகம்.

**பிற பணிகள் :**

திருப்பதி, மதுரை, பெங்களூர் மைசூர் திருவனந்தபுரம்
சென்னைப் பல்கலைக் கழகங்களில் பல்வேறு பணிகள் -
பொறுப்புகள். 125 நூல்களுக்கு மேற்பட்ட பல்துறை
நூல்களின் ஆசிரியர்.

பெற்ற பரிசுகள் : 16 நூல்கள் பரிசு பெற்றவை.
பெற்ற விருதுகள் : பத்துக்கு மேல்
- பல்வேறு நிறுவனங்கள் மூலம்.

தமிழுக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்டு 92
அகவையைக் கடந்த இப்பெருந்தகை
மே1, 2006 அன்று இறைவனடி சேர்ந்தார்.